மனிதன் மாறவில்லை



விந்தன்

மனிதன் மாறவில்லை

விந்தன்

கலைஞன் பதிப்பகம்

19 கண்ணதாசன் சாலை

தியாகராய நகர்

சென்னை 600 017

Rs. 55-00

MANITHAN MARAVILLAI
by
VINDHAN

First Edition : 1977
Second Edition : 2001

Published by
KALAIGNAAN PATHIPAGAM
19 Kannadhasan Salai
T.Nagar Chennai - 600 017.

Laser by
GURU COMPUTERS
Chennai 600 024.

Printed at
Sakthi Printers
Chennai. - 600 021.

படிப்பதற்கு முன்...

எனது கதாநாயகர்களைப் பற்றியும் கதாநாயகிகளைப் பற்றியும் ஒரு வார்த்தை - 'ஒரு வார்த்தை' என்று ஒரு பேச்சு'க்காகத் தான் சொல்கிறேன்; எத்தனை வார்த்தைகளில் முடியுமோ, அது எனக்குத் தெரியாது!

பொதுவாக 'வில்லன்' என்றால் - அதாவது 'தீயோன்' என்றால், அவனை நாம் எவ்வாறு உருவகப்படுத்திப் பார்க்கிறோம்? - கலைந்த கிராப்புத் தலை; கனல் கக்கும் பார்வை; துடிக்கும் மீசை; வெடிக்கும் சிரிப்பு; உதட்டில் புகையும் சிகரெட்; கழுத்தில் பறக்கும் கைக்குட்டை - இப்படியாகத்தானே?

இத்தகைய 'பார்வை'க்குக் காரணம் பெரும்பாலும் சினிமாக்காரர்கள் - தீயோனுக்கு அவர்கள் வகுத்து வைத்திருக்கும் இலக்கணம் அப்படி!

ஆனால் வாழ்க்கையில்......

வகிடு கலையாமல் வாரி விடப்பட்ட கிராப்புத் தலை; வைதாரையும் வாழ வைப்பது போன்ற வசீகரப் பார்வை: 'தமிழ்' என்ற மொழிப்பற்றும், 'தமிழன்' என்ற இனப்பற்றும் மீசையிலாவது இருக்கட்டுமே என்பதற்காக வைத்துக் கொள்ளப்பட்ட மீசை; எடுத்ததற்கெல்லாம் சிரித்து வைக்கும் ஐஸ்-கிரீம் சிரிப்பு; உள்ளத்தோடு ஒட்டாமல் உறவாடும் உதடு; கழுத்தில் டை; கையில் திருக்குறள் - இப்படியும் இல்லையா, சில 'நல்லவர்'கள் - அந்த 'வல்லவர்'களில் ஒருவரைப் பற்றிய கதை இது!

அவர்...

''இவராயிருப்பாரோ? - இல்லை, அவராய்த்தான் இருப்பாரோ?'' என்பது போன்ற வேண்டாத சிந்தனைகளின் வயப்பட்டு, உங்களை நீங்களே குழப்பிக் கொள்ளாதீர்கள்; குழப்பிக் கொண்டு, கோபமோ குதூகலமோ அடையாதீர்கள்!

ஏனெனில்...

உங்களுடைய கோபத்தால் நான் கோபம் அடைவதில்லை; உங்களுடைய குதூகலத்தால் நான் குதூகலமும் அடைவதில்லை.

அமரர் கல்கி அவர்கள் அடிக்கடி சொல்வார்கள் -, 'எதை எழுதினாலும் நாலுபேர் போற்றவாவது வேண்டும்; அல்லது தூற்றவாவது வேண்டும். இரண்டுமில்லையென்றால் எழுதுவதை விட எழுதாமல் இருந்து விடலாம்!'' என்று.

என்னுடைய உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்து விட்ட இந்தக் கருத்தை இன்று மட்டுமல்ல அன்றிருந்தே நான் கடைப்பிடித்து வருகிறேன். அதன் காரணமாக எத்தனையோ பேருடைய போற்றுதலுக்கும் தூற்றுதலுக்கும் உள்ளாகியிருக்கிறேன்; உள்ளாகி வருகிறேன்.

ஆனால்...

அதற்காக நான் அன்றும் கவலைப்பட்டதில்லை; இன்றும் கவலைப்படப் போவதில்லை.

இதைப் புரிந்து கொள்ளாமல் அன்று நான் இந்த அழகான உலகத்தை அரவணைத்துக் கொண்டிருந்த தாகவும், இன்று நான் அந்த அரவணைப்பிலிருந்து விலகி ஆத்திரம் கொண்டிருப்பதாகவும், அந்த ஆத்திரத்தை என்னுடைய எழுத்துக்களில் அப்படியேக் காட்டுவ தாகவும் சிலர் நினைக்கிறார்கள். இவ்வாறு

நினைப்பவர்களுக்காகத்தானோ என்னவோ, பதினைந்து வருடங்களுக்கு முன்பே ஆசிரியர் கல்கி அவர்கள் எழுதினார்கள்.

''விந்தன் கதைகளைப் படிப்பதென்றால் எனக்கு எப்போதும் மனத்திலே பயம் உண்டாகும். படித்தால் மனத்திலே என்னென்ன விதமான சங்கடங்கள் உண்டாகுமோ, எப்படிப்பட்ட வேதனைகளுக்கு ஆளாக நேருமோ என்றுதான் பயம்!...

ஏழை எளியவர்கள் வாழ்க்கையிலுள்ள சுக சந்தோஷங் களைப் பற்றியும் அவர் எழுதுகிறார்: அவர்களுடைய துன்ப வேதனைகளைப் பற்றியும் எழுதுகிறார்.

ஆனால் படிப்பவர்களின் உள்ளத்தில் துன்பமும் வேதனையும்தான் அதிகமாக நிலைபெற்று உறுத்திக் கொண்டிருக்கும்.

அவருடைய கதாபாத்திரங்கள் அனுபவிக்கும் கஷ்டங்களுக்கெல்லாம் தாம்தான் காரணமோ என்று எண்ணி எண்ணித் தூக்கமில்லாமல் தவிக்க நேரும்.

அவ்விதம் வாசகர்களின் மன அமைதியைக் குலைக்கக் கூடிய இயல்பு வாய்ந்த கதைகள் தான் உண்மையான இலக்கியம் என்று தற்காலத்து இலட்சிய புருஷர்களும் இலக்கிய மேதாவிகளும் சொல்கிறார்கள்.

இது உண்மையானால் விந்தனுடைய கதைகள் உண்மையான இலக்கியம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.''

இதிலிருந்து என்ன தெரிகிறது?... இன்று மட்டுமல்ல; அன்றும் என்னுடைய கதைகளில் நடமாடிக் கொண்டிருந்த கதாநாயகர்களும் இந்த உலகத்திலுள்ள பலரைக் கோடிட்டுக் காட்டுபவர்களாயிருந்ததோடு, படிப்

பவர்களின் மன அமைதியையும் குலைப்பவர்களாய்த் தான் இருந்திருக்கிறார்கள் என்று தெரிகிறதல்லவா? - இது என் எழுத்தின் வெற்றி; என்னுடைய எழுத்தை விரும்பிப் படிக்கும் இதயமுள்ள மக்களின் வெற்றி!

இந்த வெற்றியால் மற்றவர்களுக்குக் கிடைக்கும் வாழ்க்கை வசதிகள் எனக்குக் கிடைக்காமல் இருக்கலாம்... அதற்காக என்னுடைய எழுத்தையே நான் மாற்றிக் கொண்டு விடவேண்டுமா, என்ன? - அது என்னால் முடியாத காரியம்.

முடிந்தால்....

கற்பனையிலிருந்து நான் கதைகளை மட்டும் சிருஷ்டித்தால் போதாது; அவற்றைப் படிப்பதற்கு வாசகர்களையும் கற்பனையிலிருந்தே சிருஷ்டிக்க வேண்டும்... என்றால் முடியாதய்யா என்னால் முடியாது!

ஏனெனில்....

''இலக்கியம் கற்பனையிலிருந்து பிறக்க வில்லை; வாழ்க்கையிலிருந்து தான் பிறக்கிறது!'' என்று நான் நினைக்கிறேன். அவ்வாறு பிறக்கும் இலக்கியம் எப்படி இருக்கும்?- ''இந்தப் பத்திரிகையில் வெளியாகும் கதை, கட்டுரைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனை; யாரையும் குறிப்பிடுபவனல்ல'' என்று பத்திராதி பதிகள் 'தற்காப்பு'க்காகத் தங்கள் பத்திரிகையின் முதல் பக்கத்திலேயே போட்டுக் கொண்டாலும், யாரையாவது எதையாவது குறிப்பிடு வனவாய்த்தான் இருக்கும்... அதற்கு நானா பொறுப்பு?

ஒன்று வேண்டுமானால் செய்யுங்கள் - போலீஸ் காரன் திருடமாட்டான், இன்ஸ்பெக்டர் எந்த ஆதாயத்தை முன்னிட்டும் அதை மறைக்க மாட்டார், வக்கீல் பொய் சொல்ல மாட்டார், நீதிபதி அந்தப் பொய்யை

ஏற்று நிரபராதியைத் தண்டிக்க மாட்டார். தமிழ்ப் பேராசிரியர் தமிழ்ப் பேராசிரியையைக் காதலிக்க மாட்டார். அப்படியே காதலித்தாலும் அவளைத் தவிர வேறொருத்தியைக் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டார் என்பனவற்றை யெல்லாம் நீங்கள் நம்புவதாயிருந்தால் இந்தக் கதையைப் படிக்க வேண்டாம்; தயவு செய்து படிக்க வேண்டாம்!

-விந்தன்

இந்தக் கதையில் நீங்கள் சந்திக்கப் போகும் கதாபாத்திரங்களைப் பற்றி...

ராமமூர்த்தி - விரிவுரையாளர்; தனி நபர் வழிபாட்டு முறையினால் முதலில் தடுமாறி, முடிவில் தன்னிலைக்கு வந்தவர்.

கல்யாணி - ராமமூர்த்தியின் மனைவி, தொட்டால் சுருங்கி விடாமல், தோள் கொடுக்கும் அளவுக்கு மனவலிமை பெற்றவள்; எந்த ஒரு காரியத்திலும் அவ்வளவு சீக்கிரமாக எந்த விதமான முடிவுக்கும் வந்து விடாதவள்.

விசாலம் - வேலைக்காரி; இல்லாமை தவிர வேறொரு பொல்லாமையும் இல்லாதவள்.

மாணிக்கம் - தோட்டக்காரன்; தன்னில் மட்டுமல்ல, தன்னைச் சுற்றியுள்ள எல்லாவற்றிலுமே கடவுளைக் கண்டு களிப் பவன்; படித்தவர்களுக்கு இருப்பதாகச் சொல்லும் பகுத்தறிவு இல்லா விட்டாலும், படிக்காதவர்களுக்கு இயல்பாயுள்ள இயற்கையறிவு நிரம்பப் பெற்றவன்.

டாக்டர் நெடுமாறனார் - தலைமைத் தமிழ்ப் பேராசிரியர்; தன்னலம் பேணி இழிதகை புரிவதை அன்பென்னும் மாயையாலும், 'தாய்த் திருநாடெனில் கையை விரிப்பதைப் பண்பென்னும் மாயையாலும் மறைத்து வாழ்பவர்; கல்வித் துறையில் மட்டுமல்ல, வாழ்க்கைத் துறையிலும் ராமமூர்த்தியைத் தமது அந்தரங்க மாணவராகக் கொண்டவர்; 'படித்ததெல்லாம் பணம் பண்ணு வதற்கே!' என்பது இவருடைய தலையாய குறிக்கோள்; அதைக் கொண்டு தமிழ்நாட்டின் துரதிர்ஷ்ட வசமாகத் தாம் பெற்ற பெருமையையும் புகழையும் எல்லா வகையிலும் நிலைநாட்டிக் கொள்வதில் நிகரற்றவர்.

கண்ணகி அம்மையார் - டாக்டர் நெடுமாறனாரின் அன்புக்கும் பண்புக்கும் உறைவிடமானவள்.

நறுமணம் - குற்றம் எதுவாயிருந்தாலும் அதைத் தானே ஏற்றுக்கொண்டு, அதற்காகப் பிறரைப் பழிவாங்கத் துணியாதவள். பலரைச் சோதனைக்குள்ளாக்கி, கடைசியில் தன்னையும் சோதனைக் குள்ளாக்கிக் கொண்டு விட்டவள்.

நம்பி - நறுமணத்தின் அண்ணன்; அன்பிலும் பண்பிலும் தனக்கிருந்த அசட்டு நம்பிக்கையின் காரணமாகத் தங்கையின் காதலுக்குத் துணையாயிருந்து, தன்னிலை இழந்தவன்.

இவர்களைத் தவிர இன்னும் சிலரும் உண்டு.

மனிதன் மாறவில்லை

1. ஆளைக் கண்டு மயங்காதே!

உலகத்தை அணைத்தபடி உறங்கிக் கொண்டிருந்த இருள். அதைப் பிரிய மனமில்லாமல் பிரிந்து கொண்டிருந்தது.

''அம்மா, பால்!'' என்று குரல் கொடுத்தான் பால்காரன்.

தன்னை அணைத்தபடித் தூங்கிக் கொண்டிருந்த தன் கணவன் ராமமூர்த்தியின் கையைத் தூக்கித் தலையணையின் மேல் வைத்துவிட்டுக் கதவைத் திறந்துக் கொண்டு வெளியே வந்தாள் கல்யாணி.

பாலை வாங்கிக் கொண்டு திரும்பியபோது, 'குவா, குவா!' என்ற குழந்தையின் அழுகுரல் அவள் காதில் விழுந்தது.

திரும்பிப் பார்த்தாள்.

''என்ன அம்மா, இது! கல்யாணமாகி நேற்றுத்தான் புருஷன் வீட்டுக்கு வந்திருக்கிறீர்கள்; அதற்குள்....''

பால்காரன் முடிக்கவில்லை; ''நல்ல வேடிக்கைதான்! யார் வீட்டுக் குழந்தையோ, என்னமோ?'' என்று சிரித்தபடி உள்ளே வந்தாள் கல்யாணி.

அழகான ஆண் குழந்தையொன்று அவள் வீட்டுக் கூடத்தில் கிடத்தப்பட்டிருந்தது!

''யாருடைய குழந்தை, இது? இங்கே எப்படி வந்தது?''

ஒன்றும் புரியவில்லை அவளுக்கு; சுற்றுமுற்றும் பார்த்தாள்.

புழக்கடைக் கதவைத் திறந்துகொண்டு யாரோ ஒருதாய் அவசர அவசரமாக வெளியே போய்க் கொண்டிருப்பது தெரிந்தது.

''யார் அது, நில்!''

அவள் நிற்கவில்லை - போய் விட்டாள்; போயே போய் விட்டாள்.

மேலே என்ன செய்வதென்று தோன்றவில்லை கல்யாணிக்கு; ஒரு கணம் விழித்தாள். மறுகணம், ''பிடியுங்கள் அவளை!'' என்று கத்த வேண்டும்போல் தோன்றிற்று அவளுக்கு.

கத்தினால் அவளை யாராவது பிடித்து விடுவார்கள்; பிடித்தால் இந்தக் குழந்தையின் மர்மம் அவளால் வெளியாகலாம்.

ஆனால்...

அப்படி வெளியாகும் மர்மம் தனக்கு மட்டுமா தெரியப் போகிறது? அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு மல்லவாத் தெரிந்து விடும்?

தெரிந்தால் என்ன? குற்றவாளி அவளா, நானா?

அது எப்படி அவள் மட்டும் அந்தக் குற்றத்தைச் செய் திருக்க முடியும்? அவளுடன் வேறு யாராவது ஒருவர் சம்பந்தப்பட்டிருந்தால்தானே அவளால் அந்தக் குற்றத்தைச் செய்திருக்க முடியும்?

அந்த 'ஒருவர்' ஒருவேளை இவராக இருந்து விட்டால்...

கடவுளே! அப்படிப்பட்ட புண்ணிய புருஷரா தனக்கு மாலையிட்ட மணாளராக இருக்கப் போகிறார்?

இருக்காது; இருக்கவே இருக்காது. முதல் இரவின் போது அவர் நடந்து கொண்ட விதம்; பேசிய அசட்டுப் பேச்சு ஊஹூம் இருக்காது; இருக்கவே இருக்காது.

இப்படி நினைத்ததும் அவளுடைய இதழ்க்கடையில் ஒரு புன்னகை நெளிந்து மறைந்தது; திரும்பினாள்.

ஆம், அவரை எழுப்பி விஷயத்தை உடனே தெரிவித்து விட வேண்டும்...

என்ன இது? தனக்கு அந்த வேலையை வைக்காமல் அவரே எழுந்துவிட்டிருக்கிறாரே?

எழுந்தால் எழுந்திருக்கட்டும் - வேலைக்காரி விசாலத்தை உள்ளே வரவிடாமல் தடுத்து நிறுத்தி, அவளுடன் அவர் என்ன பேசுகிறார்? அவள் காதோடு காதாக என்ன சொல்கிறார்? இவருடைய கையிலிருந்த பத்து ரூபாய் நோட்டொன்று அவளுடைய கைக்கு மாறுகிறதே! - ஏன் எதற்காக?

இவள் இவ்வாறு குழம்பிக் கொண்டிருந்தபோது, "அப்பப்பா! ஒரு கை சாணம் எடுத்துக் கொண்டு வந்து தெருவில் தெளித்துவிட்டு வரலாமென்று போனால், 'கத்து, கத்து' என்று கத்தித் தொலைக்கிறானே!" என்று அலுத்தபடி வந்து, அந்தக் குழந்தையைத் தூக்கித் தன் தோளின் மேல் கிடத்திக் கொள்ளப் போனாள் விசாலம்.

அப்போது...

அந்தக் குழந்தையின் அண்ணாக்கயிற்றில் மடித்துச் செருகி வைக்கப்பட்டிருந்த ஒரு கடிதம் நழுவிக் கீழே விழுந்தது. சட்டென்று குனிந்து அதை எடுத்துத் தன்

ஜாக்கெட்டுக்குள் வைத்துக் கொண்டு, ''உன்னுடைய குழந்தையா, இது?'' என்று கேட்டாள் கல்யாணி ஏதும் அறியாதவள் போல.

''ஆமாம், அம்மா! இத்தனை நாட்களாக அவர் வீட்டில் இருந்ததால் அவரிடம் குழந்தையை விட்டு விட்டு நான் மட்டும் இங்கே வேலைக்கு வந்து விடுவேன்; இன்று அவர் எங்கேயோ வேலைக்குப் போகப் போகிறாராம். அதனாலே...''

''ஓஹோ!குழந்தையையும் இங்கே வேலைக்கு அழைத்துக் கொண்டு வந்துவிட்டாயாக்கும்?''

''ஆமாம், ஆமாம்!''

இந்தச் சமயத்தில் ராமமூர்த்தி அங்கே வந்து, ''இதோ பார், விசாலம்! உன்னுடைய குழந்தையை வளர்ப்பதற்கு இது இடமில்லை, நீ மட்டும் இங்கே வேலைக்கு வர முடியுமானால் வா; இல்லாவிட்டால் நின்றுவிடு!'' என்றான் வெட்டு ஒன்று துண்டு இரண்டாக.

''கோபித்துக் கொள்ளாதீர்கள் ஐயா! ஊருக்குப் போயிருக்கும் என் அம்மா நாளைக்கு வந்துவிடுவதாக எழுதியிருக்கிறார்கள்.அவர்கள் வந்ததும் நான் அவர்களிடம் இவனை விட்டு விட்டு வந்து விடுகிறேன்!''

ஆஹா! எவ்வளவு அருமையாக நடிக்கிறார்கள்? நடிகர் திலகம் கூட இவர்களிடம் நடிப்புக்குப் பிச்சை வாங்க வேண்டும் போலிருக்கிறதே?

நாமும் இவர்களைப் போலவே கொஞ்ச நாட்கள் நடித்துத்தான் பார்ப்போமே?...

இவ்வாறு எண்ணமிட்டுக் கொண்டிருந்த போது, ''என்ன கல்யாணி, என்ன யோசிக்கிறாய்?'' என்று கேட்டான் ராமமூர்த்தி.

''ஒன்றுமில்லை; எனக்கென்னமோ இந்தக் குழந்தையை இங்கேயே வைத்துக் கொள்ள வேண்டும் போலிருக்கிறது!''

''ஏனாம்?''

''அவன் உங்களையே உரித்து வைத்தாற்போல் இல்லையா?''

தூக்கி வாரிப் போட்டது ராமமூர்த்திக்கு. இருந்தாலும் அதைச் சமாளித்துக் கொண்டு, ''அப்படியெல்லாம் சொல்லாதே, கல்யாணி! அவள் ஏதாவது விபரீதமாக நினைத்துக் கொண்டு விடப் போகிறாள்!'' என்றான்.

''இதில் விபரீதமாக நினைப்பதற்கு என்ன இருக்கிறது? உள்ளதைத்தானே சொல்கிறார்கள், அம்மா!'' என்று ஒரு போடு போட்டாள் விசாலம்.

''நாசமாய்ப் போச்சு போங்கள்! ஒருவரை உரித்து வைத்தாற் போலிருக்கிறது என்றால், அதனாலேயே அந்தக் குழந்தை அவருக்குப் பிறந்ததாக ஆகிவிடாது; அதை மட்டுமாவது நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்!'' என்று அடித்துச் சொல்லிவிட்டுக் குளிக்கும் அறையை நோக்கி நடந்தான் அவன்.

❖ ❖ ❖

சிறிது நேரத்துக்குப் பிறகு துவைத்துப் போட்ட துண்டொன்றை எடுத்துக் கொண்டு குளிக்கும் அறைச் சுவரின் மேல் போட்டு விட்டு வரலாமென்று சென்றபோது ''செய்துவிட்டாள்; சொன்னது சொன்னபடி செய்தே விட்டாள்!'' என்று உடம்பைத் தேய்த்துவிட்டுக் கொண்டபடி ராமமூர்த்தி முனகிக் கொண்டிருந்தது கல்யாணியின் காதில் விழுந்தது.

''செய்து விட்டாளா, செய்யவேண்டியதுதான்!'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டே, துண்டைச் சுவரின்

மேல் போட்டு விட்டு ஜாக்கெட்டுக்குள் கையை விட்டாள், கடிதத்தை எடுக்க.

அதற்குள் ஓர் எண்ணம் பளிச்சிட்டது....

ஒருவேளை குளிக்கும் அறைக் கதவு உள்ளே தாளிடப்படாமலிருந்தால்?

தள்ளிப் பார்த்தாள்; தாளிடப்பட்டுத்தான் இருந்தது.

எதற்கும் வெளித் தாழ்ப்பாளையும் போட்டுத்தான் வைப்போமே? - 'ஏன்? என்று கேட்டால் 'விளையாட்டுக்கு' என்று சொல்லித் தப்பித்துக் கொண்டால் போகிறது!

இந்தத் 'தற்காப்பு நடவடிக்கை'களுக்குப் பிறகு கடிதத்தை எடுத்தாள், படிக்க.

அப்போது...

''முதுகை அரிப்பது போலிருக்கிறது; கொஞ்சம் சொரிந்து விட்டுப்போகிறாயா?'' என்று குரல் கொடுத்தான் ராமமூர்த்தி.

''இதோ வந்துவிட்டேன்!'' என்று பதிலுக்குக் குரல் கொடுத்துக் கொண்டே அவசர அவசரமாகக் கடிதத்தை மடித்து மறுபடியும் ஜாக்கெட்டுக்குள் வைக்கப் போனாள் கல்யாணி.

''அப்படி என்ன கடிதம் அம்மா, அவ்வளவு பத்திரமாக வைக்க?'' என்று கேட்டுக் கொண்டே அங்கு வந்தாள் விசாலம்.

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்த கல்யாணி. ''கடிதம் இல்லையடி, எம்பிராய்டரி டிஸைன்!'' என்று பசப்பினாள்.

''அது என்ன டிஸைனோ, யாருக்குத் தெரியும்?'' என்று சொல்லிவிட்டு மேலே சென்றாள் அவள்.

அதற்குள் உள்ளே போடப்பட்ட தாழ்ப்பாளைத் தள்ளிக் கதவைத் திறக்க முயன்று தோல்வியடைந்த ராமமூர்த்தி, ''இதெல்லாம் என்ன விளையாட்டு?'' என்று கத்தினான். கல்யாணி கதவைத் திறந்து ''உங்களிடம் விளையாடக் கூடவா எனக்கு உரிமையில்லை?'' என்றாள் அழுத்தலாக.

அது அவன் உள்ளத்தைச் சுடுவதுபோல் இருக்கவே, ''அதற்கில்லை, கல்யாணி! இது குளிர் காலமல்லவா? இங்கே தண்ணீரைத் தலையில் கொட்டிக்கொண்டு நிற்க முடியவில்லை!'' என்றான் கோபத்தை அடக்க.

''நிற்கத்தானே முடியவில்லை? என் வேலை முடிந்து விட்டது; இப்பொழுது எங்கே வேண்டுமானாலும் ஓடுங்கள்!'' என்று தன் வேலையை முடித்துக் கொண்டு கல்யாணி வெளியே வந்தாள்.

''என் வேலையும் முடிந்துவிட்டது, அம்மா! நான் வீட்டுக்குப் போய்விட்டு வருகிறேன்!'' என்று சொல்லிவிட்டுச் சென்றாள் விசாலம்.

❖ ❖ ❖

2. கடிதம் சொல்லாத கதை

பொய்! - அதைப் போன்ற ஓர் உத்தமத் தோழன் மனிதனுக்கு வேறு யாராவது உண்டா? அது அவனை எத்தனை விதமான தர்ம சங்கடங்களிலிருந்தெல்லாம் காப்பாற்றுகிறது?

உண்மைக்கு ஒரு கதை அரிச்சந்திரன் கதையாயிருக் கலாம். ஆனால் கடைசிக் கட்டத்தில் பரமசிவன் வந்து கைகொடுப்பார் என்ற நம்பிக்கை இந்தக் காலத்தில்

நாஸ்திகர்களுக்கு மட்டுமல்ல; ஆஸ்திகர்களுக்குத்தான் எங்கே இருக்கிறது?

இப்படியெல்லாம் எண்ணத்தை எங்கெல்லாமோ ஓடவிட்டுவிட்டுக் கால் சட்டைக்குப் பதிலாகக் கோட்டை எடுத்து அதன் கைகளில் கால்களை நுழைக்க முயன்று கொண்டிருந்தார் விரிவுரையாளர் ராமமூர்த்தி!

ஆம், விரிவுரையாளர் ராமமூர்த்திதான் அவர்! - அதிலும், ஆங்கில விரிவுரையாளர் அல்ல; அன்புக்கும் பண்புக்கும் உறைவிடமான தமிழ் விரிவுரையாளர்!

புகழ் பெற்ற டாக்டர் நெடுமாறனார் எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி., யை உங்களுக்குத் தெரியுமல்லவா? - இவர், அவருடைய அருமை மாணவர் மட்டுமல்ல; அந்தரங்க மாணவரும்கூட.

அதனால்தான் எந்த ஆண்டு எந்தக் கலாசாலையில் படித்து எம்.ஏ. பட்டம் பெற்றாரோ, அதே கலாசாலையில், அதே ஆண்டில் அவருக்குத் தமிழ் விரிவுரையாளர் வேலை கிடைத்திருந்தது.

பிறக்கும்போதே பணக்காரராகப் பிறந்துவிட்ட இவருக்கு வேலை பொழுதுபோக்காக இருக்கலாம்; காதலும் கல்யாணமும்கூடப் பொழுதுபோக்கா, என்ன?

இவ்வாறு எண்ணமிட்டுக் கொண்டே கையில் காபியுடன் வந்த கல்யாணி, தன் கணவனின் தடுமாற்றத்தைக் கண்டதும் 'களுக்'கென்று சிரித்து விட்டாள்.

''ஏன் சிரிக்கிறாய்?'' என்றான் அவன்.

''ஒன்றுமில்லை; எல்லாமே உங்களுக்குத் தலைகீழ் பாடம்தான் போலிருக்கிறது!'' என்றாள் அவள்.

''எதைச் சொல்கிறாய்?''

''இதைத்தான்!'' என்று அவன் கையிலிருந்த கோட்டை வாங்கிக்கொண்டு, கால் சட்டையை எடுத்து அவனிடம் கொடுத்தாள் கல்யாணி.

அவன் அதை மாட்டிக் கொண்ட பின் கோட்டைத் தானே போட்டு விட்டுவிட்டு, 'பூட்'டை எடுத்தாள் கால்களில் மாட்ட.

''வேண்டாம், கல்யாணி! என்மேல் நீ கொண்டிருக்கும் அன்பை இப்படியெல்லாம் காட்ட வேண்டாம்!''

''பின் எப்படிக் காட்டுவதாம்?''

ராமமூர்த்தி சிரித்தான்; சிரித்துவிட்டுச் சொன்னான்:

''பணிவிடைகளைக் கொண்டும், பரிசுப் பொருட்களைக் கொண்டும் நாம் அன்பைக் காட்ட வில்லை; ஒருவரை ஒருவர் ஏமாற்ற முயல்கிறோம்!''

''சரிதான், உங்களை நான் ஏமாற்ற முயல்கிறேனாக்கும்?''

''உனக்காகச் சொல்லவில்லை கல்யாணி, உலகத்துக் காகச் சொல்கிறேன்; உண்மையான அன்பு உள்ளத்தில் சுரக்கும்போது, அது தன்னை இனம் காட்ட என்ன செய்ய வேண்டுமோ அதைத் தானாகவே செய்யும். அதுதான் இயற்கை; மற்றதெல்லாம் செயற்கை!''

எவ்வளவு பெரிய உண்மை! - இவ்வளவு ஆழ்ந்த சிந்தனை உள்ள இவரா அப்படியெல்லாம் செய் திருக்கப் போகிறார்? - கல்யாணியின் உள்ளம் குழம்பிற்று. 'அவர் எப்போது கலாசாலைக்குப் போவார், எப்போது கடிதத்தைப் படிப்போம்?'' என்று துடியாய்த் துடித்தாள்.

ஆயிற்று; பூட்'டையும் அவரே மாட்டிக் கொண்டாயிற்று...

''நான் வரட்டுமா?'' - கேட்டவர் 'அவர்'தான், ''வாருங்கள்!'' என்றாள் அவள்.

'அவர்' போய்விட்டார்; 'அப்பாடா!' என்று ஊஞ்சலில் உட்கார்ந்து, அதை உந்தி உந்தித் தள்ளி ஆடியபடிக் கடிதத்தை எடுத்துப் பிரித்தாள் அவள்.

''கல்யாணி, கல்யாணி!''

''என்னவாம், கல்யாணிக்கு?''

இப்படி அலுத்துக்கொண்ட பிறகுதான் கூப்பிட்டவர் 'அவர்' என்று தெரிந்தது அவளுக்கு. ''நீங்களா!'' என்று சமாளித்தபடி வெளியே வந்தாள்.

''நானேதான்; கதவைச் சாத்தித் தாளிட்டுக்கொள்!' என்றார் அவர், போகிற போக்கில்.

''நல்லவேளை! இதைச் சொல்ல உள்ளே வராமல் வெளியே இருந்தபடி கூப்பிட்டுச் சொன்னீர்களே, அதைச் சொல்லுங்கள்!'' என்ற பெருமூச்சு விட்டுக் கொண்டே கதவைச் சாத்தித் தாளிட்டுவிட்டு உள்ளே வந்தாள் கல்யாணி.

ஊஞ்சல் பலகையின்மேல் வைத்துவிட்டு வந்த கடிதத்தைக் காணவில்லை!

எங்கே போயிருக்கும், அந்தக் கடிதம்? காற்றில் எங்கேயாவது...

கூடம் முழுவதும் தேடிப் பார்த்தாள் அவள் காணவில்லை; காணவேயில்லை!

ஒருவேளை எலி, கிலி ஏதாவது இழுத்துக்கொண்டு போயிருக்குமோ?......

விட்டங்கள் அத்தனையையும் எட்டிப் பார்த்தாள்; பரண்கள் அத்தனையையும் ஏறிப் பார்த்தாள் - ஊஹூம் - காணவில்லை; காணவேயில்லை.

அப்போது....

''குவா, குவா' என்ற குழந்தையின் அழுகுரல் மீண்டும் ஒலித்தது - எங்கிருந்து? - அதே வீட்டிலிருந்து தான்.

என்ன ஆச்சரியம்! விசாலம் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்குப் போகவில்லையா? இந்த வீடே துப்பறியும் நாவல் போலிருக்கிறதே?

''விசாலம், விசாலம்!'' - கத்தினாள் கல்யாணி.

பதில் இல்லை; குழந்தையின் அழுகுரல் மட்டும் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தது.

குழந்தையை இங்கேயே எங்கேயாவது தூங்க வைத்து விட்டு அவள் மட்டும் வீட்டுக்குப் போய்விட்டாளா, என்ன? தூக்கம் கலைந்து எழுந்த குழந்தை அவளைக் காணாமல் அழுகிறதா, என்ன?

''விசாலம், விசாலம்!'' - மறுபடியும் கத்தினாள் அவள்.

ஊஹூம் - பதில் இல்லை; பதிலேயில்லை!

குழந்தையின் அழுகுரல் 'அவுட்-ஹவு'சிலிருந்து வருவது போலல்லவா இருக்கிறது? எதற்கும் அங்கே போய்த்தான் பார்ப்போமே?

போனாள்; அங்கே...

குழந்தையைத் தூக்கித் தேற்றியபடி, விசாலம் திருட்டு விழி விழித்துக்கொண்டிருந்தாள்.

''என்னடி, இதெல்லாம்?''

''எனக்கொன்றும் தெரியாது, அம்மா! எல்லாம் ஐயாவின் உத்தரவு...''

''என்ன உத்தரவு போட்டுவிட்டுப் போனார், ஐயா?''

'உங்களிடமிருந்த கடிதத்தை எப்படியாவது திருடிக் கொண்டு வந்து தன்னிடம் கொடுக்கச் சொன்னார்!''

''நான்தான் அது எம்பிராய்டரி டிஸைன் என்று சொன்னேனே?''

''நீங்கள் சொன்னதை நான் என்னமோ நம்பத்தான் நம்பினேன்; அவர் நம்பவில்லை!''

''சரி, உனக்கும் அவருக்கும் இதற்குமுன் ஏதாவது உறவு உண்டா?''

''அதைப் பற்றியெல்லாம் இப்போது ஒன்றும் கேட்காதீர்கள்; காலம் வரும்போது சொல்கிறேன்!''

''ஓஹோ, எங்கே அந்தக் கடிதம்?''

''கடிதமா, வந்து... வந்து...''

''என்னடி வந்து...''

''படித்துப் பார்த்த பிறகு என்னிடம் திருப்பிக் கொடுத்து விடுகிறீர்களா?''

''ஆகட்டும்!''

''இந்த விஷயத்தைக் கடைசிவரை ஐயாவின் காதில் போடாமல் இருக்கிறீர்களா?''

''இருக்கிறேன்!''

''என்னமோ, உங்களை நம்பிக் கொடுக்கிறேன். எப்படி விட்டாலும் உங்கள் சித்தம்; என் பாக்கியம்!''

கடிதத்தைக் கொடுத்தாள் அவள்; அந்தச் சமயத்தில்...

''காட்டிக் கொடுத்துவிட்டான், பயல் சமயம் பார்த்து அழுது அவளைக் காட்டிக் கொடுத்துவிட்டான்!''

இந்தக் குரல் அவருடைய குரல் போலிருக்கிறதே? - இவள்தான் வீட்டுக்குப் போகவில்லையென்றால் அவரும் கலாசாலைக்குப் போகவில்லையா, என்ன?

வியப்புடன் அருகிலிருந்த துணி துவைக்கும் கல்லின் மேல் ஏறிச் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

அதுவரை புழக்கடைக் கதவருகே நின்று கொண்டிருந்த 'அவர்,' தலையை ஏதோ ஒரு புத்தகத்தால் மறைத்துக் கொண்டு மேலே நடந்தார்!

கடிதத்தில்....

இடம், தேதி எதையும் முறையாகக் குறிக்காமல் இந்தக் கடிதத்தை எழுத ஆரம்பிக்கிறேன். இத்தனைக்கும் பள்ளியிலேயே நானும் கடிதம் எழுதும் முறையைப் பற்றிப் படித்தவள்தான்; இருப்பினும் என்னுடைய வாழ்க்கையே முறைகெட்டுக் கிடக்கும்போது கடிதத்தில் மட்டும் முறை என்ன வாழுகிறதாம்?

அடுத்தாற்போல் அவரை நான் என்னவென்று அழைக்க? - இதற்கு முன்னர் நான் அவரை என்ன வெல்லாமோ குறிப்பிட்டு அழைத்திருக்கிறேன் என்பது உண்மைதான்; இனி நான் அவரை என்னவென்று அழைப்பது? அதிலும் அவருக்கென்று ஒருத்தி இருக்கும் போது?

அந்த ஒருத்தி இந்தக் கடிதத்தை ஒருவேளை பார்க்க நேர்ந்தால்...

பார்க்க நேர்ந்தால் என்ன? அவள் எனக்காக எந்த வகையிலும் பயப்படவேண்டியதில்லை - ஏனெனில், இனி நான் இருக்க மாட்டேன்; இனி நான் இந்த உலகத்தில் இருக்கவே மாட்டேன்!

போதாதா, இந்த உலகத்தில் நான் இருந்ததெல்லாம் போதாதா? இருந்து அனுபவித்ததெல்லாம் போதாதா? - போதும்; ஏழேழு ஜன்மங்களுக்குப் போதும்!

சிரிப்பு வருகிறது,ஆம் - எனக்குக்கூடச் சிரிப்பு வருகிறது - ஏன், என்னைப் பார்த்து ஊரார் சிரிப்பது போதாது போலிருக்கிறது; அதனால்தான் என்னைப் பார்த்து நானே சிரித்துக் கொள்கிறேனோ, என்னமோ?

இருக்கட்டும்; என்னைப் பொறுத்தவரை நான் சாகப்போவது சரி! - அன்றொரு நாள் உணர்ச்சிக்கு இரையானேன்; அந்த உணர்ச்சி இன்று என் உயிரைத் தனக்கு இரையாகக் கேட்கிறது; கொடுக்கப் போகிறேன் - இது சரியே; யார் என்ன சொன்னாலும் என்னைப் பொறுத்தவரை இது சரியே!

ஆனால்...

இந்தக் குழந்தை யாரை என்ன செய்தது? இதை நான் கொன்றுவிட வேண்டுமாமே?

அதுவும் எப்படி? இதன் கழுத்தைப் பிடித்துத் திருகி...

ஐயையோ! மனிதர்களா இவர்கள்? மாறிவிட்ட மனிதர்களா, இவர்கள்? - இல்லை இவர்கள் மாறவேயில்லை!

வானம் மாறிவிட்டது என்கிறது விஞ்ஞானம்; வான் மதியும் மீன்களும் மாறிவிட்டன. மாறிக்கொண்டே

வருகின்றன என்கிறது விஞ்ஞானம்; கடலும் காற்றும் கூட, மலரும் மண்ணுங்கூட, கொடியும் சோலையும் கூட, மலையும் நதியும்கூட மாறிவிட்டன, மாறிக் கொண்டே வருகின்றன என்கிறது விஞ்ஞானம். ஆனால் மனிதன்...

மாறவே மாட்டானா? எதில் மாறினாலும் குணத்தில் மாறவே மாட்டானா?

மானம் என்று ஏதோ ஒன்று இருப்பதாகச் சொல் கிறானே, மனம் என்று ஒன்று இருக்கிறதா, இவனுக்கு?

இருந்தால் ஏதும் அறியாத என் செல்வத்தை - என் கண்ணின் மணியைக் கழுத்தைப் பிடித்துத் திருகிக் கொன்றுவிடச் சொல்வானா, அவன்? கொன்று, குப்பைத் தொட்டியில் வீசி எறிந்துவிடச் சொல்வானா, அவன்?

ங்கா, ங்கா...!

செவியில் தேனாகப் பாய்ந்து, இதயம் முழுவதையும் இனிப்பாய் இனிக்க வைக்கும் இவன் குரலை உலகத்துக்குக் கேட்கவொட்டாமல் தடுக்க நான் யார்? அவன் தான் யார்?

''எத்தனை கோடி இன்பம் வைத்தாய், எங்கள் இறைவா, இறைவா, இறைவா!'' என்று பரவசத்துடன் பாடுகிறான் பாரதி; அத்தனை கோடி இன்பமும் ஒருங்கே எங்கேயாவது இருக்கிறதென்றால், அது இந்த 'ங்கா'விலல்லவா இருக்கிறது?

சகோதரி! இவனுடைய பொக்கை வாய்ச்சிரிப்பு இருக்கிறதே, - பொக்கை வாய்ச் சிரிப்பு எவ்வளவு சக்தி வாய்ந்தது தெரியுமா, அது?

ஒருநாள் இரவு; யாரோ குமுறிக் குமுறி அழும் சத்தம் என் காதில் விழுந்தது. திடுக்கிட்டு விழித்துப் பார்த்தேன்; பக்கத்திலிருந்த குழந்தையைக் காணவில்லை!

அவ்வளவுதான்; ''ஐயோ, என் குழந்தை!'' என்று அலறியடித்துக் கொண்டு எழுந்தேன் - அறைக் கதவு வெளியே பூட்டப்பட்டிருந்தது!

முட்டினேன்; மோதினேன் - ஊஹும்!

நல்ல வேளையாகக் கடப்பாறையொன்று அந்த அறையில் போட்டிருந்த கட்டிலுக்குக் கீழே வைக்கப் பட்டிருந்தது என் கண்ணில் பட்டது; அதை எடுத்துக் கதவை உடைத்துக் கொண்டு வெளியே வந்தேன்.

அழுது கொண்டிருந்தவள் என் பாட்டி! - பாட்டியா அவள்? - எமன்; என் குழந்தைக்கென்றே வந்த எமன்!

ஆனால்...

அவனைவிட இவளுக்குக் கருணை கொஞ்சம் அதிகம் - ஆம், கருணைதான்!

அவன் கழுத்தைப் பிடித்துத் திருகிக் கொன்று விடவேண்டுமென்று சொன்னால், ''வேண்டாம்; பால் புகட்டுவது போல் வேறு ஏதாவது புகட்டியே கொன்று விடலாம்!'' என்று வாய் கூசாமல், மனம் கூசாமல் சொல்லிக் கொண்டிருந்தவள் இவள்!

அடி, பாவி! உன்னுடைய கையிலா என் குழந்தை? - உயிரோடு வைத்திருக்கிறாயா, இல்லையா?

ஓடிப்போய் அவளுடைய கையிலிருந்த குழந்தையை வாங்கிப் பார்த்தேன்; உயிருடன் தானிருந்தது!

ஆனால்...

வீசி எறிந்த பாலாடை, அந்தப் பாலாடையிலிருந்து சிதறிய பால், அந்தப் பாலை நக்கிக் குடித்ததால் தானோ என்னவோ, செத்து விழுந்து கிடந்த ஒரு பூனைக் குட்டி - இதெல்லாம் என்ன?

போலீஸ்!

தீர்க்கமாக குரல் எழுப்பினேன் நான்; ஆனால்...

காரியம் எதுவாய்த்தான் இருக்கட்டுமே, அது நடப்பதற்கு முன்னால் - நடக்கப் போவதற்கு முன்னால் அவர்கள் எங்கே வருகிறார்கள்? நடந்த பிறகு வருவதல்லவா அவர்கள் வழக்கம்?

வரட்டும்; அல்லது வராமற் போகட்டும் - என்னுடைய குழந்தையைக் கொல்லத் துணிந்த இவளை நானே கொன்று விட்டால் என்ன?

இப்படித் தோன்றிற்றோ இல்லையோ, குழந்தையைக் கீழே கிடத்திவிட்டு அவள் மேல் பாய்ந்தேன். பாய்ந்து, அவள் நெஞ்சை என் இரு கைகளாலும் அழுத்திப் பிடித்து ஓர் உலுக்கு உலுக்கினேன்!

''விட்டுவிடடி; உனக்காகவாவது இன்னும் கொஞ்ச நாட்கள் உயிர் வாழ என்னை விட்டு விடடி!'' முக்கி முனகிக் கத்த முடியாமல் கத்தினாள் அவள்.

எப்படி இருக்கிறது, கதை? - எனக்காக இன்னும் கொஞ்ச நாட்கள் இவள் உயிர் வாழப் போகிறாளாம்.

ஏன்? - எனக்காக என் குழந்தையைக் கொல்ல; அதன் மூலம் இழந்துவிட்ட கன்னித் தன்மையை நான் மீண்டும் பெற்று விட்டதாக மனப்பால் குடிக்க. உற்றார் கண்ணிலும் ஊரார் கண்ணிலும் மண்ணைத் தூவி, என்னை வேறு யாராவது ஓர் அப்பாவியின் கழுத்தில் கட்டிக் கண் குளிரப் பார்க்க!

பார்க்கட்டும் - அந்தக் கண்ணராவிக் காட்சியைக் காண என் அம்மா தான் இல்லையே, இவளாவது பார்க்கட்டும் - விட்டு விட்டேன் அவளை!

எனக்காக இன்னும் கொஞ்ச நாட்கள் உயிர் வாழவா? - இல்லை; 'உன்னால் கொல்லப்பட வேண்டியவன் அந்த நயவஞ்சகன்; இந்த நப்பாசை பிடித்த கிழவி அல்ல' என்று என் மனம் என்னை இடித்துரைத்ததால்!

என்னுடையக் கொலைக் கரங்களிலிருந்து விடுபட்ட அந்தக் குற்றுயிர் சொல்லிற்று:

''உன்னுடைய குழந்தையைக் கொல்ல யாரால் முடியும்? தன்னைக் கொல்வதற்காகக் கொடுக்கப்பட்ட விஷக்கோப்பையைக் கண்டு யாரோ ஒரு ஞானி சிரித்தானாமே, அவனைப் போல உன்னுடைய குழந்தையும் என்னுடைய விஷப் பாலாடையக் கண்டதும் சிரித்ததடி! அந்தச் சிரிப்பிலே என் கையிலிருந்த பாலாடை எங்கே போயிற்றோ, எனக்குத் தெரியாது; நான் இவனை வாரி அணைத்துக் கொண்டு அழ ஆரம்பித்து விட்டேன்!''

இதிலிருந்து என்ன தெரிகிறது? என்ன தான் கொடும் பாவியாயிருந்தாலும் இதயம் என்று ஒன்று இருக்கத்தான் இருக்கிறது என்று தெரிகிறதல்லவா?

அந்த இதயம் அவனுக்கும் இருக்கும். அது எனக்காக இரங்கா விட்டாலும் இந்தக் குழந்தைக்காகவாவது என்றாவது ஒருநாள் இரங்கும் என்று நான் இத்தனை நாட்கள் எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன். அது இரங்கவில்லை; எனக்காக என் அண்ணன் உயிர் துறந்தப் பிறகும் அது இரங்கவில்லை.

அண்ணனா அவன்? - ஆம், அண்ணன் தான் - அதிசய அண்ணன்!

அவன் மட்டும் அன்றே எங்கள் காதலுக்கு குறுக்கே நின்றிருந்தால்? - அதைப் பற்றி இப்போது எண்ணி என்ன பயன்? எழுதித்தான் என்ன பயன்?

நான் வருகிறேன் - நீ இந்தக் குழந்தையைக் காப்பாற்று; எப்படியாவது காப்பாற்று! - ஆனால், அவன் வளர்ந்த பிறகு அவனைப் பற்றிய ரகசியத்தை மட்டும் அவனிடம் சொல்லி விடாதே! - அதனால் ஒருவேளை அவன் தன்னைத் தானே மாய்த்துக் கொண்டாலும் மாய்த்துக் கொள்ளலாம்; அல்லது சமூகம் அவனை மாய்த்து விடலாம் - நான் வரட்டுமா?

அன்பு முத்தங்கள் - குழந்தைக்கு மட்டுமல்ல; உனக்கும் சேர்த்துத்தான்!

இப்படிக்கு,
நறுமணம்

நறுமணம்! - இந்தப் பெயரை இதற்கு முன் எங்கேயோ கேட்டாற் போலிருக்கிறதே? - ஆம், பெங்களூரில்; உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போது - அந்த நறுமணம் இந்த நறுமணமாக இருப்பாளா, என்ன?

உலகில் ஒரு நறுமணமா, இரண்டு நறுமணமா? - எத்தனையோ நறுமணங்கள்!

இவ்வாறு எண்ணமிட்டுக் கொண்டிருந்த போது "எனக்கு நேரமாச்சு! கடிதத்தைக் கொடுத்து விடுகிறீர்களா அம்மா?" என்றாள் விசாலம் அங்கே வந்து.

"இதோ கொடுக்கிறேன்" என்று இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து அவளிடம் நீட்டினாள் கல்யாணி.

"இது எதற்கு?"

"நான் திருடுவதற்கு முன்னால் அவர்கள் அந்தக் கடிதத்தைப் படித்து முடித்து விட்டுக் கிழித்து எறிந்து விட்டார்கள் என்று சொல்வதற்கு!"

''அவர் தான் பெரிய ஆளாயிருக்கிறாரென்றால், நீங்கள் அவரைவிடப் பெரிய ஆளாயிருக்கிறீர்களே?''

''நாங்கள் இருவரும் உனக்கு எந்த மூலைக்கு? இந்தா, பிடி!''

''எனக்கு வேண்டாம், அம்மா! என்னைப் பற்றி அப்படியெல்லாம் நினைக்காதீர்கள், நான் நிரபராதி!''

''அதனால்தான் அவர் கொடுத்த பத்து ரூபாயை வாங்கிக் கொண்டு யாரோ பெற்ற குழந்தையை உன்னுடைய குழந்தை என்று சொன்னாயா?''

''நான் என்ன செய்வேன், அம்மா! 'என்னுடைய நிலையில் இந்தக் குழந்தையைக் கொண்டு போய் என்னால் எப்படி வளர்க்க முடியும். ஐயா?'' என்றேன்; இந்தா பத்து ரூபாய், பாலுக்கு வைத்துக்கொள்!'' என்றார்; 'சரி' என்று வாங்கிக் கொண்டேன்!'

''பாலுக்குக் காவலாயிருந்தது சரி, பூனைக்குத் தோழனாக இருக்கலாமா?''

''எனக்குத் தெரிந்தவரை அவர் பூனை இல்லை; அவ்வளவுதான் இப்போது என்னால் சொல்ல முடியும்; நான் வருகிறேன்!'' என்றுத் திரும்பினாள் விசாலம்.

''கடிதம் வேண்டாமா?'' என்றாள் கல்யாணி.

''கொடுக்க விரும்பினால் கொடுங்கள்; இல்லாவிட்டால் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்!''

''அவர் கேட்டால்?''

''கேட்க மாட்டார்; கடிதம் மறுபடியும் உங்கள் கைக்கு வந்துவிட்டது அவருக்குத் தெரியும்!''

''எதுதான் தெரியாது அவருக்கு? நீ போய் வா; குழந்தை இங்கேயே இருக்கட்டும்!''

விசாலம் தயங்கினாள்; தயங்கிவிட்டுச் சொன்னாள்;

''ஐயா எடுத்துக்கொண்டுப் போகச் சொன்னார்; எடுத்துக் கொண்டுப் போனேன். நீங்கள் இங்கேயே இருக்கட்டும் என்கிறீர்கள்; விட்டுவிட்டுப் போகிறேன். இதுதான் வேலைக்காரியின் பிழைப்பு அம்மா, இதுதான் வேலைக்காரியின் பிழைப்பு!'' என்று சொல்லிக் கொண்டே, காலையில் ராமமூர்த்தி கொடுத்த பத்து ரூபாயையும் அந்தக் குழந்தைக்குப் பக்கத்திலேயே வைத்து விட்டு அவள் சென்றுவிட்டாள்.

அவளுடைய தலை மறைந்ததும் பெங்களூரிலிருந்த தன் அப்பாவுக்கு அவசர அவசரமாக ஒரு கடிதம் எழுதினாள் கல்யாணி; அந்தக் கடிதத்தில்;

தேவரீர் அப்பா அவர்களுக்கு,

வணக்கம். நலம்; நலம் அறிய அவா.

இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் கடிதம் என்னுடன் பிறக்காமல் பிறந்துவிட்ட ஒரு சகோதரி யினுடையது; அவளுக்காக நான் இந்தக் கடிதத்தை என்றும் காப்பாற்றி வைக்க வேண்டிய நிலையிலிருக் கிறேன். இங்கே இருந்தால் அதற்கு ஏதாவது ஆபத்து நேர்ந்து விடுமோ என்று அச்சமாயிருக்கிறது. எனவே உங்களுக்கு அனுப்பியிருக்கிறேன்; பத்திரமாக வைத்திருங்கள்.

இந்தக் கடிதம் பற்றிய விவரம் உங்களுக்கும் எனக்கும் தவிர வேறு யாருக்கும் தெரிய வேண்டாம்.

அன்புடன்
கல்யாணி.

இரு கடிதங்களையும் இணைத்து ஒட்டி அப்பாவின் முகவரியை எழுதிய பிறகு, அதை எப்படித் தபாலில் சேர்ப்பது என்றப் பிரச்னை எழுந்தது கல்யாணிக்கு.

வேலைக்காரி கூடப் போய்விட்டாளே! - போகா விட்டால் தான் என்ன? அவளிடமாவது, இந்தக் கடிதத்தைக் கொடுப்பதாவது?

ஆம், இதைத் தானே கொண்டுபோய்த் தபாலில் சேர்க்க வேண்டும்...

இப்பொழுதுதான் ஞாபகத்துக்கு வருகிறது; இந்தத் தெரு முனையிலேயே ஒரு தபால் பெட்டி இருப்பது இப்பொழுதுதான் என் ஞாபகத்துக்கு வருகிறது...

கடிதத்தை எடுத்துக்கொண்டு எழுந்தாள் கல்யாணி- "ஒரு நிமிஷம்!" என்ற கரகரத்த குரலொன்று அவள் காதில் விழுந்தது; திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

ஐயோ! இவன் யார், யார் இவன்?

"ஆ!" என்று அலறிவிட்டாள் அவள். தன்னையும் அறியாமல்.

"பயப்படாதீர்கள்; என்னால் உங்களுக்கு எந்தவித மான தீங்கும் நேராது!" என்றான். கருகருவென்று தாடியும் மீசையும் வளர்ந்து, பார்ப்பதற்கு பஞ்சாபி போலிருந்த அந்த வாலிபன்.

"நீங்கள்...?"

தடுமாறினாள் கல்யாணி.

"யாராயிருந்தால் என்ன? இந்தாருங்கள், அவர் கொடுத்த ரூபாய் பத்தாயிரம்; இதைச் சேர்க்கத்தான் உங்களைத் தேடி வந்தேன்!" என்று நூறு ரூபாய் நோட்டுக் கட்டொன்றை எடுத்து அவளுக்கு முன்னால் விட்டெறிந் தான் அவன்.

"இது என்னக் கதை? கடிதம் சொல்லாத கதையா யிருக்கிறதே?" என்றாள் கல்யாணி, கொஞ்சம் தெளிந்து.

''இருக்கலாம்; கடிதம் இதன் கதையைச் சொல்ல விரும்பாமல் இருக்கலாம்!'' என்றான் அவன்.

''இந்தப் பணத்தை யார், யாருக்காகக் கொடுத்தது? அதையாவது சொல்ல முடியுமா, உங்களால்?''

''அதையா கேட்கிறீர்கள்?'' - அவ்வளவுதான்; அழுகை பொத்துக்கொண்டு வந்துவிட்டது அவனுக்கு - ஊஞ்சல் சங்கிலியைப் பிடித்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்துவிட்டான்!

தர்மசங்கடமாகப் போய்விட்டது கல்யாணிக்கு. 'சிரிக்கிற பெண்களையும் அழுகிற ஆண்களையும் நம்பக் கூடாது' என்கிறார்களே, அந்த வகையில் சேர்ந்தவனா யிருப்பானோ, இவனும்?.....

அதற்குமேல் அவளைச் சிந்திக்க விடவில்லை, அவன். அழுத கண்களை அவசர அவசரமாகத் துடைத்துக் கொண்டு, ''நான் வந்த வேலை முடிந்துவிட்டது; பணத்தை எங்கே சேர்க்க வேண்டுமோ, அங்கே சேர்த்துவிட்டேன் - அந்தக் கடிதத்தைத் தபாலில்தானே சேர்க்க வேண்டும், உங்களுக்கு? - கொடுங்கள்; சேர்த்து விடுகிறேன்!'' என்றான் கையை நீட்டியபடி.

''ஊஹூம்!''

கல்யாணியின் வாய் அசையவில்லை; தலைமட்டுந் தான் அசைந்தது.

''நம்பாதீர்கள்; யாரை நம்ப வேண்டுமோ அவனை நம்பவே நம்பாதீர்கள்!''

'கலகல'வென்று நகைத்தான் அவன். நகைத்து விட்டு, ''மனிதன்; சின்னஞ் சிறு மனிதன்! பிறக்கும் போது நீ எவ்வளவு இனிமையானவனா யிருக்கிறாயடா,

எவ்வளவு இனிமையானவனாயிருக்கிறாய்!'' என்றுக் குழந்தையிடம் கொஞ்சினான். கொஞ்சிவிட்டு,

''காதலினால் மானுடர்க்குக் கலவியுண்டாம்
கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும்;
காதலினால் மானுடர்க்குக் கவிதையுண்டாம்;
கானமுண்டாம்; சிறபமுதற் கலைகளுண்டாம்;
ஆதலினால், காதல் செய்வீர்; உலகத்தீரே!
அஃதன்றோ இவ்வுலகத் தலைமை யின்பம்;
காதலினால் சாகாமல் இருத்தல் கூடும்;
கவலைபோம், அதனாலே மரணம் பொய்யாம்!''

என்று கரக் கம்பம் சிரக் கம்பமெல்லாம் செய்தபடி பாடிக் கொண்டே சென்று விட்டான், அவன்!

பைத்தியக்காரனாயிருப்பானோ? - பைத்தியக்காரனாயிருந்தால் அவனிடம் ரூபா பத்தாயிரம் கூட இருக்குமா, என்ன?

ஏன் இருக்காது? - பணமே இந்தக் காலத்தில் பைத்தியக்காரர்களிடம்தானே இருக்கிறது?

இப்படி நினைப்பவர்கள் வேண்டுமானால் தங்களைத் தாங்களே காரியக்காரர்களாக நினைத்துக்கொண்டு அவஸ்தைப்படலாம். ஆனால், உண்மையில் பணம் யாரிடம் இருக்கிறது? காரியக்காரர்களிடம் தான் இருக்கிறது!

அது எப்படியாவது போகட்டும் - அவன் ஒருவேளை யாரையாவது காதலித்து, அந்தக் காதலிலே தோல்வியுற்று, அந்தத் தோல்வியால் உளநோய்க்கு ஆளாகி, அந்த உளநோயால் தன்னிடமிருந்த பணத்தைக் கொண்டு வந்து...

என்னிடம் ஏன் கொடுக்க வேண்டுமாம்? அதிலும், அந்தப் பணத்தைத் தன்னுடைய பணம் என்றுகூட அவன் சொல்லவில்லையே? - இவர் கொடுத்தது என்கிறானே? -

இவர் கொடுத்தார் என்றால் யாருக்குக் கொடுத்தார்? ஏன் கொடுத்தார்?

நறுமணத்துக்குக் கொடுத்தாரா, தன்னை மறந்து விடுவதற்காக? அவளிடம் கொடுத்திருந்தால் அது எப்படி இவனிடம் வந்திருக்கும்? - இவன் ஒருவேளை அவளுடைய அண்ணனாயிருப்பானா? - அவன்தான் தனக்காக உயிர் துறந்துவிட்டான் என்று அவள் எழுதியிருக்கிறாளே. .

என்ன இழவோ, எல்லாம் ஒரே குழப்பமாகவல்லவா இருக்கிறது!

இந்தக் குழப்பத்தில் பணத்தை மட்டும் மறந்து விடாமல் எடுத்துப் பீரோவில் வைத்துப் பூட்டிவிட்டுக் கடிதத்தைக் கொண்டுபோய்த் தபாலில் சேர்த்துவிட்டு வந்தாள் கல்யாணி.

இப்பொழுதுதான் அவளுடைய மனச்சுமை கொஞ்சம் குறைந்தது போலிருந்தது; உற்சாகத்துடன் குழந்தையை நெருங்கி, ''ஹெல்லோ, மாஸ்டர் ராமமூர்த்தி!'' என்றவள், ''ஓ, கணவரின் பெயரைச் சொல்லக் கூடாதோ, மனைவி? - ஐ ஆம் ஸாரி!'' என்று தனக்குத் தானே வருத்தம் தெரிவித்துக் கொண்டு, ''உன் பெயர் என்னடா, அதையாவது சொல்லித் தொலையேன்?'' என்றாள்.

குழந்தை சிரித்தது!

''சிரித்தால் என்ன அர்த்தம்? இளித்தவாயன் என்று அர்த்தமா?''

அதற்கும் சிரித்தது அது!

''பிழைத்துக் கொள்வாயடா பயலே, நீ பிழைத்துக் கொள்வாய்!'' என்று சொல்லிக் கொண்டே சென்று,

தனக்குச் சீதனமாக வந்திருந்த வெள்ளிப் பால் குப்பியை எடுத்து, அதில் அவனுக்கென்று ஏற்கனவே ஒதுக்கி வைத்திருந்த பாலை நிரப்பினாள்.

வேறு வழி, அவள் தாயாகாவிட்டாலும் அவளுடைய கணவன்தான் தந்தையாகி விட்டானே?

3. கல்லாத பேர்களே நல்லவர்கள், நல்லவர்கள்!

அன்று மாலை; கடற்கரை மணல்திட்டின் மேல் அமர்ந்து, 'நறுமணம்' என்று எழுதுவதும், எழுதியதைக் கலைப்பதுமாக இருந்தான் ராமமூர்த்தி.

''தம்பி!''

அவனுக்கு எதிர்த்தாற்போல் அமர்ந்திருந்த டாக்டர் நெடுமாறனார். குரலில் தேனைக் குழைத்து அவனுடைய மௌனத்தைக் கலைக்க முயன்றார்; முடியவில்லை.

''தம்பி!''

முதல் முயற்சியில் தோல்வியுறவே, அவனுடைய தோளைப் பற்றித் தம்முடைய இரண்டாவது முயற்சியைத் தொடங்கினார் பேராசிரியர்.

தலை நிமிர்ந்தான் தம்பி!

''இன்று காலை நீ கலாசாலைக்கு வந்ததிலிருந்தே உன்னை நான் கவனித்துக் கொண்டுதான் இருந்தேன்; நீ உன் வசமில்லை!''

''எப்படி இருக்க முடியும்?'' - அப்போதுதான் வாயைத் திறந்தான்.

''இருக்க முடியாதுதான்; இருக்க முடியாது தான்!'' என்று தலையை வழக்கம்போல் அவனுக்குச் சாதகமாக ஆட்டிவிட்டு, ''சொன்னது சொன்னபடி அவள் செய்து விட்டாளா?'' என்றார், தம் தொனியை மாற்றிக்கொண்டு.

''ஆம், சொன்னது சொன்னபடி செய்தும் ஆகிவிட்டது; தப்பியும் ஆகிவிட்டது!''

''நீ என்ன செய்தாய், எப்படி மனைவியிடமிருந்து தப்பினாய்?''

''வேலைக்காரி விசாலத்தின் துணையைக் கொண்டு தப்பினேன்; குழந்தையையும் அவளுடையக் குழந்தை என்றுச் சொல்லி அவளிடமேக் கொடுத்து அனுப்பினேன்!''

''அதுவே கற்றவரின் சிறப்பு; அதுவே கற்றவரின் சிறப்பு! - மற்றவராயிருந்தால் அந்தக் கணமே அறிவை இழந்து ஆத்திரம் கொண்டிருப்பர்; குழந்தையையும் அதன் தாயையும் அக்கம் பக்கத்தார் அறியும் அளவுக்கு அடித்து விரட்டியிருப்பர். அல்லது கொண்ட மனைவியிடம் குரூரமாக நடந்து கொண்டிருப்பர்.

''புறவாழ்வில் எப்படியிருந்தாலும் அக வாழ்வில் அவர்கள் நம்மைவிடத் தூய்மையும் வாய்மையும் உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்றே நான் நினைக்கிறேன்!''

''நினைப்பது சரி; ஆனால் நினைப்பதை நினைப்ப தோடு நிறுத்திக் கொள், தம்பி! இல்லாவிட்டால் நம் வாழ்வு சிறக்காது!''

''அதற்காகப் பொய்யையும்,போலித்தனத்தையுமே துணையாகக் கொண்டு நாம் வாழ வேண்டுமா, என்ன?''

''இந்த உலகத்தில் எதுதான் பொய் இல்லை? - எல்லாமே பொய்தான்! - பொய்யான உலகத்தில் பொய்யான வாழ்வு வாழ்ந்தால்தான் பொருளும் புகழும் நம்மைத் தேடி வரும்!''

''அந்தப் பொருளும் புகழும் மட்டும் பொய் இல்லையா?''

''பொய்தான்; ஆனால் நம் வாழ்வைச் சிறக்க வைக்கும் பொய்கள் அவை!''

''ஊரை ஏமாற்றித்தானே?''

''ஊரை நாமா ஏமாற்றுகிறோம்? ஊர் நம்மிடம் ஏமாறுகிறது என்றுச் சொல்!''

''ஏமாறும் ஊரை விழிப்படையச் செய்வதல்லவா நம்மைப் போன்றவர்களின் கடமை?''

''தவறாகச் சிந்திக்கிறாய் தம்பி, தவறாகச் சிந்திக்கிறாய்! என்னுடைய நூல்கள் அனைத்தையும் நீ படித்திருக்கிறாய், இல்லையா?''

''என்ன அப்படிக் கேட்டுவிட்டீர்கள்! நீங்கள் எந்த நூல் வெளியிட்டாலும் அந்த நூலுக்கு முதல் வாசகன் நான்தானே?''

''என்னுடைய நூல்களில் பொதுப்படையாக நான் என்ன சொல்கிறேன்?''

உணர்ச்சிக்கு இடம் கொடுக்கக் கூடாது. உணர்ச்சிக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று சொல்கிறீர்கள்!''

''அதுவே நம் வாழ்வுக்கு அடிப்படை, அதுவே நம் வாழ்வுக்கு அடிப்படை!'' என்று சொன்னவர் எழுந்தார். எழுந்து, ''அதை மறந்து நீ இப்போது உணர்ச்சிக்கன்றோ இடம் கொடுத்துவிட்டாய்!'' என்று நடந்தார். நடந்து,

''எல்லாம் அந்த குருஷேவால் வந்த வினை! செத்த பிறகும் தன்னுடைய செல்வாக்குக்குத் தடையாயிருந்து வந்த ஸ்டாலினின் புகழை மறைப்பதற்காக, 'தனி நபர் வழிபாடு கூடாது' என்று அவன் ஒரு புதிய இயக்கத்தைத் தொடங்கி வைத்தாலும் தொடங்கி வைத்தான் - மாணவர் உலகம் இப்போதெல்லாம் யார் எதைச் சொன்னாலும் எடை போட்டுப் பார்க்கவும், எதிர்க் கேள்வி கேட்கவும் தொடங்கிவிட்டது!'' என்று முணுமுணுத்துக்கொண்டே திரும்பினார். திரும்பி, ஏற்கெனவே அமர்ந்திருந்த இடத்துக்கே வந்து அமர்ந்தார். அமர்ந்து, ''நீயோ நானோ உணர்ச்சிக்கு இடம் கொடுப்பதில் தவறில்லை, தம்பி! - உணர்ச்சிக்கு இடம் கொடுக்காவிட்டால் இந்த உலகத்தில் நமக்கு இன்பமும் இல்லை - ஆனால் அதே உணர்ச்சிக்கு இடம் கொடுக்குமாறு மக்களை மட்டும் நாம் தூண்டிவிட்டு விடக் கூடாது; அவ்வாறு தூண்டிவிடுவதை யாராவது கடமையாகக் கொண்டாலும், அந்தக் கடமையை நாம் கயமை என்று சொல்லி முறியடிக்க வேண்டும். இல்லா விட்டால் நம்மைப் போன்றவர்கள் தட்டி ஓட்டும் வழியில் செல்லும் 'காயடித்த மாடு'களாக மக்கள் இருக்க மாட்டார்கள்; எடுத்ததற்கெல்லாம் முட்ட வரும் மாடுகளாக இருப்பார்கள்!'' என்று தாம் கொண்ட கருத்தின் சிறப்பியல்பைச் சற்றே எடுத்து விளக்கினார் டாக்டர்.

அவ்வளவுதான்; தம்பி அயர்ந்து விட்டான். ''என்னே, தங்கள் நுண்ணறிவு, என்னே தங்கள் நுண்ணறிவு!'' என்ற 'உங்க'ளுக்குப் பதிலாகத் 'தங்க'ளைப் போட்டு வியந்துரைத்தான்.

அதுதான் சமயமென்று விட்டுப்போன இன்னொரு கருத்தின் சிறப்பியல்பையும் சற்றே எடுத்து விளக்கலானார் பேராசிரியர்.

''கற்றவரின் சிறப்பியல்பு குறித்து நான் கூறுங் காலையில், மற்றவரின் சிறப்பியல்பு குறித்து நீ கூறினாய்; புறவாழ்வில் எப்படி யிருந்தாலும் அக வாழ்வில் அவர்கள் நம்மைவிடத் தூய்மையும், வாய்மையும் உள்ளவர்களா யிருக்கிறார்கள் என்று! - அதுவும் தவறே, அதுவும் தவறே. அவ்வாறு இருப்பதால் அவர்களை உலகம் போற்றவா செய்கிறது? இல்லை; 'அநாகரீகர்கள்' என்று தூற்றுகிறது. ஆகவே, நாம் என்ன செய்ய வேண்டும்? அத்தகை யவர்களை 'அன்பில்லாதவர் பட்டிய'லிலும் 'பண்பில் லாதவர் பட்டிய'லிலும் சேர்த்துவிட வேண்டும். அவ்வாறு சேர்த்து, விட்டால்தான் நம்மைப் போன்ற வர்களை அன்புள்ள வர்கள்' என்றும், 'பண்புள்ளவர்கள்' என்றும் உலகம் மதிக்கும்; மலர்மாலை சூட்டி மகிழும்; கைகொடுக்கும்; கைதட்டி ஆரவாரம்கூடச் செய்யும் - இவையனைத்தும் உலகம் தெரியாத உன்னைப் போன்ற இளைஞர்களுக்குப் பொய்யாகத் தோன்றலாம்; போலித்தனமாகத் தோன்றலாம். ஆனால் வாழ்வின் வெற்றிக்கு வழி இதுவே; வாழ்வின் வெற்றிக்கு வழி இதுவே! - என்ன தம்பி, புரிந்ததா?''

''புரிந்தது!''

''இனித் தப்பிவிட்ட அந்தக் குழந்தையின் தாயிடமிருந்து நாம் தப்ப வேண்டும்?''

''ஏன்?''

'அவள் தன்னைத் தற்கொலைக்கு உள்ளாக்கிக் கொண்டு விடலாமன்றோ!''

''அதற்காக நீங்கள் கவலைப்படுகிறீர்களா, என்ன!''

''கவலை அவளுக்காக அன்று; கடிதம் எழுதி வைத்து விட்டு அவள் தன்னை மாய்த்துக் கொள்ளப் போக, அந்தக் கடிதத்தால் நம்முடைய புகழுக்கும் பெருமைக்கும் ஏதாவது இழுக்கு நேரலாமன்றோ?''

இப்பொழுதுதான் தன் மனைவியிடம் சிக்கியிருக்கும் கடிதத்தைப் பற்றிய நினைவு ராமமூர்த்திக்கு வந்தது. ''ஆம், என் மனைவியிடம் கூட ஏதோ ஒரு கடிதம் சிக்கித்தான் இருக்கிறது!'' என்றான்.

''அதை நீ பார்த்தாயா?''

''இல்லையே!''

''அவசியம் பார்த்திருக்க வேண்டுமே, அதை?''

''பார்க்க முயன்றேன்; வெற்றி கிட்டவில்லை!''

''மீண்டும் முயன்று பார்!''

''பார்க்கிறேன்!''

''அதைத் தவிர வேறொரு கடிதமும் அவள் எழுதி வைத்திருக்கலாம்; முதல் கடிதம் குழந்தையைப் பற்றிய தாகவும், இரண்டாவது கடிதம் நம்மைப் பற்றியதாகவும் இருக்கலாம்!''

''எனக்கு அப்படித் தோன்றவில்லை. ஏனெனில், இது வரை நம்முடைய புகழுக்கும் பெருமைக்கும் இழுக்கு நேரக்கூடிய வகையில் எதுவும் நடக்கவில்லை; இனியும் நடக்காது!''

''அவள்மேல் உனக்கு நம்பிக்கை இருக்கலாம்; எனக்கு அந்த நம்பிக்கை இல்லை. ஏனெனில், தன் குழந்தைக்காகத் தன்னைக் கட்டிக் காத்து வளர்த்த பாட்டியையேக் கொல்லத் துணிந்த அவள், எதற்கும் துணிவாள்!''

''அதற்காக அண்ணனைக் கொன்றது போலத் தங்கையையும் கொன்றுவிட வேண்டுமா, என்ன?''

''அவசியமிருந்தால் அதையும் செய்ய வேண்டியது தான். சட்டத்தின் கண்களுக்குத் தெரியாமல்!''

''ஆம்; கற்றவர்களால்தான் எதையும் 'சட்டத்தின் கண்களுக்குத் தெரியாமல் செய்ய முடியும். மற்றவர்களால் செய்ய முடியாது; செய்யத் தெரியாது!''

''மீண்டும் உணர்ச்சி வசப்படுகிறாய் தம்பி, மீண்டும் நீ உணர்ச்சி வசப்படுகிறாய்!''

''மன்னியுங்கள்; என்ன இருந்தாலும் நான் உங்கள் மாணவன்தானே?''

''ஆம், கல்வித் துறையில் மட்டுமல்ல - வாழ்க்கைத் துறையிலும் நீ என் மாணவன்; மதிப்புக்குரிய மாணவன் - வா, போகலாம்!'' என்று அவனைத் தட்டிக் கொடுத்து எழுப்பினார் டாக்டர்.

''இருள் சூழும் இந்த நேரத்தில் எங்கே அழைக்கிறீர்கள், என்னை?''

''அவளைத் தேடத்தான்!''

''தேடுவதாயிருந்தால் காலையிலல்லவாத் தேடி யிருக்க வேண்டும்?''

''உனக்குத் தெரியாது, தம்பி! தற்கொலைக்குத் தன்னை உள்ளாக்கிக் கொள்பவர்களுக்கு இதுதான் தகுந்த நேரம்!''

''அப்படியே இருந்தாலும் அது எங்கே, எப்போது நடந்திருக்கக்கூடும் என்பதை நம்மால் எப்படி ஊகித்தறிய முடியும்?''

''ஏன் முடியாது? ஏற்கெனவே ஒருமுறை அவள் தன்னைத் தற்கொலை செய்துகொள்ளத் துணிந்தபோது சேத்துப்பட்டுக்கும் நுங்கம்பாக்கத்துக்கும் இடையே உள்ள இருப்புப் பாதையை நோக்கி ஓடவில்லையா? அதே இடத்துக்குத்தான் இன்றும் போயிருப்பாள்!''

''இதற்குள் ஏதாவது நடந்துவிட்டிருந்தால்?''

''நடந்த இடத்தை வேடிக்கை பார்ப்பதுபோல் பார்ப்பது; கடிதம் ஏதாவது கிடைத்தால் யாருக்கும் தெரியாமல் அதை எடுத்துக்கொண்டு வந்து விடுவது!''

''இருக்கவே இருக்கிறது, அன்பு! - அதைப் பண்போடு கலந்து பயன்படுத்தி அவளை மீண்டும் அழைத்துக் கொண்டு வருவது; அவளுடன் சிறிது நாட்கள் வாழ்வது போல் வாழ்ந்து, அவளுடைய அண்ணனைத் தீர்த்துக் கட்டியதுபோல் அவளையும் ஏதாவது ஒருவிதத்தில் தீர்த்துக் கட்டிவிடுவது!''

''எனக்கென்னமோ, இதெல்லாம் நம்மைப் போன்ற பேராசிரியர்கள் செய்யக் கூடிய வேலையாகத் தோன்ற விலலை!''

''நன்றாகச் சொன்னாய், நன்றாகச் சொன்னாய்! - உனக்கு மட்டுமென்ன, உலகத்துக்கே அப்படித் தோன்றாது - நம்மைப் போன்ற கற்றோருக்குள்ள அரண் அதுதான்! - வா தம்பி, வா!''

''உணர்ச்சிக்கு இடம் கொடுக்காதே, உணர்ச்சிக்கு இடம் கொடுக்காதே என்று ஊருக்கு உபதேசம் செய்து விட்டு, நாம் மட்டும் உணர்ச்சிக்கு இடம் கொடுத்ததால் வந்த வினை இது!'' என்று அலுத்துக்கொண்டே எழுந்தான் ராமமூர்த்தி.

''இன்பமும் துன்பமும் இரவும் பகலும்போல மாறி மாறி வருவதுதானே? அஞ்சற்க!'' என்று அபயம் அளித்தார் டாக்டர்.

அந்தச் சமயத்தில்....

ஏதோ ஒரு பாட்டு - ஏற்கனவே அவர்கள் பலமுறை கேட்ட பாட்டு - ஆம், அதே பாட்டுத்தான்:

"காதலினால் மானுடர்க்குக் கலவி யுண்டாம்;
கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும்...!"

காற்றிலே மிதந்து வந்த இந்தப் பாட்டு, பேராசிரியர்கள் இருவரையும் கதி கலங்க வைத்தது.

"அவனாய்த்தான் இருக்குமோ?" என்றார் நெடுமாறனார்.

"இருட்டில் இனம் தெரியவில்லை!" என்றான் ராமமூர்த்தி.

"குரல் மட்டும் அவனுடையக் குரல் போலிருக்கிறதே?"

"ஆம்; அவனுடையக் குரல்தான்!"

"செத்தவர்கள் திரும்பிவருவார்களா, என்ன!"

"அவர்கள் வராவிட்டாலும் அவர்களுடைய ஆவி வரும் என்று சொல்வார்களே!"

"அதில் உனக்கு நம்பிக்கை உண்டா, என்ன?"

இவ்வாறு கேட்டுக்கொண்டே அவனை ஒரு கையால் அணைத்துப் பிடிக்கப் போனார் பேராசிரியர் - அவ்வளவு தான்; "என்ன தைரியமடா உனக்கு, என்னை அணைத்துப் பிடிக்க?" என்று சீறியபடியாரோ ஒரு பெண் தன் காலில் இருந்ததைக் கழற்றப் போனாள்! - அப்போதுதான் தெரிந்தது, தான் அணைத்துப் பிடித்தது ராமமூர்த்தியை அல்ல; யாரோ ஒரு பெண்ணை என்பது பேராசிரியருக்கு!

"அட, பாவி! என்னை விட்டுவிட்டு நீ எங்கே போய் விட்டாய்?" - திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார் பேராசிரியர்; சற்றுத் தூரத்தில் அவன் ஓடிக்கொண்டிருப்பது தெரிந்தது. அவ்வளவுதான்; டாக்டரும் எடுத்தார், ஓட்டம்!

4. ''கடவுள் காப்பாற்றினார்!''

கூ, குப் குப் குப்!

வந்துவிட்டது; தன்னை நெருங்கி வந்தே விட்டது - இன்னும் கொஞ்ச நேரத்திற்கெல்லாம் இந்த வஞ்சக உலகத்திலிருந்து தனக்கு விடுதலை கிடைத்துவிடும் - கடவுளே!

கண்ணை மூடிக்கொண்டாள் நறுமணம்...

''அம்மா!''

ஆம், இன்னும் கொஞ்ச நாட்களுக்கெல்லாம் அவன் என்னை ''அம்மா!'' என்று அழைப்பான் - அப்போது நான் எங்கே இருப்பேன்? என்ன செய்வேன்?

ஆவி உருவில் அவனை வளைய வந்து கொண்டிருப்பேனா? 'அம்மா!' என்று அழைக்கும்போது, 'அட என் செல்வமே!' எங்கே இருப்பேன்? என்ன செய்வேன்?

ஊஹூம் - கூடாது; அப்படியெல்லாம் செய்யவேக் கூடாது - செய்தால், குழந்தைகளுக்குத் தோஷம் வந்துவிடுமாம்; அந்தத் தோஷம் அவற்றுக்கு ஆகாதாம்!

இது போதாதா? - ஆவி உருவில் இருக்கும் என்னை அவனால் பார்க்க முடியாது; அவனை மட்டும் என்னால் பார்க்க முடியும் - இதுவே வேடிக்கையாயிருக்குமே? இதுவே அவனுடன் 'கண்ணாமூச்சி' விளையாடுவது போலிருக்குமே? - இது போதாதா?

எனக்குப் பிறகு அவர் என்ன செய்வார்? 'என் மகன்' என்று அவனை ஏற்றுக்கொள்வாரா? - அப்படி ஏற்றுக் கொள்பவராயிருந்தால் அவனுடையக் கழுத்தைப் பிடித்து நெரித்து விட வேண்டுமென்றா சொல்லியிருப்பார்? - எல்லாம் கனவு; வெறும் கனவு...

கூ, குப் குப் குப் - கடவுளே!

கடைசி நிமிஷத்தில் கடவுளைத்தான் நினைக்க வேண்டுமாம் - உயிரோடு இருக்கும்போது வாழா விட்டாலும், செத்த பிறகாவது வாழ!...

கூ, குப் குப் குப்!

என்னைக் கொல்ல வரும் ரயிலின் குரலா, அது? - இல்லை; என் அண்ணாவின் குரல் - அவன் என்னை அழைக்கிறான்...

வந்துவிட்டேன் அண்ணா, இதோ வந்துவிட்டேன்!

கண் மூடி, கண் திறப்பதற்குள்...

''அடி, பாவி! வாழைக் குருத்துப் போலிருக்கிறாயே? - உனக்கு என்னக் கேடு, உன் வாழ்வை நீயே முடித்துக் கொள்ள?''

இப்படி ஒரு குரல்; அந்தக் குரலைத் தொடர்ந்து கரடு முரடான ஒரு கை தன்னை இழுத்து அப்பால் எறிவதை அவள் உணர்ந்தாள் - உணர்ந்து, கண் விழித்தபோது...

தன்னைக் கடந்து செல்லும் ரயிலை மட்டும் அவள் காணவில்லை; கால் ஒடிந்து கிடந்த ஒரு கிழவன் - அவனுக்குச் சற்று தூரத்தில் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்த ஒரு முழங்கால் துண்டையும் கண்டாள்!

''ஐயோ, தாத்தா! என்னாலா உங்களுக்கு இந்தக் கதி?''

ஓடிப் போய்க் கிழவனைப் பார்த்தாள் அவள் - பேச்சற்று விழுந்து கிடந்த அவனுக்கு மூச்சாவது இருக்கிறதா? - மூக்கருகே கையை வைத்துப் பார்த்தாள்; இருந்தது!

நல்ல வேளை! இறக்கவில்லை; என்னைக் காப்பாற்றிய குற்றத்துக்காகக் கிழவன் இறக்கவில்லை!

வேறு யாராகவாவது இருந்திருந்தால் இந்த அதிர்ச்சியில் செத்தே போயிருப்பார்கள்; ஏற்கெனவே செய்திருக்கும் பாவங்கள் போதாதென்று இந்தப் பாவம் வேறு வந்து தன்னைச் சேர்ந்திருக்கும் - கடவுளே! இந்த ஒரு விஷயத்திலாவது என்னைக் காப்பாற்றினாயே? - நன்றி; மிக்க நன்றி!

இனி, தான் செய்யவேண்டியதென்ன? இந்தக் கிழவனை இப்படியே விட்டுவிட்டு இன்னொரு ரயிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கலாமா, தன்னை மாய்த்துக் கொள்ள?

என்ன கேவலமான எண்ணம்? என்ன கீழ்த்தரமான உணர்ச்சி! - தனக்காக, தன்னைக் காப்பாற்றியக் குற்றத்துக்காக இங்கே ஓர் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது; இதை விட்டு விட்டுத் தானாவது, ஓடவாவது!

ஊஹூம் - ஓடமாட்டேன்; இந்தக் கிழவனின் உடம்பில் உயிருள்ளவரை இவனை விட்டு - என், இந்த உலகத்தை விட்டே நான் ஓடமாட்டேன்!

உடனடியாகத் தான் செய்ய வேண்டியதெல்லாம் இந்தக் கிழவனுக்கு முதல் சிகிச்சை அளிப்பதே! அதற்குப் பிறகு தான் மற்றவையெல்லாம் - ஆனால் எதைக் கொண்டு அதை அளிப்பது, எவரைக் கொண்டு அதைச் செய்வது?

ஆம், அவர் வருவார்; தான் அழைத்தால் அவசியம் அவர் வருவார்! - இங்கிருந்து பார்த்தால் அவ்வளவு தூரத்தில் கூட இல்லையே, அவருடைய வீடு? - நடந்தால் பத்து நிமிஷம்; ஓடினால் அதுகூட ஆகாது!

அதற்குமேல் அவள் அங்கே நிற்கவில்லை - ஓடினாள். தன் குடும்ப டாக்டரான தணிகாசலத்தின் வீட்டை நோக்கி.

அங்கே....

டெல்லியில் நடக்கும் ஏதோ ஒரு மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக அப்போதுதான் கிளம்பிக் கொண்டிருந்தார் டாக்டர்; அவரிடம் விஷயத்தைச் சொன்னாள் நறுமணம்.

''பாராட்டுகிறேன்! - இம்மாதிரி விஷயங்களில் பார்த்தும் பார்க்காதவர்கள் போல் போய்விடுவது சிலருடைய இயல்பு; போலீசுக்குப் 'போன்' செய்துவிட்டு, அத்துடன் தங்கள் கடமை தீர்ந்தது என்று அபாயத்துக் குள்ளானவனையும் தீர்த்துவிடுவது இன்னும் சிலருடைய இயல்பு - இந்த இரண்டு வகையிலும் சேராமல் நீங்கள் உடனே டாக்டரின் உதவியை நாடியதற்காக உங்களைப் பாராட்டுகிறேன்!'' என்று அவளைப் பாராட்டிவிட்டு டாக்டர் திரும்பினார்; கம்பவுண்டர் பெட்டி - படுக்கையுடன் அவருக்கு எதிரே வந்துகொண்டிருந்தான் - காரில் வைப்பதற்காக.

''இதோ பார். இதையும் எடுத்துக்கொண்டு போய்க் காரில் வை!'' என்று தம் தோல் பையைக் காட்டினார் டாக்டர்;''சரி, ஸார்!'' என்று அவன் தலையை ஆட்டிவிட்டுச் சென்றான்.

அடுத்த ஐந்தாவது நிமிஷத்தில் அவர்கள் மூவரும் கிழவனுக்கு அருகே இருந்தனர்; டாக்டர் தாம் செய்ய வேண்டிய சிகிச்சையைச் செய்துமுடித்துவிட்டு, ''கிங்காங், தாராசிங்கெல்லாம்கூட ஒன்றும் செய்ய முடியாது, இந்தக் கிழவரிடத்திலே; அவ்வளவு உடல் வலிமை இவருக்கு. இன்னும் பத்து அல்லது பதினைந்து நிமிஷங்களுக்குள் இவர் கண் திறந்துவிடுவார்; நினைவு தப்பாமல் பேசவும் ஆரம்பித்துவிடுவார் - நான் வரட்டுமா, எனக்கு வண்டியைப் பிடிக்க இன்னும் ஏழே நிமிஷங்கள்தான் பாக்கியிருக் கின்றன!'' என்றார் டாக்டர், தம் கைக்கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டே.

''என்னுடைய இதயப்பூர்வமான நன்றி உங்களுக்கு, இவர் மூர்ச்சை தெளிந்து எழுந்ததும் இவரைக் கொண்டு போய் ஆஸ்பத்திரியில் சேர்த்து விடட்டுமா?'' என்றாள் நறுமணம்.

''விரும்பினால் சேர்த்து விடுங்கள்; இல்லாவிட்டால் நானே வந்து பார்த்துக் கொள்கிறேன்!''

டாக்டர் போய்விட்டார்; மேலே என்ன செய்வதென்று தோன்றவில்லை, நறுமணத்துக்கு. எதற்கும் உடனே போய் ஒரு 'டாக்ஸி'யை அழைத்துக் கொண்டு வந்துவிடலாமா என்று நினைத்தாள் அதற்குள் இவர் கண்விழித்துக் கொண்டு விட்டால்? - என்னைக் காணாமல் என்ன நினைப்பார்?

''வேண்டாம் - டாக்டர்தான் இனி ஒரு கவலையுமில்லை என்று சொல்லிவிட்டாரே! - வேண்டாம். முதலில் இவர் கண் திறக்கட்டும்; அதற்குப் பின் என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்வோம்!''

இந்தத் தீர்மானத்துக்கு வந்ததும் அவள் அந்தக் கிழவனுக்கு அருகே அமர்ந்து, அவனுடைய கண்களையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் அந்தக் கிழவனின் கண் மட்டும் திறக்கவில்லை; மனமும் திறந்தது. ''காப்பாற்றி விட்டார்; கடவுள் உன்னைக் காப்பாற்றி விட்டார்!'' என்று சொல்லிக் கொண்டே எழுந்து உட்கார்ந்தான், நறுமணத்தின் உதவியுடன்.

''ஆமாம்; காப்பாற்றி விட்டார் - காலை ஒடித்துக் கொண்டு!'' என்றாள் நறுமணம்.

''அப்பா யார் என்று தெரியாதவர்கள்தான் அப்படியெல்லாம் சொல்வார்கள், அம்மா! நீ சொல்லக் கூடாது!'' என்றான் கிழவன்.

''அதிருக்கட்டும், தாத்தா! நீங்கள் இங்கேயே இருக்கிறீர்களா, நான் போய் டாக்ஸியை அழைத்துக் கொண்டு வந்து விடுகிறேன்!'' என்றாள் நறுமணம், அந்த நிலையிலும் அவன் பேசுவதை விரும்பாமல்.

''நான் இழந்தது ஒரே ஒரு சக்கரம்; அதற்காக நாலு சக்கரங்களையா துணைக்கு அழைத்துக் கொண்டு வரப் போகிறாய்?'' என்றான் கிழவன், அப்போதும் சிரித்துக் கொண்டே.

''ஏதேது? பொல்லாத கிழவராயிருப்பீர்கள் போலிருக்கிறதே, நீங்கள்!'' என்று சொல்லிக் கொண்டே, சிறகில்லாமல்கூடத் தன்னால் பறக்க முடியும் என்பதைக் காட்டினாள் நறுமணம்.

அவள் தலை மறைந்ததும் கிழவன் தன் காலைப் பார்த்தான். ''ஏதோ நடந்திருக்கிறது; எனக்குத் தெரியாமலே ஏதோ நடந்திருக்கிறது!'' என்று சொல்லிக் கொண்டே வானத்தைப் பார்த்தான். பார்த்து, ''போதும்; இன்னும் கொஞ்ச நாட்களே இருக்கப் போவதற்கு இந்த ஒரு காலே போதும் என்று கடவுள் நினைத்தார் போலிருக்கிறது - எடுத்துக் கொண்டு விட்டார்; ஒரு காலை எடுத்துக் கொண்டு விட்டார்!'' என்று முனகிக் கொண்டே, அருகிலிருந்த கம்பத்தைப் பற்றி அதற்குள் எழுந்து நிற்க முயன்றான்; முடியவில்லை - அப்படியே உட்கார்ந்து விட்டான்.

இனி தன்னால் வேலை செய்ய முடியுமா? - ஏன் முடியாது - கைகள் இரண்டும் அப்படியேதானே இருக்கின்றன? - முடியும்; தன்னால் எந்த வேலையும் செய்ய முடியும்!

கடவுளுக்குத்தான் என்ன கருணை, என்ன கருணை! ஒரு சாண் வயிற்றுக்காக அவர் இரண்டு கைகளை

யல்லவாக் கொடுத்திருக்கிறார்? - ஒரு கால் போனால் என்ன, ஓர் உயிர் பிழைப்பதற்கு?

கிழவன் மெல்ல நகர்ந்து போய்த் தனக்குச் சற்றுத் தூரத்தில் விழுந்து கிடந்த தன் முழங்கால் துண்டை எடுத்தான்.

என்ன அற்புதமான வேலைப்பாடு, என்ன அற்புதமான வேலைப்பாடு! - கிட்டத்தட்ட நாலடி இருக்கும் காலுக்கு ஓர் அடிகூட இல்லாத பாதம்; அந்தப் பாதத்தின் விளிம்பில் பெரிதும் சிறிதுமாக ஐந்தே ஐந்து விரல்கள் - அவ்வளவு தான்!

இந்த மனிதன் இருக்கிறானே, இவன் எதைச் செய்தாலும் நாலு கால்கள் வைத்துச் செய்கிறான்; எதை ஓட்டினாலும் நாலு சக்கரங்கள் வைத்து ஓட்டுகிறான் - தப்பித் தவறி இரண்டு சக்கரங்கள் வைத்து விட்டால், மாட்டையோ மனிதனையோ துணைக்கு அழைத்துக் கொண்டு விடுகிறான், ஓட்ட! - ஆனால் கடவுள்? - இரண்டே இரண்டு கால்களை வைத்து விட்டு மனிதனை நடக்க வைக்கிறார், ஓட வைக்கிறார், குதிக்க வைக்கிறார், தாண்டக்கூட வைக்கிறார்! - என்ன அற்புதமான வேலைப் பாடு, என்ன அற்புதமான வேலைப்பாடு!

கிழவன் கண்ணை மூடினான், அந்த அற்புதமான வேலைப்பாட்டுக்குரிய 'தொழிலாளி'யைப் பார்ப்பதற்காக! - ஆம். அப்படி ஒரு நம்பிக்கை அவனுக்கு!

அவனைப் பொறுத்தவரை இருளில் ஒளியாகவும் ஒளியில் இருளாகவும் இருக்கிறாரோ, அந்தத் தொழிலாளி?

இருக்கலாம்; யார் கண்டது? - அவன் காண்பதாகச் சொல்கிறான்; இல்லை; நீ காணவில்லை!' என்று சொல்ல நாம்தான் எண்ணத்தைக் கண்டோம்?

''என்ன தாத்தா, வலி பொறுக்க முடியவில்லையா?'' கண்ணை மூடிக்கொண்டு விட்டீர்களே!''

''எனக்கு ஏன் வலிக்கிறது? வலித்தால் கடவுளுக்குத் தான் வலிக்கும்!'' என்று சொல்லிக் கொண்டே கண்களைத் திறந்தான் கிழவன்; டாக்ஸி டிரைவருடன் அவனுக்கு எதிர்த்தாற்போல் நறுமணம் நின்று கொண்டிருந்தாள்.

''வந்துவிட்டாயா, அம்மா? வா வா, வீட்டுக்குப் போவோம்!''

''வீட்டுக்குப் போய் என்ன செய்வது, தாத்தா? ஆஸ்பத்திரிக்குப் போவோம், வாருங்கள்!''

''அங்கே போனால் பாதிக் கால் பாக்கியிருக்கிறதே, அதையும் எடுத்தாலும் எடுத்துவிடுவார்களே, அம்மா!''

''வீட்டுக்குப் போனால்?''

''கடவுளின் மருந்து இருக்கிறது; அதை வைத்துக் கட்டினால் நாலே நாட்களில் ஆறிப்போகும்!'' என்றான் கிழவன்.

''கடவுளின் மருந்தா! அது என்ன மருந்து, தாத்தா?'' என்றாள் நறுமணம், வியப்புடன்.

''பச்சிலை மூலிகை அம்மா, மனிதனின் கை படாதது!''

''சரி, வாருங்கள்!'' என்றாள் நறுமணம், 'அதையும் தான் பார்த்துவிடுவோமே?'' என்ற துணிவுடன்.

''அதோ இருக்கிறது பார், ஒரு சிறு மூட்டை - அதை எடுத்துக் கொண்டு வந்துவிடுகிறாயா?'' என்றான் கிழவன், 'ரயில்வே லை'னுக்கு அப்பால் விழுந்து கிடந்த ஒரு சிறு மூட்டையைச் சுட்டிக் காட்டி. நறுமணம் ஓடோடியும் சென்று அதை எடுத்துக் கொண்டு வந்தாள்.

டிரைவர் ஒரு பக்கமும் நறுமணம் இன்னொரு பக்கமாக நின்று, கிழவனைத் தூக்கி நிறுத்த முயன்றார்கள்; ''வேண்டாம்; யாராவது ஒருவர் இந்தப் பக்கம் வந்தால் போதும்!'' என்று கால் ஒடிந்த பக்கத்தைக் காட்டினான் கிழவன்.

நறுமணம் வந்து நின்றாள்; ''எடுத்துக் கொண்ட காலைக் கொடுத்து விட்டார்!'' கடவுள் எடுத்துக் கொண்ட காலைக் கொடுத்துவிட்டார்!'' என்று மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொண்டே, அவளுடைய தோள்களைப் பற்றிக் கிழவன் நடந்தான்.

ஒரு குடிசை - படிப்பதற்கென்றோ, பார்வையாளருக்கென்றோ, சமைப்பதற்கென்றோ, சாப்பிடுவதற்கென்றோ, ஓய்வெடுத்துக் கொள்வதற்கென்றோ, உடுப்பதற்கென்றோ தனித்தனி அறைகள், கூடங்கள், தோட்டங்கள் எதுவுமே கிடையாது அந்தக் குடிசையிலே! - வேறு என்ன தான் இருந்தது?

அந்தக் குடிசைக்குப் பின்புறத்திலே ஒரு கொல்லை; கொல்லைக்கு நடுவே ஒரு துரவு - அந்தத் துரவுக்கு அருகே வரிசை வரிசையாக வெண்டைச் செடிகள், கத்திரிச் செடிகள், தக்காளிச் செடிகள், கீரை வகைகள், மூலிகை வகைகள்- அவற்றுக்கு மேலே போடப்பட்டிருந்த மூங்கில் பந்தலின் ஒரு பக்கத்திலே அவரைக்கொடி; இன்னொரு பக்கத்திலே புடலைக்கொடி - அவற்றுக்கு இருமருங்கிலும் வாழை; அந்த வாழைக்குப் பின்னால் தென்னை - முன் புறத்தில் ஒரு பக்கம் கனகாம்பரம்; மஞ்சாரம்பரம், டிசம்பர், காட்டு ரோஜா முதலான பூஞ்செடிகள்; பின்புறத்தில் இரண்டு முருங்கை - அவற்றுக்கு நடுவே ஒரு பசு! - இவற்றைத் தவிர?

சுற்று முற்றும் பார்த்தாள் நறுமணம் - அந்தப் பேராசிரியரின் மாடமாளிகை எங்கே. இந்தக் கிழவனின்

மண்குடிசை எங்கே? அந்த வீட்டுக்கும் இந்த வீட்டுக்கும் தான் எத்தனை வகைகளில் வித்தியாசம்?

ஆனால்...

அந்தப் பெரிய பெரிய வீட்டிலே இல்லாத ஏதோ ஒன்று, இந்தச் சின்னச் சின்ன வீட்டிலே இருப்பது போலிருந்தது, அவளுக்கு.

சந்தர்ப்பத்துக்கு ஏற்றார்போல் அது வளரவில்லை; தேயவில்லை; வாழவில்லை; சாகவும் இல்லை. புத்துயிரெடுத்து, புது மணம் வீசி, புதுப் பொலிவு காட்டவுமில்லை; உலர்ந்து, கருகி, உதிர்ந்து, மறைந்து மண்ணோடு மண்ணாகிப் போய்விடவும் இல்லை!

எப்பொழுதும் ஒரே நிலையில், ஒரே அளவில் அது இருப்பதுபோலிருந்தது; வாழ்வது போலிருந்தது - உதட்டை உறைவிடமாகக் கொள்ளாமல், உள்ளத்தை மட்டுமே உறைவிடமாகக் கொண்டு!

ஆனால்...

அதன் பெயர் என்னவென்றும் அவனுக்குத் தெரியவில்லை; அதன் பொருள் என்ன வென்றும் அவனுக்குப் புரியவில்லை - தெரியாவிட்டால் என்ன, புரியாவிட்டால் என்ன? - அதுவே அவனாகவும், அவனே அதுவாகவும் இருக்கும்போது?

வந்த ஒரு மணி நேரத்துக்கெல்லாம் இவையனைத் தையும் தெரிந்துகொண்டுவிட்ட நறுமணம் வானத்தை நோக்கினாள்; நோக்கி...

ஓ, அன்பே! என் அன்புள்ள அன்பே!! மனிதர்கள் தான் உருவத்தில் ஒருவராக இருந்தாலும் உள்ளத்திலே இருவராக இருக்கிறார்களென்றால், நீயுமா சொல்லில் ஒற்றையாயிருந்து செயலில் இரட்டையாக இருக்கிறாய்?

மண் குடிசையிலே ஒரு விதமாகவும், மாட மாளிகையிலே இன்னொரு விதமாகவும் இயங்க உன்னால் எப்படி முடிகிறது, அன்பே?

'ஏன் முடியாது. மனிதர்களுடன்தானே நானும் பழகுகிறேன்!'' என்கிறாயா? - சரி; ரொம்ப சரி!

ஆனால்...

மிருகங்களுடன் பழகும்போது ஒற்றையான நீ ஒற்றையாகத்தானே இருக்கிறாய்? அங்கு மட்டும் அப்படி இயங்க உன்னால் எப்படி முடிகிறது?

'அவை படிக்கவில்லை; படித்து, அறிவை வளர்த்துக் கொள்கிறோம் என்று ஆசையை வளர்த்துக் கொள்ள வில்லை!' என்கிறாயா? அதுவும் சரி; என்னுடைய அனுபவத்தைப் பொறுத்த வரை அதுவும் ரொம்ப ரொம்பச் சரி!

இந்தச் சமயத்தில் தனக்கென்று ஓர் ஊன்று கோலைத் தானே செய்து கொள்வதில் முனைந்திருந்த கிழவன், ''வயிற்றைப் பார்க்காமல் வானத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறாயே, அம்மா! எப்பொழுது சாப்பிட்டதோ, என்னமோ? உள்ளே போய் அந்த மூட்டையையாவது எடுத்துக் கொண்டு வாயேன்; அதில் பொரிவிளாங்காய் உருண்டை, பொரித்த அவல், நிலக்கடலை, பனைவெட்டு எல்லாம் இருக்கின்றன. உனக்கு எது பிடிக்குமோ, அதைச் சாப்பிட்டுக் கொண்டிரு; அதற்குள் சோறாக்கி விடுவாள், உன் தங்கச்சி!'' என்றான், 'அன்னையினும் பரிவுடையோ'னாக.

இதைக் கேட்டதும் பேராசிரியருடன் பழகிய நாட்களில் அவள் கண்ட சில காட்சிகள் அவளுடைய கவனத்துக்கு வந்தன;

ஒரு நாள் இரவு - தெருவிலே ஒரு வழிப்பறித் திருடனின் தாக்குதலுக்குள்ளான ஒருவன், 'ஐயோ, என்னைக் காப்பாற்றுவார் இந்தத் தெருவில் யாருமே இல்லையா?' என்று தீனக்குரல் எழுப்பினான்; 'ஓடுங்கள்; அவனைக் காப்பாற்றுங்கள்!' என்றாள் அவள்; 'வருந்துகிறேன், கடவுள் அவனைக் காப்பாற்றட்டும்!' என்றார் அவர்!

இன்னொரு நாள் - அபலை ஒருத்தி வந்தாள்; ஆணழகன் ஒருவனால் காதலிக்கப்பட்டுக் கைவிடப்பட்டு விட்ட தன் கதையை ஆங்கிலத்தில் சொன்னாள் - படித்தவளுக்கு முன்னால் தானும் படித்தவர் என்பதைக் காட்டிக் கொள்வதற்காகவோ, என்னவோ? - 'வருந்துகிறேன்!' என்றார். அவர், வழக்கம்போல் - தமிழில், தமிழ் பற்றைக்காட்டிக் கொள்வதற்காக. 'நன்றி! ஒருவேளை உணவும், உடுமலைப்பேட்டைக்குச் செல்ல ஒரு டிக்கெட்டும் எடுத்துக் கொடுத்தால், வாழ்க்கையில் மேலும் வழுக்கி விழுந்து விடாமல் நான் ஊருக்குப் போய்ச் சேர்ந்துவிடுவேன்; உதவ முடியுமா உங்களால்?' என்றாள் அவள். மறுபடியும் ஆங்கிலத்தில். 'வருந்துகிறேன்! தனிப்பட்டவர்களால் ஆவது ஒன்றுமில்லை; அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும்!' என்றார் அவர். மறுபடியும் தமிழில்! - 'வருந்துகிறேன், உங்களை வருந்த வைத்ததற்காக!' என்று சொல்வதைத் தவிர வேறு வழியில்லாமல் போய்விட்டது அவளுக்கு! - நறுமணம் என்ன செய்வாள் பாவம், நாலைந்து தலைமுறைகளுக்குக் காணும் அளவுக்கு சொத்துரிமையுள்ள பேராசிரியரே 'வருந்துவதோடு நிற்கும்போது? - ஆயினும், தன்னைப் போன்ற ஒரு பெண் சில ரூபாய்களுக்காக இன்னொரு முறை வழுக்கி விழுவதை அவள் விரும்பவில்லை. எனவே தன்னுடைய அண்ணன், வீட்டுச் செலவுக்காகத் தன்னிடம் கொடுத்து வைத்திருந்த பதினைந்துரூபாயை

எடுத்து அவளிடம் கொடுத்து, 'இவ்வளவுதான் என்னால் முடிந்தது; போதுமா உங்களுக்கு?' என்றாள் தயக்கத்துடன். கண்களில் நீர் மல்க நறுமணத்தின் கைகள் இரண்டையும் சேர்த்துப் பிடித்துக் குலுக்கி, 'போதும்; தாராளமாகப் போதும். மிக்க நன்றி உங்களுக்கு; ஊருக்குப் போனதும் அவசியம் திருப்பி அனுப்பி விடுகிறேன்!' என்று சொல்லிவிட்டுப் போனாள் அவள்.

அவளுடைய தலை மறைந்ததும், 'தவறு செய்கிறாய் நறுமணம், நீ தவறு செய்கிறாய்!' என்றார் பேராசிரியர். 'மன்னியுங்கள்; மனிதப்பற்றைக் காட்டிக்கொள்ளும் வகையில் இம்முறை என்ன, இன்னும் எத்தனை முறை வேண்டுமானாலும் தவறு செய்ய நான் தயாராயிருக்கிறேன்!' என்றாள் அவள் - மொழிப் பற்றில் லாபமும், மனிதப் பற்றில் நஷ்டமும் இருக்கும் ரகசியத்தை அறியாமல்!

வாழ்க்கையையே 'வரவு - செலவு கணக்'காக வைத்துக் கொண்டிருக்கும் இத்தகைய 'கனவான்க'ளிடம் அவள் என்னத்தைக் கண்டாள்? - பேச்சு, பேச்சு, பேச்சு; எடுத்ததற் கெல்லாம் பேச்சு, பேச்சு, பேச்சு! - பழி, பழி, பழி; எடுத்ததற்கெல்லாம் பிறர் மேல் பழி, பழி, பழி! - படித்தவர்களிடம் இதைத்தவிர வேறொன்றையும் காணாத நறுமணத்தைப் படிக்காத கிழவனின் பரிவும் கனிவும் என்னவோ செய்தன. அத்துடன், அவள் அப்போது இருந்த நிலை, நேரம், அந்தக் குடிசையிலே அவள் கண்ட அமைதி, அன்பென்னும் பெயரைக்கூட அறியாத அன்பு - ஆக எல்லாம் சேர்ந்து அவளுடைய நெஞ்சை நெகிழ வைத்த தோடு, கண்களையும் குளமாக்கிவிட்டன. ''தாத்தா!'' என்ற கரகரத்த குரலோடு திரும்பினாள்; திரும்பி, கிழவனின் ஒடிந்த காலில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு, ''உங்களுடைய வேதனை உங்களுக்குப் பெரிதில்லையா, தாத்தா? என்னுடைய

வேதனைதானா உங்களுக்குப் பெரிது?'' என்று விம்மினாள்; விம்மி, ''என்னுடைய வேதனையாவது பசி வேதனை; உங்களுடைய வேதனை அதைவிடப் பெரிய வேதனையாச்சே, தாத்தா!'' என்று வெடித்துக் கதறினாள்!

கிழவன் சிரித்தான்; சிரித்து, ''நான்தான் அப்போதே சொல்லிவிட்டேனே, அம்மா! - 'வலித்தால் கடவுளுக்குத் தான் வலிக்கும் என்று!' இப்போதும் அதைத்தான் சொல்கிறேன், 'வேதனையிருந்தால் கடவுளுக்குத்தான் வேதனையாயிருக்கும்!' - நீ எழுந்து போ; போய் அந்த மூட்டையை எடுத்துக்கொண்டு வா!'' என்றான் அவளுடையத் தலையைக் கோதி விட்டபடி.

அதே சமயத்தில் 'அரிக்கேன் லாந்'தரைக் கையில் பிடித்த வண்ணம் 'தங்கச்சி' வெளியே வந்து, ''அக்கா, இங்கே பார் அக்கா!'' என்றாள், குறுநகையுடன்.

தலையைத் தூக்கிப் பார்த்தாள் நறுமணம்.

தன் கையிலிருந்த சுண்ணாம்புக் கட்டியைக் கொண்டு, 'சாப்பாடு தயார்!' என்று அவள் சுவரில் எழுதிக் காட்டி விட்டுச் சிரித்தாள்.

''ஏன் தாத்தா, நீங்கள் படிக்கவில்லையென்றாலும் தாழம்பூவைப் படிக்க வைத்திருக்கிறீர்கள் போலிருக்கிறதே?'' என்றாள் நறுமணம், வியப்புடன்.

''அந்தக் குற்றத்தை நான் செய்யவில்லை, அம்மா! செய்தவன் அவளுடைய அத்தான்!''

''அத்தான் வேறு இருக்கிறாரா, தாழம்பூவுக்கு?''

''இருக்கிறார், இருக்கிறார்!''

''என்ன வேலை அவருக்கு?''

''வேலையா, இப்பொழுது ஒன்றுமில்லை; ஏதோ திராவிட நாடாமே, அது கிடைத்தால்தான் அவருக்கு வேலை கிடைக்குமாம்!''

''அதுவரை தின்னச் சோறு?''

''திராவிட நாடு கிடைத்தால்தானாம்!''

''கட்டத் துணி?''

''அதற்கும் திராவிட நாட்டைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்!''

''இருக்க இடம்?''

''திராவிட நாடு கிடைக்கும்வரை எங்கே கிடைக்கிறதோ, அங்கே!''

''அப்படியானால் இப்போது...''

''எப்படி உயிர் வாழ்கிறார் என்று கேட்கிறாயா? அவருடைய கைகள் செய்ய வேண்டிய வேலையையும் சேர்த்து இந்தக் கைகளே செய்கின்றன; அதனால் அவரைப் பொறுத்தவரை திராவிட நாட்டுக்கு அப்படியொன்றும் அவசரமில்லை!'' என்று தன்னுடையக் கைகளை நீட்டிக் காட்டினான் கிழவன்.

''இங்கே நான் வந்ததிலிருந்து அவரைப் பார்க்கவேயில்லை?''

''இருந்தால்தானே பார்ப்பதற்கு?''

''எங்கே போயிருக்கிறாராம்?''

''யாருக்குத் தெரியும், எங்கேயாவது 'அறிவுப் பிரசாரம்' செய்யப் போயிருப்பார்!''

''அறிவுப் பிரசாரமா! அந்தப் பிரசாரத்தையெல்லாம் நீங்கள் கேட்பதில்லையா?''

''எனக்கு அறிவில்லை என்று நான் நினைக்க வில்லையே அம்மா!''

''அப்படியானால் அறிவில்லாதவர்கள் தான் அவருடைய பேச்சைக் கேட்கிறார்களா, என்ன?'' என்றாள் தாழம்பூ, குறுக்கிட்டு.

''கேட்கமாட்டாயா? - கேட்பாய், கேட்பாய்! - அதற்குத்தானே 'எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்கிறேன்' என்று உனக்கிருந்த 'இயற்கையான அறி'வைப் போக்கி விட்டுச் 'செயற்கையான அறி'வைப் பலவந்தமாகத் திணித்திருக்கிறார் உன் அத்தான்! - போலி கடைச் சரக்கில் தான் போலி; என்றால் கல்வியால் மனிதன் பெற்ற அறிவிலும் போலி! அதனால் தான் வாழ்க்கையே போலி யாகிவிட்டது இன்று! எல்லாம் கடவுள் கொடுத்த இயற்கையான அறிவே உண்மையான அறிவு என்பதை நாம் உணராததால் வந்த வினை!'' என்றான் கிழவன், தலையில் லேசாகத் தட்டிக்கொண்டே.

இதைக் கேட்டதும் வியப்பினால் நறுமணத்தின் கண்கள் விரிந்தன. 'காலம் போகிற போக்கைப் பார்த்தால் அவ்வளவு எளிதில் தள்ளிவிட முடியாது போலிருக்கிறதே, இந்தப் பெரியவரின் கருத்தை!' என்று நினைத்த அவள், ''ஏன் தாத்தா, உண்மையாகவே நீங்கள் படிக்கவில்லை யென்றா சொல்கிறீர்கள்?'' என்றாள் கொஞ்சம் அவநம்பிக்கையுடனே.

''உண்மையைத் தவிர நான் வேறொன்றும் சொல்வதில்லை, அம்மா!'' என்றான் கிழவன்,அழுத்தந் திருத்தமாக.

''படித்தவர்களெல்லாம் புத்திசாலிகளாக இருந்து விடுவதுமில்லை; படிக்காதவர்களெல்லாம் மடையர் களாக இருந்து விடுவதுமில்லை!'' என்றாள் தாழம்பூ.

''தேவலையே, இயற்கையான அறிவில்கூட இன்னும் கொஞ்சம் மிச்சம் வைத்திருக்கிறார் போலிருக்கிறதே, உன் அத்தான்!'' என்றான் கிழவன், குறுநகையுடன்.

''போ, தாத்தா!'' என்றாள் அவள், தலையைக் கவிழ்த்துக்கொண்டு.

''சரி வாருங்கள்; சாப்பிடப் போவோம்!'' என்று கிழவன் எழுந்தான் - அதற்குள் தயார் செய்துக் கொண்டு விட்ட ஊன்றுகோலைத் தரையில் ஊன்றி.

''தெய்வம் இருக்கிறது; இங்கே தெய்வம் இருக்கத்தான் இருக்கிறது!'' என்று தனக்குள் நினைத்துக்கொண்டே அவனைத் தொடர்ந்தாள் நறுமணம்.

பேய்க்குப் பயந்து ஓடி வந்த பேராசிரியர்கள் இருவரும் சேத்துப்பட்டுக்கும் நுங்கம்பாக்கத்துக்கும் இடையே உள்ள 'ரயில்வே லைன்' ஓரமாக 'டார்ச் லைட்'டை அடித்து அடித்துப் பார்த்துக் கொண்டே வந்தார்கள். ''என்ன பார்க்கிறீர்கள்?'' என்று வழிப் போக்கர்களில் ஓரிருவர் கேட்டதற்கு. ''மணிபர்ஸ் தவறிக் கீழே விழுந்து விட்டது; அதைத்தான் பார்க்கிறோம்!'' என்று 'மெய்' சொன்னார்கள் - பேராசிரியர்களல்லவா?

கூவம் பாலத்தை கடந்து கொஞ்ச தூரம் சென்றதும், ''இதோ கிடைத்து விட்டது, கடிதம்!'' என்று கூச்சலிட்டான் ராமமூர்த்தி.

''எங்கே, எங்கே?'' என்று அவனை நோக்கி விரைந்து வந்தார் டாக்டர் நெடுமாறன்.

அதற்குள் கடிதத்தைப் படித்து முடித்துவிட்ட ராமமூர்த்தி, ''தெய்வம். என் தெய்வம்!'' என்று தன்னை மறந்து கத்தினான்.!

''தெய்வ நம்பிக்கை இருப்பவர்களுக்கு இருக்கட்டும்; நமக்கு வேண்டாம் அது. நீ கடிதத்தைக் கொடு இப்படி!'' என்று கடுகடுத்துக்கொண்டே நெடுமாறன் கையை நீட்டினார்.

அதைப் பொருட்படுத்தாமல், ஐயமில்லை; நம்மைவிட 'அவர்கள்' உயர்ந்தவர்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை!'' என்று மேலும் கத்தினான் ராமமூர்த்தி.

''என்னப்பா, இது? 'அவர்கள், இவர்கள்' என்று அவளைப் பன்மையில் சுட்டிப் பேசத் தொடங்கி விட்டாய்! அப்படி என்ன கண்டுவிட்டாய், அந்தக் கடிதத்தில்? கொடு, இப்படி!'' என்று 'தம்பி'க்குப் பதிலாக 'அப்பா'வைப் போட்டுக் கடாவினார், டாக்டர்.

அதையும் பொருட்படுத்தாமல், ''உய்வில்லை; எவரா யிருப்பினும் தகுதி அறிந்து போற்றக் கற்றுக் கொள்ளும் வரையில் இந்தத் தமிழ் நாட்டுக்கு உய்வேயில்லை!'' என்று மேலும் மேலும் கத்தினான் ராமமூர்த்தி.

'இது என்னக் கூற்று! இவனும் நம்மோடு சேர்ந்து, தமிழ் நாட்டைத் தட்டித் தூங்க வைப்பான் என்று பார்த்தால், இவன் அதைத் தட்டி எழுப்புவதற்குப் பதிலாகக்கத்தியே எழுப்பி விடுவான் போலிருக்கிறதே?' என்று நினைத்த டாக்டர் நெடுமாறன், தமக்குள் எழுந்த 'சினமெனும் தீ'யைத் தமக்கே உரித்தான 'ஐஸ்-கிரீம் சிரிப்'பால் அணைத்து, ''தம்பி!'' என்று அவன் தோளைப் பற்றினார்.

அவ்வளவுதான்; ''பாவிகள் டாக்டர், அந்தத் தெய்வத்துக்கு முன்னால் நாமெல்லாம் பாவிகள் டாக்டர்!'' என்று கதறிக்கொண்டே அவருடைய மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விட்டான் அவன்!

டாக்டர் வாய்விட்டுச் சிரித்தார்; ''பக்குவமடையாத தம்பி, என் தம்பி பக்குவமடை யாத தம்பி!'' என்று சொல்லிக்கொண்டே அவனைக் கட்டிப் பிடித்து, அவன் முதுகைத் தடவிக் கொடுத்தார்.

''பக்குவமடைந்தவரைப் போதும்; இந்தாருங்கள் கடிதம், நான் வருகிறேன்''! என்று அவருடைய பிடியிலிருந்து விலகி, தன் கையிலிருந்த கடிதத்தை அவருக்கு முன்னால் விட்டெறிந்துவிட்டு, அவன் திரும்பினான்.

''அமைதி, அமைதி!'' என்று கையமர்த்திக் கொண்டே கடிதத்தைக் குனிந்து எடுத்தார் டாக்டர்.

'அமைதி சுடுகாட்டிலல்லவா நிலவ வேண்டும்?' என்று தனக்குள் முணுமுணுத்துக்கொண்டே நின்றான் ராமமூர்த்தி.

'டார்ச் லைட்'டின் உதவியுடன் பேராசிரியர் கடிதத்தைப் படித்தார்.

போலீஸாருக்கு:

என்னுடைய தற்கொலைக்கு நானேதான் காரணம், வேறு யாரும் அல்ல.

தயவு செய்து என் பிரேதத்தை எந்தவிதமான சோதனைக்கும் உள்ளாக்காமல், என் பாட்டியிடம் ஒப்படைத்து விடுங்கள்.

இப்படிக்கு;
நறுமணம்.

படித்து முடித்ததும் கடிதத்தை மடித்துச் சட்டைப் பைக்குள் வைத்தார் பேராசிரியர். ''சிரிக்கவில்லையா, அந்தக் கடிதம் நம்முடைய சின்னத்தனத்தைப் பார்த்துச் சிரிக்கவில்லையா?'' என்று கேட்டான் ராமமூர்த்தி.

''சின்னத்தனமா!''

''இல்லாமல் என்னவாம்? - கடற்கரையில் நீங்கள் பெருந்தனத்துடன் கூறினீர்களே, 'கடிதத்தில் ஒருவேளை நாம் காட்டிக் கொடுக்கப்பட்டிருக்கலாம்' என்று?''

''எதற்கும் முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்பதற்காக நான் அவ்வாறு சொன்னேன்; அது தவறா?''

''அது தவறாயில்லாமலிருக்கலாம். ஆனால், நல்லவர்களைப் பற்றி நீங்கள் தவறாகச் சிந்திப்பது தவறு என்கிறேன் நான்!''

''நல்லவர்கள், நல்லவர்கள், நல்லவர்கள்!- நல்லவர் களாயிருப்பதை விட வல்லவர்களாயிருப்பது தான் வாழ்வாங்கு வாழ வழி, தம்பி!''

''எது வல்லது, இந்த ஈனத்தனமா வல்லது? - இல்லை; இல்லவேயில்லை - செய்த தவறைத் தைரியமுடன் ஏற்றுக் கொண்டு செயலாற்றுவதே வல்லது!''

''இருக்கலாம், எழுத்திலும் பேச்சிலும்!''

''உண்மை; முற்றிலும் உண்மை! - 'இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர் நாண நன்னயஞ் செய்து விடல்' என்ற குறட்பாவுக்கு நம்மால் விளக்கம் தரத்தான் முடிகிறது; விரிவுரை நிகழ்த்தத்தான் முடிகிறது - அதன்படி நேற்று வாழ்ந்துகாட்ட, இன்று இறந்து காட்ட - அதோ, உங்கள் சட்டைப் பைக்குள் இருக்கிறதே ஒரு கடிதம் - அந்தக் கடிதத்துக்குரிய தெய்வத்தால்தான் முடிந்திருக்கிறது!''

''இல்லை; அவள் இன்னும் இறந்து காட்டவில்லை - அதற்குள் நீ அவளைக் கோயில் கட்டிக் கும்பிடத்

தொடங்கி விடாதே!'' என்றார் டாக்டர், இங்குமங்கும் பார்த்துக் கொண்டே.

''இன்னுமா ஐயப்பாடு, உங்களுக்கு? இதோ பாருங்கள். அந்தத் தெய்வத்தின் குருதி!'' என்று ரத்தம் சிந்தியிருந்த ஓர் இடத்தைத் தன் கையால் தொட்டுக் காட்டினான் ராமமூர்த்தி.

''இருக்காது; இந்தக் குருதி அவளுடையக் குருதியாயிருக்காது - இதற்குள் போலீஸார் வந்து அவளுடைய சவத்தைக் கைப்பற்றியிருக்க முடியுமா, என்ன?''

''அவர்கள் கைப்பற்றுவதற்கு அந்தத் தெய்வத்தின் ஓர் எலும்புகூடக் கிடைக்காமற் போய்விட்டதோ, என்னமோ?''

''நான் நம்பவில்லை; அந்த அளவுக்கு அவள் உடல் முழுவதும் நசுங்கியிருக்கும் என்பதை நான் நம்பவில்லை!''

''எதைத்தான் நம்புகிறீர்கள், இதை நம்ப?'' - முகத்தைத் திருப்பிக்கொண்டான் ராமமூர்த்தி.

''தம்பி, தற்போது நீ உணர்ச்சியின் உச்சக் கட்டத்திலிருக்கிறாய்! இந்த நிலையில் நாம் இருவரும் மேலும் மேலும் பேசிக் கொண்டிருப்பது உனக்கும் நல்லதன்று; எனக்கும் நல்லதன்று. இத்துடன் இன்று நாம் பிரிந்து விடுவோம்; நாளை மறுபடியும் சந்திப்போம்!'' என்று அவன் முதுகில் மீண்டும் தட்டிக் கொடுத்தார் குருநாதர், தன் முதுகில் எங்கே அவன் தட்டிக் கொடுத்துவிடப் போகிறானோ என்ற அச்சத்தில்!

''வணக்கம்!'' என்று இடையே வந்த 'க்'கன்னாவுக்குக் கொஞ்சம் கூடுதலாகவே அழுத்தம் கொடுத்துவிட்டு, நடையைக் கட்டினான் சீடன்!

❖ ❖ ❖

5. இப்படியும் ஓர் இயற்கையின் செல்வன்

''ஒரு வீட்டை வெளிச்சமாக்க எத்தனையோ விளக்குகள், ஒரு தெருவை வெளிச்சமாக்க எத்தனை எத்தனையோ விளக்குகள், ஓர் ஊரை வெளிச்சமாக்க எத்தனை எத்தனை எத்தனையோ விளக்குகள்! - ஆனால் கடவுள்? - ஒரே ஒரு விளக்கைக் கொண்டு இந்த உலகத்தையே வெளிச்சமாக்கி விடுகிறார்!'' என்றான் கிழவன், வானத்தில் பவனி வரும் வளர்மதியை நோக்கி வியந்தவனாய்.

எதிலும் கடவுளைக் காணும் அவனுடைய இயல்பு நறுமணத்துக்குப் புதிதாக மட்டும் இருக்கவில்லை; புத்துணர்ச்சி அளிப்பதாகவும் இருந்தது. 'இவரைப்போலவே தானும் எதிலும் கடவுளைக் காண ஆரம்பித்துவிட்டால் எந்தக் கவலையும் தன்னைப் பாதிக்காது போலிருக் கிறதே?' என்று அவள் நினைத்தாள். ஆனால் அதற்குரியப் பக்குவம் தனக்கு உண்டா? அவரைப் போலவே தானும் எதிலும் கடவுளைக் காண்பது சாத்தியமா?. அப்படியேக் கண்டாலும் அதனால் தன் மனப் புண்ணை ஆற்றிக் கொண்டு விட முடியுமா? - ஏன் முடியாது? - புராண இதிகாசங்களிலே அதற்கு எத்தனை எத்தனையோ ஆதாரங்கள் இருக்கின்றனவே! - அவற்றில் காணும் சில காட்சிகள் கருத்துக்கு ஒவ்வாத தாயிருக்கலாம். காலத்துக்கு ஒவ்வாததாயிருக்கலாம். ஆனால் வருடம், மாதம், தேதி இல்லை என்ற ஒரே காரணத்துக்காக அவை வரலாறு இல்லை என்று தள்ளிவிட முடியுமா? ஒன்றில்லாமல் 'ஒன்று பிறப்பதில்லை' என்பது உண்மையானால், அவற்றில் காணும் அந்த 'ஒன்று' ஏன் வரலாறா யிருக்கக்கூடாது? - பார்க்கப் போனால் எதில்தான் பொய் இல்லை? - வருடம், மாதம், தேதியிட்ட வரலாறுகளில்

கூடத்தான் 'அங்கிங்கெனாதபடி' பொய் நிறைந்திருக்கிறது. இதில் கட்சிப் பொய், அரசியல் பொய் என்றால், அதில் மதப்பொய், சமயப் பொய்! - வித்தியாசம் அவ்வளவுதானே?

தாழம்பூ கொண்டு வந்து வைத்த வெற்றிலைத் தட்டைக் கூடக் கவனிக்காமல் ஏதோ யோசனையில் ஆழ்ந்துவிட்ட நறுமணத்தை நோக்கி, "என்ன அம்மா! யோசனையில் ஆழ்ந்துவிட்டாய்?" என்றான் கிழவன்.

"ஒன்றுமில்லை; எதிலும் கடவுளைக் காணும் உங்களுடைய இயல்பை எண்ணிப் பார்த்தேன்!"

"உனக்குக் கடவுள் நம்பிக்கை உண்டா?"

"உண்டு; ஆனால்..."

"ஆனால் என்ன, அம்மா?"

"நன்றாயிருக்கும்போது கடவுளை நினைக்க மாட்டேன்; கெட்டுவிட்டால் நினைப்பேன்; நிந்திப்பேன்!" என்றாள் அவள், வெட்கத்துடன்.

கிழவன் சிரித்தான்; சிரித்து, "அப்போதெல்லாம் கடவுள் என்ன செய்வார், தெரியுமா? - சிரிப்பார்; என்னைப் போலத்தான் சிரிப்பார்! - எப்படி? - தன்னுடைய குழந்தையின் அசட்டுத்தனத்தைக் கண்டு, அதன் தாயார் சிரிப்பது போல!" என்றான்.

தன்னை வைத்துக் கடவுளைப் பார்க்கும் அந்தக் கிழவனின் தன்மையைக் கண்டபோது, "தன்னை அறிந்தவன் கடவுளை அறிந்தவனாவான்!' என்று தான் எங்கோ படித்தது நறுமணத்தின் நினைவுக்கு வந்தது. தான் படித்துத் தெரிந்து கொண்ட விஷயத்தை இவர் எப்படிப் படிக்காமல் தெரிந்து கொண்டார்? ஒரு வேளை கேள்வி ஞானமாயிருக்குமோ?

''என் தாத்தா, நீங்கள் சத் கதா காலட்சேபங்களுக்குப் போவதுண்டா?''

''இல்லை அம்மா. எனக்கு அவையெல்லாம் பிடிப்பதில்லை!''

''ஏன், தாத்தா?''

''ஐயோ, கடவுளையே 'மூலதன' மாக வைத்தல்லவா அவர்கள் தங்களுடைய 'வியாபார'த்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்? - பாவம் அம்மா, மகா பாவம்! - அது மட்டுமா? - லட்சார்ச்சனையாம், கோடி அர்ச்சனையாம்! - இதற்கெல்லாம் என்னம்மா அர்த்தம்? - 'காக்கையாரே, காக்கை யாரே! நீர் இவ்வளவு அழகாயிருக்கிறீரே? உம்முடைய அழகான வாயைத் திறந்து, ஓர் அருமையான பாட்டுப் பாடுமே' என்று நரி கேட்ட கதையாக இல்லையா, இது? - மோசம் அம்மா, மோசம்! கடவுளை மனிதன் இவ்வளவு கேவலமாக மதிப்பது மகா மோசம்!'' என்றான் கிழவன், தன் வாயைத் தானே பொத்திக் கொண்டு.

''கதா காலட்சேபத்திற்குத்தான் போவதில்லை; கோயிலுக்காவது போவதுண்டா, நீங்கள்?'' என்றாள் நறுமணம், சிரித்துக்கொண்டே.

''எனக்குள்ளே கடவுள் இருக்கும்போது நான் ஏன் அம்மா, அங்கெல்லாம் போகவேண்டும்?'' என்றான் கிழவன்.

வேடிக்கையானவர்தான், நீங்கள்!'' என்றாள் நறுமணம்.

''இது என்ன வேடிக்கை அக்கா, இன்னும் எத்தனையோ வேடிக்கைகள் உண்டு இங்கே!'' என்றாள் தாழம்பூ; குறுக்கிட்டு.

இந்தச் சமயத்தில் யாரோ கனைக்கும் சத்தம் கேட்கவே மூவரும் சத்தம் வந்த திசையை நோக்கித் திரும்பினார்கள். கையில் 'சீர்திருத்தவாதி' என்ற பத்திரிக்கையுடன் 'கட்டிளங்காளை' யொன்று வந்துக் கொண்டிருந்தது. அதைக் கண்டதும், ''இதோ வருகிறதே, இன்னொரு வேடிக்கை!'' என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள் தாழம்பூ.

அவ்வளவுதான்; ''அறைகிறேன் பார்!'' என்று பாய்ந்து வந்தது அந்தக் காளை.

அது ஓங்கிய கைக்குள் தாழம்பூ புகுந்து ஓடவே விழுந்தது காளை; எழுந்தது, சட்டையில் படிந்த மண்ணைத் 'தட்டுத் தட்'டென்று தட்டி விட்டுக் கொண்டு!

''வரும்போதே வெற்றி வாகை சூடிக்கொண்டு வருகிறாரே, அந்த வாகை சூடிய வீரர்தான்அவளுடைய அத்தான்!'' என்று அந்தக் காளையை நறுமணத்துக்கு அறிமுகப்படுத்தி வைத்தான் கிழவன்.

''வணக்கம்!'' என்று கை கூப்பிவிட்டு, அங்கிருந்த கயிற்றுக் கட்டிலின் மேல் உட்கார்ந்தது காளை.

''வெற்றி இவருக்கல்ல; அவளுக்குத்தான்!'' என்றாள் நறுமணம்.

''என்ன இருந்தாலும் அவள் ஓடிவிட்டாளல்லவா?'' என்றான் கிழவன்.

''அவளைத் துரத்திப் பிடிக்க முடியாமல்தானே இவர் உட்கார்ந்துவிட்டார்!'' என்றாள் நறுமணம்.

''பெண்களின் மென்மை தெரிந்தவன் நான்; அவர்களிடம் வெற்றி அடைவதைவிடத் தோல்வி அடைவதையே நான் பெரிதும் விரும்புகிறேன் - ஏனெனில், அந்தத் தோல்வியில்தானே என்னைப்

போன்றவர்களுக்கு மகிழ்ச்சி தோய்ந்து கிடக்கிறது!'' என்றது கட்டிளங்காளை.

''எப்படி, தறுதலையின் ஆராய்ச்சி?'' என்றான் கிழவன்.

''தறுதலையா!'' என்று வாயைப் பிளந்தாள் நறுமணம்.

''ஓ, இவருடைய பெயரை நான் இன்னும் உனக்குச் சொல்லவில்லையா? - அதுதான் அம்மா, இவருடைய பெயர் - 'ஆறுமுகம்' என்று பெற்றோர் இட்டபெயர், ஆண்டவன் பெயராயிருப்பதால், 'தறுதலை' என்று மாற்றி வைத்துக்கொண்டு விட்டாராம்!''

''தறுதலை, தகப்பன் சாமி என்பதெல்லாம் கூட ஆறுமுகக் கடவுளின் பெயர்கள்தானே?''

''அது தெரியாது போலிருக்கிறது இவருக்கு!'' என்றான் கிழவன்.

''தெரியாமலென்ன, எதிலுமே புதுமை விரும்புபவன் நான்; பெயரிலும் ஏதாவது புதுமை இருக்கட்டுமே என்பதற்காக அப்படி வைத்துக்கொண்டேன்!'' என்று அவன் சமாளித்தான்.

''எதிலுமே புதுமை விரும்புபவன் நான்!'' என்று சொன்னபோது, அவன் தன்னைப் பார்த்த பார்வை என்னவோபோலிருந்தது நறுமணத்துக்கு. எனவே, ''எதில் வேண்டுமானாலும் புதுமையைத் தேடுங்கள்; தயவு செய்து பெண்கள் விஷயத்தில் மட்டும் புதுமையைத் தேடாதீர்கள் - போதும், சமூகத்தை நாற அடித்ததெல்லாம் போதும்!'' என்றாள் கொஞ்சம் காரமாகவே.

''இவர் அதை ஒப்புக் கொள்வாரென்று நினைக்கிறேன். ஏனெனில் தாலி அறுத்தவளுக்குத் தாலி கட்டும் திட்டம்

தான் தற்போது இவருடைய கைவசம் இருக்கிறது; தவறி விழுந்தவளுக்கு என்னத்தைக் கட்டுவது என்ற திட்டம் இன்னம் தயாராகவில்லை - என்ன தறுதலையாரே, அப்படித்தானே?'' என்றான் கிழவன்.

''ஆம்; அதுகுறித்து சிந்திக்கிறோம், சிந்திக்கிறோம், சிந்தித்துக்கொண்டே இருக்கிறோம்!'' என்றான் தறுதலை.

''சாப்பிட்ட பிறகு சிந்திக்கலாமே?'' என்றான் கிழவன்.

''நன்றி; இன்று என் கழகத் தோழர் ஒருவருக்குச் சீர்திருத்தத் திருமணம் - அந்தத் திருமண விருந்தில் கலந்து கொண்ட பிறகுதான் இங்கே நான் வந்திருக்கிறேன்!''

''விருந்தில் ஏதாவது புதுமை உண்டோ?'' என்றான் கிழவன்.

''என்ன புதுமை இருந்திருக்கப் போகிறது? கறுப்பும் சிவப்பும் கலந்த இனிப்பு ஏதாவது இருந்திருக்கும்!'' என்றாள் நறுமணம்.

''யு ஆர் கரெக்ட்; அப்சல்யூட்லி கரெக்ட்!'' என்றான் தறுதலை.

''தெரிந்துகொண்டாயா அக்கா, என் அத்தானுக்கு இங்கிலீஷ்கூடத் தெரியுமென்று தெரிந்து கொண்டாயா?'' என்றாள் தாழம்பூ, இடைமறித்து.

''மறுபடியும் வந்துவிட்டாயா?'' என்று தறுதலை கையை ஓங்கிக்கொண்டு எழுந்தான்.

''இதோ, நான் போய் விட்டேன்!'' என்று அவனை விட்டுப் போய் அப்பால் நின்றாள் தாழம்பூ.

அத்தான் உட்கார்ந்தார்; ஆனால்...

போன தாழம்பூ சும்மா போகாமல் கயிற்றுக் கட்டிலைக் கொஞ்சம் பின்னால் இழுத்து விட்டுவிட்டுப் போயிருந்தாள், அத்தான் கீழே விழுந்தார்!

''தோல்வியில் மகிழ்ச்சியைக் காண்கிறார்; என் அத்தான் தோல்வியில் மகிழ்ச்சியைக் காண்கிறார்!'' என்று கத்தினாள் தாழம்பூ. அவன் தன்னைத் துரத்தினால் ஓடுவதற்குத் தயாராகிக்கொண்டே.

''இனி உன்னை நான் சும்மா விடப் போவதில்லை!'' என்று வெஞ்சினம் கூறிக்கொண்டே எழுந்து அவளை விரட்டினார் அத்தான். அவள் ஓட, இவர் ஓட, இருவரும் கிழவனையும், நறுமணத்தையும் சுற்றிச் சுற்றி வந்தார்கள்.

''நில்லுங்கள்; நீங்கள் அவளைச் சும்மாதானே விடப் போவதில்லை? பேசாமல் கல்யாணம் செய்துக் கொண்டு விடுங்களேன்!'' என்றாள் நறுமணம், சிரித்துக்கொண்டே.

அவ்வளவுதான்; அவன் வாயெல்லாம் பல்லாக உட்கார்ந்து, ''இவர்களை யார் என்று எனக்குச் சொல்லவே யில்லையே?'' என்றான் கிழவனிடம்.

''நானே அந்தக் குழந்தையை யார் என்று இன்னும் கேட்கவில்லையே?'' என்றான் கிழவன்.

''கேட்காமலா இந்த வீட்டில் இவ்வளவு தூரம் இடம் கொடுத்து வைத்திருக்கிறீர்கள், இவர்களுக்கு? - மடமை, மடமையிலும் மடமை! - யார், என்ன, ஏது என்று கேட்காமல் இந்தக் காலத்தில் ஒருவருக்காவது, இப்படி உதவுவதாவது? - மடமை; மடமையிலும் மடமை!''

''அப்பா, புத்திசாலி! உனக்குக் கண் என்று ஒன்று இருக்கிறதோ, இல்லையோ?'' என்றான் கிழவன்.

''இருக்கிறது!'' என்றான் தறுதலை.

''அந்தக் கண்ணால் இந்தக் குழந்தையைப் பார்த்தால் என்னவென்று தெரிகிறது.''

''யாரோ ஒரு பெண் என்று தெரிகிறது!''

''அது போதும்; உதவுவது என்று நான் நினைத்தேன், உதவினேன் - அவ்வளவுதான்!'' என்றான் கிழவன்.

''அதனால் உங்களுக்கு ஏதாவது சங்கடம் வந்துச் சேர்ந்தால்?'' என்று அவனைக் 'குறுக்கு விசாரணை' செய்தான் தறுதலை.

''அந்தச் சங்கடம் இந்தக் குழந்தையால் வந்தது என்று நான் நினைக்க மாட்டேன்; கடவுளால் வந்தது என்று நினைப்பேன்!'' என்றான் கிழவன், கம்பீரமாக.

அதுவரை அந்தக் கிழவனையே வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த நறுமணம், ''தாத்தா!'' என்று கத்தினாள், திடீரென்று.

''என்னம்மா, என்ன?'' என்று பதறினான் கிழவன்.

''ஒன்றுமில்லை தாத்தா, ஒன்றுமில்லை!'' என்று சொல்லிக் கொண்டே தலை குனிந்தவள், ஒருகணம் மௌனமாயிருந்தாள். பிறகு, ''எவ்வளவு உயரத்தில் இருக்கிறீர்கள் நீங்கள், எங்களையெல்லாம்விட எவ்வளவு உயரத்தில் இருக்கிறீர்கள் நீங்கள்! உங்களை எங்களால் அண்ணாந்துகூடப் பார்க்க முடியாது போலிருக்கிறதே, தாத்தா!'' என்றாள் அமைதியாக.

''என்னம்மா சொல்கிறாய், நீ?'' என்றான் கிழவன், ஒன்றும் புரியாமல்.

''புரிய வேண்டாம் தாத்தா, உங்களுக்குப் புரியவே வேண்டாம் - எல்லாவற்றையும் புரிந்து கொண்டதாக நினைத்துக்கொண்டிருக்கும் நாங்கள் வேண்டுமானாலும்

'புத்திசாலிக'ளாக இருந்துவிட்டுப் போகிறோம்; நீங்கள் மட்டும் அவர் சொல்வது போல் 'மடமையிலேயே உழன்று கொண்டிருங்கள்; அது தான் மனித குலத்துக்கு க்ஷேமம்!'' என்றாள் நறுமணம்.

''ஒழியப் போவதில்லை; திராவிட நாடு கிடைத்தா லொழிய இந்த மடமைகளெல்லாம் மக்களை விட்டு ஒழியப் போவதே இல்லை!'' என்று முழங்கிக் கொண்டே எழுந்தான் தறுதலை.

''உட்காருங்கள் ஐயா, உங்களுக்கு ஒரு கதை சொல்கிறேன்!'' என்றாள் நறுமணம்.

''கதையா, என்ன கதை?''

''உங்களைப்போன்ற ஒரு புத்திசாலியின் கதை!''

''சொல்லுங்கள்; கேட்போம்?''

தறுதலை உட்கார்ந்தான்; நறுமணம் சொன்னாள்:

''ஒரே ஒரு ஊரிலே, ஒரே ஒரு பேராசிரியர்; அந்த ஒரே ஒரு பேராசிரியருக்கு ஒரே ஒரு காதலி - அதாவது, அந்த ஒரே ஒரு காதலிக்குத் தெரிந்து, தெரியாமல் எத்தனையோ? - அந்த ஒரே ஒரு காதலியுடன் ஒரே ஒரு பேராசிரியர் இருந்தபோது, 'ஐயா, பசி; பசியில் பிராணனே போய்விடும் போலி ருக்கிறது - ஒரு பிடி அன்னம் கொடுங்கள், ஐயா!' என்று கதறிக்கொண்டே ஒரு வழிப்போக்கன் வந்தான். 'நீ யார்? எந்த ஊர்? ஏன் இந்த நிலை?' என்று கேள்விக்கு மேல் கேள்வியாகக் கேட்டார் பேராசிரியர். எல்லாவற்றுக்கும் தட்டுத் தடுமாறி அவன் பதில் சொன்னான் - தான் ஓர் உழவன் என்றும், தன்னுடைய ஊர் அரக்கோணம் என்றும், தான் நம்பி வந்த ஆள் தற்போது நகரில் இல்லாததால் தனக்கு இந்த நிலை என்றும் அவன் மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கச் சொன்னான்

- பேராசிரியர்தான் புத்திசாலியாயிற்றே! அதிலும், சாதாரண புத்திசாலியா? ஆண்டுக்கு ஆண்டு ஆயிரம் புத்திசாலிகளைத் தயார் செய்யும் அபார புத்திசாலியாயிற்றே! அத்துடன் விடுவாரா, அவனை? செருமிக் கனைத்துத் தொண்டையைச் சரிசெய்து கொண்டு ஆரம்பித்தார் - ''அயலூரிலிருக்கும் ஒருவரை நாம் பார்க்கவேண்டும்; அவரைப் பார்ப்பதற்காக நாம் சொந்த ஊரிலிருந்து கிளம்புகிறோம் - கிளம்புவதற்கு முன்னால் என்ன செய்ய வேண்டும்? பயணத்துக்கு வேண்டியவற்றை யெல்லாம் எடுத்துக்கொண்டு விட்டோமா என்று ஒரு முறைக்கு இரு முறை பார்க்க வேண்டும். அதாவது, பெட்டி - படுக்கை இருக்கிறதா என்று கவனித்தால் மட்டும் போதாது; அதற்குள் பற்பொடி, எண்ணெய், சீப்பு, கண்ணாடி, துண்டு, துப்பட்டி, ஒன்றுக்கு இரண்டு சட்டை, ஒன்றுக்கு இரண்டு வேட்டி எல்லாம் இருக்கிறதா என்று கவனிக்க வேண்டும். அதற்குப் பின் பெட்டியைப் பூட்டிச் சாவியை எடுத்து'' - இதற்கு மேல் அவருடைய போதனையைக் கேட்க அந்த அப்பாவிக்குக் கொடுத்து வைக்கவில்லை; ''என் ஆவியை எடுத்து விட்டீர்களே, ஐயா!'' என்று அலறிக்கொண்டே விழுந்துவிட்டான், கீழே!''

இந்த இடத்தில் கதையை நிறுத்திவிட்டுத் தறுதலையைப் பார்த்தாள் நறுமணம்; 'அப்புறம்?' என்றான் அவன்.

''அப்புறம் என்ன? - 'இவனுடைய பிரேதத்தை இங்கிருந்து அகற்றுவது எப்படி? போலீசுக்காவது 'போன்' செய்யட்டுமா?' என்று கேட்டாள் காதலி. 'மடத்தனமாக எதையும் செய்யாதே! முதலில் அவன் சட்டைப் பைக்குள் பதினைந்து காசுகள் இருக்கிறதா என்று பார்; இருந்தால் அதைத் 'தொலைபேசி'க்குரிய கட்டணமாக எடுத்துக் கொண்டு, அதற்குப் பின் காவலர்களுக்கு அழைப்பு விடு!''

என்றார் பேராசிரியர். 'அவனிடம் பதினைந்து காசுகள் இருந்திருந்தால் அவன் ஏன் நம்மிடம் வந்து ஒரு பிடி அன்னம் கேட்டிருக்கப் போகிறான்?' என்றாள் காதலி. 'உனக்குத் தெரியாது; இவர்களெல்லாம் கையில் காசு வைத்துக்கொண்டே ஓசிச் சோற்றுக்கு ஒப்பாரி வைப்பார்கள்!'' என்ற அவரே அவன் சட்டைப் பைக்குள் கையை விட்டுப் பார்த்தார்; ஒன்றுமில்லை. மடியைத் தடவினார்; காதறுந்த செருப்புகள் இரண்டை அவன் அங்கே செருகி வைத்திருந்தான். 'பழைய செருப்பு களுக்குத்தான் இப்போது ஏகக் கிராக்கியாச்சே, பதினைந்து காசுகள் பெறாதா, இது? பெறும், பெறும்!' என்று அவற்றை எடுத்துப் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டு, 'இப்போது விடு, காவலர்க்கு அழைப்பு!' என்றார் பேராசிரியர். காதலி அவ்வாறே செய்ய, போலீஸார் வந்து அவனுடைய பிரேதத்தை அப்புறப்படுத்துவாராயினர் - சுபம், மங்களம், முற்றும்!'' என்று கதையைச் சொல்லி முடித்தாள் நறுமணம்.

''புத்திசாலிதான்; மகா புத்திசாலிதான்!'' என்றான் கிழவன்.

''சரியான பேத்திதான்; தாத்தாவுக்குச் சரியான பேத்திதான்!'' என்றான் தறுதலை.

''அந்தப் புத்திசாலியின் கதை கிடக்கட்டும், அக்கா! நீ உன்னுடையக் கதையைச் சொல்லு?'' என்றாள் தாழம்பூ, அவள் ஏற்கெனவே சொன்னதும் அவளுடைய கதையின் ஒரு பகுதிதான் என்பதை அறியாமல்.

''என்னுடைய கதையைச் சொல்ல எனக்கு விருப்ப மில்லைதான்; இருந்தாலும் உனக்கு அது ஓர் எச்சரிக்கையாக இருக்கும் என்பதற்காகச் சொல்கிறேன்!' என்று தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தாள் நறுமணம்.

✧ ✧ ✧

6. காயிலே இனித்ததும், கனியிலே புளித்ததும்!

பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்ந்தவர்கள் இல்லை. என் தாயும் தந்தையும். அவர்கள் பெற்ற தெல்லாம் இரண்டே பேர்தான் - ஆன குடிக்கு ஆண் ஒன்று, பெண் ஒன்று என்பதைப் போல!

ஆனால் எங்கள் குடி ஆன குடியாயிருக்கவில்லை; நான் பத்து வயதுப் பாலகியாயிருந்தபோதே அது ஆகாத குடியாகிவிட்டது. காரணம், மூன்றே நாள் காய்ச்சலில் என் தாயார் கண்ணை மூடிவிட்டதுதான்!

அவர்களுக்குப் பிறகு என்னையும் என்னுடைய அண்ணாவையும் வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வந்தாள் என் பாட்டி - பாட்டி யென்றால் அப்பாவைப் பெற்ற பாட்டியில்லை; அம்மாவைப் பெற்ற பாட்டி.

பெங்களூரிலிருந்து என்னுடைய மாமாவின் வீட்டிலே எவ்வளவோ பெருமையுடன் வாழ்ந்து வந்த அவள், எங்களுக்காக இங்கே வந்து எத்தனையோ சிறுமைகளுக் குள்ளானாள். அத்தனை சிறுமைகளையும் சகித்துக்கொள்ள அவளுக்கு இருந்த ஒரே ஆதாரம் என்ன தெரியுமா? - அவள் எங்கள் மேல் கொண்டிருந்த அன்பு ஒன்றுதான்!

அந்த அன்பே உருவான பாட்டியுடன் எங்கள் தந்தையார் எங்களை விட்டிருந்தால் எவ்வளவோ நன்றா யிருந்திருக்கும். அதுதான்இல்லை; தனக்கு 'இளையாள்' என்ற பெயரிலும், எங்களுக்குச் 'சிற்றன்னை' என்ற பெயரிலும் எங்கிருந்தோ ஒரு 'தலைவலி'யைக் கொண்டு வந்து விட்டார். அந்தத் தலைவலியை என் அப்பாவால் புரிந்து கொள்ள முடிந்ததோ என்னவோ, எங்களால் புரிந்துக் கொள்ள முடியவில்லை.

ஏழ்மையின் காரணமாக இரண்டாந்தாரமாய் வாழ்க்கைப்பட்டுவிட்ட அவளுக்கு, வேறு யாருக்காவது தான் முதல் மனைவியாக வாய்க்காமல் போய்விட்டோமே என்ற ஏக்கம், வெறுப்பு. அந்த ஏக்கத்தையும் வெறுப்பையும் அவள் ஒவ்வொரு சொல்லிலும், செயலிலும் காட்டி வந்தாள். அவ்வாறு காட்டுவதற்கு ஆதாரமாக இருந்தவர்கள் யார் என்கிறீர்களா? - நானும் என் அண்ணாவும்தான்!

அப்பா 'சர்வ வல்லமையுள்ள கணவ'ராயிருந்தாலும் அவருடைய வல்லமை அவளிடம் செல்லவில்லை - எப்படிச் செல்லும்? எடுத்ததற்கெல்லாம் தாலியைக் கழற்றி வீசி எறிந்துவிட்டு அவள் அவருக்கு 'குட் பை' போட்டு விட்டுச் செல்லத் தயாராயிருக்கும்போது?

இந்த அளவுக்கு அவள் துணிந்திருந்ததற்குக் காரணம் வேறொன்றுமில்லை: இளமையிலிருந்தே தன் கையைக் கொண்டு தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய நிலையில் அவளுடைய உற்றார் உறவினர் அவளை விட்டு வைத்திருந்ததுதான்!

அன்று தன்னைக் காப்பாற்ற யாரும் தேவைப்படாமல் இருந்தபோது, இன்றுமட்டும் என்ன தேவையாம்?

இத்தகைய 'அலட்சிய'த்துக் குள்ளாகியிருந்த அவளை, 'அனுதாப'த்தோடுக் கல்யாணம் செய்துக் கொண்டதாக என் அப்பா சொல்லப் போக, 'நானும் உங்களை அனுதாபத்தோடுதான் கல்யாணம் செய்து கொண்டே னாக்கும்?'' என்று அவளும் சொல்ல ஆரம்பித்து விட்டாள்!

கணவன் - அப்படி ஒருவன் இருந்துதான் தீரவேண்டு மென்றால் அவன் தனக்கு அடங்கியிருக்கட்டும்;

இல்லாவிட்டால் போகட்டும் - இது தன் சுதந்திர வாழ்விலே அவள் கண்ட முடிவு!

அந்த முடிவை எதை முன்னிட்டும் மாற்றிக் கொள்ள விரும்பாத அவளுடன் 'போர், போர், போர்' என்று போரிட்டுப் பார்த்தார், அப்பா - வெற்றி கிடைப்பதாக இல்லை, அவருக்கு - எனவே, 'சமாதானம், சமாதானம், சமாதானம்' என்று அந்த 'சமாதானத்துக்குத் தன்னுடைய சுயமரியாதை'யைப் பலி கொடுத்துவிட்டார்!

இந்த நிலையிலே பாட்டி என்ன செய்வாள், பாவம்! அதிலும், தனக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லாத மருமகன் வீட்டிலே இருந்து கொண்டு?

நல்ல வேளையாகச் சித்தி வந்து சேர்ந்ததும் அண்ணா தன் வாலைச் சுருட்டி வைத்துக் கொண்டு விட்டான் - அம்மா இருந்தபோது அவன் அடித்த லூட்டி - அப்பப்பா!

ஒருநாள் அம்மாவுக்குத் தெரியாமல் அவன் சர்க்கரை டப்பாவைக் காலி செய்து கொண்டிருந்தபோது, ஏதோ வேலையாக அடுக்களைக்குள் நுழைந்த நான், ''ஏண்டா இப்படிக்கூடச் செய்யலாமா?'' என்றேன்.

''செய்யக்கூடாதுதான்; உன்னை விட்டுவிட்டு நான் இப்படிச் செய்யக் கூடாதுதான் - இந்தா பிடி!'' என்றான் அவன், எனக்கு முன்னால் ஒரு பிடி சர்க்கரையை எடுத்து நீட்டி.

ஆசை யாரை விட்டது? - ஒரு கைக்கு இரண்டு கைகளாக நீட்டி நான் அதை வாங்கி வாயில் போட்டேனோ இல்லையோ, ''அம்மாம்மா, இங்கே வந்து பாரேன்? காலி, சர்க்கரை டப்பாவே காலி!'' என்று கத்த ஆரம்பித்துவிட்டான் அவன்.

அதற்குப் பிறகு என்ன நடந்தது என்பதைச் சொல்லவேண்டுமா, என்ன? - அவன் தலையிலே விழ

வேண்டியக் குட்டு என் தலையிலே விழுந்தது - நான் அழுதேன்; அவனோ சிரித்தான்;

அம்மாவின் ராஜ்யத்திலே அவ்வளவு போக்கிரிப் பிரஜையாயிருந்த அவன், சித்தியின் ராஜ்யத்திலேதான் எவ்வளவு சாதுப் பிரஜையாகி விட்டான்!

அன்று எதிலும் முதலிடம் அவனுக்கு; இன்று எதிலும் அவனுக்குக் கடைசி, கடைசி, கடைசிதான்!

மற்றவற்றில் கடைசியாயிருப்பதைப் பற்றி கவலைப் படவில்லை, அவன். ஆனால் இந்தச் சாப்பாடு விஷயத்தில் - அதிலுமா கடைசி? - இதைச் சகிக்க முடியவில்லை அவனால்.

ஒருநாள் அவனுக்கு என்னத் தோன்றிற்றோ என்னமோ ''பாட்டி; சித்திதான் எனக்கு முதலில் சோறு போட மாட்டேன் என்கிறார்கள்: நீங்கள் கூடவா போடக்கூடாது?'' என்றான் பரிதாபமாக.

எப்படியிருக்கும், பாட்டிக்கு? - அவனையும் கூடத்தில் மாட்டியிருந்த அவனுடைய தாயாரின் படத்தையும் மாறி மாறிப் பார்த்தாள். பிறகு, ''சரி வா; போடுகிறேன்!'' என்றாள் துணிந்து.

அவள் அடுக்களைக்குள் நுழைந்து தட்டை எடுத்தாளோ, இல்லையோ - முப்பத்திரண்டாவது தடவையா முகத்துக்குப் பவுடர் பூசிக் கொண்டிருந்த சித்தி ஓடோடியும் வந்து, ''அவ்வளவு தூரத்துக்கு வந்துவிட்டாயா, நீ?'' என்று இரைந்து கொண்டே அவள் கையிலிருந்த தட்டை ''வெடுக்கென்று பிடுங்கி வீசி எறிந்துவிட்டு, ''என்னைக் கேட்காமல் அடுக்களைக்குள் நுழைய உனக்கு என்னடி, சொந்தம்? அப்படியே ஏதாவது சொந்தமிருந்தாலும் அதுதான் உன் பெண்ணோடு

போச்சே! இன்னும் உனக்கு இங்கே என்னடி வேலை? ம், நட நட! முதலில் இந்த வீட்டை விட்டு வெளியே நட!'' என்று அவளை விரட்டியடிடி வெளியே வந்தாள்.

நான் பேசாமல் இருந்திருக்கக் கூடாதா? - ''சித்தி, சித்தி! உங்களுக்குத் தெரியாதா? இது பாட்டியின் வீடு, சித்தி!'' என்றேன். எனக்குத் தெரிந்த உண்மையை மறைக்கத் தெரியாமல் - ஆம், என் அம்மாவுக்கு அவள் சீதனமாகக் கொடுத்த வீடாம், அது!

அவ்வளவுதான்; ''அப்படியானால் அவள் இங்கே இருக்கட்டும்: நான் போகிறேன்!'' என்று கொடியின் மேல் கிடந்த புடவை, ஜாக்கெட்டுக்களையெல்லாம் எடுத்துச் சுருட்டிப் பெட்டிக்குள் அடைக்க ஆரம்பித்துவிட்டாள், அவள்!

நல்ல வேளையாக அந்தச் சமயத்தில் ஆபீஸிலிருந்து வந்த அப்பா நிலைமையை ஒருவாறு புரிந்துகொண்டு, ''என்ன காமினி, என்ன நடந்தது?'' என்றார், சித்தியை நெருங்கி.

''வேறு என்ன நடக்க வேண்டும்? இது என் வீடு இல்லையாம்: இவளுடைய பாட்டியின் வீடாம். இந்த வீட்டிலே இருக்க எனக்கு உரிமை கிடையாதாம்: இப்படியெல்லாம் சொல்கிறாள், உங்கள் பெண்!'' என்றாள் அவள், விக்கலுக்கும் விம்மலுக்கும் இடையே.

அதற்குமேல் அப்பா சும்மா இருப்பாரா? - அவர் தான்அவளை அடக்க முடியாமற் போகவே அடங்கிப் போகும் நிலைக்கு வந்துவிட்டவராயிற்றே? - ''முளைக்கும் போதே விஷமத்தனத்தைப் பார், விஷமத்தனத்தை? இன்னொரு முறை அப்படியெல்லாம் சொன்னாயோ, தோலை உரித்து விடுவேன் - ஜாக்கிரதை!'' என்றார், என் பக்கம் திரும்பி.

இதைக் கேட்டதும் அண்ணா வியப்புடன், ''ஆடு மாடுகளின் தோல்தான் எதெதற்கோ உபயோகமாகிறது என்கிறார்கள்: மனிதர்களின் தோல் எதற்கு உபயோக மாகிறது அப்பா?'' என்றான், அப்பாவை நெருங்கி.

''எட்டிப் போடா, அதிகப் பிரசங்கி!'' என்று அவனைப் பிடித்து அப்பால் தள்ளிவிட்டு, ''அழாதே, காமினி, அழாதே!'' என்று வழக்கம்போல் வாங்கி வந்த பூவை அவளுடைய தலையிலே வைக்கப் போனார், அப்பா - சமாதானத்துக்காகத்தான்!

ஆனால் அந்தப் பாழாய்ப்போன சமாதானத்துக்கும் இருவருடைய ஒத்துழைப்புமல்லவா வேண்டியிருக்கிறது? - அது கிடைக்கவில்லை, அவருக்கு; ''இது ஒன்று தான் குறைச்சல், எனக்கு!'' என்று அவர் கையிலிருந்த பூவைப் பிடுங்கி வீசி எறிந்துவிட்டு, ''இந்த வீட்டில் ஒன்று நான் இருக்க வேண்டும் - இல்லை, அந்தக் கிழவி இருக்க வேண்டும். இரண்டில் ஒன்று தீர்மானமாகும் வரை நீங்களும் வேண்டாம்; உங்கள் பூவும் வேண்டாம்!'' என்று கத்தினாள், அவள்.

''இரைந்து பேசாதே காமினி, இரைந்து பேசாதே!'' என்று தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார் அவர்.

மானம் வீட்டுக்குள் போனாலும், தெருவிலாவது போகாமல் இருக்கட்டுமே என்ற கவலை அவருக்கு - இந்தப் பலவீனத்தைத்தான் தன்னுடைய வெற்றியின் ரகசியமாகக் கொண்டுவிட்டாள் சித்தி!

இவையெல்லாம் தெரிந்தும் தெரியாததுபோல, புரிந்தும் புரியாததுபோல எங்களுக்காக இத்தனை நாட்கள் இருந்து வந்த பாட்டி இப்போது என்ன செய்வாள், பாவம்! - எங்கள் முகத்தைப் பார்த்தாள்; எங்களுடைய சித்தியின் முகத்தையும் பார்த்தாள் - பிறகு தனக்கென்று கொண்டு

வந்திருந்த இரண்டு புடவைகளை எடுத்துத் தன்னுடைய பையிலே வைத்துக்கொண்டு, ''நான் வருகிறேன்; குழந்தைகளைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்!'' என்று தன் மருமகப்பிள்ளையிடம் சொல்லி விட்டு நகர்ந்தாள்.

அவர்கள் விட்டாலும் நாங்கள் விடுவோமா, அவளை? - 'பாட்டி, பாட்டி! எங்களை விட்டு விட்டுப் போகாதீர்கள், பாட்டி!'' என்று கத்திக் கொண்டே அவளுக்குப் பின்னால் ஓடினோம்; அவ்வளவுதான்; எங்கள் முதுகில் 'பளார், பளார்' என்று அறைந்து, தனக்கிருந்த ஆத்திரங்கள் அத்தனையையும் தீர்த்துக் கொண்டு விட்டார், அப்பா!

''இதுதான் குழந்தைகளை பத்திரமாகப் பார்த்துக் கொள்ளும் லட்சணமா?'' என்று கேட்டபடி, தன் கையிலிருந்த பையை வீசி எறிந்துவிட்டு, ஓடோடியும் வந்து எங்களை அணைத்துக் கொண்டாள், பாட்டி!

அவளுடைய அரவணைப்பிலே இருந்தபடி, நாங்கள் கலங்கியக் கண்களுடன் அப்பாவைப் பார்த்தோம் - என்ன ஆச்சரியம், அவருடையக் கண்களும் அப்போதுக் கலங்கிக் கொண்டிருந்தன!

''உங்களால் இவர்களைக் காப்பாற்ற முடியாதென்றால் இப்பொழுதே சொல்லிவிடுங்கள்; இவர்களையும் பெங்களூருக்கு அழைத்துக்கொண்டு போய் நான் காப்பாற்றிக் கொள்கிறேன்,'' என்றாள் பாட்டி, மேலும் தொடர்ந்து.

''இந்த வருஷம் பரீட்சை முடியட்டும்; பார்க்கலாம்!'' என்றார் அப்பா.

''அதுவரை உங்களுடைய கோபத்தைக் காட்ட வேண்டியவரிடம் காட்டுங்கள்; குழந்தைகளிடம்

காட்டாதீர்கள்!'' என்று சொல்லிவிட்டு, எங்களைப் பிரிய மனமில்லாமல் பிரிந்து சென்றாள் பாட்டி.

ஆயினும் என்ன? - நமது அன்புக்குரியவர்கள் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் அருகில் இருப்பது போலவும், அல்லாதவர்கள் எவ்வளவு அருகில் இருந்தாலும் தூரத்தில் இருப்பது போலவும் தோன்றுவதில்லையா, நமக்கு? - அப்படித்தான் தோன்றிற்று, எங்களுக்கும்!

இப்படியாகத்தானே எங்களுடைய 'சாப்பாட்டுப் பிரச்சினை'யை ஒருவாறு தீர்த்து வைத்து விட்ட அப்பாவுக்கு, அன்றிரவு எங்களைப் 'படுக்க வைக்கும் பிரச்சினை' பெரிய பிரச்சினையாகப் போய்விட்டது. இத்தனை நாட்கள் பாட்டி எங்களுக்குத் துணையாகப் படுத்து வந்தாள்; இன்று யார் படுப்பது?

அப்பா என்னமோ எங்களுக்காகத்தான் சித்தியைக் கல்யாணம் செய்து கொண்டதாகச் சொல்கிறார்; ஆனால் சித்தி எங்களுக்காக அப்பாவைக் கல்யாணம் செய்து கொண்டதாகச் சொல்லவில்லையே?

பாட்டியின் தலை மறைந்ததும், ''சாப்பிட வருகிறீர்களா?'' என்றாள் அவள், அப்பாவை நோக்கி.

''வேண்டாம், எனக்கென்னமோ இன்று பசிக்கவில்லை!'' என்றார் அப்பா.

''எப்படிப் பசிக்கும்? ஆபீஸில் மேல் வரும்படி; வழியில் எத்தனையோ ஓட்டல்கள்!'' என்று சொல்லிக்கொண்டே சென்று அவள் சாப்பிட்டுவிட்டு, ''அம்மா, நறுமணம்! அருமை அண்ணாவுக்குச் சாப்பாடு போடு; நீயும் சாப்பிடு!'' என்று வழக்கம்போல் எனக்குக் கட்டளையும் இட்டுவிட்டுப் படுக்கப் போய்விட்டாள்!

அப்பா பெருமூச்சு விட்டபடி, ''உங்கள் பாட்டி ஊருக்குப் போகும்போது உங்களுக்கு ஏதாவது காசு கொடுத்துவிட்டுப் போனாளா?'' என்றார், மெல்ல.

''ஆமாம்; ஆளுக்கு ஒரு ரூபா கொடுத்துவிட்டுப் போனார்கள்!'' என்றேன் நான்.

''எனக்குப் பன்னிரண்டு பைசா கடனாகத் தருகிறீர்களா, தலைவலி மாத்திரை வாங்க!'' என்றார் அவர் பரிதாபமாக.

''உங்களிடம் பன்னிரண்டு காசுகள் கூடவா இல்லை?'' என்றான் நம்பி, வியப்புடன்.

''அதை ஏன் கேட்கிறாய், பஸ்ஸுக்குக்கூடக் காசில்லாமல் சாயந்திரம் ஆபீஸிலிருந்து நடந்தே வந்தேன்!''

''அப்படியானால் இந்த ரூபாயை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்!'' என்று தன்னிடமிருந்த ஒரு ரூபாயை எடுத்து அவரிடம் கொடுத்துவிட்டான் அவன்.

''உனக்கு?'' என்றார்அப்பா.

''என்னிடமுள்ள ஒரு ரூபாயில் நான் அவனுக்கு ஐம்பது பைசா கொடுத்து விடுகிறேன்; எங்களுக்கு வேண்டிய தெல்லாம் ஆளுக்கோர் 'ஐஸ்-கிரீம்'தானே?'' என்றேன் நான், சிரித்துக்கொண்டே.

அப்பா சட்டையைக் கழற்றி மாட்டிவிட்டுத் துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு வெளியே சென்றார், தலைவலி மாத்திரை வாங்கிக் கொண்டு வர.

''ஏண்டா நம்பி, சாப்பிட வருகிறாயா?'' என்றேன் நான்.

''ஊஹுூம்'' என்றான் அவன்.

''ஏனாம்?''

''அப்பா சாப்பிட்ட பிறகுதான் நானும் சாப்பிடுவேன்!''

''அவர்தான் ஓட்டலில் சாப்பிட்டுவிட்டு வந்து விட்டாராமே?''

''யார் சொன்னது, அவரா சொன்னார்?''

''இல்லை சித்தி சொன்னாள்!''

''அதை நீ நம்புகிறாயா?''

''நம்பாவிட்டால் இந்த வீட்டில் நாம் இருக்க முடியாது!''

''அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. அப்பா வரட்டும், சாப்பிடுகிறேன்!'' என்றான் அவன், அழுத்தந் திருத்தமாக.

அதற்குள் சித்தி சாப்பிட்ட தட்டை அலம்பி வைத்து விடலாமென்று நான் அடுக்களைக்குள் நுழைந்தேன் - ஆம், அவள் சாப்பிட்ட தட்டைக்கூட நான்தான் கழுவவேண்டும் - என்னுடைய நித்ய கடமைகளில் அதுவும் ஒன்று!

அந்தக் கடமையை ஆற்றிவிட்டு நான் வெளியே வந்தபோது கையில் தலைவலி மாத்திரையுடன் உள்ளே நுழைந்த அப்பா, ''கொஞ்சம் வெந்நீர் இருந்தால் கொண்டு வருகிறாயா?'' என்றார்.

நான் தலையை ஆட்டிவிட்டு உள்ளே சென்றேன்.

''ஏண்டா நம்பி, நீ சாப்பிட்டுவிட்டாயா?'' என்று கேட்டார் அப்பா.

அதற்குள் கையில் வெந்நீருடன் வெளியே வந்த நான், ''இல்லை அப்பா, நீங்கள் சாப்பிட்டப் பிறகுதான் அவன் சாப்பிடப்போகிறானாம்!'' என்றேன்.

அப்பா சிரித்தார்; சிரித்துவிட்டு, ''அன்பை எங்கே தேடவேண்டுமோ அங்கே தேடாமல் வேறு எங்கேயோ தேடினேன்,பார் - எனக்கு வேண்டும்; நன்றாக வேண்டும்!'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டார். பிறகு தலைவலி மாத்திரையை விழுங்கிவிட்டு, ''அப்பா! ஒரு தலைவலி போச்சு!'' என்றார் சற்று ஆறுதலுடன்.

''ஒரு தலைவலி போச்சு என்றால், இன்னொரு தலைவலி வேறு இருக்கிறதா அப்பா?'' என்றான் நம்பி, ஒன்றும் புரியாமல்.

''இருக்கிறது அப்பா, இருக்கிறது!'' என்றார்அவர் அலுப்புடன்.

''அது எப்போது போகும்? அதற்கு ஏதாவது மாத்திரை உண்டா?''

''அதற்கு மாத்திரையும் கிடையாது; அது எப்போது போகுமென்றும் தெரியாது - நீ வா, சாப்பிடுவோம்!'' என்று அப்பா எழுந்தார்.

அவர்கள் இருவருக்கும் சாப்பாட்டைப் போட்டு விட்டு நான் சாப்பிடும்போது மணி பத்து - 'அடேயப்பா! இப்போதே மணி பத்தாகி விட்டதே? எப்போது வீட்டுக் கணக்கைப் போடுவது, எப்போது தூங்குவது, எப்போது எழுந்திருப்பது?' என்று எண்ணிக்கொண்டே அவசர அவசரமாகச் சாப்பிட்டேன்.

அதற்குள் ஒரு 'சிறு துயில்' நீத்து வந்த சித்தி, ''என் கையால் சாப்பிட உங்களுக்குப் பிடிக்கவில்லையாக்கும்?'' என்றாள், கையலம்பிக் கொண்டிருந்த அப்பாவிடம்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை, காமினி! அப்போது பசிக்கவில்லை; சாப்பிடவில்லை - இப்போது பசித்தது சாப்பிட்டேன்!'' என்றார் அப்பா, கையும் களவுமாக அகப்பட்டுக் கொண்ட கள்வனைப் போல!

''ஓஹோ!'' என்று உறுமிவிட்டு அவள் மேலே செல்ல, அப்பா ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டு வெளியே சென்றார்.

எல்லா வேலைகளையும் ஒரு வழியாகச் செய்து முடித்துவிட்டு நான்நோட்டும் பென்சிலுமாக உட்கார்ந்தேன் கணக்குப் போட.

அப்போது அங்கே வந்த சித்தி, ''அவ்வளவு பெரிய வளாகப் போய்விட்டாயா, நீ?'' என்று நான் கொஞ்சமும் எதிர்பாராத விதமாக என் கன்னத்தில் ஓர் இடி இடித்து விட்டு, ''அப்பா சாப்பிடுகிறேன் என்றால் என்னை எழுப்ப உனக்கு என்னக் கேடு?'' என்று கடுகடுத்தாள்.

''எனக்குத் தெரியாது, சித்தி! இன்னொரு முறை இப்படி ஏதாவது நடந்தால் அவசியம் நான் உங்களை எழுப்புகிறேன்!'' என்றேன் நான், குரல் தழுதழுக்க.

''அப்போதும் தூக்கத்தைக் கலைத்து விட்ட குற்றத்தி லிருந்து நீ தப்ப முடியாது!'' என்றான் நம்பி குறுக்கிட்டு.

''உன்னை யார் அழைத்தது, நடுவே?'' என்று அவன் கன்னத்திலும் ஓர் இடி இடித்துவிட்டு உள்ளே சென்றாள் சித்தி, தூக்கத்தைத் தொடர!

நாங்கள் இருவரும் கன்னத்தைத் தடவிக் கொண்டே நின்றோம். அப்போது தெருக் கதவைச் சாத்தித் தாளிட்டு விட்டு உள்ளே வந்த அப்பா, ''என்னம்மா, என்ன நடந்தது?'' என்றார், திடுக்கிட்டு.

''ஒன்றும் நடக்கவில்லை அப்பா, பல்லை வலிக்கிறது!'' என்றேன், நான்.

''பல் வலி கூட இருவருக்கும் சேர்ந்தாற்போல் வருமா என்ன?'' என்றார் அப்பா, சிரித்துக்கொண்டே.

''வேறு வழியில்லை, அப்பா! எங்கள் இருவருக்கும் சேர்ந்தாற்போல்பல் வலி வந்தால்தான் உங்களுக்கும் நல்லது; எங்களுக்கும் நல்லது!'' என்றான் நம்பியும் சிரித்துக் கொண்டே.

''சரி, வரட்டும்!'' என்று சொல்லிக்கொண்டே படுக்கையை எடுத்து விரித்தார் அவர்.

''பாட்டி இருந்திருந்தால் உங்களுக்கு இந்த வேலை யெல்லாம் இருந்திருக்காது, இல்லையா?'' என்று கேட்டுக் கொண்டே அவர் விரித்த படுக்கையில் படுத்தான் நம்பி.

''அந்தக் கஷ்டம் இப்போதுதான் தெரிகிறது - ஆயினும் என்ன செய்வேன்? - இந்த வீட்டில் எனக்கு ஓரளவாவது நிம்மதி கிடைக்க வேண்டுமென்றால் உங்கள் பாட்டி உங்களை விட்டுப் போகத்தான் வேண்டி யிருக்கிறது!'' என்று சொல்லிக்கொண்டே, என்றும் இல்லாத திருநாளாக அப்பா நம்பிக்குப் பக்கத்தில் படுத்தார்.

அவ்வளவுதான்; ''இங்கே தனியாகப் படுக்க எனக்குப் பயமாயிருக்கிறது?'' என்று உள்ளே இருந்தபடி குரல் கொடுத்தாள் சித்தி!

''அட, கடவுளே! பாட்டி இல்லாததால் குழந்தை களுக்குத்தான் பயமாயிருக்குமென்று நினைத்தேன்; உனக்குமாபயமாயிருக்கிறது?'' என்றார் அப்பா.

''உங்கள் குழந்தைகளைப் பூனை தூக்கிக் கொண்டு போய்விடாது; இங்கே வாருங்கள்!'' என்றாள் அவள் தன்னை மறந்து!

அதற்குமேல் என்ன சொல்வதென்றுத் தோன்ற வில்லை, அப்பாவுக்கு. அங்கேயும் போக முடியாமல்

இங்கேயும் இருக்க முடியாமல் தவியாய்த் தவித்தார். அவருடையத் தவிப்பை ஒருவாறு புரிந்துக் கொண்ட நம்பி, ''நீங்கள் போங்கள், அப்பா!இனி நறுமணத்துக்கு நான் துணை; நறுமணம் எனக்குத் துணை!'' என்றான் கம்பீரமாக - சாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளை யல்லவா?

அன்றிலிருந்து அவன் என்னமோ எனக்குத் துணை யாகத் தான் இருந்து வந்தான். ஆனால் அவனுக்கு நான் துணையாயிருந்து வரவில்லை; தொந்தரவாயிருந்து வந்தேன்.

குறைந்தபட்சம் பத்தாம் வகுப்பு வரையிலாவது நான் படித்துவிட வேண்டுமென்பது அவன் ஆசை. அந்த ஆசையைக் கூட நிறைவேற்றி வைக்கத் தயாராயில்லை, என் சித்தி. நான் பள்ளிக்குக் கிளம்பும்போதெல்லாம், ''படித்தது போதும், வேலையைப் பார்! படித்தது போதும் வேலையைப் பார்!'' என்பாள் அவள்; ''வேலை செய்தது போதும் பள்ளிக்கூடம் போ! வேலை செய்தது போதும், பள்ளிக்கூடம் போ!'' என்பான் அவன்!

இந்தப் போட்டியிலும் பூசலிலும் பட்டும் படாமல் இருந்து வந்த அப்பா, பாட்டிகேட்டுக் கொண்டபடி எங்களைப் பெங்களூருக்காவது அனுப்பி வைக்கத் துணிந்தாரா என்றால் இல்லை; ''ஊர் என்ன சொல்லுமோ, உலகம் என்ன சொல்லுமோ?'' என்று தனக்குத்தானே குமைந்து கொண்டிருந்தார்.

அதற்கும் ஒரு வழிக் கண்டுபிடித்தான், நம்பி. அந்த வருடம் பரீட்சை முடிந்து கோடை விடுமுறை விட்டதும், ''அப்பாப்பா! இந்த வருஷம் விடுமுறை வரையிலாவது நாங்க பெங்களூருக்குப் போய் இருந்துவிட்டு வரட்டுமா, அப்பா?'' என்றான் அவன். அவரும் ''தாராளமாகப் போய்

வாருங்கள்!'' என்றுத் தயங்காமல் சொன்னார். அவர், இடையிலே உள்ள இரண்டு மாதக் காலமாவது மேலும் கொஞ்சம் நிம்மதியாயிருக்கலாமென்ற நோக்கத்துடன்.

அவ்வளவுதான்; மாமாவை ஸ்டேஷனுக்கு அனுப்பி வைக்குமாறு அன்றே பாட்டிக்குக் கடிதம் எழுதிப் போட்டு விட்டு, அதற்கு அடுத்த நாளே அப்பாவை ஸ்டேஷன் வரை துணைக்கு அழைத்துக் கொண்டு போய்த் திருப்பி அனுப்பி விட்டு, நாங்கள்இருவரும் சிட்டாய்ப் பறந்தோம், பெங்களூருக்கு - ஆம், 'இனித் திரும்புவதில்லை, சென்னைக்கு!' என்ற தீர்மானத்துடன் தான்!

அந்தத் தீர்மானத்தையும் அப்பாவுக்குத் தெரிவிக்கத் தயங்கவில்லை, நம்பி;

அருமை அப்பா,

எதையும் செய்வதற்கு முன்னால் யோசிக்காமல், செய்த பின் யோசிப்பது தங்களுடைய இயல்பாகப் போய்விட்டது. இதனால் தாங்கள் எண்ணற்ற இன்னல் களுக்கு உள்ளாவதோடு, எங்களையும் அந்த இன்னல் களுக்கு உள்ளாக்கி விடுகிறீர்கள். அவற்றைத் தங்களுக் காகச் சகித்துக்கொள்ள நாங்கள் தயாராயிருந்தாலும், சித்திக்காகச் சகித்துக் கொள்ளத் தயாராயில்லை.

என்ன இருந்தாலும் சிறகு முளைத்த பறவைகளாகி விட்டோம், நாங்கள்! - இனி பறக்க வேண்டியதுதானே? - பறந்துவிட்டோம்!

எங்களுக்கென்று ஒரு சிறு கூட்டைக் கட்டிக் கொள்ளும் வரை பிறந்தக் கூட்டில் இருக்க முடியாமற் போனாலும், புகுந்தக் கூட்டிலாவது இருக்கமுடியுமென்று நம்புகிறோம். எனவே, இப்போதைக்கு எங்களை மறந்து விடுங்கள்.

தற்காலிகமான எங்களுடைய பிரிவு தங்களுக்கு மகிழ்ச்சி அளிக்காவிட்டாலும், சித்திக்காவது மகிழ்ச்சி அளிக்கட்டும்; அந்த மகிழ்ச்சியிலே தாங்கள் எதிர்பார்க்கும் நிம்மதி ஓரளவாவது தங்களுக்குக் கிட்டட்டும்!

அன்புடன்.
நம்பி.

பின்குறிப்பு:

எந்தப் பழிக்குத் தாங்கள் அஞ்சிக் கொண்டிருந்தீர்களோ அந்தப் பழியையும் இப்போது நாங்களே ஏற்றுக் கொண்டு விட்டோம் - இனி ஊராரோ, உலகத்தாரோ எங்களைப் பற்றித் தங்களைக் கேட்டால், 'அவை என்ன சொன்னாலும் கேட்காமல் ஓடிப்போய் விட்டன!'' என்று கூசாமல் சொல்லிவிடலாமல்லவா?

பெங்களூருக்குப் போய்ச் சேர்ந்த அன்றைக்கே இந்த 'அதிகப் பிரசிங்கித்தன'மான கடிதத்தை எழுதி அப்பாவுக்கு அனுப்பிவிட்டான். அவன் 'எல்லாம் நன்மைக்கே!' என்று எண்ணித்தானோ என்னமோ, 'இப்படிக்கூடச் செய்யலாமா?'' என்று கேட்டுக்கொண்டு அவர் எங்களைத் தேடி வரவில்லை; 'மௌனம் சர்வார்த்த சாதகம்' என்றுப் பேசாமல் இருந்துவிட்டார்.

✧ ✧ ✧

இது இப்படியிருக்க, அந்த வருஷம் எஸ்.எஸ்.எல்.ஸி., பரீட்சையில் தேறிவிட்ட என் அண்ணா கலாசாலையில் சேர்ந்தான். எட்டாம் வகுப்பை முடித்துவிட்ட நான் உயர்தரப் பள்ளியில் சேர்ந்தேன் - எல்லாவற்றுக்கும் உதவியாயிருந்தவள் என் பாட்டி மட்டுமல்ல; மாமாவும்தான்.

நல்ல வேளையாக அவர்கள் எங்களுடைய வயிற்றை வளர்த்ததோடு நிற்காமல், அறிவையும் வளர்த்தார்கள்!

மாமி வேறு சித்தியைப்போல் இல்லாமலிருந்தது எங்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை அளிப்பதாயிருந்தது.

அப்பா என்னுடைய 'மஞ்சள் நீராட்டு விழா'வுக்கு வந்து போனவர்தான் - அதற்குப் பின் வரவில்லை; வர வேண்டிய அவசியமும் நேரவில்லை.

அவருடைய முயற்சிகள் எதுவும் இல்லாமலே என்னுடைய கல்யாணத்துக்கு வேண்டிய முயற்சிகளைத் தொடங்கினாள், பாட்டி - தான் கண்ணை மூடுவதற்குள் எப்படியாவது கல்யாணத்தைச் செய்து பார்த்துவிட வேண்டுமென்ற ஆசையில்.

ஆனால்...

அதைச் சொல்லவும் முடியவில்லை; சொல்லாமல் இருக்கவும் முடியவில்லை - பெண் வர்க்கத்தைப் பற்றிக் கேவலமாகப் பேசுகிறதே, ஆண் வர்க்கம் - அந்த ஆண் வர்க்கத்தைப் பற்றி நீங்களும் தெரிந்துக் கொள்ள வேண்டு மென்பதற்காகச் சொல்கிறேன்.

பார்க்கப் போனால் இதில் கேவலம் என்ன வாழ்கிறது. சோதனைகளுக்குள்ளேயே பெரிய சோதனை யாகக் கடவுள் இந்த உலகத்திலே பெண்ணைப் படைத்திருக்கும்போது?

ஆகா, இயற்கை அவளுக்கு அளித்துள்ள இனக் கவர்ச்சி தான் இந்த ஆண்களை எவ்வளவு ஈனத்தனமான காரியங்களி லெல்லாம் ஈடுபட வைத்து விடுகிறது!

பாவம், என் மாமா! - ஆம், அப்படித்தான் சொல்லத் தோன்றுகிறது எனக்கு - கடைசியில், அவர் என்மேல் காட்டிய அன்பெல்லாம் கசாப்புக் கடைக்காரன் ஆட்டுக் குட்டியின்மேல் காட்டிய அன்பாகவா போகவேண்டும்? - அட, கடவுளே!

அந்த வெட்கக்கேட்டை ஏன் கேட்கிறீர்கள், போங்கள்! ஒருநாள் இரவு மாடி அறையில் தனியாகப் படுத்துக் கொண்டிருந்த என்னை அவர் யாருக்கும் தெரியாமல் வந்து கட்டிப் பிடிக்க, நான் திடுக்கிட்டு விழிக்க, அவர் தன் மேல் துண்டால் முகத்தை மறைத்துக் கொண்டு ஓட, அன்றிலிருந்து அவரைத் தலைநிமிர்ந்து பார்க்க முடியாமல் நானும், என்னைத் தலைநிமிர்ந்து பார்க்க முடியாமல் அவரும் திணற, பெங்களூர் வாழ்க்கையே என்னைப் பொறுத்தவரை ரஸாபாஸமாகப் போய்விட்டது.

ஊமை கண்ட கனவுபோல் இதை யாரிடமும் சொல்ல முடியவில்லை, என்னால் - எப்படிச் சொல்ல முடியும், என்னவென்று சொல்ல முடியும்? - சொன்னால் மாமாவைப்பற்றி என்ன நினைப்பார்கள்? அல்லது, என்னைப் பற்றித்தான் என்ன நினைப்பார்கள்?

அவரை மணந்து கொண்டிருக்கும் அக்காவுக்கு இன்றல்ல, என்றுமே துரோகம் செய்ய விரும்பவில்லை. நான். இது எனக்குத் தெரியும்; என் மனத்துக்குத் தெரியும். ஆனால் அது அவளுக்குத் தெரியுமா, அவளுடைய மனத்துக்குத் தெரியுமா? - அதிலும் பெண்ணாய்ப் பிறந்தவர்களுக்கு மட்டுமே 'நீலி' என்ற பட்டத்தைச் சமூகம் சூட்டி மகிழ்ந்து கொண்டிருக்கும்போது?

அதற்காக இந்தச் சம்பவத்துக்குப் பிறகும் எனக்கென்று அவர் வாங்கிக் கொடுத்த ஆடையணிகளை இன்னும் எத்தனை நாட்கள் தரித்துக் கொண்டிருப்பது நான்? எனக்கென்று அவர் வாங்கிக் கொடுத்த நகை நட்டுக்களை இன்னும் எத்தனை நாட்கள் அணிந்து கொண்டிருப்பது நான்? - என் தன்மான உணர்ச்சி என்னை வதைக்கிறதே? 'உடனே அவற்றை அவிழ்த்து எறி; உடனே அவற்றை கழற்றி எறி!'' என்று அது என்னை உந்தி உந்தித் தள்ளுகிறதே?

இத்தனை நாளும் இல்லாமல் இன்று அவிழ்த்து எறிந்தால், 'ஏன் அவிழ்த்து எறிகிறாய்?' என்று வீட்டிலுள்ளவர்கள் கேட்கமாட்டார்களா? கழற்றி எறிந்தால், 'ஏன் கழற்றி எறிகிறாய்?' என்று வீதியிலுள்ளவர்கள் கேட்க மாட்டார்களா? அவர்களிடம் நான் எதைக் காரணமாகச் சொல்வது, என்னத்தைக் காரணமாகச் சொல்வது? - கடவுளே, மண்ணோடு மண்ணாகும் வரை இந்த உளைச்சலால் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி நான் மனம் புண்ணாகிக் கொண்டிருக்க வேண்டியதுதானா? - ஒன்றும் புரியவில்லை எனக்கு.

ஆனால்...

இந்த நிலைக்கு வருவதற்கு முன்னாலேயே நான் எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சையில் தேறிவிட்டேன் என்பதும் தமிழ் எம்.ஏ. பரீட்சையில் தேறி, என் அண்ணா வேலை தேடிக் கொண்டிருந்தான் என்பதும் எனக்கு ஓரளவு ஆறுதல் அளிக்கக் கூடியதாயிருந்தது. அந்த ஆறுதலில் ஒவ்வொரு நாளையும் நான் ஒவ்வொரு யுகமாகக் கழித்துக் கொண்டிருக்கும்போது, "இந்தக் கடிதத்தைப் பார்த்தாயா?" என்று என்னிடம் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்தான் என் அண்ணா.

அது சென்னையிலிருந்த ஒரு தினசரிப் பத்திரிகையின் காரியாலயத்திலிருந்து அவனுக்கு வந்திருந்தது - உதவி ஆசிரியர் வேலைக்காகத் தாங்கள் நடத்தப்போகும் தேர்வில் அவனையும் வந்து கலந்து கொள்ளும்படி.

"போயும் போயும் பத்திரிகைத் தொழிலிலா இறங்கப் போகிறாய்?" என்றேன் நான்.

"எனக்கென்னமோ அதுதான் பிடித்திருக்கிறது!" என்றான் அவன்.

''உன்னுடைய விருப்பம்போல் செய்!'' என்றேன். நானும், எப்படியாவது பெங்களூரை விட்டுப் போனால் போதும் என்றக் கவலையில்.

ஆனால்...

அந்த வேலையும் கிடைக்கவில்லை அவனுக்கு - ''ஏன்?'' என்று கேட்டதற்கு அவன் சொன்ன பதில் எனக்கு விசித்திரமாக மட்டும் இல்லை; வேடிக்கையாகவும் இருந்தது.

''சென்னை மவுண்ட் ரோடில் கார் ஒன்று வேகமாக வந்து கொண்டிருக்கிறது; வாலிபர் ஒருவர் அதை ஓட்டிக்கொண்டு வருகிறார்; அப்போது ரோடுக்குக் குறுக்கே வந்த யுவதி ஒருத்தியின் மேல் கார் மோதி விடுகிறது; காரில் அடிபட்டு அவள் கீழே விழுந்து விடுகிறாள்; போலீஸார் வந்து அவளை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விட்டு, டிரைவரைக் கைது செய்கிறார்கள் - இந்தச் செய்திக்கு நீங்கள் என்ன தலைப்புக் கொடுப்பீர்கள்?'' என்று அந்தப் பத்திராதிபர் என் அண்ணாவைக் கேட்டாராம். அண்ணா, ''மவுண்ட் ரோடில் கார்விபத்து; டிரைவர் கைது!'' என்று கொடுப்பேன்!'' என்றானாம்; ''இப்படித் தலைப்புக் கொடுத்தால் அந்தச் செய்தியை யார் படிப்பார்கள்?'' என்றாராம் பத்திராதிபர்; 'எப்படிக் கொடுக்கவேண்டும்?' என்று கேட்டானாம் அண்ணா; ''பருவப் பெண்ணின் பாவாடையில் ரத்தம்; வாலிபர் கைது!'' என்று கொடுக்க வேண்டும் - என்ன கொடுப்பீர்களா, இம்மாதிரியே ஒவ்வொரு செய்திக்கும்?'' என்றாராம் பத்திராதிபர். என் அண்ணாஎழுந்து முடியாதய்யா! பருவப் பெண்ணின் பாவாடையிலும், அவள் பாவாடையில் படும் ரத்தத்திலுமே கவனம் செலுத்திக் கொண்டிருக்க என்னால் முடியாதய்யா! -

வணக்கம்; வருகிறேன்!'' என்று இரு கைகளையும் ஓங்கி அடித்துக் கும்பிட்டு விட்டு ஓடியே வந்து விட்ட ானாம்.

இதை அவன் சொன்னதும் என்னுடையக் கவலைகளை யெல்லாம் மறந்து நான் விழுந்து விழுந்துச் சிரித்தேன். ஆனால் அவனோ, ''சிரிக்காதே!'' என்று தன் அடித்தொண்டையிலிருந்து கத்தினான், அளவு கடந்த ஆத்திரத்துடன்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை; ''என்ன அண்ணா, என்ன?'' என்றேன் திடுக்கிட்டு.

''சிரிக்க வேண்டிய விஷயமா, இது? 'தூ' என்று காரித் துப்ப வேண்டிய விஷயமல்லவா, இது? - இந்தப் பத்திரிகையைத் தான் என் அருமைத் தமிழ் மக்கள் லட்சக்கணக்கில் வாங்கிப் படிக்கிறார்களாம் நறுமணம், லட்சக்கணக்கில் வாங்கிப் படிக்கிறார்களாம்! இதே பத்திரிகை தான் தமிழையும், தமிழ்மக்களையும் - ஏன், இந்த தமிழ் நாட்டையுமே காப்பாற்றப் போகிறதாம்! - பண்பு மிக்க என் பைந்தமிழ் நாடே, உனக்கா இந்த கதி?'' என்று அடிமேல் அடியாகத் தன் ஆத்திரம் தீரும் வரை அடிவயிற்றில் அடித்துக் கொண்டான் அவன்!

இதற்கே இந்த அளவுக்கு உணர்ச்சி வசப்படும் இவனிடம் மாமாவின் அசட்டுத் தனத்தைப் பற்றிச் சொல்லி யிருந்தால் என்ன ஆகியிருக்கும்? - அதை நினைக்கவே பயமாயிருந்தது எனக்கு.

✧ ✧ ✧

ஆனானப்பட்ட ஏசுநாதராலும் புத்த பிரானாலும் - ஏன், காந்தி மகானாலும் கூடச் சீர்திருத்திவிட முடியாத இந்த உலகத்தை, அதன் மக்களை என் அண்ணாவா சீர்திருத்தி விடப் போகிறான்? - எனக்கு நம்பிக்கை

இல்லை; எனவே, எடுத்ததற்கெல்லாம் அவன் உணர்ச்சி வசப்படுவதும் எனக்குப் பிடிக்கவில்லை.

'தமிழ், தமிழ்' என்று அவன் முழங்கட்டும்; 'தமிழன் தமிழன்' என்று அவன் மார் தட்டட்டும்; 'தமிழ்நாடு, தமிழ்நாடு' என்று அவன் தோள் கொட்டட்டும் - அதற்காக நான் வருந்தவில்லை. ஆனால், எதைச் செய்தாலும் அதை வாணிப நோக்கத்தோடு செய்வதல்லவா இந்தக் காலத்து வாழ்க்கையில் வெற்றியடைய வழி? - அதை அவன் புரிந்து கொள்ளாமலிருந்ததுதான் எனக்கு வருத்தமாயிருந்தது.

இதை ஒரு நாள் அவனிடம் நான் மனம் விட்டு தெரிவித்த போது, "அதனாலென்ன, நறுமணம்? இன்று நான் இந்த உலகத்தில் வாழாவிட்டாலும், எல்லோருடைய உள்ளங்களிலும் என்றாவது ஒரு நாள் வாழ்வேன்!" என்றான் அவன், நம்பிக்கையுடன்.

பைத்தியக்காரன்! - வேறென்ன சொல்வது, அவனைப் பற்றி? - அதாவது, அவன் என்ன நினைக்கிறான் தெரியுமா? - ஏசு, புத்தர், காந்தி போன்றவர்கள் அன்று இந்த உலகத்தில் வாழாவிட்டாலும், இன்று எல்லோருடைய உள்ளங்களிலும் வாழ்வதாக நினைக்கிறான்!

இதை நீங்கள் நம்புகிறீர்களா? - இல்லை; இதை நான் நம்பவில்லை. பார்க்கப் போனால் அவர்கள் யாருடைய உள்ளங்களிலே வாழ்கிறார்கள்? - அவர்களைக் கொண்டு யாரால் பிழைக்க முடிகிறதோ, அவர்களைக் கொண்டு யாரால் இந்த உலகத்தை ஏமாற்ற முடிகிறதோ, அந்தப் புண்ணியாத்மாக்களின் உதடுகளிலேதான் அவர்கள் வாழ்கிறார்கள்.

இதற்கும் உதாரணம் வேண்டுமானால் வேறெங்கும் போகவேண்டியதில்லை; என்னுடைய வாழ்க்கையில் பங்கு கொண்ட அந்தப் பேராசிரியரை எடுத்துக் கொண்டாலே போதும்.

ஒருநாள் இரவு; ஆழ்ந்தத் தூக்கத்திலிருந்த அவர், "முடியாது! நானாவது, எனக்குக் கிடைத்த வருமானத்தில் உனக்குப் பங்கு கொடுப்பதாவது? முடியாது; முடியவே முடியாது!" என்று அலறினார். நான் என்னமோ, ஏதோ என்று பயந்துபோய் அவரை எழுப்பினேன் - அவ்வளவு தான்; ஆத்திரத்துடன் அவர் எழுந்து உட்கார்ந்து, 'அடே வள்ளுவா! யார் என்று நினைத்தாய், என்னை? உன்னுடைய தாடியைப் பிய்த்து எறிந்து விடுவேன், ஜாக்கிரதை! உன்னாலா எனக்குப் பொருளும் புகழும் கிடைத்தன? இல்லை; இல்லவே இல்லை. என்னைப் போன்ற உரை யாசிரியர்களால் தான் உனக்கு பொருள் கிடைக்கா விட்டாலும் புகழாவது கிடைத்தது, கிடைத்து வருகிறது என்பதை நீ நினைவில் வைத்துக் கொள்! இரண்டே வரிகளில் நீ எழுதிவிட்டுச் சென்ற குறளுக்குப் பக்கம் பக்கமாக விளக்கம் எழுத நான் என்ன பாடுபட்டிருக்கிறேன் தெரியுமா? இல்லாவிட்டால் அன்று ஓரணா, இரண்டனாவுக்குக் கூட வாங்குவார் இல்லாமலிருந்த உன்னுடையக் குறளை, இன்று ஒரு ரூபாயிலிருந்து பத்து ரூபாய் வரை விலை வைத்து விற்க முடியுமா? அதன் மூலம் ஆயிரக்கணக்கான ரூபாய்களைத் தான் ஆதாயமாக அடைய முடியுமா? இதைப் புரிந்து கொள்ளாமல் என்னுடைய தொண்டை "தூங்கியவன் தொடையில் கயிறு திரிக்கும் தொண்டு, என்று சொல்ல என்னத் துணிச்சல், உனக்கு? மாட்டேன்; ஒரு காசு கூட உனக்கு நான் கொடுக்க மாட்டேன்!" என்று கையை இறுக மூடி, இரண்டு கால்களுக்கும் இடையிலிருந்த இடுக்கிலே வைத்துக் கொண்டு கத்தினார், சிறு பிள்ளைத் தனத்துடன்!

நான் சிரித்தேன்; சிரித்துவிட்டு, "இங்கே பாருங்கள் - நான் வள்ளுவன் இல்லை; உங்கள் நறுமணம்!" என்றேன்.

அவர் தம் கண்களை கசக்கி விட்டுக் கொண்டு என்னை ஒரு முறைக்கு இருமுறையாக ஏற இறங்கப்

பார்த்தார். பிறகு, ''நல்லவேளை, எல்லாம் வெறும் கனவுதானா?'' என்று பெருமூச்செறிந்தார்.

''அப்படி என்ன நடந்து விட்டது, உங்கள் கனவில்?'' என்றேன், நான்.

''அந்த வள்ளுவன் இல்லை, வள்ளுவன் - அவன் இன்று என் கனவில் வந்தான்!''

''வந்து?''

''அவன் எழுதிய குறளுக்கு நான் ஒன்றுக்கு இரண்டாக உரைஎழுதி விட்டேனாம்!''

''இரண்டு உரைகளா?''

''ஆம் இரண்டு உரைகளென்ன, வாங்குவதற்கு ஆள் இருந்தால் இருநூறு உரைகள் கூட நான் எழுதுவேன் - அதைக் கேட்க இவன் யார்?''

''அவர்தானே மூலகர்த்தா?''

''யாருக்கு எது மூலம் என்று யார் கண்டார்கள்? என்னமோ அவன் பெயருக்கு இப்போது ஒரு மௌசு ஏற்பட்டிருக்கிறது; அதை வைத்துக் கொண்டு பொருள் ஈட்டுவதும் என்னைப் போன்றவர்களுக்கு எளிதாயிருக்கிறது!''

''அந்தப் பொருளில்தான் அவர் தமக்குரியப் பங்கைக் கேட்கிறாராக்கும்?''

''ஆம், இன்று நம் விற்பனையாளரிடமிருந்து முப்பதினாயிரம் ரூபாய்க்குச் 'செக்' வந்ததல்லவா? அதில் பதினைந்தாயிரம் ரூபாய் அவனுக்கு வேண்டுமாம் - இனி யார் அவனுடைய குறளுக்கு உரை எழுதாமலிருக் கிறார்களோ, அவர்களுக்குப் பரிசு கொடுக்க!''

''தேவலையே, இனி நீங்கள் உரை எழுதிப் பொருள் ஈட்டுவதற்குப் பதிலாக உரை எழுதாமலே பொருள் ஈட்டி விடலாம் போலிருக்கிறதே?''

''உனக்குத் தெரிந்தது அவ்வளவுதான்! அவன் கொடுக்கும் பதினைந்தாயிரம் ரூபாய் பரிசுக்காக ஆண்டு தோறும் முப்பதினாயிரம் ரூபாய் ஆதாயம் கிடைக்கும் அருமையான தொழிலை நாம் விட்டுவிட முடியுமா, என்ன? - அதிலும், அந்தப் பதினைந்தாயிரம் ரூபாயைக் கூட அவன் ஒரே ஒருவருக்குக் கொடுக்கப் போவதில்லையாம்; எல்லா உரையாசிரியர்களுக்கும் பகிர்ந்தளிக்கப் போகிறானாம்! - அப்படித்தான் கொடுக்கிறானே, அதை எந்தவிதமான நிபந்தனையும் இன்றியாவதுக் கொடுக்கிறானா என்றால் அதுவும் இல்லை; அவன் கொடுக்கும் தொகையைக் கொண்டு ஆளுக்கொருக் கைத்தறி வாங்கி வைத்துக் கொள்ள வேண்டுமாம், அவனைப் போலவே 'இழை நீக்கி'ப் பிழைக்க! - இதெல்லாம் நடக்கக்கூடிய காரியமா, இந்தக் காலத்தில்?''

''நடக்காது, நடக்காது! அறிவைக் கூடக் காசுக்குத் தக்கபடி அளந்து கொடுக்கும் காலமாச்சே, இது?'' என்றேன், நான்.

''ஒன்று வேண்டுமானால் செய்யலாம் - உடலுழைப்பைப் பற்றியும், அதன் உயர்வைப் பற்றியும் ஓரிரு புத்தகங்கள் வேண்டுமானால் எழுதலாம்; ஐந்து ரூபாயோ, ஆறு ரூபாயோ விலையும் வைக்கலாம்; ஆண்டொன்றுக்கு ஆறாயிரம் படிகளாவது விற்பனையாகும்!'' என்றார் அவர்.

'' இதை நீங்கள் வள்ளுவரிடம் சொல்லவில்லையா?''

''சொன்னேன்; அவன்தான் 'இலக்கியத்தைச் சந்தைக்குக் கொண்டு வராதே!' என்று ஒரே அடியாக அடிக்கிறானே?''

''அப்படிப்பட்டவரை நீங்கள் ஏன் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடுகிறீர்கள்?''

''பைத்தியக்காரி! இன்று நமக்குக் கிடைத்த முப்பதினாயிரம் ரூபாய் செக்கில் அந்த ரகசியம் தானே அடங்கிக் கிடக்கிறது?'' என்று கூறிச் சிரித்தார் அவர்.

இதிலிருந்து என்னத் தெரிகிறது? - வள்ளுவர் யாருடைய உள்ளத்தில் வாழ்ந்தாலும் வாழாவிட்டாலும் இவரைப் போன்றவர்களின் உள்ளங்களிலே வாழவில்லை; உதடு களிலே தான் வாழ்கிறார் என்று தெரியவில்லையா? - இதைப் புரிந்துக் கொள்ளாமல் தான் தனக்குக் கிடைக்காமல் கிடைத்த ஓரிரு வேலைகளைக் கூட என் அண்ணா வெறுக்காமல் வெறுத்து ஒதுக்கிவிட்டு வந்து விட்டான்.

தந்தை இருக்கிறார் என்ற தைரியத்தில் வேண்டுமானால் அவன் இப்படியெல்லாம் நடந்து கொள்ளலாம்; மாமா இருக்கிறார் என்ற தைரியத்தில் அவன் இப்படியெல்லாம் நடந்து கொள்ளலாமா? - அதிலும், அந்த மாமா அசட்டு மாமாவாயிருக்கும் போது?

எனக்கு ஒன்றுமே புரியவில்லை; ''ஏன் அண்ணா' உன்னால் வேலைக்குப் போக முடியவில்லையென்றால் சொல்லிவிடு; நானாவது வேலைக்குப் போகிறேன்!'' என்றேன் நான், ஒருநாள் அவனிடம்.

''என்ன வேலைக்குப் போவாய், நீ?'' என்று கேட்டான், அவன்.

''ஏதாவது ஒரு வேலைக்கு; இனி என்னால் ஒரு கணம் கூட இங்கே இருக்க முடியாது!''

''ஏனாம்?''

இதற்கு நான் என்ன சொல்வேன்? - 'இன்னும் நாம் என்ன பச்சைக் குழந்தைகளா, இன்னொருவருக்குப் பாரமாயிருக்க?'' என்று சொல்லி வைத்தேன்.

உண்மையில் அந்தச் சம்பவம் நடந்த அன்றிலிருந்து எனக்கு அங்கே இருக்கத்தான் பிடிக்கவில்லையென்றால் சாப்பிடக் கூடப் பிடிக்கவில்லை. பாட்டிக்கும் மாமிக்கும் பயந்து மாமா வாங்கிக் கொடுத்த ஆடையணிகளை வேண்டுமானால் வேண்டா வெறுப்பாக அணிந்துக் கொண்டிருக்கலாம்; அவர்களுக்குப் பயந்து சாப்பிட்டுக் கொண்டும் இருக்க வேண்டுமென்றால்' - அந்த வீடே நரகமாயிருந்தது, எனக்கு.

இந்தக் கஷ்டத்திலிருந்து விடுதலையடைய வேண்டு மானால், எனக்கிருந்த வழிகள் இரண்டே இரண்டுதான் - அவற்றில் ஒன்று, என் அண்ணாவும் நானும் உடனடியாகத் தனிக்குடித்தனம் ஆரம்பிப்பது; இன்னொன்று சென்னையி லிருக்கும் சித்தியைத் தேடிச் சென்று, அவளிடம் சரணாகதி அடைந்துவிடுவது - வேறு வழி? - அப்பாதான் 'ஸ்ரீமான் தர்மசங்கட'மாகப் போய்விட்டாரே?

இந்த இரண்டில் ஏதாவது ஒரு முடிவுக்குச் சீக்கிரம் வந்து விடவேண்டும் என்பதற்காகவே என் அண்ணாவை நான் அடிக்கடி 'வேலை, வேலை' என்று நச்சரித்து வந்தேன்; அத்துடன், அவன் வேலைக்குப் போகாவிட்டால் நான் வேலைக்குப் போய்விடுவேன் என்று பயமுறுத்தியும் பார்த்தேன் - அவனோ எதற்கும் அசைந்து கொடுப்பவனா யில்லை 'பிழைத்தால் தன்மானத்தோடுதான் பிழைப்பேன்!' என்று சொல்லி, என் மானம் பறிபோவதைப் பற்றி ஏதும் அறியாதவனாயிருந்து வந்தான்!

இந்த நிலையில் நான் என்ன செய்வது? அண்ணா பெங்களூருக்கு வர அப்பாவை ஏமாற்றியது போல நானும்

சென்னைக்கு செல்லப் பாட்டியை ஏமாற்றுவதென்று தீர்மானித்தேன். இந்தத் தீர்மானத்துடன் ஒருநாள் அவளை நெருங்கி, ''பாட்டி, பாட்டி! எனக்கு அப்பாவைப் பார்க்க வேண்டும் போலிருக்கிறது, பாட்டி! சென்னைக்குப் போய் விட்டு வருவோமா?'' என்றேன், நான்.

''அவள் வீட்டுக்கா? அதுதான் இனி நடக்காது!'' என்று ஒரேயடியாக அடித்து விட்டாள், அவள்.

அதற்குப் பிறகு நான் என்ன செய்வது அண்ணாவையே ஏமாற்றுவதென்று தீர்மானித்து, ''அண்ணா, அண்ணா! எனக்கு அப்பாவைப் பார்க்க வேண்டும் போலிருக்கிறது, அண்ணா! சென்னைக்குப் போய் வருவோமா?'' என்றேன் நான்.

அவன் ஒரு கணம் யோசித்துவிட்டு, ''சரி, போவோம். எனக்கும் அங்கே சிலரைப் பார்க்க வேண்டியிருக்கிறது, வேலை விஷயமாக!'' என்றான், மறுகணம்.

அன்றிரவு...

நான் சென்னைக்குச் செல்லத் தயாராகிக் கொண்டிருந்த போது, என் மாமா தயங்கித் தயங்கி எனக்குப் பின்னால் வந்தார்; நானும் தயங்கித் தயங்கி மேலே இரண்டடிகள் எடுத்து வைத்து, அவரைத் திரும்பிப் பார்க்காமலேயே நின்றேன்.

''நறுமணம்!'' என்றார் அவர், குழைவுடன்.

'ஏன்?' என்று நான் கேட்கவில்லை; பேசாமல் நின்றேன்.

''இத்தனை நாளும் இல்லாமல் இன்று ஏன் சென்னைக்குப் போகிறாய் என்பது எனக்குத் தெரியும்!'' என்றார் அவர்.

நான் வாயைத் திறக்கவில்லை; தலையை மட்டும் கவிழ்த்துக் கொண்டேன்.

உண்மையில் நீ உன் அப்பாவைப் பார்ப்பதற்காகப் போகவில்லை; என்னை விட்டு எப்படியாவது பிரிந்தால் போதும் என்பதற்காகத் தான் போகிறாய்!''

இதற்கு நான் என்ன சொல்ல வேண்டுமென்று இவர் எதிர்பார்க்கிறார்? - 'இல்லை, உங்களை விட்டுப் பிரிய எனக்கு மனமில்லை!' என்று சொல்ல வேண்டுமென்று எதிர்பார்க்கிறாரா? அல்லது, 'அதெல்லாம் ஒன்றுமில்லை; அப்பாவைப் பார்ப்பதற்காகத்தான் போகிறேன்!' என்று நான் இவருக்காகப் பொய் சொல்ல வேண்டுமென்று எதிர்பார்க்கிறாரா? - ஒன்றும் புரியவில்லை எனக்கு. எனவே, அதற்கும் பேசாமலிருந்தேன்.

''எல்லாவற்றுக்கும் மௌனம்தானா? - இப்படித் தான் அன்றிரவு நடந்த அந்தச் சம்பவத்தைக்கூட நீ யாரிடமும் சொல்லாமல் மௌனம் சாதித்துவிட்டாய்! - அதற்கு என்ன அர்த்தம்? - நீ என்னை விரும்புகிறாய் என்று அர்த்தமா? இல்லை, விரும்பவில்லை என்று அர்த்தமா?''

இதைக் கேட்டதும், 'ஆ!' என்று அலறிவிடவேண்டும் போல் தோன்றிற்று எனக்கு. எனினும் அதை ஒருவாறு அடக்கிக் கொண்டேன் - 'இந்த ஆண் பிள்ளைகளே இப்படித்தான் இருப்பார்களோ?' - இவ்வாறு எண்ணி வெறுப்பும் வேதனையும் உற்றது என் மனம். அதைப் புரிந்துகொள்ளாமல் அவர் தொடர்ந்தார்:

''பேசு! நறுமணம், பேசு! - பேசாவிட்டால் உன்னுடைய இதழ்க் கடையில் எனக்காக ஓர் இளநகையாவது மின்னி மறையட்டும் - அது போதும், எனக்கு!'' என்ற சொல்லிக் கொண்டே ஆதுரத்துடன் என்னை நோக்கி, அவர் மேலும் ஓர் அடி எடுத்து வைத்தார்.

இது என்ன தொல்லை? - இரண்டு மூன்று நாட்களாக என்னை ஏறெடுத்துப் பார்க்கவே வெட்கப்பட்டுக் கொண்டிருந்து விட்டுக் கடைசியில் இப்படி ஆரம்பித்து விட்டாரே, இவர்? - இந்தத் தொல்லையிலிருந்து மீளுவது எப்படி?

இந்த அண்ணா எங்கே போய்விட்டான், என்னைத் 'தயாராயிரு!' என்று சொல்லிவிட்டு? - இந்தப் பாட்டி யாவது இங்கே இருந்து தொலைந்திருக்கக்கூடாதா? அவளுக்கு எப்போது பார்த்தாலும் சிவநாமாவளிதான்; போகிற வழிக்குப் புண்ணியம் தேடுகிறாளாம் புண்ணியம்; கண்ணுக்கு முன்னால் பாவம் செய்யத் துணிபவர்களைக் கண்ணெடுத்துக் கூடப் பார்க்காமல்! - இந்த மாமி அடிக்கொரு தரம் எதையாவது நினைத்துக் கொண்டு மாடிக்கு வருவாள் - அவளைக் கூடக் காணோமே இன்று?

இப்படி நான் எண்ணிக் கொண்டிருந்தபோது, என்னுடைய அகத்தை அவர் காணாவிட்டாலும் முகத்தை யாவது கண்டிருக்கக்கூடாதா? - அதைக் கூடக் கண்டு கொள்ளவில்லை அவர். ''நீ என்னை 'வா' என்று அழைக்கா விட்டால் என்ன, உன் கண்ணின் இமைகள்தான் என்னை 'வா, வா' என்று அழைக்கின்றனவே?'' என்று அசடு வழியச் சொல்லிக் கொண்டே என்னை நெருங்கினார்.

அதற்கு மேல் பேசாமல் இருக்க முடியுமா, என்னால்? - ''நில்லுங்கள்: உங்களைப் போன்றவர்களுக்கு இது அழகல்ல!'' என்றேன் நான்.

''அழகு அத்தனையும்தான் உன்னை அடைக்கலம் அடைந்துவிட்டதே! என்னிடம் அழகு ஏது? இந்த உலகத்தில்தான் அழகு ஏது?'' என்று அடுக்கிக் கொண்டே போனார்அவர்.

எவ்வளவு பெரிய மனிதர்! எவ்வளவுக் கீழே போய் விட்டார், என்னால்? - இதனால்தான் பெரிய மனிதர்களில் சிலரை ஆண்கள் என்னதான் மதித்தாலும், பெண்கள் மதிக்கமாட்டோம் என்கிறார்களோ? இவர்களுடைய பலவீனம் அவர்களுக்குத்தான் தெரிகிறதோ?

''மாமா! என்னுடைய அன்னையுடன் பிறந்தவர்கள் நீங்கள்; அன்னைக்குப் பிறகு அன்னையாக இருக்க வேண்டியவர்கள் நீங்கள் - அப்படிப்பட்ட உங்களை இப்படியெல்லாம் பேச வைத்தது, பேச வைப்பது என் அழகுதான் என்றால், அந்த அழகு அழிந்து போகட்டும்!'' என்று நான் அதை அவருக்கு முன்னாலேயே அழித்துக் கொள்ள அங்கேயே ஏதாவது கிடைக்குமா என்று பார்த்தேன் - ஒன்றும் கிடைக்காமற் போகவே, ''என்னை மன்னித்து விடுங்கள்; மாமிக்குத் துரோகம் செய்ய இன்று மட்டுமல்ல; என்றுமே விரும்பவில்லை நான்!'' என்று விம்மினேன்.

''தெரிந்தா செய்யச் சொல்கிறேன், தெரியாமல்தானே செய்யச் சொல்கிறேன்?''

அட, கடவுளே! பெரிய இடத்துப் பண்பு என்பது இதுதானா? - யாருக்குத் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் அது என் மனத்துக்குத் தெரியாமற் போய்விடுமா? - அந்த மனம் கணத்துக்குக் கணம், 'நீ துரோகி, நீ துரோகி!' என்று என்னை இடித்துரைக்காமல்தான் விட்டுவிடுமா?- எத்தகைய கொடுமைக்கு என்னை உள்ளாக்கப் பார்க்கிறார், இவர்?

இப்படி நினைத்தேனோ இல்லையோ, ''மாமி, மாமி!''என்று கத்தினேன், நான் –ஆம், அதைவிட வேறு வழியொன்றும் தோன்றவில்லை எனக்கு – அவரிடமிருந்து தப்ப!

அவ்வளவுதான்; ''எவ்வளவு நன்றி கெட்டவளாகப் போய்விட்டாய், நீ!'' என்று சொல்லிக் கொண்டே அவர் கொஞ்சம் பின்வாங்கினார்.

''உங்கள் உதவிக்கு என் நன்றி என்றும் இருக்கும்; அதற்காக என் இதயத்தில் உங்களுக்கென்று ஓர் இடமும் எப்போதும் இருக்கும் - நீங்கள்தான் அதை விரும்பாமல் வேறு எதையோ விரும்புகிறீர்கள்!'' என்றேன் நான் பொறுமையிழந்து.

அதற்குள் அங்கே வந்த மாமி, ''என்ன நறுமணம், என்ன வேணும் உனக்கு?'' என்று கேட்டாள்.

இங்கே இருக்கப்போவது இன்னும் கொஞ்சம் நேரம் தானே? -- அதுவரை மாமா என்னைப் பற்றி என்ன வேண்டு மானாலும் கற்பனை செய்துக் கொண்டு போகட்டும் என்று துணிந்தவளாய், ''இங்கே இருந்த சாந்தைக் காணோமே, நீங்கள் பார்த்தீர்களா?'' என்று நான் அப்போதும் சமாளித்து வைத்தேன்.

''இதற்குத்தானா என்னைக் கூப்பிட்டாய்? - இதோ இருக்கிறது பார், எடுத்துக் கொள்!''என்று சொல்லிவிட்டு அவள் திரும்பினாள்.

''இதென்ன சங்கடம், இன்னும் கொஞ்ச நேரம் இவளை இங்கேயே எப்படி இருக்க வைப்பது?' என்று நான் தவிக்கையில், ''என்ன நறுமணம், தயாராகி விட்டாயா?'' என்று கேட்டுக்கொண்டே வந்து சேர்ந்தான் அண்ணா.

'நல்லவேளை, பிழைத்தோம்!' என்று பெருமூச்சு விட்டேன் நான்.

நான் மட்டுமா, மாமாவும் பிழைத்தார் என்றுதான் சொல்லவேண்டும் - இல்லையா?

மனித உணர்ச்சிகள் ஒரு பக்கம் உயர்தரமாயிருந்தாலும் இன்னொரு பக்கம் எவ்வளவு கீழ்த்தரமாயிருக்கின்றன.

✧ ✧ ✧

ஒரு வழியாக எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு நானும் என் அண்ணாவும் வெளியே வந்தபோது, ஒரு தந்தி - அதுவும் என் அண்ணாவின் பெயருக்கு வந்திருந்த தந்தி!

வேலையில்லாத் திண்டாட்டம் மலிந்த இந்தக் காலத்தில் அண்ணாவை யார் தந்திமூலம் வேலைக்கு அழைத்திருக்கப் போகிறார்கள்? ஒரு வேளை...

நான் நினைத்தது சரிதான்; அதற்குள் அவசர அவரசமாகத் தந்தியைப் பிரித்துப் படித்துவிட்ட அண்ணா, "போய்விட்டார் நறுமணம், அப்பா நம்மைவிட்டுப் போய் விட்டார்!"என்று தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டான், "ஐயோ, அப்பா!" என்று அலறியபடி கீழே விழப்போன என்னைப் பாட்டி வந்து தாங்கிக் கொண்டாள்.

சிறிது நேர அமைதிக்குப் பிறகு நாங்கள் அனைவரும் - அதாவது மாமா, மாமி, பாட்டி உள்பட நாங்கள் அனைவரும் சென்னைக்குப் பயணமானோம். அங்கே எங்களுக்காகக் காத்திருந்த செய்தி, நாங்கள் எதிர்பார்த்த செய்தியாய்த்தான் இருந்தது- ஆம், அப்பா இயற்கை மரணம் எய்தவில்லை! தன்னைத்தானே தூக்கில் தொங்கவிட்டுக் கொண்டுவிட்டார்!

'அதனாலென்ன, அவருடைய ஆன்மா சாந்தியடையா விட்டாலும் சித்தியின் ஆன்மாவாவது சாந்தியடையாதா அது போதும் நமக்கு!' என்ற ஆறுதலுடன் நாங்கள் அவருக்காகச் செய்யவேண்டிய ஈமக் கடன்களை யெல்லாம் செய்து முடித்தோம்.

போலீசார் வந்தார்கள்; விசாரித்தார்கள்; போனார்கள் – அவ்வளவுதான்!

செத்தபிறகும் சித்தி வாழவேண்டும் என்று விரும்பியோ என்னமோ, தாங்க முடியாத வயிற்று வலியின் காரணமாகத் தன்னைத்தானே மாய்த்துக் கொண்டதாக அவரே எழுதி வைத்துவிட்டுச் சென்ற பிறகு அவர்கள்தான் யாரை என்ன செய்வது? முதலில் 'தலைவலி'யாக வந்த சித்திதான், பின்னால் அவருக்கு 'வயிற்றுவலி'யானாள் என்பதை அவர்கள் கண்டார்களா, என்ன?

எல்லாம் ஒருவழியாக முடிந்த பிறகு, என்பேரால் அப்பாவின் அலுவலகத்திலிருந்த 'பிராவிடண்ட் பண்'டை யார் வாங்குவது என்ற பிரச்சினை எழுந்தது.

''இதில் பிரச்சினைக்கு ஏது இடம்? உன் பேரால் இருக்கும் பணத்தை நீ தான் வாங்கவேண்டும்!'' என்றாள் பாட்டி.

வாங்குவது யாராயிருந்தாலும், சேருவது என்னைத் தான் சேரவேண்டும்!''என்று வரிந்து கட்டிக்கொண்டு நின்றாள் சித்தி, அந்தப் 'பண்'டுக்கென்றே அவரைக் கல்யாணம் செய்து கொண்டவள்போல!

''அதற்காகச் சண்டை வேண்டாம், நறுமணம்! அதை வாங்கி அவர்களிடமே கொடுத்துவிடு!''என்று சொல்லி விட்டான் அண்ணா.

அந்தப் பணம் கைக்கு வந்து சேர்ந்ததும், ''உங்கள் அனைவருக்கும் என் நமஸ்காரம்; நான் வருகிறேன்!'' என்று சொல்லிக் கொண்டு அவள் கிளம்பிவிட்டாள்.

''நாங்கள் உங்களுக்குச் செய்ய வேண்டிய நமஸ்காரத்தை நீங்கள் எங்களுக்குச் செய்கிறீர்கள் – சரி,

போய் வாருங்கள்!'' என்று அண்ணா விடைகொடுத்து அனுப்பினான் அந்த அபாக்கியவதிக்கு.

''இனி நீங்கள் மட்டும் இங்கே இருந்து என்ன செய்யப்போகிறீர்கள்? பேசாமல் இந்த வீட்டை விற்றுவிட்டு என்னுடன் பெங்களூர்க்கு வந்து விடுங்களேன்!'' என்றார் மாமா.

அண்ணா என் முகத்தைப் பார்த்தான் – நான் தயங்க வில்லை, ''அது எனக்கு அவ்வளவு சரியாகப் படவில்லை; அண்ணா!'' என்றேன் தைரியமாக.

''ஏனாம்''என்றார் மாமா, ஆத்திரத்துடன்.

''உங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை – இந்த அன்பு இருக்கிறதே அன்பு, அது நாம் எவ்வளவுக் கெவ்வளவு தூரம் விலகியிருக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு தூரம் இனிக்கிறது; எவ்வளவுக்கவ்வளவு தூரம் நெருங்கியிருக்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு தூரம் கசக்கிறது – இல்லையா?''என்றேன் நான்.

அவ்வளவுதான்; ''இதுதானா பேசுவாய், இதற்கு மேலேகூடப் பேசுவாய். எல்லாம் என்னால் வந்த வினை! அன்றே நான் உங்களை என் வீட்டுக்குள் நுழைய விடாமல் இருந்திருந்தால்? – இன்று நான் இந்த அவமானத்துக்கு உள்ளாக நேர்ந்திருக்குமா? இல்லை, உன்னால்தான் இப்படியெல்லாம் பேச முடிந்திருக்குமா?'' என்று பொரிந்துத் தள்ளிவிட்டு, கொஞ்சம் எட்டி நின்ற மாமியை, ''வாடி இங்கே!'' என்று கையைப் பிடித்து இழுத்து வெளியே விட்டுவிட்டு, ''நான் போகிறேன்; போனதும் உங்களுக்கும் சேர்த்து ஸ்நானம் செய்துவிடுகிறேன்!'' என்று தன் 'விஸ்வரூபத்'தைக் காட்டிவிட்டு, 'விடுவிடு'வென்று நடையைக் கட்டிவிட்டார்.

''ஒன்றும் இல்லாததற்கு இத்தனை கோபம் ஏன் இவனுக்கு? என்றாள் பாட்டி.

''ஆண் பிள்ளையல்லவா, அப்படித்தான் கோபித்துக் கொள்வார்!''என்றேன் நான்.

''என்னதான் ஆண்பிள்ளையாயிருந்தாலும் இப்படியா? எனக்கு ஒன்றும் புரியவில்லையே?''என்றான் அண்ணா.

''புரியும்போது புரிகிறது; அதைப்பற்றி இப்போது என்ன?'' என்று நான் அவனிடம் சொல்லிவிட்டு, ''சரி, நீங்கள்!''என்றேன் பாட்டியை நோக்கி,

''என்னையும் பெங்களூருக்கு அனுப்பிவைத்துவிடப் பார்க்கிறாயா, என்ன? – அதுதான் நடக்காது. உனக்குக் கல்யாணம் ஆகும்வரை நான் இங்கிருந்து நகரமாட்டேன்'' என்று இருகால்களையும் நீட்டி உட்கார்ந்துவிட்டாள் அவள்!

✧ ✧ ✧

சென்னைக்கு வந்து சேர்ந்ததும் என் அண்ணா யாரைப் பார்த்தானோ என்னமோ, எப்படியோத் தனக்கென்று ஒரு வேலையைத் தேடிக்கொண்டு விட்டான் – என்ன வேலை என்கிறீர்களா, அவனுக்குப் பிடித்த உதவி ஆசிரியர் வேலைதான்!

ஆனால், அந்த வேலையில் சேருவதற்கு முன்னால் அவனுக்கு இருந்த உற்சாகம் பின்னால் இல்லை – ''ஏன் இந்த மாற்றம்''என்று கேட்டதற்கு, அவன் சொன்னான்:

''பத்திரிகைத் துறையில் புத்திசாலிகள் தேவைப்படவில்லை; முட்டாள்கள்தான் தேவைப்படுகிறார்கள்.''

நான் சிரித்தேன்; ''ஏன் சிரிக்கிறாய்?''என்று கேட்டான் அவன்.

''முட்டாளாயிருக்கக் கூடப் புத்திசாலித்தனம் தேவை என்று உனக்குத் தெரியவில்லையே, அண்ணா!'' என்றேன் நான்.

"உண்மை; நீ சொல்வது முற்றிலும் உண்மை - முட்டாளாயிருக்கக்கூடப் புத்திசாலித்தனம் தேவையாய்த் தான் இருக்கிறது! எங்களுடைய அலுவலகத்தைத்தான் எடுத்துக்கொள்ளேன்; என்னுடன் சேர்ந்து ஏழுபேர் அங்கே உதவி ஆசிரியர்களாக இருக்கிறோம் - ஆனால் வேலையோ இருவருக்குத்தான்!"

"பாக்கியுள்ள 'பஞ்ச பாண்டவர்கள்' என்ன செய்கிறார்கள்?"

"அவர்களில் ஒருவர் ஆசிரியரை வளைய வளைய வந்து கொண்டிருப்பார் - அவர் சிரித்தால் இவரும் சிரிப்பார்; அவர் அழுதால் இவரும் அழுவார்; அவர் தும்மினால் இவரும் தும்முவார்; அவர் கனைத்தால் இவரும் கனைப்பார். இப்படியாகத்தானே அவருடைய காலம் கழிந்துகொண்டிருக்கிறது!"

"மீதமுள்ள கட்டில் கால்கள்?"

"பன்னிரண்டு மணிக்குவந்து அலுவலகத்தின் நாற்காலிகளை அலங்கரிக்கின்றன; ஒரு மணிவரை ஓசியில் கிடைக்கும் பத்திரிகைகளையெல்லாம் ஒரு புரட்டுப் புரட்டுகின்றன; ஒன்றரை மணிவரை 'சிற்றுண்டி' என்ற பேரால் ஒரு பேருண்டி! - அதற்குப்பின் எதிர்த்தாற் போலிருக்கும் மேஜையின்மேல் இரு கால்களையும் தூக்கிப்போட்டுக்கொண்டு, அப்படியே நாற்காலியின் மேல் சாய்ந்து விடுகின்றன!"

"வேலை செய்த அலுப்புத்தீரவா?"

"இல்லை, உண்ட களைப்புத்தீர!"

"இவர்களை ஆசிரியர் கவனிப்பதில்லையா?"

"கவனித்து என்ன செய்ய? இவர்கள் எழுதுவதையோ மக்கள் விரும்பிப் படிப்பதில்லை; எனவே அவரே

இவர்களை ஒன்றும் எழுதவேண்டாம் என்று சொல்லிவிட்டார்!''

''அதை அவர்கள் அவமானமாகக் கருதவில்லையா?''

''ஊஹூம்; உடம்பில் ஏதாவது இருந்தால்தானே?- சில சமயம் நான் விளையாட்டாக அவர்களைக் கிள்ளிக்கூடப் பார்ப்பதுண்டு - வலிப்பதில்லை!''

''அட, கடவுளே! எழுத்தாளனின் லட்சணம் இதுதானா? ''மாதம் பிறந்தால் ஐந்நூறு, அறுநூறு என்று சம்பளம் வாங்கும் லட்சணத்தைத் தவிர வேறு என்ன லட்சணம் வேண்டும் ஓர் எழுத்தாளனுக்கு என்று அவர்கள் கேட்கிறார்கள்!''

''வேடிக்கையாக இருக்கிறதே, இது?''

''இதைவிட வேடிக்கை இன்னொன்று இருக்கிறது!''

''அது என்ன வேடிக்கை, அண்ணா?''

''மக்கள் விரும்பிப் படிக்கும் முறையில் எழுதும் வன்மை வாய்ந்த பேனா மன்னர்கள் சிலர் வெளியே இல்லையா?- அவர்கள் எழுதும் கதை, கட்டுரைகளைப் பிரசுரத்துக்கு ஏற்றதா, இல்லையா என்று தீர்மானிக்கும் பொறுப்பை ஆசிரியர் பெருமான் இந்தக் கட்டில் கால்களிடம் ஒப்படைத்திருக்கும் வேடிக்கைதான், அது!''

''உண்மையாகவா?''

''அதிசயம்; ஆனால் உண்மை!''

''சவரத் தொழிலாளி சஸ்திர சிகிச்சை செய்வது போலல்லவா இருக்கிறது இது?''

''அந்தச் சிகிச்சைக்கும் உடன்பட வைக்கிறதே பேனா மன்னர்களில் சிலரைப் பீடித்துள்ள வறுமை, அதை நினைத்தால்தான் எனக்கு வருத்தமாயிருக்கிறது. அத்துடன்

நீ சொன்னாயே, 'முட்டாளாயிருக்கக் கூடப் புத்திசாலித் தனம் தேவைப்படுகிறது என்று – அதுவும் சரியென்று தோன்று கிறது எனக்கு. இல்லாவிட்டால், 'எத்தனை வகையில் ஆசிரியர் எங்களை அவமதித்தாலும் சரி, அவராகவே என்றாவது ஒரு நாள் துணிந்து எங்கள் கழுத்தில் கைவைக்கா தவரை, நாங்கள் இருக்கும் இடத்தைவிட்டு நகர மாட்டோம்!'' என்ற பிடிவாதத்துடன் அந்தக் கட்டில் கால்கள் அங்கு உட்கார்ந்திருக்குமா?''

''என்னமோ, அவற்றில் ஒன்றாக நீயும் ஆகிவிடாம லிருந்தால் சரி!''என்றேன் நான்.

''அந்த நிலை வரும்போது நான் நிச்சயம் அங்கே இருக்கமாட்டேன் – இது உறுதி! என்றான் அண்ணா.

இந்தச் சமயத்தில் தெருக்கதவை யாரோ'தடதட' வென்று இடிக்கும் சத்தம் கேட்கவே, ''யார் அது''என்று கேட்டுக்கொண்டே அண்ணாவிரைந்தான்.

வந்திருப்பவர் யாராயிருக்குமோ, என்னமோ என்று நான் உள்ளே சென்றேன்.

கதவு திறக்கும் சத்தம் என் காதில் விழுந்தது. அதைத் தொடர்ந்து, ''நம்பி என்பவர் நீர்தானா?'' என்று வந்தவர் உறுமும் சத்தமும் எனக்குக் கேட்டது.

''ஆம், நான்தான்!''என்றான் அண்ணா, அமைதியாக.

''என்னுடைய நூலுக்கு மதிப்புரை எழுதியவர் நீர் தானே?''

''எத்தனையோ நூல்களுக்கு எழுதுகிறேன்; அவற்றில் எந்த நூல் உங்களுடைய நூல் என்றுத் தெரியவில்லையே, எனக்கு!''

''சகோதரிக்கு' என்று நான் எழுதிய அறிவியல் நூலுக்கு நீர்தானே மதிப்புரை எழுதினீர்?''

''ஆம்; அதன் ஆசிரியர் பெருமான் நீங்கள்தானோ?''

நானேதான்!

''வாருங்கள்; வந்து அமருங்கள்!''

அண்ணாவின் அழைப்பை ஏற்றுக்கொண்டு உள்ளே வந்தவர், நாற்காலியைத் தாமே 'டர்'ரென்று இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தார்.

''அப்பா! என்ன உஷ்ணம், என்ன உஷ்ணம்!'' என்று சொல்லிக்கொண்டே, என் அண்ணாவும் அவருக்கு எதிர்த்தாற்போல் உட்கார்ந்தான்.

வந்தவர் முறைத்தார்; ''உங்களைச் சொல்லவில்லை! வெளியே காயும் வெய்யிலைச் சொல்கிறேன்!''என்று சொல்லிக்கொண்டே அண்ணா விசிறியை எடுத்து அவரிடம் நீட்டியபடி, ''அம்மா, நறுமணம்! ஐயாவுக்குக் கொஞ்சம் குளிர்ந்த நீர் இருந்தால் கொண்டுவந்து கொடுக்கிறாயா?'' என்றான் வினயத்துடன்.

''எனக்கு விசிறியும் வேண்டாம்; உங்கள் வீட்டுக் குளிர்ந்த நீரும் வேண்டாம் - இப்படித்தான் மதிப்புரை எழுதுவதா? இல்லை, கேட்கிறேன்; இதற்குத்தானா பெயர், மதிப்புரை என்று?'' எனக் கேட்டுக்கொண்டே, தம் கோட்டுப் பைக்குள் திணித்து வைத்திருந்த ஏதோ ஒரு பத்திரிகையைப் பிடுங்கி எனக் அண்ணாவுக்கு முன்னால் விட்டெறிந்தார் அவர்.

''அப்படி என்ன எழுதிவிட்டேன், இதில்?''என்று பதிலுக்குக் கேட்டுக்கொண்டே, அண்ணா அந்தப் பத்திரிகையை எடுத்துப் பிரித்தான்.

''அதற்குள் மறந்துவிட்டீரா? - இப்படிக் கொடும் என்ன எழுதியிருக்கிறீர் என்று நானே உமக்குப் படித்துக்

காட்டுகிறேன்!'' என்று அவன் கையிலிருந்த பத்திரிகையைப் பிடுங்கி அவரே வாசித்தார்.

''தமிழர்கள் அறிவில் சிறந்தவர்கள் என்று ஒரு பக்கம் சொல்கிறார்கள்; இன்னொரு பக்கம் தமிழில் பெருகி வரும் அறிவியல் நூல்களை அவர்கள் தட்டாமல் வாங்கிப் படித்துக் கொண்டே இருக்கிறார்கள். இதைப்பார்க்கும் போது தங்களுக்குள்ள அறிவில்கூடத் தமிழர்களுக்கு ஐயம் தோன்றிவிட்டதோ என்று நமக்கு ஐயுறத் தோன்றுகிறது!

இப்படிச் சொல்லும்போது தமிழில் அறிவியல் நூல்களே வரக்கூடாது என்று சொல்லவில்லை. வரவேண்டும்; நிறைய வரவேண்டும். ஆனால் எத்தகைய அறிவியல் நூல்கள் தமிழில் வரவேண்டும்? சகோதரிக்கு, சகோதரனுக்கு, அப்பாவுக்கு, அம்மாவுக்கு,ஆட்டுக் குட்டிக்கு, பூனைக்குட்டிக்கு என்பது போன்ற மனித வாழ்வு பற்றிய அறிவியல் நூல்களா? அவற்றுக்கா தமிழில் பஞ்சம்,தமிழ்நாட்டில் பஞ்சம்? அவைதான் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழில்வேண்டிய மட்டும் வந்துவிட்டனவே! உதாரணத்துக்குச் சொல்லப்போனால் 'திருக்குறள்' ஒன்று போதாதா, வாழ்வுபற்றிய அறிவியலுக்கு? – 'போதும்!' என்றே நாம் நினைக்கிறோம்.

எனவே, தமிழில் அறிவியில் நூல்கள் வரவேண்டு மானால் பௌதிகத்தில் வரட்டும்; ரசாயனத்தில் வரட்டும்; விஞ்ஞானத்தில் வரட்டும் - வரவேற்கிறோம்; வாழ்த்து கிறோம் அவற்றுக்குப் பதிலாக 'அறிவியல் நூல் என்ற பேரால் வரும் இதுபோன்ற 'அதிகப் பிரசங்கித்தனமான நூல்களை நாம் வரவேற்பதற்குமில்லை; வாழ்த்துவதற்கு மில்லை!

ஏனெனில், அறிவு என்பது மனிதனுக்கு மட்டுமல்ல; இந்த உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளுக்குமே உண்டு. ஆகவே, அவரவர்களுக்கு உரிய அறிவைக் கொண்டு

அவரவர்களே பிழைத்துக் கொள்வார்கள். தாங்கள் பிழைக்க வேண்டும் என்பதற்காக அவர்களைப் பிழைக்க வைக்கும் திருப்பணியில் யாரும் இறங்க வேண்டிய தில்லை; அதற்கு அவர்களை 'மடையர்'களாக்கி தங்களைத் தாங்களே 'புத்திசாலி'களாக்கிக் கொள்ள வேண்டியதில்லை!

இந்நூலாசிரியர் கூறுகிறார், ''எதிர்காலத்தில் திருமணம் போன்ற சடங்குகள் மறைந்து, ஆணும் பெண்ணும் ஒருவர் மேல் ஒருவர் கொண்ட நட்பை வைத்துக்கொண்டே சேர்ந்து வாழ ஆரம்பித்துவிடுவார்கள்!'' என்று – எப்படி ஆராய்ச்சி? தாயென்றும் சேயென்றும் பாராமல், தங்கையென்றும் தமக்கையென்றும் பாராமல் கூடிவாழ்ந்த அந்தக் காட்டு மிராண்டிக் காலத்தை நோக்கித் தமிழ் மக்கள் திரும்ப வேண்டுமென்று நினைக்கிறாரா, இவர்? வருந்துகிறோம்; ஒரு கல்லூரிக்குப் பேராசிரியராயிருக்கும் இந்நூலாசிரியர் இப்படியெல்லாம் எழுதுவதற்காக வருந்துகிறோம்.

வேண்டாம், இந்த விபரீதம்! இனியாவது எதிர் காலத்தைக் கணிக்கும் வேலையை 'மரத்தடி ஜோசியர்களிடம் விட்டுவிட்டு, நிகழ்காலத்தைக் கணிக்கும் வேலையில் இவர் ஈடுபடட்டும் – தமிழுக்கு நல்லது; தமிழனுக்கும் நல்லது.

அதற்காக 'வரலாறு' என்ற பேரால் 'இறந்தகாலத்தைத் திரும்பிப் பார்த்து, செத்துப் புதைத்த பிணத்தை மீண்டும் தோண்டி எடுத்து, 'ஆகா! இதன் பெருமையே பெருமை! அருமையே அருமை!' என்று காட்டும் 'வெட்டியான் வேலை'யில் இவர் இறங்கிவிடாமல் இருப்பாராக!'

—நம்பி.

இந்தப் பகுதியை இரைந்து படித்துவிட்டு, "இப்போ தாவது தெரிந்ததா, நீர் என்னைப் பற்றியும் என்னுடைய நூலைப் பற்றியும் என்ன எழுதியிருக்கிறீர் என்று கேட்டார் அவர்.

"இது சுதந்திர யுகம் – இந்த யுகத்தில் எதைப்பற்றியும் யாரைப் பற்றியும் என்னுடைய சொந்தக் கருத்தை வெளியிட எனக்குச் சுதந்திரமுண்டு; அந்தச் சுதந்திரத்தைத்தான் நீங்கள் இதில் காண்கிறீர்கள் – வேறொன்றுமில்லை!" என்றான் அண்ணா.

"நீரும் உம்முடைய சுதந்திரமும் நாசமாய்ப் போகட்டும்!" என்று தம் கையிலிருந்த பத்திரிகையைக் கிழித்து எறிந்துவிட்டு எழுந்த அவர், கதவுக்குப் பின்னால் நின்று தலையை நீட்டியபடி இருந்த என்னைக் கண்டதும், "நீயா!" என்று வாயெல்லாம் பல்லாக இளித்தார்!

ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அடித்து வீழ்த்த உங்களால் முடியுமா? முடியுமென்றால், உங்களாலும் 'எல்லார்க்கும் நல்லவ'ராக வாழமுடியும்.

உதாரணமாக, ஒருவன் திருடுகிறான்; இன்னொருவன் திருடப்படுகிறான். இவர்கள் இருவரையும் பற்றி 'எல்லார்க்கும் நல்லவ'ராக வாழ விரும்புபவர் என்ன சொல்கிறார்?– திருடுவது திருடுபவனின் குற்றமல்ல; அவனைத் திருடக்கூடிய நிலையில் வைத்திருக்கும் அரசாங்கத்தின் குற்றம் என்கிறார்; இதனால் திருடனின் ஆதரவு அவருக்குக் கிடைக்கிறது. அடுத்தாற்போல் திருடப் படுபவனைப் பற்றி அவர் என்ன சொல்கிறார்? – 'அரசாங்கத்தின் கையாலாகாத்தனம் இது; அது திருடு பவனிடமிருந்து திருடப்படுபவனைக் காக்கத் தவறி விட்டது' என்கிறார். இதனால் திருடப்படுபவனின் ஆதரவும் அவருக்குக் கிடைக்கிறது. – இந்த ஆதரவைக் கொண்டு ஒற்றைக்கு இரட்டையாக ஆதாயம் அடைபவர்

யார் என்கிறீர்கள் - திருடனா, திருடப்படுபவனா? இருவரும் இல்லை; எல்லார்க்கும் நல்லவர்தான்!

இத்தகைய 'நல்லவர்'களில் ஒருவராக விளங்கி வந்த அந்த 'வல்ல'வரை - அதாவது அந்தப் பேராசிரியரை - என்னுடைய பேதைப் பருவத்தில் எனக்குப் பிடித்திருந்தது. புற்றிலிருந்து ஈசல் கிளம்புவது போல் கிளம்பிக் கொண்டிருந்த அவருடைய நூல்கள் அனைத்தையும் நான் ஒன்று விடாமல் வாங்கிப் படிப்பேன். அவற்றில் காணும் அவருடைய 'தத்துவங்கள்' அனைத்தும் எனக்குத் தண்ணீர் பட்டபாடு' பழி எதுவாயிருந்தாலும் அதைப் பிறருடைய தலையிலே சுமத்தி விட்டுத்தான் தப்பித்துக்கொள்ளும் அந்த அற்புதமான தத்துவத்தைத்தான் அவர் எத்தனை கோணங்களில் நின்று, எத்தனை புத்தகங்களில் அலசுகிறார்! அவையனைத்திலும் இலை மறை காய் போலிருக்கும் அந்தத் தன்னலத்தின் அழகுதான் என்னே, என்னே! இப்படி யெல்லாம் எண்ணி நான் அந்த நாளில் வியப்பதுண்டு. அந்த வியப்பிற் குரிய நூலாசிரியரை என்றாவது ஒரு நாள் நேருக்கு நேராகச் சந்திக்க மாட்டோமா என்று நான் ஏங்கிக் கொண்டிருந்த அந்தக் காலத்தில் தான் அவர் நந்தி மலைக்கு வந்திருந்தார். கோடை விடுமுறையைக் கழிப்பதற்காக - இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடுவேனா, நான்? உடனே ஓடினேன், 'ஆட்டோகிராப்'புடன்!

ஆனால்...

அங்கே நான் கண்ட காட்சியோ என்னைத் திடுக்கிட வைப்பதாயிருந்தது. காரணம் என் அன்புக்குகந்த பேராசிரியர் அங்கே உமர்கய்யமாக மாறி, மதுவும் மங்கையுமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்ததுதான்!

இது என்ன வேடிக்கை? ஊருக்கெல்லாம் ஒழுக்கத்தைப் பற்றி உபதேசிக்கும் இவரா இப்படி யிருக்கிறார்?

ஒன்றும் புரியவில்லை எனக்கு. ஒருவேளை அருகிலிருப்பது அவருடைய மனைவியாயிருக்குமோ? அவள் ஊற்றிக்கொடுக்க, அவர் அருந்துவது பழரசமாயிருக்குமோ?

இப்படி நான் நினைத்தேனோ இல்லையோ, அங்கிருந்து கிளம்பியது ஒரு பாட்டு – ஆம் பாடியவர் பேராசிரியர்தான்.

''மோடி கிறுக்குதடி தலையை – நல்ல
மொந்தைப் பழைய கள்ளைப் போல!''

இதைப் பாடிவிட்டு அவர் சொன்னார்.

''தரித்திரம் பிடித்தவன், பாரதி! பாடவே பாடினானே – வைன், விஸ்கி, பிராந்தி, பீர் என்று ஏதாவது பாடக் கூடாதோ? பழைய மொந்தைக் கள்ளாம் – தரித்திரம், தரித்திரம்!''

இதைக் கேட்டுவிட்டு அவள் சொன்னாள்:

''தேசப்பற்று மிக்கவனல்லவா, பாரதி? அதிலும் சுத்தசுதேசியாயிருந்திருக்கிறான்!''

இந்த உரையாடலில் என்ன நகைச்சுவையைக் கண்டார்களோ, இருவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

அதற்குப்பின் மோடி தலையைக் கிறுக்க, அவர் சொன்னார்.

''வாழ்வு என்பது ஒரு கலை – அந்தக் கலையை உள்ளது உள்ளபடி அறிந்து, அதைப்பரிபூரணமாக அனுபவிப்பவர்கள் விதேசிகள்தான் ; சுதேசிகள் அல்ல!''

தன்னையறியாமல் தன்னுடைய மேலாடை நழுவிக் கீழே விழ, அவள் சொன்னாள்:

''அதனால்தான் தமிழை வெறும் பிழைப்புக்காக மட்டுமே நீங்கள் கொண்டிருக்கிறீர்கள் போலிருக்கிறது!''

''நீ மட்டும் என்னவாம்? என்னைப் போல் நீயும் ஒரு தமிழ்ப் பேராசிரியைதானே?'' என்று அவள் கன்னத்தில் செல்லமாகத் தட்டினார் அவர்.

''இருந்தாலும் வேட்டி. சட்டையை வெறுத்து நீங்கள் 'சூட்' போட்டுக் கொண்டதுபோல் புடவை ரவிக்கைளை வெறுத்து நான் 'கௌன்' போட்டுக்கொள்ள வில்லையே?'' என்றாள் அவள்.

''அதனாலென்ன, இப்பொழுது நீ 'கௌன்'போட்டுக் கொண்டு இருப்பதுபோல்தான் இருக்கிறது!'' என்றார் அவர், அவளை ஊடுருவிப் பார்த்துக்கொண்டே.

அப்பொழுதுதான் தன்னுடைய நிலையை உணர்ந்த அவள், ''ஓ, இதைச் சொல்கிறீர்களா!'' என்று சிரித்துக் கொண்டே மேலாடையை இழுத்து மேலே போட்டாள்.

அவ்வளவுதான்: மறுபடியும் பாட ஆரம்பித்து விட்டார் அவர்.

''தில்லித் துருக்கர் செய்த வழக்கமடீ! –பெண்கள்
திரையிட்டு முகமலர் மறைத்து வைத்தல்
வல்லி யிடையினையும் ஓங்கி முன்னிற்கும் – இந்த
மார்பையும் மூடுவது சாத்திரங் கண்டாய்
வல்லி யிடையினையும் மார் பிரண்டையும் – துணி
மறைத்ததனா லழகு மறைந்த தில்லை,
சொல்லித் தெரிவதில்லை மன்மதக் கலை– முகச்
சோதி மறைத்துமொரு காதலிங்குண்டோ?''

இதைக் கேட்டதும் அவள் சொன்னாள்:

''சென்னையில் ஒரே திருப்புகழ் பஜனையென்றால் பெங்களூரில் ஒரே பாரதி பஜனையாயிருக்கிறதே?''

''ஆளுக்குத் தக்க பேச்சு: ஊருக்குத் தக்க வேடம் – இதுவே வெற்றியின் ரகசியம்! என்றார் அவர் பெருமையுடன்.

''அந்த ரகசியத்தை இவ்வளவு பகிரங்கமாகச் சொல்லலாமா?'' என்றாள் அவள், ரகசியமாக.

''உன்னிடம்தானே சொல்கிறேன்? நீதான் என்னுடைய ரகசியத்தின் ரகசியமாயிற்றே?'' என்றார் அவர்.

அவள் சிரித்தாள்; அவரும் சிரித்தார் - அவர்கள் இருவரையும் பார்த்து நானும் சிரித்தேன், தமிழ்ப் பண்பைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பை அந்தத் தர்மாத்மாக்கள் ஏற்றுக் கொண்டிருப்பதற்காக!

நான் சிரித்ததை அவர்கள் கவனித்தார்களோ என்னமோ, அது எனக்குத் தெரியாது - அவள் சொன்னாள்.

''நம்மைப் பார்த்துச் சிலர் சிரிக்கலாம் - ஆனால் அப்படிச் சிரிப்பவர்கள் அழவேண்டியதுதான்; தங்கள் வாழ்நாள் முழுவதும் அழவேண்டியதுதான்!''

இதைக் கேட்டதும் தூக்கிவாரிப்போட்டது எனக்கு; எதற்கும் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று எண்ணிக் கொஞ்சம் பின்வாங்கி நின்றேன் - அவர் சொன்னார்.

''அவர்களைப் பற்றி நீ கவலைப்படாதே! அவர்கள் வாழப்பிறந்தவர்களல்ல: சாகப் பிறந்தவர்கள்!''

''அப்படித்தான் எனக்கும் தோன்றுகிறது - 'பண்பு, பண்பு' என்று பீற்றிக்கொண்டு திரியும் சில பைத்தியங்களைப் பார்த்தால்!'' என்றாள் அவள்.

''பாவம்! அவர்கள் என்ன செய்கிறார்கள் தெரியுமா? உயிரோடிருக்கும்போதே தங்களைச் சுற்றித்தாங்களே சமாதி எழுப்பிக் கொள்கிறார்கள்; அந்தச் சமாதிக்குப் 'பண்பு'என்று பெயரும் வைத்துக் கொள்கிறார்கள்!'' என்றார் அவர்.

''அந்தப் பண்பு என்ற பேரால் எத்தனை விலங்குகள் பூட்டப்பட்டன, எனக்கு! அத்தனையையும் உடைத்தெறி

வதற்குள் - அப்பப்பா, நான் பட்டபாடு- கொஞ்சமா, நஞ்சமா?''என்று நெட்டுயிர்த்தாள் அவள்.

அதுதான் சமயமென்று, ''ஞாபகமிருக்கட்டும் - அவற்றை நீ உடைத்தெறியவில்லை;நான்தான் உடைத்தெறிந்தேன்!'' என்று அவர் அவளை உசுப்பினார்.

''ஆமாம், என்னைக் கல்யாணம் செய்து கொள்வதாக ஏமாற்றி!''என்று அவள் அவரிடம் பசப்பினாள்!

அவ்வளவுதான்:

''காரியமில்லையடி வீண் பசப்பிலே - கனி
கண்டவன் தோலுரிக்கக் காத்திருப்பானோ?''

என்று பாடிக்கொண்டே, கையை நீட்டிவிட்டார் அவர்!

''நில்லுங்கள்; அதற்கு இப்போதே நீங்கள் என்னைத் துகிலுரிய ஆரம்பித்துவிடவேண்டாம்!''என்று சொல்லிக் கொண்டே அவள் எழுந்தாள்.

''வேண்டாம் என்று உன்னைப்போன்ற பெண்கள் சொன்னால், அதற்கு என்ன அர்த்தம் தெரியுமா? - வேண்டும்' என்றுதான் அர்த்தம்!''என்றார் அவர் விஷமச் சிரிப்புடன்.

''பொல்லாதவர் நீங்கள்!''என்றாள் அவளும் விஷமச் சிரிப்புடன்.

'இதென்ன வம்பு? இந்த நேரத்தில் நாம் ஏன் இங்கே வந்து தொலைத்தோம்? என்று எண்ணி வெட்கியவளாய், இன்னும் கொஞ்சம் பின்வாங்கி நின்றேன் நான்.

''ஆமாம், பாரதி என்றால் உங்களுக்குப் பிடிக்கவே பிடிக்காதே - அவனுடைய பாடல்களை மட்டும் ஏன் அடிக்கடி பாடுகிறீர்கள்?''என்று கேட்டாள், அவள்.

''அவனுடைய பாடல்களில் இருக்கிறது? ஆனால் அவன் ஒரு தவறு செய்துவிட்டான்; அதுதான் எனக்குப் பிடிக்கவில்லை!''

''என்ன, தவறு, அது?''

''பாமரருக்கும் புரியும்படியாக அவன் பாடிவிட்டான்!

''நல்லதுதானே?''

''நாசமாய்ப் போச்சு, போ! – ஒரு தமிழாசிரியை இப்படிச் சொல்லலாமா?''

''ஏன் சொல்லக்கூடாதா?''

''அடி அசடே! பண்டிதருக்கு மட்டும் புரியும்படியாகப் பாடியிருந்தால், அவனுடைய பாடல்களுக்கு நீயும் ஓர் உரை எழுதியிருக்கலாம் இல்லையா?''

''ஓ, அதற்குச் சொல்கிறீர்களா?''

''நல்லவேளை, இப்பொழுதாவது புரிந்ததே? இதற்குத்தான் பெண்புத்தி பின்புத்தி என்பது!''

''நல்ல சமயத்தில் ஞாபகப்படுத்தினீர்கள்; நான் இனி மேல் முன் புத்தியோடு இருக்கப் போகிறேன்!''

''அப்படியென்றால்?''

''முதலில் கல்யாணம்; அப்புறம்தான் காதல்!''

''கல்யாணம், கல்யாணம், கல்யாணம் – அந்தப் பாழாய்ப்போன கல்யாணத்தைத்தான் நீயும் ஒருமுறை செய்துகொண்டாய், நானும் ஒரு முறை செய்து கொண்டேனே? இன்னுமா கல்யாணம் செய்துகொள்ள வேண்டும்? என்னைக் கேட்டால் அப்படி ஒரு சடங்கே யாருக்கும் தேவையில்லை என்பேன். ஏனெனில், வாழ்க்கையையே எப்பொழுது பார்த்தாலும் ஒரே கதியில் இயங்கும் இயந்திரமாக்கிவிடுகிறது, அது!''

''அதற்காக?''

''இனி நாம் செய்யவேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்று தான் – உன்னுடைய கணவனின் இறந்த நாள்வரும் போதெல்லாம் நீ எனக்கு இனிப்பு வழங்கவேண்டும்; என்னுடைய மனைவியின் இறந்தநாள் வரும்போதெல்லாம் நான் உனக்கு இனிப்பு வழங்கவேண்டும் – இதுவே நம்மைச் சுதந்திரமாக நடமாட விட்டதற்காக நாம் அவர்களுக்குச் செய்யும் ஈமக்கடன்; நன்றிக்கடன்!''

''அடப்பாவிகளா!''

என்னையும் அறியாமல் என் வாயிலிருந்து இந்த வார்த்தை வந்ததுதான் தாமதம், ''யார் அது?''என்று கேட்டபடி விழுந்தடித்துக்கொண்டு வெளியே வந்தார் அவர்.

''காரியம் மிஞ்சிப்போன பிறகு சாண் போனா லென்ன, முழம் போனாலென்ன?'' என்று எண்ணித் துணிந்த நான், ''பயப்படாதீர்கள், உங்களைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது!''என்றேன், நிமிர்ந்து நின்று ஒருவிதத்தில் அதுவும் உண்மைதானே?

''தெரியாமலா இவ்வளவு நேரமாக இங்கே நின்று, நாங்கள் பேசிக் கொண்டிருந்ததையெல்லாம் நீ ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தாய்?''

''அதனாலென்ன, வீட்டுக்குப் போனதும் காதை ஒரு முறைக்கு இரு முறையாக அலம்பிக்கொண்டு விடுகிறேன்!''

இந்த சமயத்தில், ''என்ன துணிச்சல், இந்தப் பெண்ணுக்கு?'' என்று கேட்டுக்கொண்டே வெளியே வந்தாள் அவருடைய அந்தரங்கக் காதலி.

''நாயைக் கல்லால் அடிக்கத் துணிச்சல் வேறு வேண்டுமா, என்ன? – அதுதான் கல்லை எடுக்கக்குனியும் போதே ஓடிவிடுமே!''என்றேன் நான்.

''வாயாடி, பொல்லாத வாயாடி!''என்றார் அவர்.

''டி' போடாதீர்கள்; நான் 'டா' போட ஆரம்பித்து விடுவேன்!''

அவ்வளவுதான்: ''அவளுடன் உங்களுக்கு என்ன பேச்சு? உள்ளேவாருங்கள்!''என்றாள் அவள்.

அவர் போகவில்லை; என்னை மேலும் கீழுமாகப் பார்த்தார்.

நானும் விடவில்லை; பதிலுக்குப் பதில் பழிவாங்கும் நோக்கத்துடன் அவரை மேலும் கீழுமாகப் பார்த்தேன்.

அவர் சிரித்தார்; நானும் சிரித்தேன்.

''உன்னால் எனக்கு பைத்தியமே ,பிடித்துவிடும் போலிருக்கிறது!''என்றார் அவர்.

''பிடித்தால் நல்லதுதான்; ஊருக்கு க்ஷேமம்!'' என்றேன் நான்.

''அவ்வளவு பொல்லாதவனா, நான்?''

''ஆம்; கொலைகாரனுக்கும் உங்களுக்கும் அப்படி யொன்றும் வித்தியாசமில்லை அவனுடைய கையில் கத்தி இருக்கிறது. உங்களுடைய கையில் பேனா இருக்கிறது என்பதைத் தவிர!'

''ஆம், நேற்றுவரை தெரிந்து வைத்துக் கொண்டிருந் தேன்; இன்று புரிந்தும் வைத்துக் கொண்டேன்!''

''அப்படியானால்...?''

''உங்களுடைய அபிமான வாசகர்களில் நானும் ஒருத்தி!''

''வாசகியா?''

''ஆம், இதோ பார்த்தீர்களா? நேற்றுவரை உங்களுடைய கையெழுத்துக்காக என்னிடம்தவமிருந்த இந்த 'ஆட்டோகிராப்'பை? இன்றுதான் இது முக்தியடையப் போகிறது!''என்று அவருக்கு முன்னாலேயே அதைக் கிழித்து எறிந்து விட்டு நான் நடந்தேன்.

அவர் 'கடகட'வென்று சிரித்தார்; நான் திடுக்கிட்டுத் திரும்பினேன்.

''ஏமாந்தாய், நன்றாக ஏமாந்தாய்!'' என்றார் அவர்.

''ஆம் நேற்றுவரை; இன்றல்ல!'' என்றேன் நான் ஆத்திரத்துடன்.

''நீ நினைப்பது போல் நான் பேராசிரியர் நெடுமாறனல்ல; அவர் அதோ வருகிறார், பார்!''என்றார் அவர்.

நான் திரும்பினேன்; யாரோ ஒருவர் எங்களை நோக்கி வந்துகொண்டிருந்தார்.

அதற்குள் எங்களை நெருங்கிவிட்ட அவர், ''என்ன வேண்டுமாம், இந்த பெண்ணுக்கு?''என்றார்.

''உங்களுடைய கையெழுத்து வேண்டுமாம் என்றார் அவர்.

''அவ்வளவு பெரிய மனிதனாகி விட்டேனா என்ன, நான்?''என்றார் அவர் சிரித்துக்கொண்டே.

அவருடைய சிரிப்பு என்னுடைய சிந்தனையைக் கவர்ந்தது. ''ஆம், உங்களுக்கு நீங்கள் பெரிய மனிதராக இல்லாவிட்டாலும், எனக்கு நீங்கள் பெரிய மனிதர் தான்!''என்றேன் நான்.

''அப்படியானால் சரி; எங்கே உன்னுடைய ஆட்டோ கிராப் நோட்?''என்று கேட்டுக்கொண்டே அவர் பேனாவை எடுத்தார்.

அதுதான் முக்தியடைந்து விட்டதே, இனிமேல் மறுபிறவி எடுத்தால்தான் உண்டு!''என்றார் அவரை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்த அந்தப் பேர்வழி.

எனக்கு ஒரே வெட்கமாகப் போய்விட்டது; ''நாளை 'ஆட்டோகிராப்'புடன் வந்து சந்திக்கிறேன்!''என்று சொல்லிவிட்டு எடுத்தேன் ஓட்டம்!

ஆனால்...

உண்மையில் ஏமாந்தது யார் தெரியுமா? அதை ஏன் கேட்கிறீர்கள், போங்கள்!

✧ ✧ ✧

மறுநாள் மாலை வேறொரு 'ஆட்டோகிராப் நோட்'டுடன் நான் நந்திமலைக்குச் சென்றபோது, முதல் நாள் சந்தித்த பேராசிரியரை அங்கேக் காணோம் - பேராசிரியர் என்றால் மதுவும் மங்கையுமாகக் காட்சியளித்த அந்த 'உமர்கய்யாம் பேராசிரிய'ரை இங்கே நான் குறிப்பிட வில்லை; அவரால் எனக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்ட இன்னொரு பேராசிரியரைக் குறிப்பிடுகிறேன்- அவரைக் காணாமல் நான் அங்கே விழித்துக்கொண்டு நின்றபோது, ''பெண்ணே!''என்று எனக்குப் பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது. அந்தக் குரலிலிருந்தே அவ்வளவு பரிவுடன் என்னை அழைப்பவர் யாராயிருக்கும் என்பதைப் புரிந்துகொண்டு, ''என்ன, ஆணே!'' என்று நான் எரிச்சலுடன் திரும்பினேன்- தமிழாசிரியை சகிதம் எனக்குப் பின்னால் நின்றுக் கொண்டிருந்த தமிழாசிரியர், ''பண்புக்குறைவாகப் பேசுகிறாய் பெண்ணே,

பண்புக்குறைவாகப் பேசுகிறாய்!'' என்றார் தம்முடைய நீசத்தனத்துக்கெல்லாம் 'கேடய'மாக விளங்கிய 'பண்பு'டன்.

''எனக்குப் புரியவில்லை. எதை நீங்கள் பண்பு என்கிறீர்கள்?''என்றேன் நான்.

''மலர்ந்தும் மலராத பருவமல்லவா? எல்லாமே புரிந்தும், புரியாமல்தான் இருக்கும், இப்போது!'' என்றார் அவர், 'புன்னகையுடன்'– ஆம், அதை எப்படிப் புன்னகை என்பது?

''எனது பருவம் கிடக்கட்டும்; எடுத்துக்கொண்ட விஷயத்துக்கு வாருங்கள், முதலில்!'' என்றேன் நான்.

''வருகிறேன், வருகிறேன். பொதுப்பணியாளர் தம் புறவாழ்வை கவனிப்பது மட்டுமே பண்பு: அவர் தம் அகவாழ்வைக் கவனிப்பது பண்பன்று. இதை நீ புரிந்துக் கொண்டிருந்தால், எடுத்ததற்கெல்லாம் என்னை இடித்துரைக்க மாட்டாய் –இல்லையா?'' என்றார் அவர், கனிவுடன்.

''எனக்குத் தெரிந்தவரை இந்த விஷயத்தில் இனிநான் புரிந்து கொள்வதற்கு ஒன்றுமில்லை என்றே நினைக்கிறேன். ஏனெனில் ஒருவன் எனக்குத் 'திருடாதே!' என்று உபதேசம் செய்ய முன்வந்தால், முதலில் அவன் திருடாமல் இருக்கிறானா என்று கவனிக்க எனக்கு உரிமையுண்டு; ஒருவன் எனக்குப் 'பொய் சொல்லாதே?'' என்று உபதேசம் செய்ய முன்வந்தால், முதலில் அவன் பொய் சொல்லாமல் இருக்கிறானா என்று கவனிக்க எனக்கு உரிமையுண்டு. 'பண்புக்குறைவு' என்ற பேரால் அந்த உரிமையைப் பறிக்க யாராவது முயன்றால் அதற்குநான் ஒருநாளும் இடம் கொடுக்கமாட்டேன் – வணக்கம் வரட்டுமா?'' என்று நான் வந்த வழியே திரும்பினேன்;

''கையெழுத்து?''என்றார் அவர்.

''உங்களிடமா?''என்றேன் நான்.

''இல்லை; என்னுடைய நண்பரிடம்தான்!''

''அவர் உங்களுக்கு நண்பராயிருந்தால், அவருடைய கையெழுத்துக்கூட எனக்குவேண்டாம்!'' என்று சொல்லி விட்டு, நான் மேலே நடந்தேன்

''விழித்துக்கொண்டு விட்டார்கள்; மாணவ, மாணவி களெல்லாம் இப்போது விழித்துக்கொண்டு விட்டார்கள்!'' என்று பெருமூச்சு விட்டார் அவர்.

''அதனாலென்ன, அவர்கள் விழித்துக் கொள்வதற்கு முன்னால்தான் நீங்கள் வேண்டிய மட்டும் பணம் பண்ணி விட்டீர்களே? வாருங்கள், போவோம்!''என்றாள் அவள்.

✧ ✧ ✧

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு அந்தப் பேராசிரியரை மட்டுமல்ல; அவரால் எனக்கு அறிமுகம் செய்து வைக்கப் பட்ட நூலாசிரியரையும் – ஏன், அவருடைய நூல்களையும் கூட நான் மறந்துவிட்டேன்!

ஆனால் ஒரு குழப்பம். ஆம், ஒரு குழப்பம் மட்டும் அடிக்கடி என்னுடைய நினைவில் எழுந்து என்னைக் குழப்பிக் கொண்டிருந்தது. தம்முடைய எழுத்தால் என்னைக் கவர்ந்த அந்த நூலாசிரியர் யார்? மதுவும் மங்கையுமாகக் காட்சியளித்த அந்தத் தமிழ் விரிவுரையாளரா அல்லது அவரால் எனக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்ட அந்தத் தமிழ் பேராசிரியரா?

இந்தக் குழப்பமும் எதிர்பாராத வகையில் இன்று தீர்ந்துவிட்டது – எப்படித் தீராமலிருக்கும். சாட்சாத் தமிழ் விரிவுரையாளரே வந்து, ''நான்தான் அந்த நூலாசிரியரான

பேராசிரியர்!'' என்று என் அண்ணாவுடன் சண்டை பிடிக்கும்போது?

ஆனால், அண்ணாவைப் பார்க்க வந்த மனுஷன் அவனைப் பார்த்தோடு போயிருக்கக் கூடாதா? என்னை வேறு பார்த்து, நீயா!'' என்று வேறு கேட்டுப் பல்லை இளிக்கவேண்டுமா? என் அண்ணா என்னைப்பற்றி என்ன நினைப்பான்? இல்லை, இந்தப் பேராசிரியரைப் பற்றித் தான் என்ன நினைப்பான்.ஒருகணம் இந்தத் தவிப்புக்குள்ளான நான், மறுகணம் என்னை நானே சமாளித்துக் கொண்டு, ''என்ன, தமிழாசிரியர் ஐயா! நலமா?''என்றேன்.

''நலம்தான், நலம்தான்!''என்றார் அவர்.

''இவரை ஏற்கெனவே உனக்குத் தெரியுமா, என்ன?'' என்றான் அண்ணா, வியப்புடன்.

'தெரியும் அண்ணா! பெங்களூரில் இருந்தபோது இவரை நான் நந்திமலையில் சந்தித்திருக்கிறேன்!''

''எதற்காக?''என் அண்ணா இப்படி ஒரு கேள்வியைப் போட்டானோ இல்லையோ, ''வேறு எதற்காக, எல்லாம் கையெழுத்து வேட்டைக்காகத்தான்!'' என்றார் பேராசிரியர், என்னைக் கடைக்கண்ணால் கவனித்துக் கொண்டே.

''ஓ, இவருடைய விசிறிகளில் நீயும் ஒரு விசிறியா?'' என்றான் அண்ணா சிரித்துக்கொண்டே.

''ஆம், அப்போது விசிறியாய்த்தான் இருந்தேன்!'' என்றேன் நான், என்னை மறந்து.

''இப்போது அவ்வளவுதான் என்றான் அண்ணா. - எழுந்துநின்ற பேராசிரியர், ''இப்போது என் விசிறி யாயிருக்க முடியாது, இப்போது என் விசிறியாயிருக்க முடியாது!'என்று விசும்பிக் கொண்டே, மறுபடியும் நாற்காலியில் 'தொப்'பென்று உட்கார்ந்தார் - உட்கார்ந்த

தோடு மட்டுமில்லை; மேஜையின் மேல் முகத்தை வேறு புதைத்துக்கொண்டு விக்கிவிக்கி அழுதார்.ஒன்றும் புரிய வில்லை எனக்கு; ''என்ன அண்ணா, இவருக்கு?'' என்று கேட்டுக் கொண்டே, அடுக்களையை விட்டு கூடத்துக்கு வந்தேன். ''அதுதானே எனக்கும் புரியவில்லை!''என்றான் அவன்.

''என்னாலேயே என்னைப் புரிந்து கொள்ள முடியாம லிருக்கும்போது, உங்களால் என்னை எப்படிப் புரிந்து கொள்ளமுடியும்?'' என்றார் அவர், விக்கலுக்கும் விம்மலுக்கும் இடையே.''என்னதான் இருந்தாலும் ஒரு டாக்டர், ஒரு பேராசிரியர், ஒரு நூலாசிரியர் இப்படியா அழுவது? எழுந்திருங்கள்; எழுந்து நன்றாக உட்காருங்கள்!''என்று அண்ணா அவருடைய தோளைப் பற்றினான்.

''இருக்கலாம் – நீங்கள் சொல்வதுபோல் நான் ஒரு டாக்டராயிருக்கலாம்; நான் ஒரு பேராசிரியரா யிருக்கலாம்; நான் நூலாசிரியராயிருக்கலாம் – ஆனால் நானும் உங்களைப் போன்ற ஒரு மனிதன்; ஆசாபாசங்களுக்கு இரையாகும் அற்பமனிதன் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது; மறந்து தேவனைப் பார்க்கும் கண்களால் என்னைப் பார்க்கக் கூடாது!''என்றார் அவர், சற்றே தலைதூக்கி.''இல்லை; என்னைப் பொறுத்தவரை நான் எப்போதுமே யாரையும் அப்படிப் பார்ப்பதில்லை!'' என்றான் அண்ணா.

''அப்படி நீங்கள் பார்க்காமலிருப்பதாயிருந்தால் என்னுடையக் கதையை நான் உங்களிடம் சொல்லமுடியும்; அதன் மூலம் என்னுடைய மனச்சுமையும் என்னால் ஓரளவு குறைத்துக்கொள்ளமுடியும்''என்றார் அவர்.

''சொல்லுங்கள், நீங்களும் என்னைப் போன்ற ஒரு மனிதர்தான் என்ற உணர்வுடனேயே நான் அதைக் கேட்கிறேன்'' என்றான் அண்ணா.

அவர் சொன்னார்.

✧ ✧ ✧

''**சொ**ன்னால் நம்பவே மாட்டீர்கள் - ஆம் சொன்னால் நம்பவே மாட்டீர்கள். பட்டம், பதவி, புகழ் - எல்லாமே பெற்றுவிட்ட எனக்கு, ஒரு பெண்ணின் இதயத்தில் மட்டும் இதுவரை இடம் கிடைக்கவில்லை. 'யார் அந்தப் பெண்?' என்று கேட்கிறீர்களா? அவளை எனக்குத் தெரியாது! 'அவளையே தெரியாமல் இருக்கும் போது அவளுடைய இதயத்தில் உங்களுக்கு எப்படி இடம் கிடைக்கும்' என்கிறீர்களா? அதுவும் எனக்குத் தெரியாது ஐயா, அதுவும் எனக்கு நிச்சயமாகத் தெரியாது!''

இந்த சமயத்தில் என்னையும் மீறி நான் கேட்டேன். ''பெங்களூரில் நான் உங்களுடன் ஒரு பெண்ணைப் பார்த்தேனே, அந்தப் பெண் யார்?''

அவர் சொன்னார்.

''அவளா, அவள் ஒரு கொலைகாரி!''

''கொலைகாரியா?''

''ஆம், எனக்காகத் தன் கணவனையேக் கொன்று விட்ட க் கொலைகாரி அவள்!''

''அட பாவமே!''

''அந்த வெட்கக் கேட்டை ஏன் கேட்கிறீர்கள்?. தனக்குப் 'பிறந்த நாள் என்பதற்காக அவள் ஒரு நாள் என்னைத் தன் வீட்டுக்கு அழைத்திருந்தாள். 'சக ஆசிரியை என்பதற்காக நானும் போயிருந்தேன். அங்கே தன்

கணவருக்கு அவள் அறிமுகம் செய்துவைத்துவிட்டு உள்ளே சென்றாள். அவள் வரும்வரை நாங்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்தோம். 'எனக்கென்னமோ இந்தப் பிறந்த நாள் விழாவே பிடிப்பதில்லை!'' என்றார் அவர். அப்போது 'இறந்தநாள் விழாதான் பிடிக்குமோ? என்று கேட்டுக்கொண்டே வெளியேவந்தாள் அவள். ''இறந்த நாளுக்கு விழா ஏது, திவசம்தான்!' என்றேன் நான், என்னுடையப் பங்குக்கு ஏதாவது சொல்லி வைக்க வேண்டுமே என்று. அதற்குள் எனக்காகக் கொண்டு வந்திருந்த நீர்மோரை எனக்கருகே வைத்துவிட்டு, அவருக்காகக் கொண்டுவந்திருந்த காபியை அவருக்கருகே வைத்தாள் அவள்.

'ஏன், உங்களுக்குக் காபி பிடிக்காதோ? என்றார் அவர்; இல்லை; பிடிப்பதில்லை!'' என்றேன் நான். 'உங்களுக்குக் காபி பிடிக்காத விஷயம் இவளுக்கு எப்படித்தெரியும்?'' என்று அவர் கேட்டார். 'இருவரும் ஒரே கல்லூரியில் தானே வேலை பார்க்கிறோம்?'' என்று நான் சொன்னேன். 'ஒரே கல்லூரியில் வேலை பார்த்தால் காபி பிடிக்காத விஷயம் கூடத்தெரிந்து விடுமா, என்ன?' என்றார். அவர் மேலும், இது எனக்கு என்னவோ போலிருந்தாலும் எப்படி யாவது நிலைமையைச் சமாளிக்க வேண்டுமே என்று எண்ணி, 'கல்லூரியில் அவ்வப்போது டீ, டின்னர் என்று ஏதாவது நடக்கிறதல்லவா? அவற்றில் கலந்துகொள்ளும் போது ஒருவருக்கு பிடிக்கும், பிடிக்காது என்பதைப் பற்றி இன்னொருவர் தெரிந்து கொள்ளலாமே என்றேன் நானும் விடாமல்.

'நீங்கள் சொல்வது சரி; ஆனால் அதற்கும் ஏதாவது ஒரு வகையில் ஈடுபாடு இருக்கத்தான் வேண்டுமல்லவா? என்று அப்போதும் பொடி வைத்து ஊதினார் அவர். அதற்குமேல் என்ன சொல்வதென்று தெரியாமல் நான் அவளுடைய முகத்தைப் பார்த்தேன். இதில் ஒன்றும்

குறைச்சல் இல்லை – காபியை எடுத்துக் குடியுங்கள்; ஆறிவிடப்போகிறது என்றாள் அவள். என்னுடைய ஆத்மாவே ஆறக்கூடிய நிலையில் இருக்கும் போது, காபி ஆறினால் என்ன?'' என்று வெறுப்புடன் சொல்லிக் கொண்டே , அவர் அதை எடுத்துக் குடித்தார். அவ்வளவு தான் இரண்டே விக்கலில் அவருடையத் தலை சாய்ந்து விட்டது! அடிபாவி, என்ன காரியம் செய்து விட்டாய்? உனக்கா கண்ணகி என்று பெயர்?' என்று நான் அலறினேன்.

'யாரை ஏய்க்க இந்த வேஷம்? உனக்கென்று ஒரு கணவர் இருக்கும்வரை நீயும் நானும் சேர்ந்து வாழ்வ தென்பது முடியாத காரியம் என்று நேற்றுவரை எனக்கு நீங்கள் கடிதம் எழுதிக் கொண்டிருந்தீர்கள்; இன்று அவருடையக் கழுத்தில் கத்தியையே வைத்துவிட்டீர்கள்!' என்று பழியை என்மேல் சுமத்தினாள் அவள். 'இது அநியாயம், அக்கிரமம்! இப்படியெல்லாம் நீ திட்டமிட்டுச் சதி செய்வாய் என்று தெரிந்திருந்தால் உனக்கு நான் கடிதமும் எழுதியிருக்க மாட்டேன்; உன்னுடைய வீட்டுக்கு நான் வந்திருக்கவும் மாட்டேன்!'என்று நான் கத்தினேன்! 'கத்தாதீர்; கத்தினால் போலீசாரை அழைப்பேன்!' என்று அவள் 'போ'னுக்கருகே சென்று நின்று என்னை மிரட்டினாள்.

அவ்வளவுதான் நான் நடுங்கிப்போனேன் – தன்னுடையக் காதலை ஏற்றுக் கொள்ளாத குற்றத்துக்காக ஒரு பெண் எனக்கு இவ்வளவுப் பெரிய தண்டனையை அளிப்பாள் என்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை; அந்த எதிர்பாராத தண்டனை எனக்குக் கிடைக்கக்கூடிய நிலையில் அவள் என்னை வைத்துவிட்ட போது நான் என்ன செய்யமுடியும்? அவளுடையக் காதலை ஏற்றுக் கொள்வதா? அல்லது அந்தக்கணமே முடிவுகாண வேண்டிய நிலை எனக்கு. என்ன செய்வேன்? அவள் அளிக்க நினைக்கும் தண்டனையை ஏற்றுக்கெண்டால், அதுவரை பெற்று வந்த பட்டம், பதவி, புகழ் எல்லா

வற்றையுமே நான் இழக்க வேண்டியிருக்கும். இழந்து ஏதும் அறியாத ஊராரின் பேச்சுக்கும் ஏச்சுக்கும் நான் ஆளாக வேண்டியிருக்கும். இந்த நிலையில் வேண்டா வெறுப்புடன் அவளுடையக் காதலை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியொன்றும் தோன்ற வில்லை, எனக்கு ஏற்றுக்கொண்டேன்; என்னுடைய புகழுக்கு வேண்டாம் இழுக்கு என்பதற்காக அவளுடைய காதலை நான் ஏற்றுக் கொண்டேன்.

அவ்வளவுதான்; 'எனக்குப் பிறந்த நாள் பரிசாக என்னக் கொண்டு வந்திருக்கிறீர்கள்?' என்று கேட்டுக் கொண்டே அவள் என்னை நெருங்கினாள். என்னால் எழுதப்பட்ட 'சகோதரிக்கு' என்ற புத்தகத்தை எடுத்து நான் அவளிடம் நீட்டினேன். 'யாருக்கு வேண்டும், இந்தப் புத்தகம்?'' என்று அதைப் பிடுங்கி வீசி எறிந்துவிட்டுத் தன் இதழ்களைக் குவித்து அவள் என் முகத்துக்கு முன்னால் நீட்டினாள். 'அட கடவுளே, கணவன் பிணமாகக் கிடக்கும் போது கண்ணகிக்கு முத்தம் வேண்டுமாமே, முத்தம்!' என்று நினைத்த நான் 'முதலில் இவரை அடக்கம் செய்வோம்; பிறகு எல்லாவற்றையும் வைத்துக் கொள்வோம்!' என்றேன். 'ஊஹூம்; இதுதான் முதலில்!' என்றாள் அந்தக் கிராதகி; 'இது தமிழ்ப் பண்பல்ல; ஆங்கிலப் பண்புமல்ல!'என்று நான் மேலும் சொல்லிப் பார்த்தேன்.

'அதெல்லாம் உங்கள் எழுத்தில் இருக்கட்டும்; வாழ்க்கையில் வேண்டாம்!' என்று சொல்லிவிட்டாள் அவள் – வேறு வழி? – அவள் விரும்பிய 'பிறந்த நாள் பரி'சை அவளுக்குக் கொடுத்ததோடு, அவளுடைய கணவனின் பிணத்தையும் எடுத்து அடக்கம் செய்தேன். அதற்குப் பிறகு என் மனம் ஒரு நிலையில் இல்லை. அடிக்கடி தடுமாறுவதும் தடுக்கி விழுவதுமாக இருந்தது. ஆட்சியாளரின் தண்டனையிலிருந்து தப்பினாலும்,

ஆன்மாவின் தண்டனையிலிருந்து தப்ப முடியாதல்லவா? அதைத் தான் அனுபவித்தேன் நான்!

இந்த வேதனையி லிருந்து என்னை மீட்பதற்காக அவள் எனக்குக் காட் டிய இன்னொரு வழிதான் அந்தக் குடி - ஆம்; குடித்தேன்; என் ஆன்மா என்னை வதைக்காத அளவுக்கு நான் குடித்தேன்! அன்றிலிருந்து என் அகவாழ்வு வேறு, புறவாழ்வு வேறு என்று ஆகிவிட்டது; அதுவே ஒற்றை மனிதனா யிருந்துவந்த என்னை, இரட்டை மனிதனாகவும் ஆக்கிவிட்டது - இத்தனையும் யாரால்? ஒரு பெண்ணால்! அவளுக்கு அஞ்சி அஞ்சி நான் சாகிறேன், அணுவணுவாக -இதுவே என் கதை ஐயா, என்று அவர் தம் கதையைக் கூறி முடித்தார்.

''ஐயோ, பாவம்! எவ்வளவு பெரிய மனிதர், நீங்கள்? உங்களையுமா இப்படி ஒரு பெண் ஆட்டி வைக்கிறாள்!'' என்றான் அண்ணா.

''ஆம், நேற்றுவரை அவள் என்னை அப்படித்தான் ஆட்டிவைத்துக் கொண்டிருந்தாள். இன்று அவளால் என்னை ஆட்டி வைக்க முடியாது இன்று என்ன? இனி என்றுமே அவளால் என்னை ஆட்டி வைக்கமுடியாது!'' என்றார் அவர்.

''ஏன் ?அவள் என்ன ஆனாள் இப்போது?'' என்று நான் கேட்டேன்.

''கெட்ட காலத்திலும் எனக்கு ஒரு நல்ல காலம் - குற்றால அருவியில் குளிக்கப் போன அவளைத் தாமிரபரணி ஆறுஆட்கொண்டுவிட்டது'' என்றார் அவர் பெருமூச்சுடன்.

'நல்லவேளை, அந்த மட்டும் அவளிடமிருந்து தப்பிப் பிழைத்தீர்களே?'' என்றேன் நானும் பெருமூச்சுடன்.

''அப்படியானால் இனிமேல்தான் நீங்கள் வாழ வேண்டும் என்று சொல்லுங்கள்! என்றான் அண்ணா.

''ஆம், இனிமேல்தான் நான் வாழவேண்டும்; இனி மேல்தான் நான்வாழவேண்டும்'' என்றார் அவர்.

✧ ✧ ✧

பேராசிரியர் சொன்ன கதை எங்கள் நெஞ்சை நெகிழ வைத்துவிட்டது. ''இப்படியும் ஒரு பெண் தமிழ்நாட்டில் இருப்பாளா, என்ன?'' என்று கேட்டேன் நான் வியப்புடன்.

''இருப்பாள், இருப்பாள்! இப்போதெல்லாம் தமிழ்நாடு எங்கே தமிழ்நாடாயிருக்கிறது? தமிழன் தான் எங்கே தமிழனாயிருக்கிறான்? எல்லாம் ஒரே கலப்படம்; அசல் எதுபோலி எது என்பதைக்கூட அவ்வளவு எளிதில் கண்டு பிடிக்கமுடியவில்லை!'' என்றான் அண்ணா.

அதற்குள் தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்ட பேராசிரியர், ''எல்லாம் வடமொழியால் வந்த வினை, எல்லாம் வடமொழியால் வந்த வினை!'' என்று சொல்லிக்கொண்டே எழுந்தார்.

''ஆங்கிலமும் அதற்கு விதிவிலக்கல்ல!'' என்றான் அண்ணா.

ஆம், அது அறிவையும் வளர்த்திருக்கிறது; அசட்டுத் தனத்தையும் வளர்த்திருக்கிறது!'' என்றேன் நான்.

''அதற்குநானே சான்று! என்றார் பேராசிரியர்.

''நீங்களா!''

''ஆம், உள்ளத்தால் தமிழனாயிருந்தாலும் உடையால் ஆங்கிலேயனாக இல்லையா நான்?'' என்றார் அவர் சிரித்துக்கொண்டே. ''தேவலையே. உங்களை நீங்களே பார்த்துசிரித்துக் கொள்கிறீர்களே?'' என்றேன் நான்.

''பிறரைப் பார்த்துச் சிரிப்பதைவிடத் தன்னைப் பார்த்துத்தானே சிரித்துக் கொள்வதுதான் நல்லது!''என்றான் அண்ணா.

''நான் வருகிறேன்; என்னுடைய கதையைக் கேட்ட பிறகும் என்னை நீங்கள் வெறுத்து ஒதுக்காமலிருந்ததற்காக என் நன்றி!'' என்று கிளம்பினார் பேராசிரியர்.

''காரணம் எதுவாயிருந்தாலும் ஒருவரை ஒருவர் ஏன் வெறுத்து ஒதுக்கவேண்டும்? மனிதன் அப்படியொன்றும் சக்தி வாய்ந்தவனில்லையே! பலவீனனான அவனிடம் எத்தனையோ பலவீனங்கள் இருக்கத்தான் செய்யும்; ஆனால் 'பண்பு' என்னும் பேரால் அவற்றை மூடி மறைக்க முயல்வதுதான் எனக்குப் பிடிக்கவில்லை!'' என்றான் அண்ணா.

''ஆம், அது பிறரை ஏமாற்ற ஏதுவாகி விடுகிறது!'' என்றேன் நான்.

''இதிலிருந்து, இன்று தொடங்கியுள்ள நம் நட்பு என்றுமே கருத்துக்கு அப்பாற்பட்டதாயிருக்கும் என்று நான் எதிர்பார்க்கலாமா?'' என்று கேட்டார் பேராசிரியர்.

''தாராளமாக!''என்றான் அண்ணா.

''மகிழ்ச்சி; இப்போதைக்கு நான் விடைபெற்றுக் கொள்கிறேன்!'' என்று விரிவுரையாளர் கிளம்பினார்.

''கொஞ்சம் பொறுங்கள்; சண்டையில் ஆரம்பித்த நட்பு காபியில் வளரட்டும்!'' என்று நான் உள்ளே சென்றேன்.

''நீர் மோரிலேயே வளரலாமே!'' என்றார் அவர்.

''ஓ. அதை நான் மறந்துவிட்டேன்!'' என்று நான் அவருடைய விருப்பப்படி அவருக்கு முன்னால் நீர்மோரைக் கொண்டுவந்து வைத்தேன்.

அதை எடுத்துப் பருகிய பேராசிரியர், ''நீ எப்படியோ அப்படியே நீர்மோரும்!''என்றார் சிரித்துக்கொண்டே.

''நானும் மோசம், நான் கொண்டுவந்த நீர்மோரும் மோசம் என்கிறீர்களா என்ன?'' என்றேன் நானும் சிரித்துக்கொண்டே.

''அவர் சொன்னதை நேர் விரோதமாக எடுத்துக் கொண்டு விட்டாயே?''என்றான் அண்ணா.

✧ ✧ ✧

அன்றிலிருந்து ஏதாவது ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வந்து கொண்டிருந்த அவர், சில நாட்களுக்கெல்லாம் காரணம் எதுவுமே இல்லாமலிருந்துங்கூட வர ஆரம்பித்துவிட்டார்!

நானோ, முதலில் 'ஏன் வருகிறார்?' என்று நினைத்தேன்; பிறகு, 'ஏன் வரவில்லை?' என்று நினைக்க ஆரம்பித்து விட்டேன்.

இந்த நிலையை ஒருவாறு புரிந்துக்கொண்ட அண்ணா, ''காதலுக்கு எதுவுமே குறுக்கே நிற்காது போலிருக்கிறது! என்றான் ஒரு நாள், ஏதோ பேச்சோடு பேச்சாக.

''எதைச் சொல்கிறாய், நீ?''என்றேன் நான், எல்லாம் புரிந்தும் ஏதும் புரியாதவள் போல.

''பேராசிரியரின் வயதை!'' என்றான் அவன், என் காதோடு காதாக.

''நல்லவேளை, நீதான் குறுக்கே நிற்கிறாயோ என்னமோ என்று பயந்தே போனேன்!''என்று உள்ளூற நினைத்த நான் அதை வெளியே காட்டிக்கொள்ளாமல், ''போ, அண்ணா! இந்த மாதிரியெல்லாம் நீ என்னுடன் இன்னொரு முறை பேசினால் நான் கோபித்துக் கொள்வேன்!''என்று அவனை மிரட்டினேன்.

''புத்தி!புத்தி! பேசவில்லை; இன்னொருமுறை நான் உன்னுடன் அந்த மாதிரியெல்லாம் பேசவேயில்லை!'' என்று கன்னத்தில் போட்டுக்கொண்டான் அவன்.

அவ்வளவுதான்; என்னையும் அறியாமல் நான் சிரித்துவிட்டேன்.

அத்துடனாவது அவன் என்னை விட்டானா? அதுதான் இல்லை; மெல்ல என்அருகே வந்து, ''நானும் சிரிக்கலாமா? என்றான்.

எப்படியிருக்கும், எனக்கு? ''சிரித்தால் சிரி; அழுதால் அழு! எனக்கென்ன வந்தது? என்று 'வெடுக்'கென்று சொல்லிவிட்டு, உள்ளே போய்விட்டேன்.

என் தலை மறைந்ததும், ''நானும் அந்தக் கூத்தைப் பார்த்துக் கொண்டுதாண்டாப்பா, வருகிறேன்!''என்றாள் பாட்டி.

''உனக்கும் தெரியுமா, அது?''என்றான் அண்ணா.

''ஏன் தெரியாது, நானும் ஒரு காலத்தில் குமரியாயிருந்தவள்தானே?'' என்று சுருங்கச் சொல்லி விளங்க வைத்தாள் அவள்.

''சரி. நீ என்ன நினைக்கிறாய் அதைப்பற்றி? என்று கேட்டான் அவன்.

''நான் என்ன நினைக்கிறேன்? கல்யாணத்துக்கு முன்னால் ஓர் ஆணும் பெண்ணும் இவ்வளவு தூரம் நெருங்கிப் பழகுவது அவ்வளவு நல்லதல்லவே என்று தான் நினைக்கிறேன்!''

''அதெல்லாம் பத்தாம் பசலித்தனம்!விடு அதை; விஷயத்துக்கு வா. நறுமணத்துக்கு அவரைப்பிடித்துப் போய்விட்டதென்று நான் நினைக்கிறேன் – அப்புறம்

என்ன, கல்யாணந்தானே?'' என்று என் அண்ணா வெட்டு ஒன்றும் துண்டு இரண்டுமாகப் பேசினான்.

''அதைத்தான் நானும் சொல்கிறேன், கல்யாணத்துக்குப் பின்னால் எல்லாவற்றையும் வைத்துக் கொள்ளட்டுமே என்று?'' என்றாள் அவள். 'எல்லாவற்றையும்' என்பதற்கு மட்டும் கொஞ்சம் அழுத்தம் கொடுத்து.

இதைக் கேட்டதும் என் அண்ணா என்ன நினைத்தானோ என்னமோ, ''சேச்சே, அவர் அப்படிப் பட்டவர் அல்ல!'' என்று முகத்தைச் சுளித்தான்.

எப்படிப்பட்டவராகத்தான் இருக்கட்டுமே ஆண் என்றால் ஆண்தான்; பெண் என்றால் பெண்தான்!' என்றாள் பாட்டி, அப்பொழுதும் விடாமல்.

''சரி, அப்படி என்ன நடந்துவிட்டது, இங்கே?'' என்று அண்ணா கேட்டான்.

''ஒன்றும் நடக்கவில்லை. நடப்பதற்கு முன்னால் எச்சரிக்கிறேன் – அவ்வளவுதான்!''என்றாள் அவள்.

அவளுடைய எச்சரிக்கையை நானும் பொருட்படுத்த வில்லை, அண்ணாவும் பொருட்படுத்த வில்லை. அதன் காரணமாக எது நடக்கக்கூடாது என்று அவள் நினைத்தாளோ, அது நடந்துவிட்டது – ஆம், நடந்தே விட்டது!

'பெண்புத்தி, பின்புத்தி' என்பதுதான் எவ்வளவுப் பெரிய உண்மை! அந்தப் 'பின் புத்தி' என்னை என்ன செய்தது தெரியுமா? நடப்பதற்கு முன்னால் சிரிக்க வைத்தது; நடந்தபின் அழ வைத்தது – ஆம், நான் அழுதேன்; அழுதே விட்டேன்!

''இதற்கா அழுவது? - அழாதே, இதெல்லாம் இயற்கையின் நியதி!'' என்றார் அவர்.

''ஐயோ, இயற்கையின் நியதியை ஒட்டியா மனிதன் இப்போது வாழ்கிறான்? அவன்தான் எத்தனையோ வகையில் அதைமாற்றி அமைத்துக்கொண்டு விட்டானே! அதை ஒட்டி அல்லவா இப்போது நாம் வாழவேண்டி யிருக்கிறது?''என்றேன் நான், அவருடைய மடியில் முகத்தைப் புதைத்துக்கொண்டு.

அவர் சிரித்தார். இந்தச் சிரிப்பு என் இதயத்தைச் சுடுவது போலிருக்கவே, ''ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்றேன் நான் திடுக்கிட்டு.

''ஒன்றுமில்லை; நான் வருகிறேன்!'' என்று கிளம்பினார் அவர்.

''அதற்குள்ளாகவா?''

''ஆம், ஓர் அவசர வேலை இருக்கிறது!''

அவசர வேலை! இத்தனை நாளும் இல்லையே, அந்த அவசரவேலை அவருக்கு? இன்றுமட்டும் அது எங்கிருந்து வந்தது?'' நான் தேம்பினேன்!

அவர் போய்விட்டார்; போயே போய்விட்டார்!

✧ ✧ ✧

அதற்குப் பிறகு ஒரு மாதம் ஆயிற்று; இரண்டு மாதம் ஆயிற்று; மூன்று மாதமும் ஆயிற்று, வரவில்லை; அவர் வரவேயில்லை!

ஒரு வேளை, நான் ஏமாந்து விட்டேனா? இல்லை. ஏமாற்றப்பட்டு விட்டேனா? ஒன்றுமே புரியவில்லை, எனக்கு.

என்ன செய்வேன், ''ஏன் அண்ணா, அவரைப் பார்த்தாயா?'' என்று ஒருநாள் வெட்கத்தைவிட்டு அவனைக் கேட்டேன்.

''இல்லையே!'' என்று கையை விரித்துவிட்ட அவன், அத்துடன் நின்றிருக்கக் கூடாதா? அதுதான் இல்லை; ஏன்!'' என்று வேறு கேட்டு வைத்தான்.

''தெரியும் நறுமணம், எல்லாம் எனக்குத் தெரியும்!'' என்றான் அந்த அப்பாவி.

''தெரியும் என்பதுதான் ஏற்கெனவே எனக்குத் தெரியுமே!''என்றேன் நான், வெறுப்புடன்.

''கவலைப்படாதே; தை பிறந்ததும் கல்யாணத்தை முடித்துவிடலாம்!''என்றான் அவன், என்னைப் புரிந்துக் கொள்ளாமல்.

''கல்யாணமா, இனி ஏது எனக்குக் கல்யாணம்?'' என்று நான் சொல்ல நினைத்தேன்; ஆனால் சொல்லவில்லை. சொல்லி அவமானத்தால் அவ்வளவு சீக்கிரம் அவனைக் கொன்றுவிட நான் விரும்பவில்லை!

இந்தப் பெண்கள்! – பெண்கள் என்று சொல்லும் போது என்னையும் சேர்த்துத்தான் சொல்கிறேன் – எவ்வளவு சீக்கிரத்தில் தாங்கள் பிறந்து வளர்ந்த வீட்டைவிட்டு ஓடத்துணிந்து விடுகிறார்கள்! எவ்வளவு சீக்கிரத்தில் தங்களைப் பெற்று வளர்த்தத் தாயையும், பேணிக்காத்தத் தந்தையையும் துச்சமென்று எண்ணித் துறந்துவிடுகிறார்கள்!

என்னைப் பொறுத்தவரை, எனக்குப் பெற்ற தாய் இல்லாமலிருக்கலாம்; பேணிக் காத்த தந்தையும் இல்லா மலிருக்கலாம். எஞ்சியிருந்த ஓர் அண்ணன்; அவனைக் கூடாவா மானத்தோடு நடமாட, உயிரோடு நடமாட நான் விட்டிருக்கக்கூடாது?

பாவி! அவனைக் கொல்லவே கொல்லப் போகிறேன், ஒரேயடியாகவாவது கொல்லப் போகிறேனா? அதுவும் இல்லை; அணுவணுவாகக் கொல்லப் போகிறேன்!

இதை நினைத்ததும், 'அண்ணா' என்று அலறிக் கொண்டே அவனுடைய காலில் விழுந்துவிட வேண்டும் போல் எனக்குத் தோன்றிற்று. ஆனால் விழவில்லை - விழுந்து எதிர்பாராத அதிர்ச்சியால் அவ்வளவு சீக்கிரம் அவனுடைய இதயத்துடிப்பை நிறுத்திவிட நான் விரும்ப வில்லை!

கண்ணகி! அவருக்காகத் தன் கணவனைக் கொன்றாள்; நறுமணம் - அவருக்காகத் தன் அண்ணனைக் கொல்ல வேண்டுமா?

அடுக்காது; நடக்காது! அப்படி யாரையாவது கொல்லவேண்டுமென்றால் நறுமணம் முதலில் தன்னைத் தானே தான் கொன்றுக் கொள்வாள்- இது நிச்சயம்; நிச்சயத்திலும் நிச்சயம்!'

இந்தத் தீர்மானத்துக்கு நான் வந்துக் கொண்டிருந்த போது, "என்ன யோசிக்கிறாய், நறுமணம்? 'கல்யாணம், கல்யாணம்' என்று சொல்லிக் கொண்டிருக் கிறானே, 'காசு ஏது இவனிடம்?" என்று யோசிக்கிறாயா? காலை ஏழுமணிக்கெல்லாம் வீட்டைவிட்டு வெளியே போய், இரவு பத்து மணிக்கு வீடு திரும்புகிறேனே, அதுவரை நான் என்ன செய்கிறேன் என்று நீ நினைத்துக் கொண்டி ருக்கிறாய்? ஆபீஸ் வேலையை மட்டும் பார்த்துவிட்டு வருகிறேன் என்று நினைத்துக் கொண்டிருக் கிறாயா? அதுதான் இல்லை; காலை ஏழரை மணியிலிருந்து பத்தரை மணி வரை ஒரு பிரசுரகர்த்தரிடம் 'ப்ரூப்' பார்க்கிறேன்; மாலை ஆறு மணியிலிருந்து பத்துமணிவரை இரு பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளைகளுக்கு 'ட்யூஷன்' சொல்கிறேன். பிரசுரகர்த்தர் மாதம் ரூபாய் அறுபது கொடுக் கிறார்.

பெரிய மனிதர்கள் இருவரும் ஆளுக்கு ரூபாய் ஐம்பது வீதம் கொடுக்கிறார்கள். அத்துடன் என்னுடைய சம்பளத்திலிருந்து ரூபாய் நாற்பது எடுத்துப் போட்டு மாதம் ரூபா இருநூறு தபாலாபீசில் கட்டி வருகிறேன். இதுவரை என்ன சேர்ந்திருக்கிறது தெரியுமா? ரூபாய் நாலாயிரம் நறுமணம், ரூபாய் நாலாயிரம்! அப்புறம் என்ன, இன்னும் ஐந்தே மாதங்கள் தான்; ரூபாய் ஆயிரம் அத்துடன் சேர்ந்ததும் நாலாயிரம் ஐயாயிரமாகிவிடும் - அதற்குள் தையும் பிறந்துவிடும். உனக்கொரு வழியும் பிறந்துவிடும், என்ன, நான் சொல்வது? சரிதானே?- எங்கே சிரி; கொஞ்சம் சிரி!'' என்று மூச்சுவிடாமல் சொல்லிக் கொண்டே அவன் என்னுடைய முகத்தைத் திருப்பினான் - அவ்வளவுதான்; ''ஐயோ, அண்ணா!'' என்று நான் அவனுடைய கால்களைப் பற்றிக்கொண்டு விட்டேன்!

''என்ன நறுமணம், என்ன?'' என்று அவன் பதறினான்.

''என்னவா... என்னவா...?'' என்று நான் மேலே ஒன்றும் சொல்லமுடியாமல் கேவிக்கேவி அழுது கொண்டிருந்தபோது எங்கிருந்தோ வந்த என் பாட்டி, ''என்ன நம்பி, என்ன நடந்தது?'' என்றாள் நிலைத்த கண் நிலைத்தபடி.

''ஒன்றுமில்லை. பாட்டி! கல்யாண விஷயமாய் பேசிக் கொண்டிருந்தேன்; அழ ஆரம்பித்துவிட்டது!'' என்றான் அண்ணா.

''இவ்வளவுதானே? தன்னுடையக் கல்யாணத்தை அப்பாவும் அம்மாவும் இருந்து பார்க்கத்தான் கொடுத்து வைக்கவில்லையே என்ற வருத்தமாயிருக்கும், அவளுக்கு!'' என்றாள் அவள்!

''அதற்கா இப்படி அழுகிறாய்? நான்தான் இருக்கிறேனே- அப்பாவுக்கு அப்பாவாக; அம்மாவுக்கு

அம்மாவாக – அது போதாதா, உனக்கு? அழாதே; நான் ஒருவன் உயிரோடிருக்கும்வரை நீ அழாதே!'' என்று என்னைத் தேற்றினான் அந்த அசட்டு அண்ணா.

அதுதான் சமயமென்று, ''போகட்டும், இன்னும் கொஞ்ச நாட்களுக்காவது அவன் பிழைத்துப் போகட்டும்!'' என்று நினைத்தவளாய், அவனுடையக் கால்களைக் கண்ணீரால் கழுவிவிட்டு எழுந்தேன் நான்.

❖ ❖ ❖

மறுநாள் காலை என் அண்ணா வெளியே சென்றதும், முதல் நாள் இரவே தீர்மானித்து வைத்திருந்தபடி, நான் அவருக்கு என்னுடைய முதல் கடிதத்தை எழுதினேன்; பதில் இல்லை. இரண்டாவது, மூன்றாவது என்று இருபது கடிதங்களுக்கு மேல் எழுதினேன்; பதிலேயில்லை!

''இனி தாமதிப்பதில் பிரயோசனமில்லை'' என்று தோன்றிற்று, எனக்கு; எனவே, அவருடைய இருப்பிடத்தைத் தேடிச் சென்றேன்' வாசலில் நின்று கொண்டிருந்த ஓர் இளைஞர், ''யார் வேண்டும், உங்களுக்கு?'' என்றார் என்னைக் கண்டதும்.

அந்த இளைஞரை அதற்கு முன் எங்கேயோ பார்த்தது போலிருக்கவே, 'எங்கே பார்த்திருப்போம், இவரை? என்று எண்ணி, என் நினைவு சுழன்றது... ஆம், நந்திமலையில் அந்தப் பேராசிரியருடன் இவரைப் பார்த்திருக்கிறோமே?

''ஏன் அப்படியே நின்றுவிட்டீர்கள்? உள்ளே வாருங்கள்; யார் வேண்டும், உங்களுக்கு?''என்றார் அவர், மீண்டும்.

நான் உள்ளே நுழைந்தபடி ''பேராசிரியரைப் பார்க்கவேண்டும்'' என்றேன்.

''பேராசிரியரா! நானும் ஒரு பேராசிரியர்தான்!'' என்றார் அவர் மென்னகையுடன்.

''தெரியும்; நந்திமலையில் உங்களைப் பார்த்திருக் கிறேன்!'' என்றேன் நான், புன்னகையுடன்.

அவர் என்னை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்து விட்டு, ''ஓ, நீங்களா! வாருங்கள், வாருங்கள்; உட்காருங்கள்!'' என்று அழைத்துக்கொண்டு போய் பார்வையாளர் அறையில் உட்காரவைத்துவிட்டு, ''இதோ வந்துவிட்டேன்!''என்று மாடிக்கு ஓடினார்.

தான் வந்திருப்பது தெரிந்ததும் அவர் என்ன நினைப் பார்? 'ஏன் வந்தாள்? என்று நினைப்பாரா? அல்லது இத்தனை நாட்களாக ஏன் வரவில்லை?' என்று நினைப்பாரா?

அப்படி நினைப்பவராயிருந்தால் அத்தனை கடிதங்கள் எழுதியும் ஒரு கடிதத்துக்குக் கூடவா பதில் எழுதாமல் இருந்திருப்பார்?

எதுதான் காரணமாயிருக்கட்டும், எடுக்கும்போதே ஒரு பெண்ணின் விஷயத்தில் இத்தனை அலட்சியம் என்றால், அந்தப் பெண் அதைச் சகிப்பாளா, என்ன?

என்ன இழவோ, இவரைப் பார்ப்பது 'மடாதிபதி'யைப் பார்ப்பது போலல்லவா இருக்கிறது? 'தம்பிரான் சுவாமிகள்' எப்போது வருவாரோ, என்னக் 'கட்டளை'யுடன் வருவாரோ?

நறுமணம் இப்படி நினைத்தாளோ இல்லையோ, 'தம்பிரான் சுவாமிகள்' வந்தார்; வந்து, ''மேலே பாடம் நடந்துக் கொண்டிருக்கிறது; ஐயாவைப் பார்க்க முடியவில்லை!'' என்று திருவாய் மலர்ந்தருளியவர்கள் சட்டென்று எதையோ நினைத்துக்கொண்டு, ''இல்லை

இல்லை; பார்க்க முடிந்தது, ஐயாவைப் பார்க்க முடிந்தது!'' என்று தலையைப் பலமாக ஆட்டினார்கள்!

இது என்ன சங்கடம்? இவர் ஏன் இப்படித் தடுமாறுகிறார்? இவர் ஏன் இப்படித் தடுக்கி விழுகிறார்?

ஆச்சரியம் ஒரு பக்கம், அனுதாபம் இன்னொரு பக்கம். இவையிரண்டுக்குமிடையே சிக்கித் தவித்தநான், உங்களுக்கு ரொம்ப சிரமம் கொடுத்துவிட்டேன் போலிருக்கிறது; மன்னிக்கவேணும்!'' என்றேன்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை. என்னுடைய சிரமத்துக்குக் காரணம் நீங்களல்ல; நானே தான்! - அதிருக்கட்டும்; நீங்களும் படிக்கத்தானே வந்திருக்கிறீர்கள்?'' என்றார் அவர்.

படிக்கவா! நாசமாய்ப் போச்சு, இதற்கு நான் என்னத்தைச் சொல்ல?'' ''ஆம் படிக்கத்தான்!'' என்று சொல்லிவிட்டு, ''மேலே இப்போது யார் படித்துக் கொண்டிருக்கிறார்கள்?'' என்று கேட்டேன் மெல்ல.

''உங்களைப் போன்ற ஒரு பெண்தான்!''

''என்னைப் போன்ற ஒரு பெண்ணா?''

''ஆம், அவர் எப்பொழுதுமே ஒவ்வொருப் பெண்ணாக வரவழைத்துத்தான் பாடம் சொல்லிக் கொடுப்பது வழக்கம்!'' என்றார் அவர்.

''திட்டம் நல்ல திட்டமாய்த்தான் இருக்கிறது!'' என்றேன் நான்.

இந்தச் சமயத்தில் தெருக்கதைவைத் திறந்துகொண்டு யாரோ வெளியே செல்வது போலிருக்கவே, ஜன்னல் வழியாக நான் எட்டிப் பார்த்தேன்.

கண்ணகி! - குற்றால அருவியில் குளிக்கும்போது தாமிரபரணி ஆற்றோடு போய்விட்டக் கண்ணகி! - உயிரோடு வெளியே போய்க் கொண்டிருந்தாள்!

ஆயிரமாயிரம் தேள்கள் ஏக காலத்தில் கொட்டி விட்டது போன்ற அதிர்ச்சியில் நான் அந்தக் கண்ணகியையே வெறித்துப் பார்த்துக்கொண்டு நின்ற போது, ''இப்போது நீங்கள் போகலாம்?'' என்ற 'தம்பிரான் சுவாமிக'ளின் குரல் எனக்குப் பின்னாலிருந்து கேட்டது.

அவ்வளவுதான்;'' அனுப்பாதே ராமமூர்த்தி, அந்தத் தெய்வத்தை இங்கே அனுப்பாதே!'' என்று மேலே இருந்த படி ''சந்நிதானம் அலறிற்று!

''தெய்வமா, யாருக்கு யார் தெய்வம்?''என்ற குழப்பத்துடன் நான் மேலே சென்றேன்; பேராசிரியர் அங்கிருந்த ஒரு தூணில் தம் தலையை முட்டி மோதி அழுதுக் கொண்டிருந்தார்.

மறுபடியும் அழுகையா? - ஒன்றும் புரியவில்லை எனக்கு; ''ஏன் என்ன நடந்தது?'' என்று கேட்டு வைத்தேன், தயக்கத்துடன்.

''வேறு என்ன நடக்கவேண்டும் நறுமணம், வேறு என்ன நடக்கவேண்டும்? எவள் செத்துப் போய்விட்டாள் என்று நான் நிம்மதியாக இருந்தேனோ அவளல்லவா மறுபடியும் திரும்பி வந்து என்னை நிலைகுலைய வைக்கிறாள்? எவள் செத்துப் போய்விட்டாள் என்று நான் உன்னை என் இதயத்தில் குடியேற்றினேனோ, அவளல்லவா மறுபடியும் திரும்பி வந்து நம்மைப் பிரிக்கப் பார்க்கிறாள்?'' என்று 'ஓ' வென்று ஓலமிட்டார் அவர்!

எனக்கோ என்ன சொல்வது, என்ன செய்வது என்று ஒன்றுமே தோன்றவில்லை. காரியம் மிஞ்சிப் போய்விட்ட நிலையில் கண்ணீரை விட்டால் வேறு கதி ஏது? எனவே நானும் அழுதேன்; ஆம், அவருடன் சேர்ந்து நானும் அழுதேன்.

''அழாதே நறுமணம்! உன் கண்ணில் நீர் வடிந்தால் என் கண்ணில் உதிரமே பெருகிவிடும் போலிருக்கிறது!

அழாதே நறுமணம், அழாதே!''என்று அவர் என்னைத் தேற்றினார் – தேற்றிவிட்டுச் சொன்னார்.

''தவறு என்னுடையது தான்; ஆற்றோடு போன அவளைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் வந்து விட்டத் தவறு என்னுடையதுதான்! என்மேல் கொண்டு விட்ட மோக வெறிக்காகத் தன் கணவனையேக் கொன்றுவிட்ட அந்தப் பாவியைத் தாமிரபரணி ஆறுகூட ஏற்றுக் கொள்ளத் துணியவில்லை போலும்? போகட்டும், அவள் பாவம் அவளோடு போகட்டும்; என் பாவம் என்னோடு போகட்டும். எங்கள் இருவருடைய பாவமும் உன்னை, என் தெய்வமான உன்னை எந்த விதத்திலும் பாதிக்கக்கூடாது – ஆம், பாதிக்கவே கூடாது என்பதே என்னுடைய விருப்பம்...''

இதற்கு மேல் ஏதோ சொல்ல நினைத்த அவரை நான் இடைமறித்துச் சொன்னேன் :

''நானா உங்களுக்குத் தெய்வம், நீங்களல்லவா எனக்குத் தெய்வம்? சொல்லாதீர்கள்; இன்னொரு முறை அந்தமாதிரிச் சொல்லவே சொல்லாதீர்கள்.

அவர் சொன்னார் :

''அவள் தான் உன்னை நான் மனைவியாக ஏற்றுக் கொள்ளத் தடையாயிருக்கிறாளென்றால், நீயுமா உன்னை நான் தெய்வமாக ஏற்றுக்கொள்ளத் தடையாயிருக்க வேண்டும்? இருங்கள்; யார் எப்படி வேண்டுமானாலும் இருங்கள். ஆனால் உனக்காக என்னால் அந்தத் தியாகத்தை மட்டும் செய்யாமல் இருக்கமுடியாது!''

''என்னத் தியாகம் அது?''என்று நான் திடுக்கிட்டுக் கேட்டேன்.

''இதுவரை யாரும் செய்யாத தியாகம் அது; தம்பி ராமமூர்த்திக்காக நான் உன்னைத் தியாகம் செய்யப் போகிறேன்!'' என்றார் அவர்.

தம்பி ராமமூர்த்தியா! யார் அது?''

''கீழே உன்னை வரவேற்று உபசரித்தாரே, அவர் தான்!''

''இதைச் சொல்ல உங்கள் நா கூசவில்லையா?''

''ஏன் கூசவேண்டும்? ஒரு காலத்தில் வீடு தேடிவந்த விருந்தினருக்கு அமுது படைத்ததோடு, தன் அருமை மனைவியையும் படைத்தவன்தானே மனிதன்? அவனுடைய வாரிசுகள்தாமே நாம்?''

''ஒரு காலத்தில் தாயென்றும் தாரமென்றும் பேதமில்லாமல்கூட மனிதன் இருந்திருக்கிறான்! அதற்காக நீங்களும் இப்போது பேதமில்லாமல் இருக்கிறீர்களா, என்ன?''

''அது வேறு, இதுவேறு. இப்போதுள்ள நிலையில் என்னால்க் கெட்ட உன் வாழ்வு சிறக்க வேண்டுமானால், என் தம்பியால்தான் சிறக்கவேண்டும். அதைத்தவிர வேறு வழியில்லை நறுமணம், அதைத்தவிர வேறு வழியில்லை!''

''இதையா நீங்கள் தியாகம் என்கிறீர்கள்?''

''தியாகம் மட்டுமல்ல, உனக்காக நான் ஆற்றும் கடமையுங்கூட!''

''அந்தக் கடமையைக் கண்ணகிக்கு ஆற்றக்கூடாதா? அந்தத் தியாகத்தைக் கண்ணகிக்காகச் செய்யக்கூடாதா?''

''அவள் ஏற்கமாட்டாள்!''

''நான் மட்டும் ஏற்பேன் என்று நீங்கள் எந்த வகையில் எதிர்பார்க்கிறீர்கள்?''

''இன்னொருத்திக்காக என்னைத் தியாகம் செய்யும் உளவலிமை அவளுக்கில்லாவிட்டாலும் உனக்காவது இருக்குமென்று நான் எதிர்பார்ப்பதால்!''

''அப்படிப் பார்த்தால் அந்த உள வலிமை என்னைக் காட்டிலும் அவளுக்கல்லவா அதிகமாயிருக்கும்? அவளல்லவா ஏற்கெனவே உங்களுக்காகத் தன் கணவனைத் 'தியாகம்' செய்திருக்கிறாள்!''

''அது எப்படித் தியாகமாகும்?''

''அது தியாகமாகாவிட்டால் நீங்கள் சொல்வது மட்டும் எப்படித் தியாகமாகும்?''

''நான் ஒருவருக்காக இன்னொருவரைக் கொல்ல விரும்பவில்லையே?''

''ஆம், உயிரில்லாமல் கொல்ல விரும்பவில்லை; உயிரோடு கொல்லவிரும்புகிறீர்கள்!''

''நான் சொல்வதைத் தவறாகப் புரிந்துகொள்கிறாய் கண்ணே, நான் சொல்வதைத் தவறாகப் புரிந்து கொள்கிறாய்! என் தம்பி என்னைவிட வயதில் இளையவன்; வசதி மிக்கவன்; கவர்ச்சியானவன்; கல்வியிலும் எனக்கு நிகரானவன் – இவற்றைவிட வேறு என்ன வேண்டும், ஒரு பெண்ணுக்கு?''

''கற்பு!''

''அதெல்லாம் வெறும் கட்டுக்கதை; செயற்கை வாழ்வில் மனிதன் கொண்ட சிறுநோக்கு! நீ வேண்டு மானால் பார்த்துக் கொண்டே இரு – இன்னும் கொஞ்ச நாட்களில் மாப்பிள்ளை தேடும் படலம், பெண் தேடும் படலம் எல்லாம் மறைந்து திருமணம் மணவினைபோன்ற சடங்குகளெல்லாம் ஒழிந்து, ஆணும் பெண்ணும் ஒருவரை யொருவர் விரும்பியவுடனே கூடிவாழும் இயற்கை வாழ்வை மேற்கொள்ளப் போகிறார்கள்; அந்த இயற்கை வாழ்விலே மனிதன் நோக்கும் பெரு நோக்காயிருக்கப் போகிறது!''

''அதாவது, நாளை என்று தள்ளிப்போடாமல் இன்றே நீங்கள் கொண்டிருக்கும் பெருநோக்கைப் போல?''

''ஆம், ஆம்!''

''அந்தப் பெருநோக்குக்கு உங்களுடைய தம்பியைப் போன்றவர்களும் உடன்படுகிறார்களா, என்ன?''

''இன்று உடன்படாவிட்டாலும், நாளை உடன்படுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது!''

''நாளை உடன்படுவார்கள் என்ற நம்பிக்கை இன்று உங்களுக்கு உதவுமா என்ன?'

''உதவாதுதான்!''

''அப்படியிருக்கும்போது இன்றே நீங்கள் அவருடைய தலையில் என்னைக் கட்டிவைத்துவிட முடியுமென்று எப்படி நினைக்கிறீர்கள்?''

''ஒரு பொய், ஒரே ஒரு பொய் சொன்னால் போதும்; வெகு எளிதில் அவனை வென்று விடலாம்!''

''அது என்ன பொய்?''

''என்றோ ஒரு நாள் நமக்குள் ஏற்பட்டுவிட்ட அந்த உடலுறவை அவருக்குத் தெரியாமல் மறைத்துவிடுவது தான் அது!''

''இந்தத் துரோகத்தைச் செய்ய நீங்கள் எப்படித் துணிகிறீர்கள்?''

''இதில் துணிவதற்கு என்ன இருக்கிறது. நன்மைக் காகத் தீமை செய்யலாம் என்று அறமே நம்மை அனுமதிக்கும்போது?''

''அறம் அனுமதித்தாலும் அன்பு அதை எதிர்க்காதா?''

''எதிர்க்கும் – ஆனால் அறத்துக்கு மட்டும் அன்பு துணையன்று; மறத்துக்கும் அஃதே துணை என்பதை நீ உன்னுடைய நன்மைக்காகவாவது உணரவேண்டும்!''

''நீங்கள் சொல்வதைப் பார்த்தால், சொன்னபடி கேட்காவிட்டால் உன்னை நான் கொன்றுவிடுவேன்!'' என்று நீங்கள் என்னைப் பயமுறுத்துவது போலிருக்கிறதே?''

''பைத்தியக்காரி! சொன்னதைக் கேட்காவிட்டால் உன்னைநான் ஏன் கொல்லவேண்டும்? அவளே கொன்றுவிடுவாள்!''

''இப்போதுள்ள நிலையில் என்னை யார் கொல்வதாயிருந்தாலும் சரி, அதை நான் வரவேற்கிறேன், ஆனால்...''

''ஆனால் என்ன?''

''என்னைக் கொன்ற குற்றத்துக்காக இன்னொருவர் நீதியின் பேரால் கொல்லப்படுவதைக்கூட நான் விரும்பவில்லை!''

''அதற்காக''

''என்னை நானே கொன்றுகொள்ளத்தயார்; உங்களுடைய நன்மைக்காக என்னை நானே கொன்று கொள்ளத்தயார்!'' என்று நான் திரும்பினேன்.

என்னுடைய கையைச் சட்டென்று பற்றி, ''நீ சாகப் பிறந்தவளல்ல; வாழப் பிறந்தவள்!'' என்றார் அவர்.

''அப்படியானால் நீங்களும் வாழுங்கள்; என்னையும் வாழவிடுங்கள்!'' என்றேன் நான்.

''அதற்குள்ள ஒரு வழியைத் தான் இப்போது நான் சொன்னேன்; நீ கேட்கவில்லை. இன்னொரு வழியை வேண்டுமானால் சொல்லட்டுமா?''

''சொல்லுங்கள்''

''ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் விரும்பி யவுடனேயே கூடிவாழும் அந்த எதிர்கால இயற்கை வாழ்வை இன்றே நாம் வாழ்ந்து காட்டினால் என்ன?''

''அதாவது,, திருமணம் மணவினை போன்ற சடங்குகள் எதுவும் இல்லாமலா?''

''ஆம், ஆம்; அதுவே, அதுவே!''

இதைக் கேட்டதும் என்னையும் அறியாமல் நான் சிரித்தேன்; ''ஏன் சிரிக்கிறாய்?'' என்று கேட்டார் அவர்.

''ஒன்றுமில்லை; எதைச் செய்தாலும் நாலுபேருக்குத் தெரிந்து செய்வதில்லை என்ற தீர்மானம் போலும், உங்களுக்கு?''

''அதுதானே அமைதியான வாழ்க்கை, அது தானே அமைதியான வாழ்க்கை!'' என்று சொல்லிக்கொண்டே, அதுதான் சமயமென்று அவர் தன் கறை படிந்த கைகளால் என்னைச் சுற்றிவளைக்க முயன்றார்.

''விடுங்கள்; தம்பி வந்துவிடப் போகிறார்!''என்று நான் அவருடைய பிடியிலிருந்து விலகினேன்.

வரமாட்டான்; இங்கே பாடம் நடந்து கொண்டிருப்பது அவனுக்குத் தெரியும்!'' என்றார் அவர்.

''பாவம், கண்ணகிக்குக்கூட இங்கே பாடம் நடந்து கொண்டிருப்பதாகத் தான் அவர் என்னிடம் சொன்னார்!''

''அதற்காக அந்தப் பாடத்தைத் தவிர வேறு எந்தப் பாடமும் இங்கே நடப்பதில்லை என்று நீ நினைத்து விடாதே! அது எனக்குத் தொழில்; இது எனக்கு விளையாட்டு!''என்று சொல்லிக் கொண்டே அவர் என்னுடன் சற்றே விளையாட ஆரம்பித்தார்!

''ரொம்ப அழகாய்த்தான் இருக்கிறது! இயற்கை வாழ்வை இன்றே தொடங்கி விடலாம் என்று நினைக்கிறீர்களா, என்ன?'' என்று கேட்டேன் நான்.

''ஆம், ஆம்'' என்று சொல்லிக்கொண்டே அவர் என்னை நெருங்கினார்.

''அப்படியானால் இங்கே வாருங்கள்!'' என்ற நான் அவரை அழைத்துக்கொண்டு மாடி வராந்தாவுக்கு வந்தேன். தெருவில் ஒன்றுக்குப்பின் ஒன்றாக ஓடிக்கொண்டிருந்த இரு நாய்களை அவருக்குச் சுட்டிக்காட்டி, ''இது என்ன வாழ்வு?'' என்றேன்.

''மிருக வாழ்வன்றோ, இது!'' என்றார் அவர், அருவருப்புடன்.

''இயற்கை வாழ்வில் மனித வாழ்வென்றும் மிருக வாழ்வென்றும் பேதம் உண்டா, என்ன? அதெல்லாம் ஒன்றுமில்லை ஐயா, அதெல்லாம் ஒன்றுமில்லை. அந்த இயற்கை வாழ்வை ஒட்டி நீங்களும் வாழ வேண்டு மானால் இன்றே விட்டுவிடுங்கள். செயற்கை வாழ்வின் சின்னங்களான அறுசுவை உண்டிகளை; இன்றே களைந்து விடுங்கள், செயற்கை,வாழ்வின் சின்னங்களான ஆடை அணிகளை; இன்றே துறந்துவிடுங்கள், செயற்கை வாழ்வின் சின்னங்களான அடுக்கு மாளிகைகளை! – போங்கள்; கிடைத்ததைக் கிடைத்த நேரத்தில் தின்று உயிர்வாழ அந்த நாய்களுக்குப் பின்னால் போங்கள்!'' என்ற நான் அதுவரை அடக்கி வைத்துக்கொண்டிருந்த ஆத்திரத்தையெல்லாம் 'கொட்டு, கொட்டு' என்று கொட்டிவிட்டு மாடிப்படிகளை விட்டுக்கீழே இறங்கினேன்.

''என்ன, பாடமெல்லாம் நடந்து முடிந்துவிட்டதா?'' என்று கேட்டுக்கொண்டே, எனக்கு எதிர்த்தாற்போல் வந்து நின்றார் அந்த அசட்டு ராமமூர்த்தி.

அவரை நான் அனுதாபத்துடன் ஏற இறங்கப் பார்த்துவிட்டு, வீட்டை நோக்கி நடந்தேன்!

✧ ✧ ✧

இனி என்ன?- இப்படி ஒரு கேள்வி என் உள்ளத்தில் எழுந்தது - எழுந்த கேள்வி எழுந்தவுடன் நிற்கவில்லை; என்னுடைய வீட்டை நோக்கி நான் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியின் போதும் அது என்னை, 'இனி என்ன, இனி என்ன?'' என்று இடைவிடாமல் கேட்டுக்கொண்டே இருந்தது.

இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை. எனவே திருப்பிக் கேட்டேன் - என்னவென்று, ' இனி என்ன?'' என்றுதான்!

இனி என்ன?

இனி என்ன?

இனி என்ன?

இனி என்ன?

கேள்விக்குப் பதில் கேள்விதான் கிடைத்தது; பதில் கிடைக்கவில்லை!

வேண்டும்; நன்றாக வேண்டும் - 'இனிமேல்தான் வாழவேண்டும், இனிமேல்தான் வாழ வேண்டும்' என்று அழுது புலம்பிய அவருக்கு முன்னால் போய் நின்று, 'இதோ இருக்கிறேன், வாழ!' என்று கைக் கொடுத்தேனே, எனக்கு இதுவும் வேண்டும்; இன்னமும் வேண்டும்!

அவரைப் பொறுத்தவரை அவர் ஒரு வழிக்கு இரண்டு வழிகளாகக் காட்டி விட்டார் - கன்னிப்பெண்ணாக நடித்து ராமமூர்த்தியைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டு மென்பது ஒன்று; அந்தக் கல்யாணம் வேண்டாமென்றால்,

தன்னுடன் 'இயற்கையோடு இயைந்த வாழ்'வை மேற்கொள்ள வேண்டுமென்பது இன்னொன்று!

அதாவது, கள்ளக்காதலனாக இருக்க அவர் தயார்; கல்யாணம் செய்துகொண்டக் கணவனாக இருக்க அவர் தயாராயில்லை!

முதல் வழி, அவருடைய வழியில் 'தியாக'மாகச் சுடர்விடுகிறது; இரண்டாவது வழி, அவருடைய வழியில் 'இயற்கையோடு இயைந்த வாழ்'வாக ஒளி வீசுகிறது!

ஆகா! வாய்ப்பந்தலும், வார்த்தைப் பந்தலும் போடுவதில்தான் படித்தவர்கள் எவ்வளவு கெட்டிக்காரர்களாயிருக்கிறார்கள்!

''அது மட்டுமா? – முதல் வழி, அவருடைய வழியில் அன்பைக் காட்டுகிறது; இரண்டாவது வழி, அவருடைய வழியில் பண்பைக் காட்டுகிறது!''

நாசமாய்ப் போக; அவர்களுடைய அன்பும் பண்பும் நாசமாய்ப் போக!

இப்படி நான் சபித்தேனோ இல்லையோ, ''நாங்கள் ஒன்றும் நாசமாய்ப் போய்விடமாட்டோம்'' என்பது போல் தம்முடைய காரை எனக்கு அருகே கொண்டுவந்து நிறுத்தி, ''ஏறிக்கொள்ளுங்கள்!'' என்றார் ராமமூர்த்தி.

''எதற்காக?''

''உங்களை வீடுவரை கொண்டுபோய் விடுவதற்காக!''

''வேண்டாம்; நான் நடந்தே போய்விடுகிறேன்!''

''ஏன், காரில் போனால் என்னவாம்''

''சொன்னால் கோபித்துக் கொள்ள மாட்டீர்களே?''

''மாட்டேன்; சொல்லுங்கள்?''

''மானம் கெட்டவர்கள் மானாபிமானத்தோடு வாழ்பவர்களின் முகத்தில் விழிக்கவே வெட்கப்பட்டுக் கொண்டு ஓடுவது போலிருக்கிறது காரில் செல்வது!''

''சரியாகச் சொன்னீர்கள்; என்னுடைய அபிப்பிராயமும் அதுதான்!''

''அப்படியானால், இந்தக் கார்...''

''என்னுடையதல்ல; பேராசிரியருடையது!''

''அவர்தான் சொன்னாரா, என்னை வீடுவரை கொண்டுபோய் விட்டுவிட்டு வரும்படி?''

''ஆமாம்!''

''வீடுவரை தானேக் கொண்டு போய் விடச் சொன்னார், வேறெங்கும் கொண்டு போய்விடச் சொல்லவில்லையே?''

''இல்லை!''என்று சொல்லிவிட்டு, அவர் சிரித்தார்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?''என்று கேட்டேன் நான்.

''ஒன்றுமில்லை உங்களுடைய கேள்வியின் உள்ளர்த்தத்தைப் புரிந்துகொண்டேன் - அதனால்தான் சிரித்தேன்!''

''அப்படியானால் நீங்கள் அசடுபோல் நடந்து கொள்வதெல்லாம்...''

''இந்த உலகத்தில் தங்களைத்தாங்களே புத்திசாலிகள் என்று சொல்லிக்கொண்டு திரிபவர்களின் போக்கைப் புரிந்து கொள்வதற்காகத்தான் அம்மா, புரிந்து கொள்வதற்காகத் தான்!''என்றார் அவர்.

அவ்வளவுதான்; காரின் கதவை நானே திறந்துக் கொண்டு ஏறி உட்கார்ந்து, ''விடுங்கள்!'' என்றேன் துணிந்து.

''நீங்களும் மானம் கெட்டவர்களின் கோஷ்டியில் சேர்ந்துவிட்டீர்களா, என்ன?''

ஆமாம், மானம் கெட்டவர்களைப் பற்றித் தெரிந்துகொள்ள நானும் கொஞ்ச நாட்கள் மானம் கெட்டவளாக இருப்பதென்றுத் தீர்மானித்துவிட்டேன்!''

அப்படியானால் என்னை நீங்கள் பின்பற்றலாம்!'' என்று சொல்லிக்கொண்டே, அவர் காரை மேலே செலுத்தினார்.

''என்னுடைய கேள்வியின் உள்ளர்த்தத்தைப் புரிந்து கொண்டேன் என்றீர்களே, என்னத்தைப் புரிந்து கொண்டீர்கள்?'' என்று நான் கேட்டேன்.

''இது என் அறிவைச் சோதிக்கவா, அசட்டுத்தனத்தைச் சோதிக்கவா?'' என்று கேட்டார் அவர்.

''இரண்டையும் தான்!''

''சரி; வீடுவரைதானே கொண்டுபோய் விடச் சொன்னார், வேறெங்கும் கொண்டுபோய் விடச் சொல்லவில்லையே? என்று நீங்கள் என்னைக் கேட்டபோது என்ன நினைத்தீர்கள்?''

''அதைத்தானே நானும் கேட்கிறேன்!''

''அப்படியானால் நீங்கள் தூங்கவில்லை, விழித்துக் கொண்டுதான் இருக்கிறீர்கள் என்று தெரிகிறது!'' என்று சொல்லிவிட்டு, அவர் கேட்டார்.

''சினிமாவில் நடப்பது போல, ஏதாவது ஒரு மலைச் சிகரத்துக்குக் கொண்டு போய் உருட்டிக் கிருட்டி விட்டுவிடச் சொன்னாரோ, என்னவோ என்று நீங்கள் பயந்து போய் விட்டீர்கள் – இல்லையா?''

''சரி; ரொம்ப சரி!'' என்று அவர் சொன்னதை ஆமோதித்துவிட்டு, நான் கேட்டேன்.

''பேராசிரியரை எத்தனை வருடங்களாகத் தெரியும் உங்களுக்கு?''

''நாலைந்து வருடங்களாக!''

''நாலைந்து வருடங்களாக நீங்கள் அவருடைய வீட்டில்தான் குடியிருக்கிறீர்களா?''

''அவருடைய வீட்டில் நான் குடியிருக்கவில்லை; என்னுடைய வீட்டில்தான் அவர் குடியிருக்கிறார்!''

''உங்களுடைய வீட்டில் உங்களைத் தவிர வேறு யாரும் இல்லை போலிருக்கிறதே?''

''அப்பா இருக்கிறார். ஆனால் அவர் இப்போது வீட்டில் இல்லை; ஊருக்குப் போயிருக்கிறார்''

''சாப்பாடு''

''சமையற்காரனை நம்பியிருக்கிறோம்!''

''பேராசிரியரும் அவனைத்தான் நம்பியிருக்கிறாரா?'', ''இல்லை; திருவாட்டி கண்ணகி அம்மையாரின் வீட்டிலிருந்து அவருக்குச் சாப்பாடு வந்துவிடுகிறது!''

''ஓஹோ?''

''என்ன ஓஹோ?''

''ஒன்றுமில்லை; அதோ இருக்கிறது பாருங்கள் - அதுதான் என்னுடைய வீடு!'' என்று நான் மழுப்பினேன்.''

அவர் சிரித்தார்; ''ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்று நான் கேட்டேன்.

''ஒன்றுமில்லை; உங்களுடைய வீடு எனக்குத் தெரியும்!''என்று அவரும் மழுப்பினார்.

வண்டி நின்றது; ''போய் வாருங்கள்!'' என்று சொல்லி விட்டு நான் உள்ளே நுழைந்தபோது, ''இது நறுமணத்தின் வீடு?'' என்று கேட்கும் கண்ணகி அம்மையாரின் குரல் என் காதில் விழுந்தது.இவர்கள் ஏன் இங்கே வந்தார்கள் என்று ஒன்றும் புரிய வில்லை எனக்கு; திரும்பி ராமமூர்த்தியைப் பார்த்தேன்.

அப்பொழுதுதான் காரைக் கிளப்புவதில் முனைந்து கொண்டிருந்த அவர், ''கடவுள் உங்கள் பக்கத்தில் தான் இருக்கிறார் அம்மா, கடவுள் உங்கள் பக்கத்தில்தான் இருக்கிறார்!'' என்றார் தம் தோள்களை ஒரு குலுக்குக் குலுக்கி.

''அப்படி ஒருவர் இருக்கிறாரா? – சரி, இருக்கட்டும்; இருப்பவர்களையெல்லாம் விட்டுவிட்டு அவர் ஏன் இப்போது எனக்குப் பக்கத்தில் வந்திருக்கிறார்?''

''உண்மையான பேராசிரியரை உங்களுக்குக் காட்டு வதற்காக!''

''அதற்காகப் போயும் போயும் கண்ணகி அவதாரம் தானா எடுக்கவேண்டும், அவர்?''

''அன்று நீங்கள் பார்த்த கண்ணகி வேறு; இன்று பார்க்கப் போகும் கண்ணகி வேறு!''

''அதையும்தான் பார்த்து விடுகிறேனே!'' என்று நான் மறுபடியும் திரும்பினேன்.

''எது நடக்கக் கூடாது என்று பேராசிரியர் நினைத் தாரோ, அது நடந்துவிட்டது அம்மா, அது நடந்து விட்டது!'' என்றார் ராமமூர்த்தி.

''எதைச் சொல்கிறீர்கள், நீங்கள்?'' என்று நான் கேட்டேன்.

''உங்களுடைய சந்திப்பைத்தான்!''

''அதற்காகத்தான் என்னைக் கொண்டுபோய் வீட்டில் விட்டுவிடும்படி அவர் உங்களிடம் காரைக் கொடுத்து அனுப்பினாரா, என்ன?''

''இல்லாவிட்டால் இத்தனை நாளும் பிறக்காத கருணை இன்று ஏன் பிறந்திருக்கப் போகிறது?'' என்றார் அவர், சிரித்துக்கொண்டே.

அதற்குள், ''வாம்மா, வா! உன்னைத்தேடித்தான் நான் வந்திருக்கிறேன்!''என்று நான் வரவேற்பதற்குப் பதிலாக கண்ணகி அம்மையார் என்னைவரவேற்கவே, ''இனி நான் உங்களுக்குக் குறுக்கே நிற்க விரும்பவில்லை!'' என்று சொல்லிவிட்டு ராமமூர்த்தி போய்விட்டார்.

பேராசிரியரின் விருப்பத்துக்கு நேர் விரோதமாகப் பிரித்துவைக்கச் சொன்னவர்களைச் சேர்த்துவைத்து விட்டதில் தான் அவருக்கு எவ்வளவு மகிழ்ச்சி! அவருடைய தலை மறைந்ததும், ''இந்த வீட்டில் உன்பாட்டியைத் தவிர வேறு யாரும் இல்லையே!'' என்று கண்ணகி அம்மையார் என்னைக் கேட்டார்.

''இருக்கிறார்; என் அண்ணா இருக்கிறார்!'' என்றேன் நான்.

''அது தெரியும், எனக்கு; அவர் இப்போது வீட்டில் இல்லையல்லவா?''

''இல்லை!''

''சரி, வா; மாடிக்குப் போவோம்!'' என்று என்னை அழைத்துக்கொண்டு அவர் மேலே சென்றார்.அங்கே அவர் சொன்ன கதை என்னுடைய நெஞ்சைத் தொட்டது; இதயத்தைச் சுட்டது.

ஆம், அவரும் என்னைப் போலவே இளம் பிராயத்தில் காதல் என்னும் மாயையால் ஆட்கொள்ளப் பட்டுப் பேராசிரியரைக் காதலித்தாராம். பேராசிரியரோ என்னைப் பதம்பார்த்ததுபோல் அவரையும் பதம்பார்த்து விட்டு, 'இயற்கையோடு இயைந்த வாழ்வு' வாழலாம் என்றாராம். இந்த நிலையிலேத் தன்னால் தற்கொலை செய்துகொள்ளும் அளவுக்குத் துணிந்துவிட்ட தன் தந்தையின் வற்புறுத்தலுக்கு இணங்கி, அவர் வேறொருவரை மணந்து கொள்ள நேர்ந்ததாம். மனமற்ற அந்த மணத்துக்குப் பிறகும் தன்னுடைய உடலைத் தனக்கு மாலையிட்ட வரிடம் ஒப்படைக்காமல் உள்ளத்தை மட்டுமே ஒப்படைத்து வாழ்ந்துவந்தாராம், அவர். இதனால் ஏற்பட்டப் பூசலில் இருவரும் பிரிந்து வாழ நேர்ந்தபோது, மறுபடியும் தன்னுடைய 'இயற்கையோடு இயைந்த வாழ்'வை அவருடன் தொடங்க வந்தாராம், பேராசிரியர். அதற்கு உடன்பட அம்மையார் மறுத்த போது, வருந்துகிறேன் அம்மையே, வருந்துகிறேன்; எனக்காக நீ மேற்கொண்டுள்ள அவல வாழ்வு குறித்து நான் வருந்துகிறேன்!'' என்று வழக்கம் போல் அழ ஆரம்பித்துவிட்டாராம், அவர்! -

ஆம், சிரித்துச் சிரித்துச் சிலர் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்வது போல, அழுதழுது தம் காரியத்தைச் சாதித்துக் கொள்வதில் வல்லவராயிருந்து வந்திருக்கிறார், அந்த நல்லவர்! அது தெரியாமல் தானே நானும் அவரிடம் ஏமாந்து போனேன்? - நான் அடைந்த அந்த ஏமாற்றத்தை அவரும் அடைந்திருக்கிறார்; அதற்குப் பிறகு அவருடைய கணவரின் உடல்நிலை சரியில்லை என்றத் தகவல் எட்டியிருக்கிறது; போய்ப் பார்த்திருக்கிறார். ''உடல்நோய் ஒன்றுமில்லை; உளநோய்' என்று தெரிந்திருக்கிறது. தன் மனம் தன்னை உறுத்த, தான் செய்தத் தவறுக்காக வருந்தியிருக்கிறார். அந்த நிலையிலே,சக ஆசிரியர் என்ற முறையைச் சாக்காக வைத்துக்கொண்டு அவரைப் பார்க்க வந்திருக்கிறார்.

'அடபாவி, இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் உன்னால் தானே நான் ஆளானேன்?'' என்று அவரைப் பார்த்ததும் தன்னை மறந்துக் கத்தியிருக்கிறார், அம்மையார். பேராசிரியரோ வழக்கத்துக்கு விரோதமாகச் சிரித்து, 'கவலைப்படாதே, ஒரே ஒரு மாத்திரையில் அவரைக் குணமாக்கிவிட லாம்' என்று ஏதோ ஒரு மாத்திரையை எடுத்துக் கொடுத் திருக்கிறார். அம்மையார் அதை வாங்கித் தன்னுடைய கணவரின் வாயிலே போட்டுத் தண்ணீரை ஊற்றியிருக்கிறார் – அவ்வளவுதான்; அவருடைய ஆத்மா சாந்தி அடை ந்து விட்டிருக்கிறது. 'ஓம் சாந்தி, ஓம் சாந்தி' என்று சொல்லிக் கொண்டே பேராசிரியர் அம்மையாரை நெருங்கியிருக்கிறார்; அம்மையாரோ செய்வது இன்ன தென்று அறியாது பின் வாங்கியிருக்கிறார்.

பொறுமை இழந்த பேராசிரியர் 'நில்!' என்று ஓர் அதட்டு அதட்டி அவரை நிற்கவைத்துவிட்டு, 'இனி, ஓர் அடி பின் வாங்கினால்கூட உன்னைப் போலீசாரிடம் ஒப்படைத்து விடுவேன், உன்னுடையக் கணவனை நீ கொன்ற குற்றத்துக்காக!'' என்று மிரட்டியிருக்கிறார். அதற்குப் பிறகு நடந்தேற வேண்டியவையெல்லாம் அக்கம் பக்கத்தாருக்குத்' தெரியாமல் நடந்தேறிவிட்டாலும், அம்மையாரின் மனம் மட்டும் அமைதியில்லாமல் தவித் திருக்கிறது. ஆகவே கணவரின் உயிரை மாத்திரையால் கொன்றப் பேராசிரியர், மனைவியின் உணர்வை மதுவால் கொன்றிருக்கிறார். அன்றிலிருந்து இருவரும் ஒருவருக் கொருவர் அஞ்சி வாழவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியிருக்கிறார்கள்!

கொடுமையும் கொடூரமும் மிக்க இந்தக் கதையைக் கேட்டதும் என்மேல் எனக்கிருந்த நம்பிக்கையே அற்று விடும் போலிருந்தது எனக்கு. ஏனெனில், ஒரே கதையை ஒரு சிறிது மாறுதலுடன் இருவரிடமும் கேட்டிருக்கிறேன், நான். இவர்களில் யார் சொல்வது சரி, யார் சொல்வது

தவறு? இவர்கள் இருவரில் யார் குற்றவாளி, யார் நிரபராதி? இவர்களில் யாரை நான் நம்புவது, யாரை நான் நம்பாமல் இருப்பது?

இப்படி நான் எண்ணிக் குழம்பிக் கொண்டிருந்த போது, ''எனக்குத் தெரியும் நறுமணம். எல்லாம் எனக்குத் தெரியும்!''என்றார் அவர்.

''என்ன தெரியும், உங்களுக்கு?''

''இதே கதையை ஒரு சிறிது மாறுதலுடன் அவரும் உன்னிடம் சொல்லியிருக்கிறார் அல்லவா?''

''ஆம்; அது எப்படித்தெரியும், உங்களுக்கு?''

''அவரே சொன்னார், உன்னை ஏமாற்றுவதற்காக அப்படிச்சொன்னேன் என்று!''

''அட பாவி!''

என்னை மறந்து நான் இப்படிச் சொன்னதும் அவர் சிரித்தார்; சிரித்துவிட்டுச் சொன்னார்.

''இன்பம் புண்யத்தில் இல்லை, பாவத்தில் தான் இருக்கிறது என்பவராயிற்றே, அவர்? அவராப் பாவத்துக்கு அஞ்சப்போகிறார்?''

''இந்தத் தகவல்களையெல்லாம் பெங்களூரில் நான் உங்களைச் சந்தித்த போதே நீங்கள் என்னிடம் சொல்லி யிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!''

''அதனாலென்ன, இப்பொழுதும் ஒன்றும் குடி முழுகிப் போய்விடவில்லை; இதோ பார்!'' என்று தம் கைப் பையிலிருந்தக் கடிதங்கள் சிலவற்றை எடுத்து அவர் என்னிடம் காட்டினார். நான் அவற்றைப் பார்த்தேன்! அவருடைய கணவரைக் கொன்றவர் பேராசிரியர்தான் என்பதை நிரூபிப்பதற்கு அவை

போதுமானவையாயிருந்தன. ''சரி. இவற்றை வைத்துக் கொண்டு நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?'' என்று நான் கேட்டேன்.

''உன்னை வாழவைக்கப் போகிறேன் குழந்தாய், உன்னை நான் , வாழவைக்கப் போகிறேன்!''என்றார் அவர் கனிவுடன்.

''என்னையா, அந்தக் கொலைகாரனுடனா? என்றேன் நான் அருவருப்புடன்.

''அதைப்பற்றி இப்போது பேசிப் பயனில்லை. தெரிந்தோ தெரியாமலோ நீ உன்னை அவனிடம் ஒப்படைத்து விட்டாய்! இனி உனக்காக நீ அவனைக் கல்யாணம் செய்துகொள்ளாவிட்டாலும், உன்னுடைய அண்ணனுக் காகவாவது கல்யாணம் செய்துகொள்ளத்தான் வேண்டும்!'' என்றார் அவர் அழுத்தந்திருத்தமாக.

''அண்ணன்! –ஆம், எனக்கும் ஓர் அண்ணன் இருக்கத் தான் இருக்கிறான் என்பது இப்போதுதான் என்னுடைய நினைவுக்கு வருகிறது!'' என்றேன் நான். அவரை ஏறிட்டுப் பார்க்க முடியாமல் எங்கோ பார்த்தபடி.

''அந்த அண்ணனுக்காக, நாலுபேருக்கு முன்னால் அவன் தலைநிமிர்ந்து நடக்கவேண்டும் என்பதற்காக, நீ அந்தக் கொலைகாரனுக்குப் பலியாகத்தான் வேண்டும், குழந்தாய், பலியாகத்தான் வேண்டும்!''என்றார் அவர், கண்களில் நீர்ததும்ப.

அவ்வளவுதான்; ஏதோ ஓர் உணர்ச்சி என்னை உந்தித் தள்ள 'அம்மா!' என்று கதறிக்கொண்டே நான் அவருடைய மடியில் முகத்தைப் புதைத்துக்கொண்டுவிட்டேன்!

''அம்மா! இத்தனை நாட்களுக்குப் பிறகாவது என்னை அம்மா!' என்று அழைக்க ஒரு பெண் கிடைத்தாளே,

அதுவே போதும் எனக்கு!'' என்று சொல்லிக்கொண்டே, அவர் என்னுடையத் தலையை அன்புடன் கோதி விட்டபடி, ''இன்னொரு விஷயம் எனக்குத் தெரிய வேண்டும்; அதை நீ என்னிடம் சொல்வாயா?'' என்றார் என்னை ஏறிட்டுப் பார்க்கமுடியாமல் எங்கோ பார்த்தபடி.

''இனி நான் உங்களிடம் எதையும் மறைக்க விரும்ப வில்லை, அம்மா! கேளுங்கள் சொல்கிறேன்!'' என்றேன் நான்.

அவர் தன் குரலைத் தாழ்த்தி, ''அவனுடன் தொடர்பு கொண்ட நாளிலிருந்து நீ மாதம் தவறாமல் தலை முழுகிக் கொண்டுவருகிறாயா?'' என்றார் சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டே.

''இல்லை அம்மா, இல்லை!'' என்றேன் நான், நாத்தழுதழுக்க.

''அப்படியானால் நீ உன் அண்ணனுக்காக அந்தத் தியாகத்தைச் செய்யாவிட்டாலும், உன்னுடைய வயிற்றில் உருவாகிக்கொண்டிருக்கும் பொடியனுக்காகவாவது நீ அந்தத் தியாகத்தைச் செய்யத்தான் வேண்டும்'' என்றார் அவர், பெருமூச்சுடன்.

''செய்கிறேன் அம்மா, செய்கிறேன்!'' என்றேன் நானும் பெருமூச்சுடன்.

''சரி; நான் வருகிறேன்'' என்று அவர் என்னிடம் விடைபெற்றுக் கொண்டு எழுந்தார். நான் அவரைக் கொண்டுபோய் வாசல்வரை விட்டுவிட்டுத் திரும்பினேன்.

''யாரடி, அது?'' என்று கேட்டாள் பாட்டி.

''வாத்தியாரம்மா, என்னைப் பார்க்க வந்திருந்தார்கள்!'' என்றேன் நான்.

அவள் அத்துடன் என்னை விடவில்லை; ''இங்கே ஏதடி, உனக்கு வாத்தியாரம்மா?'' என்று வேறு கேட்டு என்னை மேலும் ஒரு பொய் சொல்லத் தூண்டினாள்.

நான் தயங்கவில்லை; பெங்களூரிலிருந்த வாத்தியாரம்மாதான்; இப்போதுதான் சென்னைக்கு வந்திருக்கிறார்கள்!'' என்று சொல்லி, அவளுடைய வாயை அப்போதைக்கு அடைத்துவைத்தேன்.

✧ ✧ ✧

அன்று என் ஆத்திரத்துக்குப் பாத்திரமாகி, இன்று என்னுடைய அன்புக்குப் பாத்திரமாகிவிட்டக் கண்ணகி அம்மையார் என்ன சொன்னார்களோ என்னமோ, அது எனக்குத் தெரியாது; அடுத்த நாளே பேராசிரியர் என்வீடு தேடி வந்துவிட்டார். அவரை வரவேற்கவும் முடியாமல், வரவேற்காமல் இருக்கவும் முடியாமல் நான் தவித்துக் கொண்டிருந்தபோது, சட்டென்று குனிந்து அவர் என்கால்களைப் பற்றி, ''என்னை மன்னித்துவிடு நறுமணம் என்னை மன்னித்துவிடு!''என்றார் தம் கண்களைக் குளமாக்கிக்கொண்டு!

அவர் என் கால்களைப் பற்றிய அதே வேகத்தில் நான் கொஞ்சம் பின்வாங்கி நின்று, ''இதெல்லாம் என்ன வேடிக்கை? எழுந்திருங்கள்!'' என்றேன் ஒரு பக்கம் ஆத்திரத்துடனும், இன்னொரு பக்கம் அனுதாபத்துடனும்.

''வேடிக்கையல்ல நறுமணம், வேதனை!'' என்றார் அவர்.

''யாருக்கு? உங்களுக்கா, எனக்கா?''

''இருவருக்குமேதான்! என்னை உன்னால் புரிந்து கொள்ளமுடியவில்லையே என்று எனக்கு வேதனை; உன்னை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லையே என்று எனக்கு வேதனை!''

இதைக் கேட்டதும், 'புரிந்துகொண்டவரையில் போதும்; போய்வாருங்கள்!' என்று சொல்லி விடலாமா என்று தோன்றிற்று எனக்கு. இருந்தாலும், என்னைப் பெறாமலே பெற்றெடுத்துக்கொண்டு விட்ட என் தாயாருக்காக அதை ஒருவாறு அடக்கிக்கொண்டு ''இருக்கலாம்; நீங்கள் சொல்லும் வேதனை இருவருக்கும் இருக்கலாம்; அதற்காகப் 'புனித' மான உங்கள் கரங்களால் 'புனித'மான என் பாதங்களைப் பற்றும் அளவுக்கா நீங்கள் துணிவது?'' என்றேன் நான்.

''துணியாமல் எப்படி இருக்கமுடியும்? மிருகமா யிருந்த என்னை மனிதனாக்கிவிட்ட தெய்வமல்லவா நீ?''

''அதற்காகக் 'கோயில்' என்னும் பேரால் மனிதன் தெய்வத்துக்குச் 'சமாதி' கட்டிவிட்டதுபோல, நீங்களும் எனக்குச் சமாதி கட்டிவிடாதீர்கள்!''

''சீச்சீ, அப்படியெல்லாம் செய்வேனா நான்?'' என்று சொல்லிக்கொண்டே சுற்றும் முற்றும் பார்த்த அவர், ''எங்கே உன் அண்ணாவைக் காணோம்?'' என்றார்.

''வேலைக்குப் போயிருக்கிறார்!'' என்றேன் நான்.

''பாட்டி?''

''கடைக்குப் போயிருக்கிறாள்!''

''அப்படியானால் இப்போது நீ தனியாய்த்தான் இருக்கிறாயா?''

''சரி, நான் வந்த வேளை சரியில்லை போலிருக்கிறது; வருகிறேன்!'' என்று அவர் திரும்பினார்.

இது எனக்கு ஆச்சரியத்திலும் ஆச்சரியமாயிருந்தது – இருக்காதா, ஒரு பெண்ணின் தனிமையை விரும்பாத அளவுக்கு அவர் திடீரென்று யோக்கியராகிவிட்டால்? – இருந்தாலும், அதைக்கூட நான் வெளியே காட்டிக்

கொள்ளாமல், ''சரி போய்வாருங்கள்!'' என்று அவரைக் கொண்டுபோய் வாசல்வரை விட்டுவிட்டு வரப் போனேன்.

அப்போது எதிர்பாராத விதமாக எங்களுக்கு எதிர்த்தாற்போல் வந்த அண்ணா, ''வாருங்கள், வாருங்கள்; நாலைந்து நாட்களாகவே நான் உங்களைப் பார்க்க வேண்டுமென்று இருந்தேன்!'' என்று பேராசிரியரை வரவேற்றுக் கொண்டே உள்ளே நுழைந்தான்.

''நானும் உங்களைப் பார்க்கவேண்டுமென்று தான் வந்திருந்தேன்!''என்று சொல்லிக்கொண்டே, பேராசிரியரும் திரும்பி அவனைப்பின் தொடர்ந்தார்.

''ஏன் அண்ணா, இன்று நீ வேலைக்குப் போகலையா?'' என்று நான் கேட்டேன்.

''போனேன்; ஆனால், அதில் ஒரு வேடிக்கை!'' என்றான் அண்ணா.

''என்ன வேடிக்கை, அண்ணா?''

''அங்கே போனபிறகுதான் இன்று ஞாயிற்றுக்கிழமை என்பது என்னுடைய நினைவுக்கு வந்தது!''

''நல்ல வேடிக்கைதான், போ!'' என்று நான் சிரித்தேன்.

''இதில் சிரிப்பதற்கு என்னம்மா, இருக்கிறது? நம்மைப்போன்றவர்கள் வாழும் 'இயந்திர வாழ்'வில் இதெல்லாம் சகஜம்!''

''சரியாகச் சொன்னீர்கள், சரியாகச் சொன்னீர்கள்!'' என்று பேராசிரியர் அவன் சொன்னதை ஆமோதித்து விட்டு, 'நறுமணத்தின் திருமணம் குறித்து நான் உங்களுடன் பேச வந்தேன்!'' என்றார் தம்முடைய பார்வையை என்மேல் செலுத்தி.

அவ்வளவுதான்; உடனே என் அறைக்குப்போய்விட்ட நான், கதவிடுக்கில் நின்று அவர்கள் மேலே என்ன பேசுகிறார்கள் என்பதைக் கவனித்தேன்.

''நானும் அதே விஷயமாகத்தான் உங்களைப் பார்க்கவேண்டுமென்று இருந்தேன்!'' என்றான் அண்ணா.

''மனத்தந்தி என்று ஏதோ ஒன்று இருப்பதாக விஞ்ஞானிகள் சொல்கிறார்களே, அது உண்மையாகத்தான் இருக்கும்போலிருக்கிறது!''என்று சொல்லிவிட்டு, ''இந்தாருங்கள், ரூபாய் பத்தாயிரம்!'' என்று நூறு ரூபாய் நோட்டுக்கட்டொன்றை எடுத்து என் அண்ணாவுக்கு முன்னால் வைத்தார் அவர்.

''இது எதற்கு?'' என்றான் அண்ணா, ஒன்றும் புரியாமல், ''நறுமணத்தின் திருமணச் செலவுக்கு!'' என்றார் அவர்.

''அதற்கு வேண்டியப் பணத்தைத்தான் நானே சேர்த்து வைத்திருக்கிறேனே, இது எதற்கு? நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்!''என்று அவர் வைத்த பணத்தை அவருக்கு முன்னாலேயே நகர்த்தி வைத்தான் அண்ணா.

''அதனாலென்ன, இது என் அன்பளிப்பாக இருக்கட்டுமே?''

''அன்பளிப்பு என்றால் அதை நகை நட்டுக் களாகவோ, துணிமணிகளாகவோ வாங்கிக் கொடுத் திருக்கலாமே, நீங்கள்?''

''யார் வாங்கினால் என்ன? நான் வேறு; நீங்கள் வேறா?'

''அப்படியானால் சரி; திருமணத்தை இந்த மாதத்திலேயே வைத்துக் கொள்வோமா?''

''வைத்துக்கொள்ளலாம்; ஆனால்...''

''ஆனால் என்ன?''

''இம்முறை கல்கத்தாவில் நடக்கவிருக்கும் தமிழ் விழாவில் நானும் கலந்துக் கொள்ளலாமென்று இருக்கிறேன்; அது முடிந்தபின் வேண்டுமானால் நீங்கள் திருமணத்தை வைத்துக் கொள்ளுங்கள்.''

''அதற்கென்ன, அப்படியே செய்தால் போச்சு! நானும் எங்கள் பத்திரிகையின் பிரதிநிதி என்ற முறையில் அந்த விழாவில் கலந்துகொண்டாலும் கலந்து கொள்ளலாம்!''

''அப்படியா, மகிழ்ச்சி! நான் வரட்டுமா?''என்று பேராசிரியர் எழுந்தார்.

அப்போது, ''யார் அது, வாத்தியார் ஐயாவா? எங்கே உங்களை ரொம்ப நாட்களாக இந்தப் பக்கமே காணோம்?'' என்று கேட்டுக்கொண்டே வந்தாள் பாட்டி.

''காரியமில்லாமல் இங்கே வந்து என்னப் பிரயோசனம், பாட்டி? இன்றுதான் காரியம் இருந்தது; வந்தேன்!''

''காரியம், காரியம் என்று சொல்லாதீர்கள், வாத்தியார் ஐயா, எங்கள் பக்கத்திலே காரியம் என்றால் கருமாந்திரம் என்று அர்த்தம்!''

அதற்குள் என் அண்ணா குறுக்கிட்டு, ''அதெல்லாம் ஒன்றுமில்லை, பாட்டி! ஆசிரியர் கல்யாண விஷயமாக வந்திருக்கிறார்!'' என்று அவர் வந்த விஷயத்தை அவளுக்குத் தெளிவு படுத்தினான்.

''கல்யாணமென்றால் முதலில் இவரா வருவது? பெண்ணைப் பார்க்க வேறு யாராவது வர வேண்டாமோ?'' என்றாள் பாட்டி.

''வருவார்கள், வருவார்கள்!''என்றார் அவர்.

அப்போதும் அவரைவிடவில்லை பாட்டி; ''வருவதற்கு முன்னால் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வரச் சொல்லுங்கள்!'' என்று எச்சரித்தாள்.''அப்படியே ஆகட்டும்!'' என்று சொல்லி விட்டுப் போனார் அவர்.

✧ ✧ ✧

ஒரு வாரத்துக்குப் பிறகு ஒரு நாள் ராமமூர்த்தி வந்து ''உங்கள் அண்ணா இருக்கிறாரா?'' என்று என்னை விசாரித்தார். ''இல்லை;வெளியே போயிருக்கிறார்!'' என்றேன் நான்;''சரி, அவர் வந்தால் நாளை பெண் பார்க்க வரப்போவதாகச் சொல்லுங்கள்!''

''யார், யார் வரப்போகிறார்கள்?''

''அது எனக்குத் தெரியாது!''

''பேராசிரியர் வருகிறாரா?''

''அதுவும் எனக்குத் தெரியாது!''

''வேறு என்னதான் தெரியும், உங்களுக்கு?''

அவர் சொன்னது சொன்னபடி நடக்கத் தெரியும்!''

''நல்ல வேளை சாப்பிடத்தான் தெரியும்' என்று சொல்லாமல் விட்டீர்களே, அதுவே போதும் எனக்கு - போய் வாருங்கள்!'' என்றேன் நான்.''உத்தரவு''என்று சொல்லிவிட்டு, அவர் நடந்தார்.

✧ ✧ ✧

மறுநாள் மாலை என்னைப் பார்க்க மூவர் வந்திருந்தனர். அவர்களில் ஒருவரை மட்டுமே எனக்குத் தெரிந்திருந்தது; அவர்தான் திரு.ராமமூர்த்தி! - இன்னொருவர் அவரால் எங்களுக்கு அறிமுகம் செய்து

வைக்கப்பட்ட அவருடைய தகப்பனார்; மற்றொருவர் அவருடைய அத்தை!''இவர்கள் இருவரும் உங்களைச் சேர்ந்தவர்களாயிருக்கிறார்களே, அவரைச் சேர்ந்தவர் யாரும் வரவில்லையா?'' என்று கேட்டான் என் அண்ணா.

''இல்லை!'' என்றார் ராமமூர்த்தி.

''ஏன்?''

''அவருக்கென்று பெண் பார்க்க வந்திருந்தால்தானே அவரைச் சேர்ந்தவர்கள் வருவதற்கு?''

''பின் யாருக்காக?''

''எனக்காக!''

அவ்வளவுதான்; ''என்ன!'' என்று நான் என்னையும் மறந்து கத்திவிட்டேன்!''ஏன், இந்தப் பிள்ளையாண்டானை உனக்குப் பிடிக்கவில்லையா, அம்மா?'' என்றார் ஏதும் அறியாத ராமமூர்த்தியின் தகப்பனார்.''பிடிக்காமல் என்ன? நாங்கள் நினைத்தது வேறு, நடப்பது வேறாயிருக் கிறதே என்றுதான் யோசிக் கிறோம்!'' என்றான் அண்ணா, அந்த நிலையிலும் தன்னை ஒருவாறு கட்டுப் படுத்திக்கொண்டு.''அப்படியானால் நாங்கள் வருகிறோம்!' என்று அவர்கள் கிளம்பினார்கள்.''நான் அப்பொழுதே சொன்னேனே - கேட்டீர்களா' அப்பா? பேராசிரியர் அனுபவித்த கவிதையை வேண்டுமானால் நானும் அனுபவிக்கலாம்; அவர் அனுபவித்த பெண்ணை நானும் அனுபவிக்கமுடியுமா?'' என்றார் ராமமூர்த்தி.

இதைச் சொல்லி வாயை மூடுவதற்குள் என் அண்ணா அவர்மேல் பாய்ந்து அவருடையக் குரல்வளையைப் பிடித்துக் கொண்டு, ''யார் யாரை அனுபவிப்பது? சொல்; சொல்லாவிட்டால் உன்னுடைய குரல்வளையைப் பிடித்து நெரித்துவிடுவேன், நெரித்து!''என்று உறுமினான்.'' என்னைக் கேட்டு என்னப் பிரயோசனம்? என்னுடைய குரல் வளையை நெரித்துத்தான் என்னப் பிரயோசனம்?

நேற்றிரவு சென்னையிலிருந்துக் கிளம்பியக் கல்கத்தா மெயிலில் போய்க்கொண்டிருக்கிறார், பேராசிரியர் – அவரைப் போய்க்கேளுங்கள்; அவருடைய குரல் வளையைப் பிடித்து நெரியுங்கள்!''என்றார் ராமமூர்த்தி, திக்குமுக்காடியபடி.

அத்துடன் அவரைவிட்டுவிட்டு, ''அயோக்கியப் பயல்! இப்பொழுதல்லவா தெரிகிறது, அந்த ரூபாய் பத்தாயிரத்தை அவன் என்னுடைய மானத்துக்கு விலையாகக் கொடுத்திருக்கிறான் என்று!'' என்று கருவிக்கொண்டே அவன் என்னை நோக்கித் திரும்பினான், தன் பற்களை 'நறநற'வென்று கடித்தபடி.நான் பயந்து போய், 'ஐயோ! என்னைக் கொல்லாதீர்கள் அண்ணா, புனிதம் மிக்க உங்கள் கையால் என்னைக் கொல்லாதீர்கள், அண்ணா!''என்று கத்திக் கொண்டே என் அறைக்குள் ஓடிக் கதைவைச் சாத்தித் தாளிட்டுக் கொண்டு விட்டேன்!

✧ ✧ ✧

பெண்! – குடும்பத்தில் அமைதி நிலவுவதற்கு மட்டும்தா அவள் காரணமாயிருக்கிறாள்? புயல் அடிப்பதற்கும் அவள்தானே காரணமாயிருக்கிறாள்? அதற்கு நான் மட்டும் விதிவிலக்காயிருந்துவிட முடியுமா, என்ன?

என்னால் எங்கள் வீட்டில் மூண்டுவிட்டப் புயல், எங்களுடையக் குடும்பத்தையே அல்லோலகல்லோலப் படுத்திவிட்டது. பேராசிரியரைத் தொடர்ந்து அன்றிரவே கல்கத்தாமெயிலில் சென்ற என் அண்ணா திரும்பி வரும்போது தன்னினைவோடு வரவில்லை; 'காதலினால் மானுடர்க்குக் கலவியுண்டாம்; கலவியிலே மானுடர்க்குக் கவலைதீரும்' என்ற பாரதியின் பாட்டை அடிக்கடிப் பாடுவதும், அசடு வழியச் சிரிப்பதுமாக வந்தான். 'ஏன், என்ன நடந்தது?' என்று என் பாட்டி கேட்டதற்கு

அவன் சொன்ன பதில் தெளிவாகவும் இல்லை; ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகவும் இல்லை.

'தமிழ்மணம்! ஆகா, தமிழ் மணம்!'என்று தம் மூக்கை அடிக்கடி இழுத்து, அப்படியும் இப்படியுமாகத் திரும்பி, முகர்ந்து முகர்ந்து பார்ப்பான், ஒரு சமயம்; 'என்ன நாற்றம், அப்பப்பா, என்ன நாற்றம்!' என்று தன் முகத்தைச் சுளித்து, மூக்கைப் பிடித்துக்கொண்டு ஓடுவான், இன்னொரு சமயம். 'கிருஷ்ணா! அடே, கிருஷ்ணா!' என்று வானத்தை நோக்கி அலறுவான், ஒரு சமயம்; அங்கிருந்து ஓடோடியும் வந்து கிருஷ்ணன் படத்துக்கு முன்னால் நின்று, ஏண்டா கிருஷ்ணா! என்னை நீ ஏன் காப்பாற்றினாய்?' என்று 'வினயத்துடன் கேட்பான், இன்னொரு சமயம். இந்த நிலையிலே அவனை வைத்துக் கொண்டு மேலே என்ன செய்வதென்று தெரியாமல் என் பாட்டி விழித்துக்கொண்டிருந்தபோது, திடீரென்று ஒரு நாள் அவன் காணாமற் போய்விட்டான்!

ஒரு நாள் இரண்டு நாட்களாயின; ஒரு வாரம் இரண்டு வாரங்களாயின; ஒரு மாதம் இரண்டு மாதங்களாயின - போனவன் போனவன்தான்; திரும்பிவரவேயில்லை.

இதற்கிடையில் ஒருநாள் என்னைத்தேடிக்கொண்டு தலைவிரிகோலமாக ஓடோடியும் வந்த என் தாயார் - அதாவது கண்ணகி அம்மையார் வந்ததும் வராததுமாக இருக்கும்போதே அவசர அவசரமாகத் தெருக்கதவைச் சாத்தித்தாளிட்டுவிட்டு, "வந்து விட்டானா, என் கண்மணி வந்துவிட்டானா?" என்று கண்ணீரும் கம்பலையுமாக என்னைக் கேட்டார்கள்.

"எந்தக் கண்மணியைக் கேட்கிறீர்கள்?" என்றேன் நான், ஒன்றும் புரியாமல். "உன்னுடைய அண்ணனைத் தான் கேட்கிறேன் - சொல்லுடி, சொல்லு?" என்றார்கள் அவர்கள் பரபரப்புடன்.

''அவனை நீங்கள் பார்த்தீர்களா?''

''ஆமாம், கல்கத்தாவில் பார்த்தேன்!''

''சென்னையில்?''

''இல்லை. இன்னும் நான் அவனைப் பார்க்கவில்லை; நீ பார்த்தாயா?''

''பார்த்தேன்; ஆனால்...''

''ஆனால் என்ன?''

''தன்னினைவோடு அவன் இங்கே வரவில்லை...''

''அதனாலென்ன? அந்தமட்டும் கடவுள் அவனைக் காப்பாற்றினாரே, அதுவே போதும் எனக்கு!''

''ஏன், என்ன நடந்தது அங்கே?''

''அதை ஏன் கேட்கிறாய்? - அந்தப் பாவியின் வற்புறுத்தலுக்கு இணங்கி நானும் கல்கத்தாவுக்குப் போயிருந்தேன். அங்கே தமிழின் பேரால் இருவரும் அளவுக்கு மீறிக் கௌரவிக்கப்பட்டோம். எங்களுடைய சொந்தவாழ்க்கையைப் பற்றி அங்கே உள்ளவர்களுக்கு என்ன தெரியும்? அப்படியேத் தெரிந்தாலும் பிறருடைய சொந்த வாழ்க்கையைப் பற்றி அறிந்துகொள்வதே பண்பென்றும், பொதுவாழ்க்கையைப் பற்றி அறிந்து கொள்வது பண்பென்றும் சொல்லி நாங்கள் தான் முன்கூட்டியே பண்பென்னும் பட்டுத்திரைக்குப் பின்னால் ஒளிந்துக்கொண்டு விடுகிறோமே? அந்தப்பட்டுத் திரையை விலக்கிப்பார்க்காத - ஏன், அதை எப்போதுமே விலக்கிப்பார்க்க விரும்பாத - அங்குள்ள 'பைத்தியங்கள்' எங்களைக் கண்டதும், 'வாழ்க வாழ்க!' என்று வாயார வாழ்த்தி, மனமாற வரவேற்றன.

பாவம், அப்படி வாழ்த்தும்போது பொய்மைக்கு வாழ்த்துக் கூறுகிறோம், போலிப் புலமைக்கு வாழ்த்துக்

கூறுகிறோம், வஞ்சகத்துக்கு வாழ்த்துக் கூறுகிறோம், வாய்மையற்றக் கயமைக்கு வாழ்த்துக் கூறுகிறோம் என்பனவற்றையெல்லாம் அவை கண்டனவா, என்ன? - தமிழ், தமிழ், தமிழ்! -- தமிழின் பேரால் பஞ்சமாபாதகங்களென்ன, தசமகா பாதகங்கள் செய்தாலும் அவர்கள் கண்ணை மூடிக்கொள்ளத்தயார்; காதைப் பொத்திக் கொள்ளத்தயார்! அத்தகைய குருடர்களுக்கும் செவிடர்களுக்கும் நடுவே நின்று, ஏற்கெனவே அறிவித்திருந்தபடி நாங்கள் முதல் நாள் எடுக்கவேண்டிய 'வாந்தி'யை எடுத்துவிட்டு, எங்களுடைய அறைக்குத் திரும்பினோம் - 'வாந்தி' என்றால் என்னமோ, ஏதோ என்று நினைத்துவிடாதே; அந்தக் காலத்துப் புலவர் பெருமக்கள் பலனை எதிர்பாராமல் பாடிவைத்த பாடல்களைப் பட்டம் பெறும் நோக்கத்துடனும் பதவி பெறும் நோக்கத்துடனும் படித்து, பணம் திரட்டும் நோக்கத்துடனும் புகழ் திரட்டும் நோக்கத்துடனும் 'படித்த முட்டாள்க'ளுக்கிடையே தாங்கள் உண்ட தமிழ் உணவைச் செரித்தும் செரிக்காமல் இருக்கும்போதே எடுக்கும் 'வாந்தி'யைத்தான் சொல்கிறேன்! - என்ன இருந்தாலும் நாங்கள் எடுத்த 'வாந்தி' 'தமிழ் வாந்தி' யல்லவா?

எனவே அதை ஒரு வாரம் தொடர்ந்து எடுக்கச் சொல்லியிருந்தார்கள் கல்கத்தா தமிழர்கள். அந்த ஒரு வாரத்தில் ஒரு நாளைக்கழித்து விட்டுத்தான் அன்று நாங்கள் எங்களுடைய அறைக்குத் திரும்பிக் கொண்டிருந்தோம். அப்போதுதான் உன்னுடைய அண்ணா அங்கே வந்து சேர்ந்தான். அவனைக் கண்டதும், 'வாப்பா, வா! உன்னைத்தான் நானும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்!' என்றார் பேராசிரியர். தனக்கே உரித்தான தனி அமைதியுடன். அவனேப் புயல்வேகத்தில் அதை மறுத்து,

'உங்களுடைய வரவேற்பை நான் விரும்பவுமில்லை; வேண்டவுமில்லை. இப்போது நீங்கள் என்னைத் தொடர்ந்து வரப்போகிறீர்களா, இல்லையா'' என்றான் வெட்டு ஒன்றும் துண்டு இரண்டுமாக. பேராசிரியர் சிரித்தார். சிரித்த சிரிப்பை மழுப்பி, 'நீ சொல்ல வேண்டியதை இங்கேயே சொல்லலாமே? இவர்கள் வேறு யாருமில்லை; என்னுடைய சகஆசிரியைதான்!' என்றார் என் பக்கம் திரும்பி, அவ்வளவுதான்; 'இந்தச் சாகஸமெல்லாம் இனி என்னிடம் பலிக்காது!'' என்று கத்திக்கொண்டே அவர் மேல் பாய்ந்து விட்டான் அவன்.

அப்போதும் அவர் சளைக்காமல், ''வெற்றி, எனக்கே வெற்றி!' என்று அவனைத்தொடர்ந்து கத்தினார். 'வெற்றியா! உனக்கா, உன்னுடைய அயோக்கியத் தனத்துக்கா? - ஒழிந்துபோ, துரோகி!' என்று அவருடைய குரல்வளையைச் சட்டென்று பிடித்துவிட்டான் அவன். 'அட, பாவி உன்னுடைய தங்கையைப் புடம்போட்டுப் பார்க்கத்தாண்டா நான் அந்த ராமமூர்த்தியை அனுப்பினேன் - என்னைவிடு! இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு தன்மானம் மிக்கத் தமிழன் இருப்பது கண்டு நான் மகிழ்கிறேன். என்னை விடுடா, விடு!' என்று மூச்சுமுட்டத் திணறினார் அவர். அதற்குமேல் கேட்க வேண்டுமா? - என்ன!'' என்று அவன் வாயும் பிளந்து விட்டது; கையும் தளர்ந்துவிட்டது. அதுதான் சமயமென்று அவனை அப்படியே ஆலிங்கனம் செய்து கொண்டு, 'உன்னுடன் சம்பந்தம் செய்துகொள்ள நான் கொடுத்து வைத்திருக்கவேண்டுமடா, கொடுத்து வைத்திருக்க வேண்டும்!' என்று அவன் தலையில் 'ஐஸ்' வைக்க ஆரம்பித்துவிட்டார் அவர்.

எனக்கென்னமோ அவர் சொன்னதில் அப்போதே நம்பிக்கை இல்லைதான்! ஏனெனில் அவருடன் நீண்ட

நாட்கள் பழகிய தோஷத்தின் காரணமாக அவருடைய பிறப்பிலேயே ஐயப்பாடு கொண்டவள் நான்!- ஆம். அந்தக் 'குள்ள நரிக் குணம்' அசல் தமிழனுக்குப் பிறந்திருந்தால் அவருக்கு இருந்திருக்குமா என்பது இன்றுவரை எனக்கு ஐயப்பாடு டையதாகவே இருந்துவருகிறது. ஆனால் அதைப்பற்றி இப்போது எண்ணி என்ன பயன்? – நடந்தது நடந்து விட்டது; இனி நடந்ததை வைத்துக்கொண்டுதான் இனிமேல் நடக்க வேண்டியவற்றைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அந்த விபத்து – ஆம், பேராசிரியரால் சிருஷ்டிக்கப்பட்ட அந்த விபத்து – ஒரு வாரத்துக்குப் பிறகு நாங்கள் கல்கத்தாவிலிருந்து திரும்பியபோது நிகழ்ந்தது.

முதலில் அது உன்னுடைய அண்ணனுக்காகச் சிருஷ்டிக்கப் படவில்லை; எனக்காகவே சிருஷ்டிக்கப் பட்டது. ஏன் தெரியுமா? – 'நான் கெட்டாலுமம நீயாவது வாழவேண்டும்' என்ற நோக்கத்துடன் உன்னை நான் அவருடைய கழுத்தில் வேண்டாவெறுப்பாகக் கட்டிவைக்க முயன்றேனல்லவா, அதற்காக! அதற்காகவேதான் அவர் என்னையும் கல்கத்தாவுக்கு அழைத்துச்சென்றிருக்கிறார் என்ற விஷயமும் எனக்கு அப்போது தெரியாது. ஆகவே ஓடும் ரயிலில் உட்கார்ந்தபடி 'தமிழன் தெலுங்கனிடம் தண்ணீர்ப்பிச்சை கேட்டானே, தெரியுமா உனக்கு?' என்று அவர் என்னைக் கேட்டபோது, 'தெரியுமே! கோதாவரி, கிருஷ்ணாவிலிருந்து கொடுக்கச் சொன்னானே, அதைத் தானே சொல்கிறீர்கள்?''என்றுநான் கேட்டு வைத்தேன்.

'ஆம் அந்த புண்ணிய நதிகளைத்தான் இப்போது நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம். என்னமோ, போகும் போது தான் அவற்றைப் பார்க்கக் கொடுத்துவைக்க வில்லை என்றாலும், இப்போதாவது பார்த்து

வைப்போமே?' என்றார்அவர். 'பார்த்து வைப்போமே!' என்றேன் நான். 'சரிவா!' என்று அவர் என்னை அழைத்துக் கொண்டே சென்று கதவருகே நின்றார்; நானும் அவருக்குப் பக்கத்தில் போய் நின்றேன். வண்டி பாலத்தைக் கடக்க ஆரம்பித்தது தான் தாமதம்; என்னுடைய காலை யாரோ வாரிவிடுவது போலிருந்தது – திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன்; 'ஒன்றுமில்லை, இட வசதிக்காக இந்தப் பெட்டியைக் கொஞ்சம் நகர்த்தினேன்; கை பட்டுவிட்டது!' என்றார் பேராசிரியர், எனக்குப் பின்னாலிருந்த பெட்டியை நகர்த்திக்கொண்டே 'ஓஹோ!' என்று நான் கைப்பிடியை இன்னும் கொஞ்சம் கெட்டியாகப்பற்றி, அவர் மேல் ஒரு கண் வைத்தேன். நான் நினைத்தது சரி; மறுமுறையும் அவர் என்னுடையக் காலைவாரிவிட முயன்றார் – அவ்வளவுதான்: 'அட பாவி, இதற்குத்தானே நான் வரமறுத்துங்கூட என்னை நீ வற்புறுத்தி அழைத்துவந்தாய்?' என்று நான் கதறி விட்டேன். இதைக்கேட்டதும் அரைத்தூக்கத்தில் இருந்த உன் அண்ணா எழுந்து, ''என்னம்மா, என்ன நடந்தது?' என்று கேட்டுக்கொண்டே என்னை நோக்கிவந்தான்.

அப்போது கொஞ்சங்கூடக் கலங்காமல் கலகலவென்று நகைத்தபடி 'என்ன படித்து என்ன பயன்? பெண்பிள்ளை பெண்பிள்ளைதான் என்பதைக் காட்டிவிட்டீர்களே?' என்று சொல்லி என் வாயை அடக்கிவிட்டு, 'இங்கே வா கீழே ஓடும் நதியைப் பார்க்கவேண்டும் என்பதற்காக இவர்கள் இங்கே வந்து நின்றார்கள்!' என்ற நான் நின்ற இடத்தில் உன் அண்ணனை இழுத்து நிற்கவைத்துவிட்டு, 'இதோ பார், உனக்குப் பின்னாலிருக்கும் இந்தப் பெட்டியை இடவசதிக்காக நான் இப்படிக் கொஞ்சம் நகர்த்தினேன்!' என்று சொல்லிக்கொண்டே, அந்தக் கிராதகன் அவனுடைய காலை வாரிவிட்டுவிட்டான்; அரைத்தூக்கத்தில் இருந்த அவனோ நடந்தது இன்னதென்பதைக் கூட அறியாமல்

ஆற்றில் விழுந்துவிட்டான்! - அவன் விழுந்தானோ இல்லையோ 'ஆக்ஸிடெண்ட், ஆக்ஸிடெண்ட்!' என்று கத்தி, அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்து, அற்புதமான ஒரு நாடகமே நடத்திக் காட்டிவிட்டான்.

பெயரில் மட்டுமே பேராசிரியனாயிருந்த இந்தச் சிற்றாசிரியன்! அவனுடைய நல்ல காலமோ என்னமோ, நான் அந்தக் காட்சியைப் பார்க்கும் பாவத்தைச் செய்யவில்லை; உன்னுடைய அண்ணன் நம்பி, 'ஐயோ, நறுமணம்!' என்று கத்திக்கொண்டே ஆற்றில் விழுந்ததுதான் தாமதம், 'ஆ!' என்று அலறியபடி நான் மூர்ச்சையடைந்து விட்டேனாம். அதற்குப் பிறகு என்ன நடந்தது என்பதைப்பற்றியெல்லாம் அவன்தான் - அந்தப் பேராசிரியன்தான் என்னிடம் கதை கதையாகச் சொன்னான். அந்தக்கதையெல்லாம் இப்போது ஏன் நமக்கு? எப்படியோ உன் அண்ணன் உயிரோடு வந்து சேர்ந்துவிட்டான். அவனை நாம் உடனே யாராவது ஒரு மனோதத்துவ டாக்டரிடம் காட்டவேண்டும். அடுத்தாற்போல் பேராசிரியனைப் பிடித்துப் போலீசாரிடம் ஒப்படைக்கவேண்டும்...''

'ஐயோ, வேண்டாம் அம்மா! நான் உயிரோடிருக்கும்வரை அந்தக் காரியத்தை மட்டும் நீங்கள் செய்துவிடாதீர்கள், அம்மா!''

''போடி போ! இப்படிப் பேசிப் பேசித்தான் பாரதப் பெண்குலமே பாழ்பட்டுக் கிடக்கிறது, இன்று!''

''இல்லை, அம்மா! அதற்குள்ள பெருமையே அதுதான்!''

''பெருமையாவது, சிறுமையாவது! அதெல்லாம் ஒன்றுமில்லை; அந்தப் பெருமையில்லாத மற்ற நாட்டுப் பெண்கள் உரிமையோடு வாழவில்லையா? அதே உரிமையுடன் நாமும் வாழ்ந்தால் என்ன?''

"அப்படியென்றால்?''

''கற்பு, கற்பு என்று இன்னமும் நாம் கதைத்துக் கொண்டிருக்க வேண்டாம் என்கிறேன்; அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு ஆண் வர்க்கம் நம்மையும் ஒரு 'விளையாட்டுப் பொரு'ளாகக் கருதி, விளையாடும் வரை விளையாடிவிட்டு வீசி எறியவும் வேண்டாம் என்கிறேன்!''

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? எனக்குப் புரிய வில்லையே, அம்மா!''

''சரி; புரியும்படியாகவே சொல்கிறேன் – நீ அந்தப் பேராசிரியனை மறந்து, ராமமூர்த்தியைக் கல்யாணம் செய்து கொள்ளவேண்டும்!''

''நடக்காத காரியம்; நடக்கவே நடக்காத காரியம்!''

''நீ, அவரைப் புரிந்துகொள்ளாமல் பேசுகிறாய்! பேராசிரியர் அனுபவித்த கவிதையை வேண்டுமானால் நானும் அனுபவிக்கலாம்; அவர் அனுபவித்தப் பெண்ணை நானும் அனுபவிக்கமுடியுமா? என்று அன்றைக்கு அவர் சொன்னதை வைத்துக்கொண்டு நீ அப்படி நினைக்கிறாய்...''

'இதை யார் உங்களுக்குச் சொன்னது?''

''அவரேதான் சொன்னார்; தமிழர்களில் பெரும்பாலோர் இன்று மானங்கெட்டு கிடக்கிறார் களென்றும், யாராவது ஒருவர் அவர்களுடைய மானத்தை வாங்காதவரை தங்களுக்கும் மானம் என்று ஒன்று இருப்பதே அவர்களுடைய நினைவுக்கு வருவதில்லை யென்றும், அதற்காகவே அன்று தான் அவ்வாறு சொன்னதாகவும் அவரேதான் சொன்னார். ஆனால் அந்த மானம் கற்பென்னும் கட்டுக்கதையை மட்டுமே கட்டிக் கொண்டு அழுவதைத் தான் விரும்பவில்லை யென்றும், நறுமணம் விரும்பினால் அவளைத் தான் திருமணம் செய்துகொள்ளத் தயாராயிருப்பதாகவும் கூட அவரேதான்

சொன்னார். ஏனெனில், ஓர் ஆண்மகன் தொட்டவுடன் ஒரு பெண் மகள் பட்டுப்போவதை அவர் விரும்பவில்லை; வேறொருவனால் துளிர்க்க வாய்ப் பிருக்கும்போது அவள் ஏன் துளிர்க்கக்கூடாது என்று அவர் கேட்கிறார். அத்துடன், ஒருத்தி ஒருவனோடு இருக்கும் வரைக் கற்பை அனுசரித்தால் போது மென்றும், அந்த ஒருவன் தன்னை விட்டுப் பிரிந்தோ அல்லது மறைந்தோ போனபின்னர் அவள் இன்னொரு வனுடன் கூடி வாழ்ந்து, அதே கற்பை அனுசரிப்பதில் தவறில்லை யென்றும் அவர் சொல்கிறார். எனக்கும் அது சரியென்றே படுகிறது. இல்லாவிட்டால் பேராசிரியனைப் போன்ற காமுகர்களின் வயப்பட்டுக் கற்பிழந்த உன்னைப் போன்ற கன்னிப் பெண்களுக்கு இந்த உலகத்தில் வாழ்வே கிடையாது!

''மன்னியுங்கள், அம்மா, 'எப்படியாவது வாழ வேண்டும்' என்று நினைப்பவர்களுக்கு நீங்கள் சொல்வது சரி; ஆனால் நானோ 'இப்படித்தான் வாழவேண்டும்' என்று நினைப்பவள் – எனக்கு அது சரிப்பட்டு வராது!''

'அப்படியானால் இவ்வளவு தூரம் நடந்த பிறகுமா நீ அவனைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று நினைக்கிறாய்?''

''ஆம், முடிந்தால்!''

''இல்லாவிட்டால்?''

''கொஞ்சம் பொறுத்திருந்துப் பாருங்கள்!''

''எதை உன் பிணத்தையா?''

''அதை இப்போது சொல்ல நான் விரும்பவில்லை!''

''அதற்காக அவனை வெளியே விட்டு வைத்தால் என்ன ஆகும் தெரியுமா? முதலில் அவன் என்னை வேலை தீர்க்கப்பார்ப்பான்; இரண்டாவதாக உன்னை வேலை தீர்க்கப் பார்ப்பான்...''

''இனி அதைவிட வேறு என்ன பாக்கியம் வேண்டும், நமக்கு?''

அவ்வளவுதான்; ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்து விட்டது அவர்களுக்கு. ''நாசமாய்ப்போச்சு, போ! இனி நீ என்ன சொன்னாலும் சரி, அவனை நான் போலீசார் வசம் ஒப்படைக்காமல் விடப்போவதில்லை; அப்படி விட்டால் அது நாம் பெண் குலத்துக்குச் செய்யும் துரோகமாகும்!'' என்று சொன்ன வேகத்தில் கதவைப் 'படா'ரென்று திறந்துக்கொண்டு வெளியே சென்றார்கள்.

அதற்குப்பிறகு அவர்களிடமிருந்து வந்த ஒரு கடிதம் – கடிதமா அது ? நீங்களே படித்துப் பாருங்கள்:

''செல்வி நறுமணத்துக்கு''

இனி நீ செத்தாலும் பரவாயில்லை என்று நினைத்தே நான் உனக்கு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். அந்தப் பேராசிரியனைப் பொறுத்த வரை என்னுடையக் கடைசி முயற்சியும் தோல்வி யடைந்துவிட்டது – ஆம் அதிர்ச்சி தரும் செய்தி அது! – கடைசி நிமிஷத்தில் தான் பெற்ற செல்வங்கள் இரண்டுடன் யாரோ ஒரு தாய் கண்ணில் நீருடன் எனக்கு முன்னால் தோன்றி, 'தாலிப் பிச்சை கொடுங்கள்; எனக்காகக் கொடுக்கா விட்டாலும் இந்தக் குழந்தைகளுக்காகவாவது கொடுங்கள் என்று என்னைக் கேட்டால் எனக்கு எப்படியிருக்கும்?'– கொடுத்துவிட்டேன்!

என்ன, இன்னுமா புரியவில்லை உனக்கு? அவன் பிரம்மச்சாரியல்ல; ஏற்கெனவே கல்யாண மானவன் என்ன, புரிந்ததா?

இப்போது நீ என்ன சொல்கிறாய்? – வாழப் போகிறாயா, சாகப் போகிறாயா? உன்னுடைய விருப்பம்போல் செய்; நான் குறுக்கே நிற்கவில்லை!

இப்படிக்கு,

கால வித்தியாசத்தால் உனக்குத் தற்காலத் தாயாராயில்லா விட்டாலும் கற்காலத் தாயாராகி விட்ட

கண்ணகியம்மாள்.''

இதைப்படித்த பிறகு வாழ்வாவது, சாவாவது? – ஒன்றும் புரியவில்லை, எனக்கு குழப்பம்; ஒரே குழப்பம். இந்தக் குழப்பத்துக்கு இடையில்தான் இன்னொரு செய்தி என்காதில் விழுந்தது. அதாவது 'கண்ணகியம்மையார் திடீரென்று மாரடைப்பினால் காலமானார்கள்' என்ற செய்தி!

பேராசிரியரைப் பற்றி நன்கு தெரிந்த நான் என்னமோ இந்தச் செய்தியை நம்பவில்லைதான்! – ஆனால் உலகம்? இன்னமும் அன்னாருக்குப் பூமாலையோடு பாமாலையும் பாடிச் சூட்டி மகிழ்ந்து கொண்டுதானே இருக்கிறது?

✧ ✧ ✧

'இப்படித்தான் என்னை வாழவைக்கவேண்டும்' என்று உறுதி பூண்டிருந்த என் அண்ணா, என்னால் இந்த உலகத்தில் வாழவே லாயக்கில்லாமல் போன பிறகு, எப்படியாவது என்னை வாழவைத்துவிடவேண்டும்' என்று முயன்ற ஜீவன்கள் இரண்டு. அவற்றில் ஒன்று கண்ணகி அம்மையார்; இன்னொன்று என் பாட்டி!

கண்ணகி அம்மையாரோ என்னை வாழ வைப்பதற்காக என்னுடைய ஆத்மாவை மட்டுமேக் கொல்லமுயன்றார்கள்; அருமைப்பாட்டியோ என்னை

வாழவைப்பதற்காக என்னுடைய வயிற்றில் வளர்ந்து கொண்டிருந்த சிசுவையே கொல்லத்துணிந்துவிட்டாள்!

அதற்கு இடம் கொடாத நான், இதற்கும் இடம் கொடுக்கவில்லை. எதற்குமே தன்னைத்தானே தியாகம் செய்துகொள்வதுதானே பாரதப் பெண்களின் மரபு? அந்த மரபையொட்டி என்னை நானேத் தியாகம் செய்துக் கொண்டு எல்லாவற்றுக்கும் ஒரு முடிவை ஏற்படுத்தி வைப்பது என்று நினைத்தேன். ஆனால் அதற்கும் குறுக்கே நின்றது அந்தச் சிசு-ஆம், அதற்குக் காரணமாயிருந்த பேராசிரியரை வெறுத்தாலும் அதை நான் நேசித்தேன்!

ஏனெனில், அன்று எப்படியிருந்தாலும் இன்று நான் ஒரு தாயல்லவா? - தாய் சில சமயம் பேயாவதும் இந்த உலகத்தில் உண்டுதான் என்றாலும், நான் பேயாக விரும்பவில்லை - எனவே எந்த விதமான விக்கினமு மின்றி அந்தக் குழந்தையைப் பெற்றெடுத்தேன், நான்!

அன்றிரவு நான் கொஞ்சமும் எதிர்பாராத விதமாகப் பேராசிரியர் வந்தார். வந்தவர், வழக்கம்போல் ஒரு குறை அழுதுத் தீர்த்துவிட்டு, ''எல்லாம் அந்தக் கண்ணகியால் வந்தவினை! இல்லாததும் பொல்லாததும் சொல்லி, அவள் உன்னை என்னிடமிருந்து பிரித்து, வெகு தூரத்துக்கு அப்பால் இழுத்துக்கொண்டு போய்விட்டுவிட்டுப் போய் விட்டாள்!- அதனாலென்ன !'' என்று சொல்லிவிட்டு, ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். பிறகு, ''மனத்தைத் திடப் படுத்திக்கொள் நறுமணம், மனத்தைத் திடப்படுத்திக் கொள்!''என்றார் அவர். 'ஏன், எதற்கு?'' என்று நான் கேட்பேன் என்று அவர் எதிர்பார்த்தாரோ என்னவோ, நான் கேட்கவில்லை. ''நேற்றிரவு கடற்கரையில் ஒரு வருந்தத் தக்க சம்பவம்!'' என்றார் அவர்.மீண்டும் இதற்குமுன் எத்தனையோ வருந்தத்தக்க சம்பவங்களை அவர்

வாயிலாகக்கேட்டு வருந்தாமல் இருந்துவிட்ட நான், இந்தச் சம்பவத்தைக் கேட்டும் வருந்தவில்லை; வாயை மூடிக்கொண்டிருந்தேன். ''அதுதான் – அந்தப் பாட்டு இருக்கிறதே, 'காதலினால் மானுடர்க்குக் கலவியுண்டாம்!'' என்ற பாட்டு – அந்த இழவெடுத்த பாட்டைப் பாடிக் கொண்டே உன் அண்ணன் கடற்கரையோரமாக வந்தான். வந்தவன் திடீரென்று நின்று, 'அதோ என் நறுமணம்! அதோ, என் நறுமணம்! என்று அலைமோதும் கடலைச் சுட்டிக்காட்டி அலறினான். நான் திடுக்கிட்டு எழுந்துநின்று அவன் சுட்டிக்காட்டிய திசையை நோக்கினேன். கட்டுமரத்தில் சென்று கொண்டிருந்த யாரோ ஒரு மீனவன் கடலில் அமிழ்வதும், அமிழ்ந்து பின் எழுவதுமாகப் போய்க் கொண்டிருந்தான். இந்தப் பைத்தியக்காரன், சும்மா இருந்திருக்கக்கூடாதா? போய்விட்டாயே! என்று கத்திக் கொண்டே கடலில் குதித்துவிட்டான்!'' அவ்வளவுதான், என்னையும் அறியாமல், 'அப்புறம்?'' என்று கேட்டுக் கொண்டே நான் அவரை நோக்கித் திரும்பினேன்.

''நேற்று இரவிலிருந்து இன்று மாலை வரை நான் அவனை வலைபோட்டுத் தேடியதுதான் மிச்சம்; ஆள்கிடைக்க வில்லை – எந்த மீனுக்கு இரையாகி விட்டானோ, என்னமோ!'' என்றார் அவர், என்மேல் இரண்டு சொட்டுக் கண்ணீரை உதிர்த்துக்கொண்டே.

அதற்குமேல் என்னால் தாங்கமுடியவில்லை; அருகிலிருந்த சுவரில் முட்டிக்கொண்டும் மோதிக் கொண்டும் அழ ஆரம்பித்துவிட்டேன்.

''ஒரு விதத்தில் அவன் அப்படிப்போனது நல்லது தான்!'' என்றார் அவர், சிறிது நேரத்துக்குப் பிறகு ''யாருக்கு, உனக்குத்தானே?'' என்றேன் நான், ஆத்திரத்துடன்.

ஆத்திரப்படாதே, நறுமணம்! அவன் போனதால் எனக்கு என்ன நன்மை, அவனுக்குத்தான் நன்மை. தன்னினைவை இழந்துவிட்ட ஒருவன் இந்த உலகத்தில் இருப்பதும் ஒன்றே; இல்லாமற் போவதும் ஒன்றே!'' என்றார் அவர்.

''யார் போனால் என்ன, நீ இருந்தால் போதாதா?'' என்றேன் நான்.

''இவ்வளவு தூரம் என்னை நீ வெறுத்து ஒதுக்கும் அளவுக்கு இப்போதுகூட ஒன்றும் நடந்துவிடவில்லை நறுமணம்! எனக்காக நீ ஒரு சிறு தியாகம் – ஆம், ஒரே ஒரு சிறு தியாகம் செய்தால் போதும்; நாளைக்கே ஒருமனப் பட்ட நாம் இருவரும் திருமணம் செய்துக் கொண்டு விடலாம்!'' என்றார் அவர், என் தலையை லேசாகத் தடவி.

உடனே, ' என்ன தியாகம் செய்யவேண்டும், சொல்லுங்கள்?''என்று நான் அவரை முந்திக்கொண்டு கேட்பேன் என்று அவர் அந்த நிலையிலும் எதிர் பார்த்தாரோ என்னமோ, தலையைத் தடவுவதை விட்டுவிட்டு என்னுடைய முகத்தைத் தூக்கிப் பார்த்தார். எந்தவிதமான உணர்ச்சிபேதமும் அதில் காணாமற் போகவே, ''நம்மைப் போல் உணர்ச்சி வசப்பட்டு விட்டவர்கள் நாலு பேருக்கு அஞ்சிச் சர்வசாதாரணமாகச் செய்யும் தியாகம்தான் அது; இதோபார்!'' என்று தன் சட்டைப் பையிலிருந்த ஒரு பிளாஸ்டிக் குழந்தைப் பொம்மையை எடுத்தார்; சுற்றுமுற்றும் பார்த்தார். பிறகு, தன் கையிலிருந்த குழந்தைப் பொம்மையின் தலையைத் திருகி, அதைத் தொங்கவிட்டு விட்டு, ''இவ்வளவுதான்! இதை நீ செய்துவிட்டால் போதும்; நாளைக்கே நடந்து விடும் நம் திருமணம்!'' என்று சொல்லிக்கொண்டே, என் மடியில் கிடந்தக் குழந்தையைப் பார்த்தார் – அவ்வளவு

தான்; அவன் கன்னத்தில் 'பளார்' என்று ஓர் அறை அறைந்து, ''அட பாவி!என் தாயைத் தீர்த்துக்கட்டி, அடுத்தாற்போல் என் குழந்தையையும் தீர்த்துக்கட்டி, அதன் மூலம் என்னைக் கொண்டே என்னையும் தீர்த்துக்கட்டிவிடலாம் என்று நினைத்தாயா? - அதுதான் நடக்காது! - போ போ வெளியே!''என்று பொங்கி எழுந்தேன் நான்.

''உண்மைக்கு இந்த உலகத்தில் இடமில்லை, உண்மைக்கு இந்த உலகத்தில் இடமில்லை!'' என்று உளறிக்கொண்டே, அந்த நரிப்பயல் நழுவினான்.

அதற்குப் பிறகாவது என் கண்மணிக்கு எந்த விதமான ஆபத்தும் இல்லாமலிருந்ததா என்றால், அதுதான் இல்லை. அந்தக் கிராதகனுக்கு அடுத்தாற்போல் என் பாட்டி அதைத் தீர்த்துக் கட்டப் பார்த்தாள்; அவளிடமிருந்தும் அதைக் காத்த பிறகு, தான் மேலே என்ன செய்வதென்று தோன்ற வில்லை, எனக்கு.

இந்த நிலையில்தான் வழுக்கி விழுந்த எனக்குக் கூட வாழ்வளிக்கத் துணிந்த திரு.ராமமூர்த்திக்குப் பெங்களூரில் திருமணம் என்ற செய்தியும், அந்தத் திருமணத்தையொட்டி அவர் வீட்டு மாடியில் குடியிருந்த அந்தச் சமுதாய விரோதி அங்கிருந்து அகற்றப்பட்டு விட்டான் என்ற செய்தியும் என் காதில் விழுந்தன. அத்துடன், திரு ராமமூர்த்தி தம்பதிகளால் என் குழந்தை நிச்சயம் காப்பாற்றப்படும் என்ற நம்பிக்கையும் பிறந்தது, என் உள்ளத்தில். ஆகவே அவர் தம் புதுமனைவியுடன் புதுமனை புகுந்ததும் நான் அவசர அவசரமாக ஒரு கடிதம் எழுதிக் குழந்தையின் அரைஞாண் கயிற்றில் செருகி, அதைக் கொண்டுபோய் அவருடைய வீட்டில் யாருக்கும் தெரியாமல் கிடத்திவிட்டுத் திரும்பினேன். அதற்குப் பிறகு நான் இந்த உலகத்தில் வாழ விரும்பவில்லையென்றாலும், என்னால் அந்தச் சதிகாரன் சட்டத்தின் பிடியில் சிக்கிச்

சாவதையும் ஏனோ விரும்ப வில்லை, நான்! எனவே, 'என்னுடையத் தற்கொலைக்கு வேறு யாரும் காரணமல்ல; நானேதான் காரணம்' என்று முன்கூட்டியே ஒரு கடிதம் எழுதி என்னுடைய இடுப்பில் செருகிக்கொண்டு, கூடுமானவரை உருத்தெரியாமல் சாகவேண்டும் என்பதற்காகவே இருப்புப் பாதையைத் தஞ்சமடைந்தேன். அப்போதுதான் நீங்கள் வந்து சேர்ந்தீர்கள்; என்னைக் காப்பாற்றுவதற்காக உங்கள் காலையும் ஒடித்துக் கொண்டுவிட்டீர்கள்!

✧ ✧ ✧

மேற்கண்டவாறு நறுமணம் தன்னுடைய கதையைச் சொல்லி முடித்ததும் ''சந்தோஷப்படுகிறேன் அம்மா.சந்தோஷப்படுகிறேன்!'' என்றான் கிழவன்.

''சந்தோஷப்படுகிறேன் என்று சொல்லாதே தாத்தா, அது வடமொழி; 'மகிழ்ச்சியடைகிறேன்' என்று தூய தமிழில் சொல்லு!''என்றாள் தாழம்பூ, தறுதலையைக் கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டே.

''யு ஆர் ரைட், யு ஆர் ரைட்!'' என்றார் தறுதலையார்.

''வாழ்க்கையில் இல்லாத தூய்மை மொழியிலாவது இருக்கட்டுமே என்று நினைக்கிறாரோ, உன் அத்தான்? காவாலிப்பயல்கள், காவாலிப்பயல்கள்!'' என்றான் கிழவன்.

''அது சரி, தாத்தா! என்னுடைய கதையில் நீங்கள் என்ன மகிழ்ச்சியைக் கண்டீர்கள்?'' என்று ஒன்றும் புரியாமல் கேட்டாள் நறுமணம்.

''உன்னுடைய கதையில் நான் மகிழ்ச்சியைக் காணவில்லை, அம்மா! ஏதோ ஒரு வெறி நாய் உன்னை - ஏன், உங்கள் குடும்பத்தையே நாசமாக்கி விட்டது பார்,

அந்த நாயைப்போல் நான் படிக்கவில்லையல்லவா, அதற்காக மகிழ்ச்சியடைகிறேன் என்றேன்!''

''நீங்கள் சொல்வதைப் பார்த்தால் படிக்காதவர்கள் குற்றமே செய்வதில்லை என்று சொல்வது போலல்லவா இருக்கிறது?'' என்றார் சீர்திருத்தவாதி, தான் 'படித்தவர்' என்பதைச் சற்றே நினைவுறுத்துவதற்காக.

''செய்கிறார்கள்; ஆனால் தண்டனையிலிருந்து தப்ப அவர்களால் முடிவதில்லை. இந்தப் படித்த படவாப் பயல்கள்தானம்மா, அதிலிருந்துத் தப்பிவிடுகிறார்கள்! – இருக்கட்டும் இருக்கட்டும்; எல்லாவற்றுக்கும் அவன் ஒருவன் இல்லையா? அவனுடைய தண்டனையிலிருந்து கூடவா இவர்கள் தப்பிவிடப்போகிறார்கள்?''

''அது அங்கேதானே, அப்போது பார்த்துக் கொண்டால் போச்சு என்ற அந்த நாயைப் போன்றவர்கள் துணிந்து விடுகிறார்கள்!'' என்றாள் தாழம்பூ! வானத்தைச் சுட்டிக் காட்டி. ''அங்கே ஒன்றுமில்லை; எல்லாம் இங்கேதான். அதுவரை மனிதன் பொறுக்கவேண்டும்; அவ்வளவே!'' என்றான் கிழவன், தான் அமர்ந்திருந்த தரையை ஒருமுறைக்கு இருமுறையாகத் தட்டிக்காட்டி.

7. மனிதன் மாறவில்லை!

அன்றிரவு வீடு திரும்பிய ராமமூர்த்தி குழந்தையின் அழுகுரலை மறுபடியும் அந்த வீட்டில் கேட்டதும், ''விசாலம் குழந்தையை வீட்டுக்குக் கொண்டுப் போகவில்லையா?'' என்று கேட்டான்.

''அவளுடைய குழந்தையாயிருந்தால்தானே அதைத் தன் வீட்டுக்குக் கொண்டு போக!'' என்றாள் கல்யாணி, அவனைத் தன் கடைக்கண்ணால் பார்த்துக் கணிக்க முயன்றுகொண்டே. ''ஓஹோ!'' என்று தலையை ஆட்டிக்

கொண்டே அதுவரைதான் போட்டுக் கொண்டிருந்த 'விரிவுரையாளர் வேட'த்தைக் களைந்து விட்டுக் 'கிரகஸ்தர் வேட'த்தைத் தரித்துக்கொண்டான் ராமமூர்த்தி. கல்யாணி, ''கன கச்சிதம்!' என்றாள் சிரித்துக் கொண்டே.

''எதைச் சொல்கிறாய்?''என்றான் ராமமூர்த்தி.

''நேரத்துக்குத் தகுந்தாற்போல் நீங்கள் போடும் வேடத்தை!''

''அதற்காக வேளைக்குத் தகுந்தாற்போல் நான் பேசுவேன் என்று நீ நினைத்துவிடாதே!''

''நேற்றுவரை அப்படித்தான் நினைத்துக்கொண்டிருந்தேன்; இன்று...''

''அதை மறந்துவிடு; மறக்கமுடியாவிட்டால் மன்னித்து விடு!''

''எதை, யாரை?''

''என்னை, நான் சொன்னதை!''

''சொன்னதை வேண்டுமானால் மறந்துவிடுகிறேன். ஆனால் மனைவியை மன்னிக்கும் தகுதி 'உலகஅநீதி'ப்படி கணவனுக்கு வேண்டுமானால் உண்டு; கணவனை மன்னிக்கும்தகுதி மனைவிக்கு உண்டா?''

''அந்தப் பேதத்துக்கு இங்கே இடமில்லை!'' என்று தன் இதயம் இருக்கும் இடத்தை அவளுக்குச் சுட்டிக்காட்டி விட்டு, ''முதலில் நீ எனக்குச் சோற்றைப் போடு; பசிக்கிறது!'' என்றான் அவன், கைகால் அலம்பக் குழாயடியை நோக்கிச் சென்றுக் கொண்டே. சாப்பிட்டு முடிந்ததும் வெற்றிலைக் கட்டுடன் இருவரும் மொட்டைமாடிக்கு வந்தார்கள்.

''இன்று ஏன் இவ்வளவு நேரம்?'' என்றாள் கல்யாணி. ''என்னத்தைச் சொல்வது, போ! எல்லாம்

நானாகத் தேடிக்கொண்ட வினைதான்!'' என்றான் ராமமூர்த்தி.

''அப்படி என்ன வினையைத் தேடிக்கொண்டு விட்டீர்கள்?''

''ஒன்றுமில்லை; 'மாதா பிதா குரு தெய்வம்' என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்களே என்று குருவைத் தெய்வமாகக் கொண்டேன். அந்தக் குரு என்னடாவென்றால் தன்னையும் பிசாசாக்கிக்கொண்டு, என்னையும் ஏறக்குறையப் பிசாசாக்கிவிட்டது!''

இதைக் கேட்டதும் கல்யாணி சிரித்தாள்; சிரித்து விட்டுக் கேட்டாள்.

''இதை ஏன் காலையிலேயே நீங்கள் என்னிடம் சொல்லவில்லை?''

''புது மாடாச்சே, மிரண்டுவிடுமோ என்ற அச்சம்தான்!''

''உங்கள் கண்ணுக்கு நான் மாடாகத் தோன்றுகிறேனா?''

''அதற்காக நீ கோபித்துக் கொண்டுவிடாதே, மனிதனை விட மாடு எவ்வளவோ மேல்!''

''இந்த ஞானோதயம்கூட உங்கள் குருநாதரால் ஏற்பட்டதுதானோ?''

''ஆம், மனிதனைவிட மாட்டைத்தான் ரொம்பப் பிடிக்கும் அவருக்கு. அதிலும் காயடித்தமாடு என்றால் அதன் கழுத்தைத் தன் இரு கைகளாலும் வளைத்துப் பிடித்துக் கொண்டு ஆனந்தக்கண்ணீர் வடிக்க ஆரம்பித்துவிடுவார்!''

''ஐயோ, பாவம்! குரங்கைக் கண்டால் மட்டும் அவருக்குப் பிடிக்காதோ?''

''பிடிக்காது!''

''ஒருவேளை அது 'ஏக பத்தினிவிரத'த்தை அனுஷ்டிக்கும் ஜந்துவாயிருக்குமோ?''

''சேச்சே, இருந்த ஒரே ஒரு பத்தினியையும் இழந்து விட்டு, இப்போது ஒரு பத்தினியும் இல்லாதவர் அவர்; அவரால் எப்படி 'ஏகபத்தினிவிரத'த்தை அனுஷ்டிக்க முடியும்?''

''அதற்காக ஊர் முழுவதுமா பத்தினிமாரைத் தேடிக் கொண்டிருப்பார்கள்?''

''யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்பதுதமிழ் மரபல்லவா? அந்த மரபையொட்டி...''

''நறுமணத்தின் தலையிலும் கையை வைத்துவிட்டார் போலிருக்கிறது!''

''அந்தக் கதையை யார் சொன்னது, உன்னிடம்?''

''எல்லாம் விசாலம்தான் சொன்னாள்! அத்தனை அக்கிரமங்களும் நடக்க இந்த வீட்டு மாடியிலேயே நீங்கள் அவருக்கு இடம் கொடுத்து வைத்திருந்ததால்தான் ஒரு நாள் அவர் விசாலத்தைக்கூடக் குளித்துவிட்டு வரச் சொன்னாராம் 'அந்த மாதிரியெல்லாம் இன்னொரு தடவை என்னிடம் சொல்லாதீர்கள்: நான் விளக்குமாற்றுக்கு வேலை கொடுத்து விடுவேன்!'' என்று அவரை எச்சரித்து வைத்தாளாம்!''

''ஓகோ! அதனால்தான் அவளை வேலையிலிருந்து நீக்கிவிடவேண்டும், வேலையிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று அவர் அடிக்கடி என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தார் போலிருக்கிறது! – சரி, தொலையட்டும் –

இதிலிருந்த ஒரு வித்தியாசத்தைப் புரிந்து கொண்டாயா, நீ?''

''என்ன வித்தியாசம்?''

''அடித்தட்டிலுள்ள பெண்களுக்கும் மேல் தட்டிலுள்ள பெண்களுக்கும் உள்ள வித்தியாசம்தான் அது! என் குருநாதரைப் போன்றக் காமுகர்களிடமிருந்து தங்களைத் தாங்களே காத்துக்கொள்ள முடிகிறது, அடித் தட்டிலுள்ள பெண்களால்; மேல்தட்டிலுள்ள பெண்களால் அவ்வாறு காத்துக்கொள்ள முடிவதில்லை - இது ஏன்? கல்விதான் காரணமாயிருக்குமோ?''

''கல்வியல்ல; கல்வி முறை!''

''நீ சொல்வது சரி - ஆனால் அதை எங்கே மாற்றியமைக்கிறார்கள்? அதற்குப் பதிலாகத்தான் மணவாழ்க்கை சம்பந்தப்பட்ட சட்டதிட்டங்களை மாற்றி யமைத்துக் கொண்டு வருகிறார்களே?''

''அதனால்தான் குரு பத்தினியையே கல்யாணம் செய்து கொள்ளக்கூட நீங்கள் துணிந்துவிட்டீர்கள் போலிருக்கிறது!''

''அதையும் சொல்லிவிட்டாளா, அவள்?''

''சொன்னாள்! - ஆனால் எந்தவிதத்தில் தெரியுமா? உங்களைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு தெய்வமாகக் கொண்டாடும் விதத்தில்!''

''போகட்டும்; அந்த மட்டும் உனக்கு முன்னால் என்னைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தாமல் இருந்தாளே, அதைச் சொல்லு!''

''உங்களையாவது, அவள் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவதாவது! உங்கள் மேல் யாராவது ஏதாவது சொன்னால் அவர்களுடைய நாக்கு அழுகிப்போகும் என்றல்லவா அவள் சொல்லுகிறாள்!''

''அந்த அம்மாள் நற்சாட்சிப்பத்திரம் கொடுத்த பிறகுதான் நீ என்னை நம்பினாயாக்கும்? ம், எங்கே அந்தக் கடிதம்? அதை இப்பொழுதாவது என்னிடம் கொடேன்!''

''இங்கே அது இல்லை!''

''பின் எங்கே?''

''பெங்களூர் பிரயாணத்தை மேற்கொண்டிருக்கிறது!''

''ஏன், துப்புத் துலக்கவா?''

''ஆம்!''

''இனிமேல் துப்புத்துலக்குவதற்கு ஒன்றுமில்லை - என்ன எழுதியிருந்தது அந்தக் கடிதத்தில்?''

''ஒரு தாயின் உள்ளக்குமுறலை; அந்தத்தாயின் வாழ்வில் குறுக்கிட்ட ஒரு நாயின் திருவிளையாடலை!''

''அப்படியெல்லாம் சொல்லி, அனாவசியமாக நாயை ஏன் அவமதிக்கிறாய்? உன்னுடைய அனுதாபத்துக்குரிய உன் நறுமணம் சம்மதித்தால், என்னுடைய அனுதாபத்துக் குரிய என்குருநாதர் அவளை இப்போதுக் கல்யாணம் செய்துகொள்ளத்தயாராயிருக்கிறார்!''

''நிஜமாகவா?''

''ஆம்!''

''அவருக்குத்தான் ஏற்கனவே கல்யாணமாகி யிருப்பதாகக் கண்ணகி அம்மையார் சொன்னார்களாமே?''

''அது அந்த அம்மையாரிடமிருந்து தப்புவதற்காக அவர் ஜோடித்த நாடகம்!''

''அடேயப்பா! ஒரு பெண்ணை ஏமாற்றுவதற்காக அவர் எத்தனை நாடகம் ஜோடித்திருக்கிறார், எத்தனைப் பொய் சொல்லியிருக்கிறார்!''

''அவை மட்டுமல்ல; அந்த ஒரு பெண்ணுக்காக அவர் ஒரு கொலைக்கு இருகொலையாகச் செய்திருக்கிறார் என்றுகூட உன் நறுமணம் நினைத்துக் கொண்டிருக்கிறாள்! - அதுவும் தவறு - தன்னைக் கல்யாணம் செய்துகொண்ட பிறகு தன்மனைவி இன்னொருவனுடன் கள்ள நட்புக் கொண்டிருக்கிறாள் என்று சந்தேகித்து, அந்த சந்தேகத்தால் எழுந்த அவமானத்தால் தன்னைத்தானே தற்கொலை செய்துகொண்டிருக்கிறார் கண்ணகி அம்மையாரின் கணவர்; தன்மேல் கொண்ட ஆசையால் தன்னுடையக் கணவரை என் குருநாதர்தான் கொன்று விட்டார் என்று சந்தேகங்கொண்டு, அவரைக் கொலை காரனாக்கி யிருக்கிறாள் கண்ணகி அம்மையார்.

சந்தர்ப்ப தோஷத்தால் தன் மேல் சாட்டப்பட்டு விட்டக் கொலைக் குற்றத்தின் காரணமாக அமைதி குலைந்து, குலைந்த அமைதியை ஓரளவாவது நிலை நிறுத்தும் என்ற நம்பிக்கையில் குடிகாரனாகி, தான் குடிகாரனானால் போதாதென்று தன்மேல் அநியாயமாகக் குற்றம் சாட்டிய அம்மையாரையும் குடிகாரியாக்கி யிருக்கிறார் என் குருநாதர்.

அந்தக்குடியில் அறிவிழந்த இருவரும் முறை தவறி நடந்து, அதன் விளைவால் ஒருவரைக்கண்டு ஒருவர் பயந்து,அந்தப்பயத்தால் 'யாரை, யார் முதலில் ஒழிப்பது?'' என்ற பயங்கரநிலைக்கு உள்ளாகி விட்டிருக்கிறார்கள் இருவரும். இந்த நிலையில், அவர்களுடைய வாழ்க்கையிலே எதிர்பாராத விதமாக குறுக்கிட்ட நறுமணம் தன் அழகால் என் அருமைக் குரு நாதரின் காதலையும், அந்தக்காதல் தந்தப் பரிசால் தனக்கேற்பட்ட அவலநிலையைக் கொண்டு அம்மையாரின் அனுதாபத்தையும்பெற்றிருக்கிறாள்.

அதன் காரணமாகத் தன்னைத்தானே தாயாக்கிக் கொண்டு, அவளைத் தன் சேயாக்கிக் கொண்டுவிட்ட

அம்மையார், என் குருநாதரை அவளுக்கு எப்படியாவதுக் கல்யாணம் செய்துவைத்துவிட வேண்டுமென்று முயன்றிருக்கிறாள். அதை விரும்பாத என் குருநாதர், மேனகைக்கு எதிர்த்தாற்போல் நின்ற விசுவாமித்திரர் போல் நிற்கவே, ஆத்திரமடைந்த அம்மையார் அவரைப் போலீசாரிடம் ஒப்படைப்பதற்கு வேண்டிய முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறாள்.

நிலைமை மிஞ்சிப் போனதை அறிந்த என் குருநாதர் அதைச் சமாளிக்க தன்னுடைய நீலிகண்ணீர் மட்டும் போதாதென்று, இரண்டு குழந்தைக்குத் தாயான இன்னொருத்தியின் நீலிக் கண்ணீரையும் வாடகைக்குப் பெற்றிருக்கிறார். இந்தச் சம்பவத்துக்குப் பிறகு அம்மையார் அடைந்த மரணம் அகால மரணம்தான் என்றாலும், அதற்குக் காரணம் என் குருநாதர் அல்ல: இயற்கையே!''

''இயற்கையோ செயற்கையோ! – இன்னொருக் கதை தெரியுமா, உங்களுக்கு? நீங்கள் போன பிறகு ஏதோ ஒரு பைத்தியம் இங்கே வந்தது. அது ரூபா பத்தாயிரத்தை கொண்டுவந்து என்னிடம் கொடுத்தது...''

''அத்தனையும் கள்ள நோட்டாயிருக்குமே!''

''அது எப்படித்தெரியும், உங்களுக்கு?''

''எல்லாம் என் குருநாதர் கொடுத்ததுதான்!''

''ஏன்?''

''அதைக்கொண்டு அதுவே போலீஸ் வலையில் சிக்கிக்கொண்டு விடுமென்று அவர் எதிர்பார்த்தார்; ஆனால் அது சிக்கவில்லை!''

''அந்தப் பைத்தியம் அப்படி என்ன செய்து விட்டதாம், அவரை?''

''உனக்குத் தெரியாதா, அவன் தான் நறுமணத்தின் அண்ணன்! - அவன் தன் தங்கைக்காக அவரைப் பழிவாங்கப் போக, அவர் அவனைப் பைத்தியமாக்கி விட்டு விட்டார்!''

''பாவி! அவன் யாரையும் தன் கையால் கொல்லவில்லையென்றாலும், அவரவர்கள் தங்களைத்தாங்களே கொலை செய்துகொள்ள அவனல்லவா தூண்டு கோலாயிருந்திருக்கிறான் போலிருக்கிறது?''

''அது மட்டும் உண்மை; ஆனால் அதுதான் இப்போது அவனை எனக்குப் பணியவைத்திருக்கிறது!''

''பணியவைத்திருக்கிறதா?''

''ஆம்; இல்லாவிட்டால் நறுமணத்தைக் கல்யாணம் செய்துகொள்ள அவன் அவ்வளவு எளிதில் சம்மதித் திருப்பானா என்ன?''

''வெட்கக் கேடுதான்! இப்படியும் ஒரு கல்யாணமா,எனக்கு இது பிடிக்கவில்லை!''

''எனக்கு மட்டும் பிடிக்கிறதா, என்ன? - நமது சமூகத்தில் எடுத்ததற்கெல்லாம் வந்து நிற்கிறார்களே, 'நாலுபேர்' - அந்த 'நாலு பே'ருக்கு அஞ்சி நறுமணமும், அவள் அண்ணன் நம்பியும் சாகாமலிருக்க வேண்டுமானால் அதைத்தவிர அவர்களுக்கு வேறுவழியில்லை, இப்போது!''

''பரிதாபம்! அப்படியானால் அந்தப் பைத்தியத்தின் கதி?''

''தெளிந்துவிடுமென்று டாக்டர் சொன்னார்!''

''அவரை நீங்கள் பார்த்தீர்களா, என்ன?''

''ஆம், பார்த்தேன்; பார்த்ததோடு நில்லாமல் தக்க டாக்டர் ஒருவரிடம் அவரை ஒப்படைத்துவிட்டும் வந்திருக்கிறேன்!''

''பாவம், அந்தப் பெண் தன் கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறாள் தெரியுமா! அண்ணன் செத்துப் போய்விட்டான் என்று எழுதியிருக்கிறாள்!''

''அதெல்லாம் என் குருநாதர் விட்ட சரடு! அவற்றையெல்லாம் மன்னித்துத்தான் அவள் அவரை மணக்க வேண்டும் - கீழே தூங்கிக்கொண்டு இருக்கிறானே, மாஸ்டர் நெடுமாறன் - அவனுக்காக!'' என்றான் ராமமூர்த்தி.

''என்னமோ, முயன்று பார்ப்போம்!''என்றாள் கல்யாணி.

✧ ✧ ✧

மறுநாள் பொழுது விடிந்ததும், ''ஐயா இருக்கிறாரா?'' என்ற குரல் வாசலிலிருந்து வந்தது. ''யார் அது?'' என்று கேட்டுக்கொண்டே வெளியே வந்தாள் கல்யாணி.

''மாணிக்கம் வந்திருக்கிறான் என்று சொல்லுங்கள், ஐயாவுக்குத் தெரியும்'' என்றான் குரல் கொடுத்தவன்.

அதற்குள், ''அடடே, மாணிக்கமா? வாப்பா, வா!'' என்று அவனை வரவேற்றுக்கொண்டே வந்த ராமமூர்த்தி ''இவர் நம் வீட்டுத் தோட்டக்காரராயிருந்தவர், கல்யாணி! இவர் கடவுளுக்குத் துணை; கடவுள் இவருக்குத் துணை! இவரால்தான் நாஸ்திகனாயிருந்த நான்கூட ஆஸ்திகனானேன்!'' என்று சொல்லிக்கொண்டே வந்தவன், திடீரென்று எதையோ பார்த்துத் திடுக்கிட்டவனாய், ''இது என்ன மாணிக்கம், எப்போது பார்த்தாலும் எதையாவது உடைத்துக் கொள்ளவேண்டியதுதானா? இந்தக்கால் எப்போது உடைந்தது?'' என்றுக் கேட்டான் திகைப்புடன்.

''அது கிடக்கிறது, விடுங்கள்! எது உடைந்தால் என்ன? என் உடம்பிலிருந்து உயிர் பிரியும்வரை என்னுடைய

உள்ளம் உடையாமல் இருந்தால்போதாதா?''என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டு, ''உங்களிடம் நான் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேச வந்திருக்கிறேன்!'' என்றான் மாணிக்கம்.

''அப்படியென்ன முக்கியமான விஷயம்?''

''இந்த அம்மாளுக்கு முன்னால் அதைச் சொல்லக் கூச்சமா இருக்கிறது, எனக்கு!''

''பரவாயில்லை, சொல்லுங்கள்! அப்படிச் சொல்வது தான் நல்லதுங்கூட! இல்லாவிட்டால் அவள் ஏதாவது விபரீதமாக நினைத்துக்கொண்டாலும் நினைத்துக் கொண்டு விடுவாள்!''

''உங்களுடைய வாத்தியார் ஐயா இருக்கிறாரே, வாத்தியார் ஐயா - அவர் ஒரு பெண்ணை வஞ்சித்து விட்டார்!''

''அதற்காக என்னைப் பார்த்து என்ன பிரயோசனம்? அவரையல்லவா நீங்கள் பார்த்திருக்கவேண்டும்?''

''பார்த்தேன்!''

''என்ன சொன்னார்?''

''ஏற்கெனவே அவர் கேள்விப்பட்டிருந்தாராம். நான் அந்தப் பெண்ணைக் காப்பாற்றப் போய் இந்தக் காலை உடைத்துக் கொண்டேன் என்று!''

''ஒரு பெண்ணுக்காக நீங்கள் செய்த தியாகமோ, இது?''

கிழவன் சிரித்தான்; சிரித்துவிட்டுச் சொன்னான்:

''நீங்கள் சொல்கிறீர்கள், இதைத் தியாகம் என்று, ஆனால் அவர் என்ன சொல்கிறார், தெரியுமா? - 'மடத்தனம்' என்கிறார்!''

'இருக்கலாம்; இது 'மடத்தன'மாயும், ஒரு பாவமும் அறியாத குழந்தையைக் கொல்ல முயன்ற அது 'தியாக' மாயும் அவரைப் போன்ற புண்ணியவான்களுக்கு இருக்க லாம்!' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்ட ராமமூர்த்தி, ''அப்புறம்?'' என்று கேட்டான், தனக்குப் பின்னால் நின்றுக் கொண்டிருந்தக் கல்யாணியை ஒருக் கண்ணாலும், கிழவனை இன்னொருக் கண்ணாலும் பார்த்துக் கொண்டே.

''அப்புறம் என்ன, அவருக்கே உரித்தான அந்த அரும்பெரும் உபதேசங்கள்தான்! – முதலில் தன்னைக் காத்துக்கொள்ளவேண்டுமாம்; அதற்குப் பிறகு மற்றவரைக் காக்க முயலவேண்டுமாம் – அதிலும் ஏதாவது ஆதாயம் உண்டா என்று ஆய்ந்து பார்த்தப் பின்னர்!''என்றான் கிழவன்.

''நீங்கள் என்ன சொன்னீர்கள், அதற்கு?''

''நன்றி ஐயா, உங்கள் 'பொன்மொழி'க்கு நன்றி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன்!''

''சரி, யார் அந்தப் பெண்? – அவள் பெயர்?''

''அதை நான் கேட்கவில்லை!''

அவ்வளவுதான்; ''நீங்கள் ஏன் கேட்கப் போகிறீர்கள்? வாருங்கள், போவோம்!''என்று அந்த நிமிடமே அவனுடன் கிளம்பினான் ராமமூர்த்தி.

''எனக்கென்னமோ 'அவன், இவன்' என்று மரியாதை யில்லாமல் பேசும் இடத்தில்தான் அன்பு குடியேறுவதாகத் தெரிகிறது; 'அவர், இவர்' என்று மரியாதையோடு பேசும் இடத்திலிருந்து அது வெளியேறி விடுவதாகத் தெரிகிறது!''

''உண்மைதான்; ஆனாலும் நீங்கள் என் குருநாதர் அல்லவா?'' என்றார் ராமமூர்த்தி.

''ஐயோ, வேண்டாம்; ஒரு குருநாதர் இருந்து படுத்திய பாடே போதும்!''என்றாள் கல்யாணி.

ராமமூர்த்தி சிரித்தான்; சிரித்துவிட்டு, ''விசாலம்தான் இருக்கிறாளே, வீட்டையும் குழந்தையையும் பார்த்துக் கொள்ள! நீயும் வாயேன்!''என்றான்.

''இதோ வந்துவிட்டேன்!'' என்றுக் கல்யாணியும் கிளம்ப, மூவரும் கிழவன் கட்டிக்கொண்டு வந்திருந்த மாட்டு வண்டியை நோக்கி நடந்தார்கள்.

✧ ✧ ✧

கல்யாணி எதிர்பார்த்தபடி, அங்கே இருந்த நறுமணம் அவளுக்குத்தெரிந்த நறுமணமாக, அவளுடன் சேர்ந்துப் படித்த நறுமணமாகத்தான் இருந்தாள். ஆனாலும் அவளைக் கல்யாணத்துக்கு இணங்கவைப்பது ராமமூர்த்திக்கு மட்டுமல்ல; கல்யாணிக்கும் அவ்வளவு சுலபமாயில்லை.

''சொல்வதைக் கேள், நறுமணம்! அவர் இப்போது அடியோடு மாறிவிட்டாராம்; தான் செய்தப் பாவங்களுக் கெல்லாம் பிராயச்சித்தமாகத்தான் அவர் இப்போது உன்னைக் கல்யாணம் செய்துகொள்ளச் சம்மதித்திருக் கிறாராம்!''என்று கடைசியாக ஒரு போடு போட்டுப் பார்த்தாள் கல்யாணி.

''இருக்கலாம்; இருந்தாலும் எனக்கு என்ன தோன்றுகிறது, தெரியுமா? நீங்கள் அவருக்கு என்னைக் கல்யாணம் செய்துகொடுக்கப்போவதாகத் தோன்றவில்லை; பலி கொடுக்கப் போவதாகத்தான் தோன்றுகிறது!''என்றாள் நறுமணம்.

''ஆம்; ஆனால் உங்களை நாங்கள் அவருக்குப் பலிகொடுக்கப்போவது உங்களுக்காக அல்ல – உங்கள் குழந்தைக்காக; உங்களுடைய அண்ணனுக்காக!'' என்றான்

ராமமூர்த்தி, தன் கண்களில் துளிர்த்த நீரை அவளுக்குத் தெரியாமல் மறைக்க முயன்றுகொண்டே.

இதைக்கேட்டதும், ''அவன் எங்கே இருக்கிறான், இப்போது அவனையும்தான் அந்தப் பாவி தொலைத்து விட்டானே!''என்றாள் நறுமணம், அவனைப் பார்க்காமல் வேறு எங்கோப் பார்த்துக்கொண்டே.

''பைத்தியமா, உங்களுக்கு? அவர் பத்திரமாக இருக்கிறார்!'' என்றான் ராமமூர்த்தி.

''எங்கே இருக்கிறார்?'' என்றாள் நறுமணம், சட்டென்று அவன் பக்கமாகத் திரும்பி.

''அவருக்குத் தக்க டாக்டர் ஒருவர் நடத்தும் நர்ஸிங் ஹோமில்!''

''அப்படியா, டாக்டர் என்ன சொன்னார்?'' என்று கேட்டாள் அவள், பரபரப்புடன்.

''அதிர்ச்சிதான் காரணம், வேறொன்றுமில்லை; விரைவிலேயே தெளிந்துவிடுமென்று சொன்னார்!'' என்றான் அவன்.

''இது உண்மையானால் அந்தப் பாவிக்கு என்ன, வேறு எந்தப்பாவிக்கு வேண்டுமானாலும் நான் பலியாகத் தயார்!''என்றாள் அவள், உணர்ச்சிவயப்பட்டு.

அதற்குமேல் ராமமூர்த்தி அங்கே நிற்கவில்லை; ''வா, கல்யாணி!' பலி'க்கு அவர்கள் தயாராகிவிட்ட பிறகு, இனி நாம் 'பலி'பீடத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்யவேண்டியதுதானே? வா வா!'' என்று அவளை அழைத்துக்கொண்டு கிளம்பினான்.

''வழி காட்டிவிட்டார், கடவுள் வழிகாட்டிவிட்டார்!'' என்றான் கிழவன்!

''அவர்களுக்கு வழி காட்டியது சரி; எங்களுக்கு அவர் எப்போது வழி காட்டப்போகிறார்?'' என்று கேட்டான் தறுதலை.

''திராவிடநாடு கிடைத்த பிறகு!''என்றாள் தாழம்பூ, சிரித்துக்கொண்டே.

''அதுவரை உன் அத்தான் கல்யாணத்தைத் தள்ளிப் போடமாட்டார், அம்மா! வேலையைத்தான் தள்ளிப் போடுவார்!''என்றான் கிழவன்.

✧ ✧ ✧

திருமணத்துக்குப் பிறகு ஒரு நாள் தன்னுடைய தங்கையைப் பார்ப்பதற்காக வந்திருந்த நம்பி, வழக்கம்போல் மாடி அறையில் யாரோ ஒரு பெண்ணுக்கு பாடம் நடத்திக் கொண்டிருந்த பேராசிரியரைக் கண்டதும், ''என்னம்மா, இது! மனிதன் மாறவேயில்லையா?'' என்று கேட்டான் ஏமாற்றத்துடன்.

''இல்லை அண்ணா, அவர் மாறவும் இல்லை; அதைப்பற்றி நான் கவலைப்படவுமில்லை!'' என்றாள் நறுமணம், தூங்கிக் கொண்டிருந்த தன் குழந்தையின் கன்னத்தை லேசாகக் கிள்ளிச் சிரித்துக்கொண்டே.

''ஆச்சரியமாயிருக்கிறது; உன்னுடைய நிலையிலும் உன்னால் சிரிக்க முடிவதைப் பார்க்க எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது! என்றான் நம்பி, பெருமூச்சுடன்.

''அழுது புண்ணியமில்லை, அண்ணா! அவருக்காக மட்டுமல்ல. அவரைப் போற்றிப் புகழும் இந்த உலகத்துக்காகக்கூட நாம் அழுது புண்ணியமில்லை!'' என்றாள் நறுமணமும் அதே பெருமூச்சுடன்.

படித்த பின் :

‘‘கல்யாணத்துக்குப் பிறகும் மாறாத பேராசிரியர் நெடுமாறனார் கடைசியில் என்னவானார்? அவரை மணந்த நறுமணம் அதற்கு மேலும் அவருடைய ‘திருவிளையாடல்’களை எப்படிச் சகித்தாள்? முளையிலேயே கிள்ளி எறிந்து விட முயன்ற அவளுடைய குழந்தையைக் கல்யாணத்துக்குப் பிறகாவது அவர் நேசித்தாரா? மாணிக்கத்தின் தியாகத்தை ‘மடத்தனம்’ என்ற பேராசிரியரைப் போற்றிப் புகழும் அந்த ‘நாலு பேர்’ அண்ணனுக்காகத் தன் உயிரைத் தியாகம் செய்யத் துணிந்து, அது நிறைவேறாமற் போனபின் தன்னுடைய வாழ்க்கையையே தியாகம் செய்துவிட்ட நறுமணத்தைப் பற்றி என்ன சொன்னார்கள்? ராமமூர்த்தி தன் குருநாதரைப் புரிந்துகொண்டாரா? என்றெல்லாம் என்னைக் கேட்காதீர்கள் – ஏனெனில்,இது நடந்த கதையல்ல: நடந்து கொண்டிருக்கும் கதை!

அதன் முடிவை இப்போதே சொல்ல நான் யார்? – காலம் சொல்லட்டும், காத்திருப்போம்.

— விந்தன்

நன்றிக்கு நன்றி

இந்தக் கதையை முதன்முதலாகத் தங்கள் பத்திரிகையில் தொடர்கதையாக வெளியிட்டு, எனக்கும் – அதே சமயத்தில் தங்களுக்கும் உதவிக்கொண்ட ‘அமுதசுரபி’ பதிப்பகத்தாருக்கு.



விந்தன் பிற நூல்கள்

1.	விந்தன் குட்டிக் கதைகள்	28.00
2.	விக்கிரமாதித்தன் கதைகள்	85.00
3.	கண் திறக்குமா?	50.00
4.	பாலும் பாவையும்	50.00
5.	சுயம்வரம்	40.00
6.	காதலும் கல்யாணமும்	80.00
7.	எம்.கே.டி. பாகவதர் கதை	50.00

000133